
கல்கி
மணிபல்லவம்
அடுத்த இதழில் ஆரம்பமாகிறது!
30
காசு
8-1-1961
KALKI

கல்கி பொருளடக்கம்

சார்வரி, மார்கழி 25 ※ ஜனவரி 8, 1961

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே





மலர் 20 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 23

கைத்தறிக்கு மீண்டும் கஷ்டம்

தமிழ் நாட்டு நெசவாளர்களும், கைத்தறித் துணி வியாபாரிகளும் இன்று பெரும் சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டு படும் கஷ்டத்தைப் பார்க்கும்போது கண்களில் ரத்தம் கசியும். இந்நிலையில் சர்க்கார் கைத்தறி நெசவாளர்களுக்காகக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செய்துவரும் நன்மைகளைப் பற்றிப் பேசுவதையும் விளம்பரம் செய்வதையும் பார்க்கும்போது வெந்த புண்ணில் வேல் நுழைப்பதுபோல்தான் இருக்கிறது.

இந்தியாவுக்கு வந்த அமெரிக்கர்கள், இந்தியக் கைத்தறித் துணியின் நேர்த்தியில் மயங்கி 'பிலீடிங் மெட்ராஸ்' என்ற ஒருவகைத் துணி வாங்குவதாகக் கூறினார்கள். இந்த வகைத் துணி, ஒவ்வொரு தடவை சலவைக்குப் போய் வரும்போதும், ஒவ்வொரு வர்ணத்தில் தோன்றும். இந்தப் புதுமையில் மயங்கித்தான் அமெரிக்க வர்த்தகர்கள் இந்தக் கைத்தறித் துணியை வாங்குவதாகச் சொன்னார்கள்.

அமெரிக்காவில் நல்ல கிராக்கி யிருக்கிறது என்று சென்னை சர்க்கார் அளித்த தூண்டுதலின் பேரில்தான் தமிழ்நாட்டு நெசவாளர்கள் இந்தத் துணியை ஏராளமாக உற்பத்தி செய்தார்கள்! அமெரிக்க வர்த்தகர்கள் வாங்கிக் கொள்வதாகச் சொன்னதின் பேரில்தான் உற்பத்தி செய்தார்கள். இது ஒரு வருஷமாக நடந்தது.

இப்போது திடீரென்று அமெரிக்க வர்த்தகர்கள் எங்களுக்கு இந்தத் துணி தேவை இல்லை என்று சொல்லி விட்டார்கள்.

இந்தத் துணி எல்லாம் ஒன்றுபோல் ஒரே தர முள்ளவையாக இல்லை; இந்திய ஜவுளி வர்த்தகர்கள் மோசடி செய்கிறார்கள், அதனால் அமெரிக்காவில் இதன் கிராக்கி குறைந்து விட்டது என்று இதற்குக் காரணம் சொல்கிறார்கள். அமெரிக்காவில் இவ்வகைத் துணியிலிருந்த மோகம் அற்றுவிட்டது என்று இன்னொரு காரணமும் கூறுகிறார்கள்.

முதலில் கூறிய காரணம் உண்மையாக இருந்தால் அமெரிக்க மக்களுக்குக் கைத் தொழிலுக்கும் யந்திரத் தொழிலுக்குமுள்ள அடிப்படை வேறுபாடு விளங்கவில்லை என்று கொள்ளவேண்டும். கைத்தொழில் பண்டங்களின் பண்பே தரவேறுபாடுதான். கைத்தொழிலில் யந்திரத் தொழிலின் பண்டம் உண்டாகாது. யந்திரங்களில் கைத் தொழில் பண்டம் உண்டாகாது. கைத்தொழில் பண்டங்களின் அழகே வேறு. யந்திரத் தொழில் பண்டங்களின் பண்பு வேற்றுமையற்று ஒரு மட்டமாக இருப்பது.

ஆகவே, நமது கைத்தறித் துணி அமெரிக்காவுக்குப் போகாததற்கு முக்கிய காரணம் இரண்டாவதுதான். அமெரிக்க மக்களின் 'பாஷன்' மாறிவிட்டதுதான்.

இதன் பயனாக 16 லட்சம் கஜம் துணி தேங்கிக் கிடக்கிறது. இந்த வகைத் துணிக்கு நம் நாட்டில் கிராக்கி கிடையாது. கைத்தறிகள் சோர்ந்து கிடக்கின்றன; இத்துணிகளை வியாபாரிகள் எங்கு யாருக்கு விற்பது என்ற தெரியாமல் தவிக்கின்றனர்! இத்துணிகளை வாங்கிக்கொண்டு உதவும்படி இந்திய சர்க்காரைக் கோருகின்றனர். இத்துணிகளை வாங்கி உதவ வேண்டியது இந்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார் இவர்களின் கடமையாகும். வாங்கிய துணியை அவர்கள் என்ன செய்வது? மலேயா, சிங்கப்பூர், பர்மா முதலிய கிழக்காசிய நாடுகளில் விலை போகுமா, என்று அவர்களுடைய ஏற்றுமதிக் குழு மூலம் ஆராய்ச்சி செய்து அனுப்பி, விற்றுப் பாரத மக்களின் பணத்துக்கு நஷ்டம் வராமல் பார்க்க வேண்டும்.

தமிழ் நாட்டிலிருந்து உற்பத்தியாகி, இலங்கைக்குப் போய்க் கொண்டிருந்த 'ஸராங்' என்ற கைலிகளுக்கும் இலங்கை சர்க்கார் தடையுத்தரவு போட்டிருக்கிறது.

இந்தியாவுக்குள்ளேயே மில்களின் போட்டியின் காரணமாக நமது கைத்தறித் துணிகளுக்குக் கிராக்கி கிடையாது. வெளிநாடுகளிலும் கிராக்கி கிடையாது என்று ஏற்பட்டால் விவசாயத்துக்கு அடுத்தபடியாகப் பெருந்தொகையினர் கைத்தறியை நம்பி வாழ்கிறார்களே! அவர்கள் பிழைப்புக்கு வழி என்ன?

இவர்களை யெல்லாம் பில. யிக்கும், துர்க்காபூருக்கும், ரூர்கேலாவுக்கும் நெய்வேலிக்கும் அனுப்பி வேலை கொடுக்கப் போகிறார்களா? அப்படிக் கொடுக்கச் சம்மதித்தாலும் அந்தந்தப் பகுதி மக்கள் 'முதலில் எங்களுக்கு வேலை கொடுத்துவிட்டுப் பிறகு மற்ற ராஜ்யக்காரர்களுக்கு வேலை கொடுங்கள்' என்று சொல்ல மாட்டார்களா? இவையெல்லாம் உருப்படாத திட்டங்கள்.

இப்போது கைத்தறியில் வேலை செய்யும் மக்களுக்கு நிரந்தர வேலைக்கு வாய்ப்பளித்தால், அதுவே அவர்களுக்குச் செய்யும் பேருதவியாகும். ஆலைகளில் வேட்டிகளுக்கும் புடவைகளுக்கும் தடை விதித்து விட்டால் கைத்தறிகள் கிராமந்தோறும் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கிவிடும்.

வேட்டியும் புடவையும் உடுத்துபவர்கள் நம் நாட்டிலும் இலங்கையிலும் பர்மாவிலும்தான் உண்டு. உலகம் பூராவும் கால்சராயும், கோட்டும், ஷர்ட்டும் அணிபவர்கள்தான் அதிகம். நமது ஆலை முதலாளிகளை, உலக மார்க்கெட்டுடன் போட்டிபோட அனுமதித்தால் போதும். நமது கால் சட்டை, கோட்டுத் துணிகளுக்கு உலகில் நல்ல பெயரும், கிராக்கியும் இருக்கின்றன. அவர்களை அந்த மார்க்கெட்டில் வியாபாரம் செய்து அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துக் கொடுக்கச் சொல்ல இன்றையக் காங்கிரஸ் சர்க்காருக்குத் துணிச்சல் இல்லை.

அகமதாபாத் மில் முதலாளிகளின் பணத்தை எதிர்நோக்கி நிற்கும் காங்கிரஸ் கட்சியினர் தேசத்தின் பெருங் கைத்தொழிலான நெசவுத் தொழிலாளியின் வாழ்வுக்கு வகை செய்வார்களா, என்ன? இருந்தாலும் காங்கிரஸ்தான் ஏழைகளின் கட்சி என்று அது பகிரங்கமாகப் பொய் சொல்லுகிறது! இந்தப் பல்லவியைச் சென்னை முதன் மந்திரி கூட்டம் தோறும் பாடுகிறார்!

வெளிநாட்டுக் கடன்களை எப்படித் தீர்ப்போம்?

இந்திய அரசாங்கம், இன்று ஒரு நாடு விடாமல் கடன் வாங்கி வருகிறது. அடுத்த மூன்றாவது திட்டத்தில் பத்தாயிரம் கோடி ரூபாய் செலவழிக்க விருக்கிறது. இதில் பெரும் பகுதி வெளிநாடுகளிலிருந்து கடனாக வந்தாக வேண்டும். இதுவரை வாங்கியுள்ள கடனே ஏராளம். இனியும் வாங்கப் போகும் கடன் தொகையை நினைத்தால் சாதாரணமாக எவருக்கும் சித்தப்பிரமை ஏற்படும்!

ஆனால் எந்த நாடாகிலும் கடன் தருவதாக ஒப்புக் கொண்டால், நமது மந்திரிகள் இனம் தெரியாத குதூகலத்துடன் அதை வரவேற்கிறார்கள்.

இப்படிக் கடன் வாங்குவதைப் பற்றிக் குதூகலமாகப் பேசும் மந்திரிகள், எந்த முறையில் கடனைத் திருப்பிக் கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்?

இப்போதே பல கடன்களுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய காலமும் வட்டி செலுத்த வேண்டிய காலமும் நெருங்கிவிட்டன. இதற்காக வேறு கடன் வாங்கிவருகிறார்கள். இப்படியே போய்க் கொண்டிருந்தால் எந்த நாளில் யார் எப்படி இந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுக்கப் போகிறார்கள்? அதற்கு சர்க்கார் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று கேட்க மக்களுக்கு உரிமையுண்டு.


ஒரு நாடு இன்னொரு நாட்டிடம் கடன் வாங்கினால், வாங்கிய நாடு, ஏற்றுமதிப் பண்டங்களாகத்தான் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியும். இந்தியா, அமெரிக்காவுக்கு ரூபாய்நோட்டாகக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாது. அமெரிக்கா விரும்பி வாங்கக் கூடிய பொருளாகத்தான் திருப்பிக் கொடுக்க முடியும்.

அமெரிக்கா நம்மிடமிருந்து என்ன பொருள் வாங்க முடியும்? எல்லா இயற்கை வளமும், தொழில் வளமும் பொருந்திய அமெரிக்கா, ருஷ்யாமுதலிய நாடுகளுக்குப் பிடிக்கக்கூடிய எந்தப் பொருளை இந்தியாவினால்செய்யமுடியும்? அப்படிச் செய்தாலும் அவைகளை அந்நாடுகள் எத்தனை காலம் வாங்கும்? இந்தியாவில் உண்டாகும் எஃகு சரசமாக இருக்கும். அதை ஏற்றுமதி செய்யலாம் என்று கனவு கண்டார்கள். அந்தக் கனவும் பொய்யாகி விட்டது!

இந்தியாவினால் அனுப்பக் கூடிய பொருள்கள், குடிசைத்தொழில் பொருள்கள்தான். இவற்றில் கொஞ்ச காலம்

செய்தி தெரியுமா?

சாமா



ஏர்களை இங்கிருந்து அகற்றி விட்டு டிராக்டரையே சின்னமாக வைத்துக் கொள்ளுங்களேன்!
நேரு
'பழங்கால ஏர்களை ஒழித்து விட்டு நவீன ஏர்களைப் பயன்படுத்த வேண்டும்.'
—நேருஜி
அமெரிக்கா
கடன்
மக்கள்
கடன் வாங்குவது தப்பு என்று சொல்வது மடத்தனம்
இந்தியாவுக்கு மேலும் கடன் —செய்தி
கைத்தறித் துணி ஏற்றுமதித் திட்டம்
பதினாறு வகைகளும் கைத்தறித் துணி
அமெரிக்கா
அணுசோதனை
சகாரா பாலைவனத்தை எங்கும் விஸ்தரிக்க முயற்சி நடத்துகிறார் டிகால்
சகாரா பாலைவனத்தில் பிரான்ஸ் மற்றொரு அணுகுண்டை வெடித்தது.

அந்நாட்டு மக்களுக்கு மோகம் இருக்கும். பிறகு அந்த மோகமும் மாறிவிடும். இதை இந்தக் கைத்தறித் துணி விஷயத்தில் மிக நிதரிசனமாகப் பார்க்கிறோம்.

ஆக, பல்லாயிரம் கோடிகளாகக் கடன் வாங்கும் தொகையைத் திருப்பிக் கொடுக்க இந்தியாவுக்கு எதிர் காலத்தில் என்றாவது மார்க்கம் ஏற்படும் என்று நினைக்கவே வழியில்லை. புதிதாகச் சுதந்திரம் பெற்றுள்ள இழக்காசிய, ஆப்பிரிக்க நாடுகளில் நமது பொருள்களை விற்று, கடனைத் திருப்பித் தர முடியும் என்றும் சொல்வதற்கில்லை. புது விழிப்பும் சுதந்திரமும் பெற்றுள்ள அந்நாடுகள், நம்மைப் போலவே தங்கள் நாட்டிலேயே எல்லாப் பொருள்களையும் செய்து கொள்ளப் பார்ப்பார்கள்; நமது பொருள்களையெல்லாம் வாங்க மாட்டார்கள்.

பிரதமர் நேரு இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கையை அமெரிக்காவிலும் ரஷ்யாவிலும் அடகு வைத்து டாலராகவும் ரூபிளாகவும் கொண்டு வந்து கொட்டுகிறார். இதனுல் முடிவில் இந்தியா சுதந்திரத்தை இழக்கும்படியான நிலை உண்டாகும்.

இன்று வெளி நாடுகள் அரசியல் நோக்கம் ஏதுமின்றிக் கடன் கொடுப்பதாகப் பறைசாற்றினாலும், உலக அரசியல் நிலை மாறினால், அப்போது திரை மறைவிலிருக்கும் அரசியல் நோக்கம் வெளிப்பட்டு விடும்!

நம் நாட்டில் இன்னும் கொஞ்சம் பொன், மாதர்களின் கழுத்தில் அணிகளாகவும், கோவில்களில் ஆபரணங்களாகவும் உள்ளன. அவைகளை இன்றைய காங்கிரஸ் கடைப்பிடிக்கும் கொள்கை காரணமாக, நாமே சுரண்டி எடுத்து வெளிநாடுகளுக்குக் கொடுத்து விட வேண்டிய நிலைமை ஏற்படலாம்.

இந்தப் பயங்கரச் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகவா காந்திமகான், நேருஜியைத் தமது வாரிசு என்று கூறி ஆட்சிப் பீடத்தில் அமர்த்தினார்?

என்ன சேதி?

வேலூர்க் கூத்து

வேலூரில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், காங்கிரஸ் கொள்கைகளையோ செயல்களையோ பற்றி ஒன்றும் பேசப்படவில்லையாம்! சுதந்திரக் கட்சியையும் சுதந்திரக் கட்சித் தலைவர்களையும் நேர்மையற்ற முறையில் மறைமுகமாகவும் நேராகவும் தாக்குவதற்காகவே கூட்டம் போட்டாற் போலிருந்ததாம். சுதந்திரக் கட்சி சொல்லும் வாதங்களுக்கெல்லாம் பதில் சொல்லியிருந்தால் மக்களுக்கு விஷயமாகிலும் புரிந்திருக்கும். சட்டியில் சரக்கில்லாதபோது, கரண்டியைப் போட்டுக் குடைந்தால் வெறும் வறட்டுச் சத்தம் தானே வரும்?

அளகேசனின் ஒப்பாரி

இதில் திரு அளகேசன் வைத்த ஒப்பாரிதான் மிகப் பெரியது போல் காண்கிறது.

"காங்கிரஸை அழித்துவிட வேண்டுமென்று சிலர் நினைக்கிறார்கள். இது மிகவும் பாபமான காரியமாகும். தன் தாயைப் பற்றி யாராகிலும் அப்படி நினைக்கலாமா?" என்று பிரலாபித்திருக்கிறார்.

இதற்குப் பதிலைச் சுதந்திரக் கட்சியின் தமிழ் நாட்டுத் தலைவர் திரு சா. கணேசன் பல கூட்டங்களில் சொல்லி விட்டார்.

"காங்கிரஸில் காந்தீயம் இல்லை. காங்கிரஸ் செத்துவிட்டது! தாய் உயிரோடு இருக்கும் வரை போற்றி வணங்கி வருகிறோம். தாய் உயிர் நீத்தவுடன், அந்த உடலுக்குரிய ஈமச் சடங்குகளைச் செய்வதுதான் முறை: தர்மம். பெற்ற தாய் ஆயிற்றே என்று அந்த உடலை எடுத்து உள்ளே வைத்துக் கொண்டால் ஊருக்கே ஆபத்தாக முடியும்!"

காங்கிரஸ் இறந்து, அந்த அழுகல் நாற்றம் எவ்வளவு கடுமையாக வீசுகிறது என்பதைப்பற்றி, எதிர்க் கட்சிக்காரர்கள் அல்ல, ஆந்திர காங்கிரஸ் கட்சித் தலைவர் ஸ்ரீ பல்லம் ராஜு அவர்களே சொன்னதைச் சென்றவாரம் பார்த்தோம். ஆகவே, அளகேசன் பாபம் புண்ணியம் என்று பேசுவதற்குப் பொருளே இல்லை!

பவநகர் காங்கிரஸ்

பவநகர் காங்கிரஸில் கொண்டு வரவிருக்கும் தீர்மானங்களைக் காங்கிரஸ் செயற்குழு ஆராய்ந்து வெளியிட்டிருக்கிறது. அதைப் படிக்கும் யாருக்கும் சிரிப்புத்தான் வரும்.

சாதி உணர்ச்சி, மொழி வெறி, மாகாணப் பிரிவினை முதலிய நாட்டைச் சின்னாபின்னப் படுத்தும் சக்திகளுக்கு இடம் தரக்கூடாது என்பது ஒரு தீர்மானம். இந்த விஷ சக்திகளையெல்லாம் பாலூட்டி வளர்த்தது காங்கிரஸே

யல்லவா? காந்திமகான் காங்கிரஸின் கீழ் தேசத்தை ஐக்கியப்படுத்தினார். சுதந்திர பாரதத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட காங்கிரஸ் சென்ற பதின்மூன்று ஆண்டுகளில் நாட்டில் பல்வேறு விஷப் பாம்புகளை வளர்த்து வந்திருக்கிறது. நல்லோர் செய்த எச்சரிக்கையையும் பொருட் படுத்தாது நடந்து கொண்டு வந்திருக்கிறது.

நாட்டில் தொழில்களைப் பெருக்கி, ஏழைமையைப் போக்கி, சுபிட்சத்தை வளர்ப்பதற்கு முன்னால் மொழி வழி மாகாணப் பிரிவினையை யார் செய்யச் சொன்னது? பல மொழி பேசும் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்த பம்பாய், பஞ்சாப், அஸ்ஸாம் போன்ற பகுதிகளில், அரசாங்கத்தின் மொழிவழி மாகாணப் பிரிவினைத் திட்டம் புதிதாக மொழிவெறியைக் கிளறிவிட்டு, மக்களைமிருகங்களாக நடந்து கொள்ளச் செய்திருக்கிறது. மத்திய ஆட்சிமொழி விஷயத்தில், காங்கிரஸ் சர்க்கார் உண்மைக்கு விரோதமாகவும் மனச்சாட்சிக்கு விரோதமாகவும் நடந்து கொள்வதால் ஒன்றுபட்டு வாழும் மக்களிடையே துவேஷமும், பொறாமை உணர்ச்சியும் பிரிவினை உணர்ச்சியும் வளர்கின்றன. தமிழ்நாட்டில் மட்டும் தான் ஹிந்திக்கு எதிர்ப்பு என்றில்லை. வங்கத்தில், பஞ்சாபில் எங்கும் ஹிந்திக்குக் கடுமையான எதிர்ப்பிருக்கிறது. இது தெரிந்தும் காங்கிரஸ் சர்க்கார் பிடிவாதமாக இருக்கிறது!

சாதி உணர்ச்சியை என்றும் இல்லாத முறையில் வளர்த்துக் கொண்டு வருவதும் காங்கிரஸ்தான்.

சுதந்திரத்துக்குப் பிறகு நடைபெற்ற 52, 57ம் ஆண்டு தேர்தல்களில் காங்கிரஸ் தனது கொள்கையின் பலத்திலோ, சேவையின் பலத்திலோ, அபேட்சகர்களை நிறுத்தவில்லை. எந்த ஊரில் எந்த எந்தச் சாதியார் அதிகமாக இருக்கிறார்கள் என்று பார்த்து அந்த அந்தச் சாதி அபேட்சகரையே நிறுத்தியது. கவுண்டர்கள் அதிகமாக இருக்கும் தொகுதியில் கவுண்டரையும், முதலியார்கள் அதிகமாக இருக்கும் தொகுதியில் முதலியாரையும் அபேட்சகர்களாக நிறுத்திய பரிதாபத்தைத் தேசம் நன்கு அறியும்.

இவற்றுக்கு மேலாக, சாதித் துவேஷ உணர்ச்சியையே லட்சியமாகக் கொண்டுள்ள திராவிடக் கழகத்துடன் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கட்டிப் புரண்டு வருவது யாரும் அறிந்த பகிரங்க உண்மை. வகுப்புவாத ஸ்தாபனம் இந்த யுகத்தில் இருப்பதற்கே தகுதியில்லை என்று முஸ்லிம் லீகைத் தூற்றிவிட்டு, சற்றும் கூச்சமில்லாமல் கேரளத்தில் முஸ்லிம் லீகுடன் கூட்டுச் சேர்ந்து, அதற்குப் புத்துயிரும் உணர்ச்சியும் ஊட்டியது இந்த மாபெரும் காங்கிரஸ் ஸ்தாபனம்தான்.

இப்போது பவநகர் காங்கிரஸில், தேசத்தை ஐக்கியப்படுத்த வேண்டும், சாதி, மொழி, மாகாண உணர்ச்சிகளுக்கு இடம் தரக் கூடாது என்ற தீர்மானத்தைக் கொண்டு வருவதைப் பார்க்கும்போது, ஒரு வீட்டில் திருடிவிட்டு ஓடும் திருடன், தப்பிப்பதற்காகத் தானும் "திருடன்! திருடன்! பிடி!! பிடி!!" என்று கத்திக் கொண்டே ஓடுவது போல் இருக்கிறது.

தெலுங்கானா

'தெலுங்கானாவிலுள்ள நிலத்தை வெளியார் யாருக்கும் விற்கக் கூடாது' என்று ஆந்திர சர்க்கார் ஒரு சட்டம் செய்ய விருக்கிறார்கள்! வெளியார் என்றதும் அமெரிக்கர்களோ, ஜப்பானியர்களோ தெலுங்கானாவிலுள்ள நிலத்தை வாங்குவதாக இருக்கிறார்களா என்ன என்று சிலருக்கு ஐயம் எழலாம்! அந்த மாதிரியெல்லாம் இல்லை. தெலுங்கானா நிலத்தைப் பக்கத்திலுள்ள தமிழர்

காங்கிரஸின் பகாசுர ஆதிக்கியத்தை வீழ்த்த வேண்டிய அவசியத்தை உணர்ந்தவர்கள் அனைவரும் தங்களால் இயன்ற உதவியை இந்த ஆண்டு முதல் தேதி முதல் என் பெயருக்கு அனுப்ப வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். பெயரிட்டோ, பெயர் சொல்லாமலோ அனுதாபிகள் விருப்பத்தின்படி கல்கியில் நன்கொடைகளின் வரவு பிரசுரிக்கப்படும்.

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

C/o 'கல்கி' காரியாலயம், கீழ்ப்பாக்கம், சென்னை - 10

களோ, மகாராஷ்டிரர்களோ, மத்தியப் பிரதேசக்காரர்களோகூட வாங்குவதாக இல்லை. ஆந்திர ராஜ்யத்திலேயே யுள்ள, மற்ற ஜில்லாக்காரர்கள் வாங்க வருவதைத் தடுக்கத்தான் இந்த மசோதா. கிருஷ்ணா கோதாவரி ஜில்லாக்களில் நிலம் மிகச் செழிப்பானது. அங்கு உள்ளவர்கள் தங்கள் நிலத்தில் ஓர் ஏக்கரை ஐயாயிரம் ரூபாய்க்கு விற்று அந்தப் பணத்தில் மிகப் பெரிய நிலப் பகுதியைத் தெலுங்கானாவில் வாங்க முடிகிறது! இப்படி ஆந்திரர்கள் தெலுங்கானாவில் குடியேறி விடுவார்களாம். இதைத் தடுக்கத்தான் இம் மசோதா!

கிருஷ்ணா கோதாவரி பகுதியிலுள்ளவர்களும் தெலுங்கானாவிலுள்ளவர்களும் ஒரே மொழிதான் பேசுகிறார்கள். இருந்தாலும், ஆந்திர ராஜ்யம் ஏற்பட்டதிலிருந்தே தெலுங்கானா பகுதி தெலுங்கர்களுக்கும் மற்றப் பகுதி தெலுங்கர்களுக்கும் ஓயாத ஒழியாத சண்டை! மொழி வழி மாகாணம் வேண்டும் என்று முதலில் கிளர்ச்சி செய்தவர்களும் ஆந்திரர்கள்தான்! அதிலிருந்து நாட்டில் மற்றப் பகுதிகள் பிரிக்கப்பட்டதையும், அவற்றின் விளைவுகளையும் பார்த்து வரும் ஆந்திரர்களே, தாங்கள் செய்த காரியம் ஆத்திரப்பட்டுச் செய்தது என்பதை இப்பொழுது உணர்ந்திருப்பார்கள்! ஒரு மொழி பேசுவதனால் மட்டும் மக்கள் உள்ளங்கள் ஒன்றுபடுவதில்லை என்பதையும் இப்பொழுது உணர்வார்கள். இது மற்றவர்களுக்கும் பாடமாகும்.

மின்சார ரயில் நெருக்கடி

உதவி ரயில்வே மந்திரி திரு எஸ். வி. ராமஸ்வாமி தாம்பரம் வரை மின்சார ரயிலில் சாதாரணப் பிரயாணி போல் பிரயாணம் செய்து, பிரயாணிகளின் கஷ்டத்தை உணர்ந்ததாகத் தெரிவித்தார். 22 பேர்கள் பிரயாணம் செய்யக்கூடிய பெட்டியில் நூறு பேர்கள் பிரயாணம் செய்ததாக அவரே சொல்லுகிறார். இதிலிருந்து கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டுள்ள இந்தக் காலத்திலேயே இந்த நெருக்கடி என்றால் மற்றச் சமயங்களில் எப்படியிருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்!

மின்சாரக் கம்பிகள் அடிக்கடி அறுந்து போவதும், ஓடும் ரயில் வண்டியின் என்ஜினில் கோளாறு ஏற்பட்டு நின்று போவதும் சகஜமாக இருந்து வருகின்றன. இவற்றின் காரணமாக வேலை பார்க்குமிடங்களுக்குக் குறித்த காலத்தில் போய்ச் சேருவோமா என்ற தயக்கத்துடனேயே பிரயாணிகள் மின்சார வண்டிக்குள் ஏறுகிறார்கள்!

உதவி மந்திரி விழுப்புரம் வரை மின்சார ரயில் வசதியை விரிவுபடுத்துவதற்கு முன் இப்போது அமுலிலுள்ள மின்சார ரயிலை ஒழுங்குபடுத்தி அதிக ரயில் பெட்டிகளைச் சேர்க்க ஏற்பாடு செய்தால் பெருத்த உபகாரமாக இருக்கும்.

சுவாமிநாதனுக்குச் சுவர்ண புஷ்ப மாலை

குன்றுதோறாடும் குமரப் பெருமான் சுவாமிமலையிலும் கோயில்கொண்டு வழிபடும் பக்தர்களுக்கு அருள் புரிந்து காத்து வருகிறான். இத்தகைய காக்கும் கடவுள் முருகன் கோடி அர்ச்சனையில் இந்தியாவிலுள்ள பன்னிரண்டாயிரம் குடும்பங்கள் பங்கு கொண்டு, இந்தக் கைங்கர்யம் பிப்ரவரி 5-ந் தேதியன்று பூர்த்தியடைகிறது. அந்தப் பூர்த்தி விழாவன்று ஸ்ரீ சுவாமிநாதனுக்குக் கோடி அர்ச்சனை செய்த ஸகஸ்ரநாமாக்களைச் சுவர்ண புஷ்பங்களில் பொறித்து, அவற்றை மாலையாக முருகனுக்கு அணிவிக்க முடிவு செய்திருக்கின்றனர். இந்தக் கைங்கரியத்தில் பங்கு கொள்ள விழையும் பக்தர்கள் நன்கொடையை, "டாக்டர் எம். கே. சுப்பிரமணியம், பொருளாளர், ஸ்ரீ சுவாமிநாதஸ்வாமி கோடி அர்ச்சனைக் கமிட்டி, பெஸன்ட் ரோட், கும்பகோணம்" என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம்.

கல்கத்தாவில் தியாகப்பிரும்ம மகோத்சவம்

நான்கு வருஷங்களுக்குமுன் தோன்றிய கல்கத்தா கர்நாடக சங்கீத சம்மேளனம் இன்று வங்காளிகளும் கர்நாடக சங்கீதத்தின் பெருமையை உணரும்படி செய்து வருகிறது. கல்கத்தா சங்கீத வித்வான்களுக்கும் இளம் பாடகர்களுக்கும் இந்தச் சபை இடமளித்து உற்சாகமூட்டிக் கௌரவித்து வருகிறது. இச்சம்மேளனம் ஜனவரி 6-ந் தேதியிலிருந்து 15-ந் தேதிவரை தியாகப்பிரும்ம மகோத்சவத்தை விமரிசையாக நடத்த விருக்கிறது. ஆராதனை உற்சவம் ஜனவரி 7-ந்தேதி நடைபெறுகிறது. இந்த உத்ஸவ விழாவைத் திரு ஆர். சபேசன் ஆரம்பித்து வைக்கிறார்.

சத்தியத்தின் சங்கநாதம்

கோவிலில் அன்றாடப் பூஜைகளைக் கவனித்து வந்தார் ஒரு ஒருவர். இறைவனுக்கு நிவேதனம் செய்ய நெல் சேகரித்து அதனைக் கோவில் பிராகாரத்தில் வெய்யிலில் உலர வைத்தார். தாமிரபரணியில் இறங்கி ஸ்நானத்தை முடிக்கு முன்னர் கடுமழை பிடித்துக் கொண்டது. 'பகீர்' என்றிருந்தது அர்ச்சகருக்கு. 'ஐயோ! அரும்பாடுபட்டுத் திரட்டிய நெல் எல்லாம் ஈரமாகிவிடுமே?' என்று பதறினார். ஆண்டவனைத் துதி செய்தவாறே கோவிலுக்கு விரைந்தார். பார்த்தால், சுற்றுப்புறமெல்லாம் நனைந்திருந்தும் ஒரு மணி நெல்கூட ஈரமாகவில்லை! பக்திப் பரவசமாகிப் புளகாங்கிதமுற்று, "அப்பனே! நெல்லைக் காத்த நெல்லையப்பனே!" என்று கூவி ஆண்டவன் திருவடிகளிலே விழுந்தார் அர்ச்சகர்.

சுதந்திரக் கட்சியை ஆரம்பித்ததன் முதல் நோக்கமே கூட்டுப் பண்ணை முறையை எதிர்த்து நாட்டின் விவசாயத்தைக் காக்க வேண்டும் என்பதுதானே? நெல்லைக் காத்த நெல்லையப்பன் இந்தக் கட்சிக்கு ஆசி நல்காமல் இருப்பாரா? அன்று நெல்லுக்கு வேலி யிட்டுக் காத்த ஈசன் திரு நெல் வேலி மாவட்டத்தில் ராஜாஜியின் சுற்றுப் பிரயாணம் அமோகமான வெற்றியடைய அருளியதில் வியப்பொன்று மில்லையல்லவா?

பல்லாயிரக்கணக்கான மக்கள் ராஜாஜியின் தாமிரபரணி நீரைப்போன்ற தெளிவான பிரசங்கங்களையும் தமிழ்நாடு சுதந்திரக் கட்சித் தலைவர் திரு கணேசனது குற்றாலம் அருவி போன்ற சொற்பொழிவுகளையும் கேட்டு மகிழ்ந்தார்கள்; பயனடைந்தார்கள்.

அந்த அறிவுரைகளிலிருந்து சில ரசமான பகுதிகளை மட்டும் கீழே தருகிறோம்.

எட்டயபுரம் பாரதி ஞாபகார்த்த மணி மண்டபம் நிர்வாகிகள் தலைவர்களுக்கு வரவேற்பளித்தார்கள். "சுதந்திரதேவி நின்னைத் தொழுதிடல் மறக்கிலேனே!" என்ற பாரதியின் வரிகளைத் தமக்கே உரிய பாணியில் திரு கணேசன் முழங்கியதும், "அந்தச் சுதந்திர தேவியை இன்றைக்கு அசோக வனத்தில் சீதையைச் சிறைப்படுத்தியது போல், வைத்திருக்கிறார்கள். மீட்டு வர வேண்டியது நம் கடமை" என்று நினைவு படுத்தினார் ராஜாஜி.

வெற்றிலைக் கொடிகள் பயிரிடுவதைக் கவனித்திருக்கிறீர்களா? அகத்தி மரத்தைச் சுற்றிலும் கொடியைப் படர விடுவார்கள். ஆரம்பக் கட்டத்தில் கொடிக்குத் தேவையான நிழலைத் தரும் அகத்தி கொழு கொம்பாயும் நின்று உதவும். அகத்தி மரமில்லையானல் வெற்றிலைக் கொடி வாடி வதங்கிப் போகும். அதே போலத்தான் முதலாளிகளைச் சார்ந்து வாழ்கிறார்கள் எண்ணற்ற மக்கள். அகத்தி மரத்தைக் கோடரி கொண்டு வெட்டிச் சாய்த்து விடுவோம் என்கிறார்கள் காங்கிரஸ் சர்க்கார். ஏழைத் தொழிலாளர்களின் கதி என்ன ஆகும்? என்று விளாத்திகுளத்தில் ராஜாஜி கேட்டபோது, காங்கிரஸின் பேதமையைக் கண்டு மக்கள் கெக்கலி கொட்டினார்கள்.

நாங்கள் அதைச் செய்தோம், இதைச் செய்தோம் என்று பறைசாற்றுகிறார்களே காங்கிரஸ்காரர்கள். இவர்கள் எதைச் சாதித்தார்கள்? மக்களின் வரிப்பணம்; மக்களின் உழைப்பு இவையல்லவா நாட்டில் நடந்திருக்கும் ஓரிரண்டு நல்ல காரியங்களையும் உருவாக்கி யிருக்கின்றன?

கோவில் தர்மகர்த்தா தவறு செய்கிறார் என்று வழக்குத் தொடுத்தால், தாம் நிரபராதி என்று நிரூபிக்க, அவர் கோயில் உண்டியலில் பக்தர்கள் போட்ட காணிக்கையையே எடுத்து வக்கீலுக்கு பீஸாகக் கொடுப்பாரேயானல் அது எவ்வளவு முறையற்ற செயல்? அது போலத்தான் மக்கள் செலுத்தும் வரிப் பணத்தை உபயோகித்து மந்திரிகள் ஊர் ஊராகப்போய்த் தேர்தல் பிரசாரமும் கட்சிப் பிரசாரமும் செய்வது என்று கோவில் பட்டியில் ராஜாஜி காங்கிரஸின் தவறான போக்கைச் சுட்டிக் காட்டினார்.

எதேச்சாதிகாரத்துக்குக் கட்டுப்பட்டுக் கூட்டுப் பண்ணைகள் மயமாக விளங்கும் ரஷ்யாவிலே கூடத் தனியார் துறையிலும் கொஞ்சம் நிலம் பயிராகிறது என்கிறார் சமீபத்தில் அந்த நாட்டுக்கு விஜயம் செய்து திரும்பிய சென்னை விவசாய மந்திரி. அந்த விளைபொருள்களைத் தனியார் துறையிலேயே விற்கவும் செய்கிறார்களாம். மக்கள் தனியார் துறையில் விளைந்து, விற்பனையாகும் தானியங்களைத்தான் அதிகமாக விரும்புகிறார்கள் என்று மந்திரியே ஒப்புக் கொள்கிறார். காரணம் இதுதான்: கூட்டுப் பண்ணையில் உற்பத்தியான அரிசி பெயருக்கேற்ப ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டு ஒரே கட்டாகச் சங்கிலித் தொடர்போல் இருக்கிறது. தனியார் துறையில் விளைந்த அரிசியோ தனித்தனியாக, மணி மணியாகத் தோற்றமளிக்கிறது. மக்கள் பின்னதை வாங்க ஆசைப்படுவதில் வியப்பென்ன? என்று நெல்லையில் திரு சா. கணேசன் அவர்கள் கேட்டபோது கரகோஷம் வானைப் பிளந்தது.

நாங்குநேரியில் ராஜாஜி தாத்தாவைக் கண்டதிலே சிறுவர்களுக்கு ஒரே குதூகலம். அவர்களது கும்மாளம் சொற்பொழிவைக் கேட்க வந்த பெரியவர்களுக்கு இடைஞ்சலாக இருந்தது. அதட்டினார்கள்; கையையும் ஓங்கினார்கள். தடுத்து நிறுத்தினார் தாத்தா. "இந்த வருங்காலச் செல்வங்களுக்காகத் தானே இவ்வளவு சிரமப்படுகிறேன் நான்?"





என்று கேட்டார். ''கண்மூடித்தனமாகச் சர்க்கார் வாங்கும் கடன் சுமையைத் தாங்கப் போகிறவர்கள் இந்தக் குழந்தைகள்தான். வாங்கிய கடனுக்கு வட்டி செலுத்தவே மீண்டும் கடன் வாங்க வேண்டிய அவல நிலையில் இருக்கிறோம். என் உடல் நிலை பற்றி வரவேற்புரையில் குறிப்பிட்டார்கள். நான் கவலைப்படுவதெல்லாம் தேசத்தின் உடல்நிலை பற்றித்தான்!'' என்று ராஜாஜி சொன்னபோது கலங்காத கண்கள் இல்லை.

காந்தியடிகள் தாம் இறந்துபோவதற்கு முதல்நாள், 1948 ஜனவரி 29ல் ஓர் உயில் எழுதி வைத்தார் என்பது பலருக்குத் தெரியாது. காங்கிரஸ் கட்சி பிரசார யந்திரமாகவும் அதிகாரப் பித்து கொண்டதாயும் மாறி வரும் நிலை கண்டு மனம் வெதும்பி அதனைக் கலைத்துவிடவேண்டும் என்று ஆசைப்பட்டார் அவர். தமது வாழ்நாளிலே தமது கைப்பட எழுதிய கடைசி வரிகள் இதைக் குறித்துத்தான். ஆகவேதான் அதனை அவரது உயில் என்றும் இறுதிக் கோரிக்கை என்றும் கருதி 'காங்கிரஸும் அதன் எதிர்காலமும்' என்ற புத்தகத்திலே வெளியிட்டிருக்கிறது நவஜீவன் பிரசுராலயம்.

இதற்குப் பல வருஷங்களுக்கு முன்பாகவே 'காங்கிரஸ் ஸ்தாபனத்தில் தலைவிரித்தாடும் லஞ்ச ஊழல்களைப் பொறுத்துக்கொள்வதைக் காட்டிலும் அதனை அடக்கம் செய்துவிடும் அளவுக்குப் போய் விடுவேன்' என்று தயங்காமல் கூறியிருக்கிறார் மகாத்மா.

இவற்றை எடுத்துக் காட்டி ஆணித்தரமாகச் சொன்னார் திரு கணேசன் நாங்குநேரியிலே: ''என்றைக்குக் காந்தீயம் என்ற உயிர் காங்கிரஸிலிருந்து நீங்கிவிட்டதோ, அன்றைக்கே அது செத்தும் விட்டது!'' என்று.

பிறருக்கு மகிழ்ச்சி ஊட்டுவதிலே நமக்கும் ஆத்மார்த்தமான ஒரு சந்தோஷம் உண்டாகிறது. இந்த ஆனந்தம் தனி மனிதனின் சுதந்திரத்துடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருக்கிறது. கன்றுக்குப் பாலைக் கறந்து கொடுத்தால் தாய்ப் பசு சந்தோஷம் அடையுமா? ஊட்டிக் குடிப்பதிலேதான் தாய்ப் பசுவுக்கும் கன்றுக்கும் ஒருங்கே மன நிறைவு உண்டாகிறது. இவ்வாறு நெல்லை ரோட்டரி சங்கத்தில் ராஜாஜி மனிதனின் சொந்த உழைப்பின் மகிமையை அழகாக எடுத்துச் சொன்னார்.

''சிறையிலிருப்போருக்கு அந்த வாழ்க்கை எப்படிப் பழக்கமாகி விடுகிறதோ, அதைப்போல் அடிமை மனப்பான்மை நம்மிடையே சாசுவதமாகக் குடிகொண்டுவிடும் விழிப்புடன் இராவிட்டால்......'' என்று தூத்துக்குடி மக்களை எச்சரித்த சுதந்திரக் கட்சி ஸ்தாபகர் அன்னியக் கடன்களைப் பற்றியும் குறிப்பிட்டுச் சொன்னார்: ''பாலாய் சென்ட்ரல் பாங்கை மூடிவிட எவ்வளவு காரணம் உண்டோ, அதைப் போல் பத்து மடங்கு அதிகக் காரணங்கள் உண்டு காங்கிரஸ் ஆட்சிக்கு முடிவு கட்ட!'' என்று.



யானையைக் கண்டு பயந்து வள்ளி ஒளிந்து கொண்ட மலைக் குகையைப் பூஜை புனஸ்காரங்களுடன் இன்னமும் பராமரித்து வரும் தெய்வ பக்தி நிறைந்த திருச்செந்தூர் பொது மக்களிடையே ராஜாஜி பேசினார்: ''ஆண்டவன் நமக்கு எதையுமே இலகுவாக்கி விடுவதில்லை. நமது தகுதியைப் பரீட்சித்துப் பார்க்கிறார் முதலில். இன்று நமக்குச் சோதனைக் காலம். உறுதி தளராமல் சோதனைகளில் வெற்றி பெற்றுக் கடைத்தேறுவோம்...

.....பதனியும் தெளிவும் உட்கொண்டால் உடம்புக்கு நல்லதுதான். ஆனால் அதையே ஓரிரண்டு நாட்களுக்குமேல் வைத்திருந்து அருந்தினால் தலைக்கேறும் மயக்கப் பொருளாக மாறுகிறது. பதின்மூன்று வருஷங்களாக ஆட்சி நடத்திவரும் காங்கிரஸில் பதவி மோகமும் அதிகாரப் பித்தும் தலைக்கேறி இருப்பது இதே போலத்தான்.....''





குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு குளிப்பதற்கு ஆற்றங்கரைக்குச் சென்றாளாம் ஒருத்தி. வழியில் ஆற்றோடு கலக்கும் ஆழமான ஓடையில் பலாப்பழம் ஒன்று மிதந்து செல்வதைப் பார்த்தாள். கரையில் குழந்தையை இறக்கி விட்டுவிட்டு ஓடையில் மிதந்த பலாப்பழத்தை எட்டிப் பிடிக்க முயன்றாள். ஒருவாறு பலாப்பழத்தை எடுத்துக் கொண்டு கரை சேருவதற்குள் நீரோடையில் விழுந்த பெற்றெடுத்த பிள்ளையை ஆற்று வெள்ளம் அடித்துக் கொண்டு போய்விட்டது!

பரம்பரை பரம்பரையாக நெல்லையில் வழங்கிவரும் கதை இது. சோஷலிஸம் என்ற அழுகிய பலாப்பழத்தை எடுக்க எண்ணித் தனிமனிதன் சுதந்திரம் என்ற பிள்ளையை இனிமேல் பறி கொடுக்க மாட்டார்கள் நெல்லைவாசிகள் என்பது நிச்சயம்.

---

1. தமிழ்நாட்டுச் சுதந்திரக் கட்சித் தலைவர் திரு சா. கணேசன். 2. திருநெல்வேலி ஜில்லா சுதந்திரக் கட்சிப் பொருளாளர் திரு நாராயணசுவாமி அய்யர். 3. காரியதரிசி திரு மந்திரம். 4. செங்கோட்டை செயலாளர் திரு குற்றாலராமலிங்கம். 5. சேரன்மாதேவி எஸ்.எம்.வி.ஆர். கிருஷ்ணன் 6. தூத்துக்குடி கிட்டு. 7. காயல்பட்டினம் முகம்மத் தம்பி. 8. கடையநல்லூர் எஸ். எம். காஜா முகைபுதீன். 9. திருநெல்வேலி ஜில்லா சுதந்திரக் கட்சித் தலைவர் திரு ராமசாமிக் கோனார். 10. கோவைத் தொழிலதிபர் கே. சுந்தரம். 11. செங்கோட்டை ஹமீத். 12. விளாத்திகுளம் பெருமாள் ரெட்டியார். 13. கல்லிடைக்குறிச்சி லட்சுமி அம்மாள். 14. எட்டையபுரம் ராஜா. 15. காரியதரிசி சங்கரநாராயணன்.





இசைக்கலையின் முன்னேற்றம்

சாமி

ஆண்டுதோறும் பல சங்கீத சபைகளும், சங்கங்களும் இசை விழாக்கள் கொண்டாடுவதைப் பார்க்கும்போதெல்லாம் தொழிற்கம்பெனிகள் ஆண்டுதோறும் கூட்டும் மகா சபையும் அப்போது அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்படும் ஆண்டு அறிக்கையும் எனக்குக் கவனத்துக்கு வருகின்றன. சங்கீதத்துக்கும் தொழிற்சாலைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை நான் நன்றாகவே உணர்கிறேன். ஆனால் நடவடிக்கைகளில் சில அம்சங்களில் இவ்விரண்டுக்கும் ஒற்றுமை காணப்படுகிறது. கடந்த வருஷத்தில் நடந்த முன்னேற்றங்களையும், அல்லது முன்னேற்றங்கள் நடைபெறாவிட்டால் அவற்றுக்கான காரணங்களையும், பொதுவாக நிலவிய சூழ்நிலைகளையும், கஷ்ட நஷ்டங்களையும், எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளையும் வருஷாந்திரக் கூட்டத்தில் அலசி ஆராய்வது வழக்கம். சங்கீதத் துறையிலும், லாபநஷ்டக் கணக்கு என்ற முறையில் இல்லாவிட்டாலும், சங்கீதக் கலையின் வளர்ச்சியைப் பற்றியும், அதன் ஏற்றத் தாழ்வுகளையும், குற்றங்குறைகளையும், தலைமை வகிக்கும் இசை அறிஞர்களும், விழாக்களைத் தொடங்கி வைக்கும் பிரமுகர்களும் விரிவாக அலசிக் கருத்துக்களைப் பொழிவது வழக்கம். இவற்றைக் கேட்டுப் பயனடைவோர்கள் பலர். குற்றங்களைக் களைந்து முன்னேற முயல்பவர்கள் பலர். சில சமயங்களில் விழாக்கள் முடிந்ததும், சில கச்சேரிகளில் கேட்ட பாட்டுகளைப் போல், அவற்றை மறந்து விடுவதும் உண்டு. ஆனால், அந்தச் சமயங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் மிகவும் முக்கியமானவை. இவ்வாண்டு தலைவர்களின் பேருரைகளின் கருத்துக்களை இங்கே குறிப்பிடுவது அவசியம் என்று தோன்றுகிறது.

சென்னை வித்வத் சபைத் தலைவர் வித்வான் ஸ்ரீ டி. கே. ஜெயராம அய்யர் அவர்கள் சங்கீதத்தின் தரத்தைப் பற்றியும் ரசிகர்களைப் பற்றியும் முக்கியமாக மூன்று கருத்துக்களை உதிர்த்தார்.

முதலாவது, ரசிகர்களுக்காகச் சங்கீதமா, சங்கீதத்துக்காக ரசிகர்களா என்ற, ஒன்றையொன்று சார்ந்துள்ள சிக்கலான கேள்விக்கு, சங்கீதம்தான் பிரதானம் என்று வெகு நாசூக்காகக் குறிப்பிட்டார். ராகப் பிரஸ்தாரங்களை மணிக்கணக்கிலும் நாள் கணக்கிலும் விரிவாகச் செய்து புகழ்பெற்ற தோடி சீதாராமய்யா, சங்கராபரணம் நரசய்யா போன்ற வித்வான்களைச் சலிக்காமல் கேட்டு ரசித்த ரசிகர்களைப் போலவே இன்றும் நல்ல சங்கீதத்தைக் கேட்டு இன்புறும் ரசிகர்கள் இருக்கிறார்கள். அதிக நேரம் பாடினால் சலிப்பு ஏற்பட்டு விடும், ரசிகர்கள் விரும்ப மாட்டார்கள் என்றும், அவர்கள் விரும்புவதெல்லாம் அப்போதைக்கு மட்டும் காதுக்கு இனிக்கும் பாட்டுத்தான் என்றும் ரசிகர்கள் மீது பழியைச் சுமத்தி விட்டு, உணர்ச்சியற்ற வறட்டுச் சங்கீதத்தையும் தரக் குறைவான இசையையும் வழங்குவது விரும்பத்தக்கதல்ல என்றார். ரசிகர்கள் எல்லாம் உயர் சங்கீதம் விரும்பாத செவிடர்கள் என்று ஒரு வித்வான் எண்ணினால் அது தன்னையே தாழ்மைப்படுத்திக் கொள்ளுவதாகும் என்று சுட்டிக் காட்டினார்.

இரண்டாவது, கீர்த்தனைகளில் அட்சரசுத்தம் அவசியம் என்பதை அழுத்தமாகச் சொல்லி வலியுறுத்தினார். "காமகோடி பீடே" என்பதை அறியாமையினால் "காமகோடி பீடே" என்று பாடினால், ராகமும் பாவமும் என்னதான் உன்னதமாக இருந்தாலும் உள்ளம் விரும்பாது. தியாகராஜ கிருதிகளில் பல இன்னமும் கச்சேரிகளில் சின்னாபின்னப் படுத்தப்படுவதை இவ் வருஷ இசை விழாக் கச்சேரிகளிலேயும் கேட்க முடிந்தது என்றால் இதன் அவசியம் புலப்படும்.

மூன்றாவது, சாரீர சாதகமும் அதில் கவனம் செலுத்துவதும், வித்வத் பாவமும், ஸ்வரப்ரஸ்தாரமும், லயவின்யாசங்களும் இருந்துவிட்டால் போதுமானவை, ராக பாவமும் சுகானுபவ உணர்ச்சியும் இல்லாவிட்டாலும் வித்வத் திறமையில் அவை மறைந்து விடும் என்ற மனோபாவம் தவிர்க்க வேண்டியது. கம்பீரமான இனிய சாரீரத்தை அப்பியாசத்தின் மூலம் பெறமுடியும் என்பதற்கு வட இந்தியாவில் இந்துஸ்தானி சங்கீதத்தைப் பயிலும் வித்வான்கள் தங்களுடைய முதிய வயதிலும் விளம்ப காலத்தில் சுருதி சுத்தமாகவும் ஜீவ களையுடனும் பாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதே ஓர் எடுத்துக்காட்டு. இப்படிப்பட்ட அபாரத் தன்மைக்கு, ஆரம்பக் காலத்தில் சாரீர சாதகம் செய்வதில் அவர்கள் எடுத்துக் கொள்ளும் அக்கறை தான் காரணம். அம்மாதிரி நாமும் ஏன் சாதகம் செய்து குரலின் இனிமையை உண்டாக்கிக் கொள்ளக்கூடாது என்கிறார் வித்வான் ஜெயராம அய்யர்.

சாஸ்திரீய சங்கீதம் என்பது கிள்ளுக்கீரை அல்ல; அதை முழுமனத்துடன் அப்பியசிக்க வேண்டும்; தீவிர கவனம் செலுத்த வேண்டும். எவ்வளவு உண்மை!

இதே கருத்தை வேறொரு முறையில் இசைப் பேரறிஞர் சங்கீத கலாநிதி அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் தமிழிசைச் சங்க ஆண்டு விழா நிகழ்ச்சிகளுக்குத் தலைவர் என்ற முறையில் வெளியிட்டார். "இசைக் கலை வெறும் பாட்டுக்களால் மட்டும் வளர்க்கப்படுவது அல்ல. இசைக்கும் அதன் தன்மைக்கும் உரிய இடம் எப்போதுமே இருக்கும்படி செய்வதனாலேயே இசைக்கலை வளர்க்கப்படுவதாகும். தமிழ்ப் பாடல்களுக்கு முதலிடம் அளித்துப் பாடப்பெற வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் நாம் சங்கீதத்தைப் பற்றிய கவலை கொள்ளாமலே இருந்துவிடுவதற்கில்லை. சங்கீதத்தின் தரம் உயர்தரமாக அமைந்த முறையில் உள்ள எந்தப் பாடல்களையும் நாம் பாடலாம். நம் இசைக் கலைக்கு உற்ற துணையாக நமது நாட்டில் தமிழ் மொழிப் பாடல்களே தரங்குறையாது இசையரங்குகளில் இடம் பெற்றுத் திகழ வேண்டும் என்பது என் உறுதியான கொள்கையாகும்" என்று தமது முதிர்ந்த அனுபவத்தினின்று கண்டறிந்த உண்மையை அவர் எடுத்துச் சொல்லுகிறார். மேலும், "நம் தமிழ்நாட்டிலேயே தோன்றிய பலவாக்கேயக் காரர்கள் நமக்குச் செய்த அரிய நிதி போன்ற பல உருப்படிகளை அவற்றின் வாரிசுதாரர்களாகிய நாமே அறவே ஒதுக்கிவிடாது, அவற்றை நமக்கே உரிய பண்பினாலும் உரிமையினாலும் அழியாது பாதுகாத்துப் போற்ற வேண்டும்" என்று வலியுறுத்துகிறார்.

இதே கருத்தை மற்றொரு மேடையில் திரு வி. வி. கோபாலரத்தினம் வெளியிட்டார். "அமைதியாகச் சிந்தித்துப் பார்க்கும்போது நன்றாகப் பாடப்பட்ட ஓர் உருப்படியிலிருந்து ஏற்படும் சுகானுபவம், அதன் சாகித்யமும் உன்னதமாக அமைந்திருந்து அதைத் தெளிவுடன் உச்சரிப்பதால் பன்மடங்கு அதிக

மாகிறது. சுத்த ஆலாபனத்திலும் ஸ்வர ப்ரஸ்தாரங்களிலும் மட்டும் நீண்ட நேரம் இன்புற முடியாது. கிருதிகளையும், பதங்களையும் மனித உள்ளம் எதிர்பார்க்கிறது. அவற்றை அளிக்க வேண்டும்'' என்று வற்புறுத்துகிறார். ரசிகர்களுடைய கடமையைப் பற்றிக் கூறுகையில், ''ரசிகர்களுடைய பகிரங்கக் கண்டனம் இல்லாமல் நமது சங்கீதத் துறையிலாகட்டும், நடனக் கலைகளிலாகட்டும், நாடக மேடைகளிலாகட்டும், விரும்பத் தகாத அம்சங்களை விலக்கவே முடியாது. இந்தக் கடமையை அவர்கள் செய்யத் தவறக் கூடாது'' என்று பட்டவர்த்தனமாகவே சொல்லுகிறார்.

இக்கருத்துக்களை யெல்லாம் இங்கே இவ்வளவு விரிவாகக் குறிப்பிட்டதன் நோக்கம் நமது இளம் வித்வான்களுக்கும், சங்கீத அபிமானிகளுக்கும் இவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்கே.

சங்கீத சபைகள் பெருகிக் கொண்டு வருகின்றன; பரத நாட்டிய அரங்கேற்றங்களும் வாரத்துக்கு ஒன்று என்று நடைபெற்றுக் கொண்டு வருகின்றன; சங்கீத சாஸ்திரத்தைப் பற்றிய அறிவும், நுட்பங்களை உணரும் திறனும், சர்ச்சைகள் நடத்தும் சாமர்த்தியமும் கூடவளர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. இவை மகிழ்ச்சிக்குரிய விஷயங்களென்றாலும், இவ்வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் இசைக் கலையைப் பயின்று கச்சேரிகளில் வழங்கப்படும் சங்கீதத்தின் தரமும் உயர்வாகவே இருந்தால் மட்டுமே இக்களிப்பைப் பூரணமாக அநுபவிக்கலாம். இல்லாவிடில் வெறும் எட்டளவில் சபாக்களின் எண்ணிக்கை மிகுந்துள்ளது என்று மேலெழுந்தவாரியாக சந்தோஷப்படலாம். கலை வளர்ச்சியில் உண்மை ஆர்வம் உள்ளவர்களெல்லாம் இதை எவ்வளவு தூரம் விரும்புவார்கள் என்பது சந்தேகம்.

வித்வத் சபை மேடையில் வழக்கம் போல இளம் வித்வான்கள் இரண்டு வகுப்பினர்களாகப் பிரிக்கப்பட்டு இசையமுது வழங்கினார்கள். ஒரு மணி நேரக் கச்சேரி என்றும் ஒன்றரை மணி நேரக் கச்சேரி என்றும் வழக்கமாக ஏற்படுத்தப்பட்ட பாகுபாடு இவ்வாண்டும் அனுஷ்டிக்கப்பட்டது. ஆனால் சென்ற ஆண்டில் ''மைக்'' இல்லாமல் கச்சேரிகள் நிகழ்ந்ததினால் ஏற்பட்ட அனுபவத்தின் காரணமாகவோ என்னமோ, 'மைக்' அதனுடைய ஸ்தானத்துக்கு மறுபடியும் ஏற்றி வைக்கப்பட்டது. 'மைக்'கின் உதவியின்றியே பாடுவது நல்லது என்று தலைவர் திரு டி. கே. ஜெயராம அய்யர் சொன்னாலும், நடைமுறையில் அதனுடைய அவசியம், கருத்தரங்கில் தோன்றிய அனாவசியத்தை அமிழ்த்தி விட்டது. ஏராளமான ரசிகர்களால் இந்த உபகரணத்தின் உதவியினால் கச்சேரிகளைக் கேட்க முடிந்தது.

இந்த ஆண்டு பிற்பகல் நடைபெற்ற கச்சேரிகளைப் பற்றிப் பொதுவாகச்சில கருத்துக்களைச் சொல்ல வேண்டி யிருக்கிறது. முதலாவது, ராகங்களின் ஸ்வரூபத்தை நன்கு உணர்ந்து அனுபவிக்காமலே 'எக்ஸ்பிரஸ்' வேகத்தில் ஆலாபனம் செய்வதில் அதிகமான ஆர்வம் அடிக்கடி காணப்பட்டது. கேவலம், ஸ்வரங்களின் ஆரோஹண அவரோஹணக் கிரமங்களை மட்டும் பற்றிக்கொண்டு ராக ஆலாபனத்தை ரஞ்சகமில்லாமல் வழங்குவதற்குத் திறமை அதிகமாகத் தேவைப்படும் என்றாலும், ரசிப்பதற்கு உகந்ததல்ல. இரண்டாவது, லய வின்யாச வேலைப்பாடுகளில் அதிக மோகம் இருப்பதும் அடிக்கடி காணப்பட்டது. வித்வத் திறன் அப்போதுதான் வெளிப்படும் என்ற எண்ணத்தினால் இந்த ஆர்வம் சிலசமயம் ஏற்படலாம். ஆனால் இளம் வித்வான்களுக்கு இதனால் சங்கீதத்தின் வளர்ச்சி தடைப்படும் என்றே எண்ணத் தோன்றுகிறது. சில சமயங்களில் சாரீர வசதி இயற்கையாகப் படைத்திராத சிலர் கூட இத்தகைய வேலைப்பாடுகளில் ஈடுபடுவதைப் பார்த்தால் வருந்தவே தோன்றியது.

சமத்கார சாகஸங்களில் ஈடுபடும்போது, எடுப்பு இடத்துக்கு வரவேண்டுமென்ற லட்சியத்தில் ஆதார சுருதியைக் கூட மறந்து விடும்படியான சந்தர்ப்பங்களும் ஏற்பட்டு விடுவது சகஜம். சுருதியைத் தாயாகவும் லயத்தைப் பிதாவாகவும் இசை நூல்கள் வர்ணிக்கின்றன. வட இந்திய சங்கீதத்தில் சுருதியுடன் இயைந்த சங்கீதத்தின் நேர்த்தியைக் காணலாம். இந்த ஆண்டு நிகழ்ச்சிகளில் வித்துவான் பீமசேன ஜோஷியின் இந்துஸ்தானி சங்கீதம் கேட்டுப் பயன்பெறுவதற்கு ஏற்றதாக அமைந்திருந்தது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

சுருதி விலகிப் பாடப்பட்ட சமயங்கள் பல இவ்வாண்டு பகல் கச்சேரிகளில் தென்பட்டன என்பதை வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது. மூன்றாவது, ராகத்தை நன்கு ரசிப்பதற்கு ஓட்டமில்லாத நடைதான் ஏற்றது என்பதைச் சென்ற ஆண்டு தலைமை வகித்த சங்கீத கலாநிதி மதுரை மணி அய்யர் அடிக்கடி எடுத்துக் காட்டினார். இதைக் கவனத்தில் வைத்துக் கொள்ளுவது இளம் வித்துவான்களுக்கு அவசியம் என்றே சொல்லத் தோன்றுகிறது.

சென்ற டிசம்பர் 24-ந் தேதி முதல் 28-ந் தேதி வரையில் ஐந்து நாட்களில் இரண்டரை மணி முதல் மூன்றரை மணி வரையிலும், மூன்றரை மணியிலிருந்து ஐந்தரை மணிவரையிலும் கச்சேரிகள் நிகழ்த்திக் கொட்டகை நிரம்பி வழிந்த கணக்கற்ற ரசிகர்களுக்கு இசை விருந்தளித்தனர் இளம் வித்வான்கள்.

அந்தந்தத் தினங்களில் நடைபெற்ற பிற்பகல் கச்சேரிகளில் ஏற்கனவே ரசிகர்கள்கேட்டு அனுபவித்த சில பழம் வித்வான்களுடன் சில புதிய வித்வான்களும் அறிமுகமானார்கள். இந்த மேடையில் இந்த ஆண்டு முதன் முதலாக இடம் பெற்றவர்கள் வீணையும் பிடிலும் வாசித்த புதுக்கோட்டை சகோதரர்கள், புல்லாங்குழல் ஸ்ரீ கே. வி. ஸிங்கராச்சாரி, வாய்ப்பாட்டு ஸ்ரீமதி மணி கிருஷ்ணஸ்வாமி ஸ்ரீ டி. ஆர். சுப்ரமண்யம், புல்லாங்குழல்

குன்னக்குடி ஸ்ரீ வெங்கடராம அய்யர், வாய்ப்பாட்டு சேலம் ஸ்ரீமதி ஜெயலட்சுமி, நாககரம் ஷேக்சின்ன மௌலா சாகிப் சகோதரர்கள் முதலியவர்கள். பிடில் வித்வான்களில் பெரும்பான்மையினர் ஏற்கனவே இந்த அரங்கில் வாசித்து அனுபவமுள்ளவர்கள். ஸ்ரீ டி. என். மணியும் திருப்பாப்புலியூர் ஸ்ரீ ராஜாவும், கண்டதேவி ஸ்ரீ அளகிரிசாமியும் அவரவர்கள் வாசித்த கச்சேரிகளைச் சோபிக்கும்படி செய்தனர். அமெரிக்க அனுதாபியும் ரசிகருமான கவ்வல் ஏற்படுத்தியுள்ள பரிசு தூண்டி விட்ட உற்சாகத்தினாலும் மிருதங்க ஆசிரியர்களின் ஊக்கத்தினாலும், பல இளைஞர்கள் மிருதங்க வாத்தியத்தை மிக லாகவமாகக் கையாளுகின்றனர். ஸ்ரீமதி லலிதாவும், மாஸ்டர் பாலசந்திரனும் இவ் வாத்தியத்துடன் புதிதாக இவ்வாண்டு அறிமுகமானவர்கள். கச்சேரிகளில் வழக்கமாகக் கேட்கப்படும் ராகங்களும், கீர்த்தனைகளும்தான் அநேகமாகக் கேட்டன. பல்லவி ராகங்களுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவைகளைக் கூட எல்லோரும் கேட்டு ரசித்த கன ராகங்களாகவே பாடகர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டதைப் பாராட்ட வேண்டும். ஸ்ரீமதி மணி கிருஷ்ணஸ்வாமியின் கச்சேரியும், ஸ்ரீமதி சேலம் ஜெயலட்சுமியின் கச்சேரியும் எல்லா அம்சங்களிலும் ரசிக்கக் கூடியதாக இருந்தன. முன்னவரின் கச்சேரியும் சாரீரமும், அவருடைய பெயருக்கேற்றவாறு மணியாக இருந்தன. கச்சேரி செய்யும் பத்ததியைக் கூடியவரை நன்றாகவே உணர்ந்தவர் என்பதை ஸ்ரீமதி ஜெயலட்சுமியின் கச்சேரி எடுத்துக் காட்டியது. ஷேக்சின்ன மௌலா சகோதரர்களின் சங்கராபரண ஆலாபனம் உயர் அம்சம் பொருந்தியிருந்தது. வர்ணத்துடன் கச்சேரியை ஆரம்பிப்பது என்ற வழக்கத்தைப் பல இளம் வித்வான்கள் மேற் கொண்டதைப் பற்றிப் பாராட்ட வேண்டும். உருப்படிகளிலும் சங்கீத மும்மூர்த்திகளின் மாமூலான கீர்த்தனைகளுடன் கோபால கிருஷ்ண பாரதியாரின் கீர்த்தனமும், ராமஸ்வாமி சிவன், முத்தையா பாகவதர் முதலியோரின் சாகித்தியங்களும் ஒன்றிரண்டு பாடப்பட்டன. இக்காலத்திய சங்கீத சாகித்யகர்த்தாக்களின் உருப்படிகள் கச்சேரிகளில் இடம் பெற்று வருகின்றதைப் பாராட்ட வேண்டும். பகல் கச்சேரிகளுக்கு விஜயம் செய்த ரசிகர்களின் கூட்டத்தைக் கண்டபோது, ரசிகர்களின் உற்சாகத்துக்குச் சமமாக வித்வான்களின் சங்கீதம் அமையவில்லையோ என்று சிலசமயம் எண்ணத் தோன்றியது.

காலை வேளைகளில் நடைபெறும் சங்கீத சர்ச்சைகளும், அப்போது பேசப்படும் விஷயங்களும் வித்வான்களுக்கும் முக்கியமாக இளம் வித்வான்களுக்கும் ரசிகர்களுக்கும் மிகவும் பயனளிப்பவை. அனுபவம் முதிர்ந்த வித்வான்கள் சங்கீதத்தின் பல உயர் அம்சங்களையும் நுட்பங்களையும், கொள்ளக்கூடிய அம்சங்கள் எவை, தள்ளக் கூடிய அம்சங்கள் எவை என்பதையும் பேசியும், பாடியும் காண்பித்து விளக்கம் செய்கின்றனர். வித்வத் சபையின் இந்த சேவை மிகவும் பாராட்டுக்குரியது.

ஸத்குரு ஸ்ரீ தியாகராஜ பரப்பிரும்மத்தின் 114-வது வார்ஷிக ஆராதனை



ஸ்ரீ ஸத்குரு தியாகராஜ ஸ்வாமிகளின் ஆராதனை மஹோத்ஸவம் நாளது 6-1-61 வெள்ளிக்கிழமை முதல் 8-1-61 ஞாயிற்றுக்கிழமை முடிய மூன்று தினங்களுக்குத் திருவையாறு "கல்யாண மஹாலி"ல் நடைபெறுகிறது. ஆஸ்திகர்கள் அனைவரும் மேற்படி உற்சவத்தில் நடக்கும் சங்கீதக் கச்சேரிகள், ஸத்கதா காலக்ஷேபங்கள், 6-1-61 இரவு நடைபெறும் வீதிவலம் யாவற்றுக்கும் வந்திருந்து மகிழ்ந்து தங்களால் இயன்ற பொருளுதவி செய்து ஸ்ரீ ஸத்குருவின் கிருபைக்கும், ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியின் கிருபைக்கும் பாத்திரர்களாகவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

உற்சவ விவரம்:

6-1-61	...	காலை	7 மணி	...	உஞ்சவிருத்தி பஜனை
,,	...	காலை	8 மணி	...	அபிஷேகம், பூஜை, ஆராதனை
,,	...	மாலை	3 மணி	...	சங்கீதக் கச்சேரிகள், காலக்ஷேபங்கள்
,,	...	இரவு	12 மணி	...	வீதிவலம்
7-1-61	...	காலை	8 மணி	...	சங்கீதக் கச்சேரிகள், காலக்ஷேபங்கள்
,,	...	இரவு	12 மணி	...	திவ்ய நாம பஜனை
8-1-61	...	காலை	8 மணி	...	சங்கீதக் கச்சேரிகள், காலக்ஷேபங்கள்
,,	...	இரவு	12 மணி	...	ஆஞ்சநேய உற்சவம்

ஸ்ரீ தியாகப்பிரும்ம மஹோத்ஸவ சபை அங்கத்தினர்கள்

மணிபல்லவம்

15-1-61 கல்கி பொங்கல் மலரில் ஆரம்பம்

சில வாரங்களுக்கு முன் பாக்கியம் நிறைந்த நாளொன்று என் வாழ்வில் வந்தது. மஞ்சள் நிறம் கொஞ்சி விளையாடும் மாலை வானத்தின் கீழ் நாலு புறத்தும் நீல நெடுங் கடல் அலையாடி ஒலி பாடும் அற்புதத் தீவு ஒன்றின் மேலைக் கரையில் அமர்ந்திருந்தேன். சுகமான கடற்காற்று வீசிக் கொண்டிருந்தது. மறைகின்ற கதிரவனின் ஒளி நீர்ப்பரப்பை மாணிக்கக் கற்கள் உருகி ஒளியோடை பரந்தாற்போல் அழகாக்கிக் கொண்டிருந்தது. ஒவ்வோர் அழகிலும் பல அழகுகள் பிறந்து இணைக்கும் இதமான நேரம் அது.

அந்த நேரத்தில் அந்தச் சிறிய தீவின் கரையிலிருந்து சற்றே புறக் கண்ணை மூடி என் மனக் கண்ணைத் திறந்தேன். அடடா! என்ன ஆச்சரியம்! ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முந்திய காட்சிகள் என் மனக் கண்ணுக்கு முன்னால் நடைபெறலாயின. தாமரை மலர்ந்து பூமணம் கமழும் கோமுகிப் பொய்கையைக் காண்கிறேன். அதன் கரையில் ஆபுத்திரன் அமுதசுரபியோடு நிற்கிறான். அவன் கை அமுதசுரபியில் உணவும் நெஞ்சு நிறையக் கருணையும் பொங்கி வழிவதை உணர்கிறேன். வேறொரு புறம் விண்ணிலிருந்து பூங்கொடி இறங்குவது போல் தீவதிலகை என்ற தெய்விக நங்கை அசைந்தசைந்து நடையபின்று வந்து புனிதமான புத்த பீடிகையினருகே நிற்கிறாள். இன்னொரு புறம் அறவண அடிகளும் மணிமேகலை என்கிற செந்தமிழ்த் தவத்தரசியும் நடந்து வருகிறார்கள். கடற்கரையில் துறைமுகத்திலே அழகாகவும் பெரிதாகவும் தோற்றமளிக்கும் பலப்பல மரக்கலங்கள் வந்து நிற்கின்றன. பெருவணிகர்கள், மாமன்னர்கள், அழகியர், அழகர், எத்துணையோ பேர், கலங்களிலிருந்து இறங்கி வருகிறார்கள், கலங்களில் ஏறிப் போகிறார்கள். எல்லாம் கனவு போல் இருக்கிறது! எல்லாம் நினைவு மெலிருக்கிறது!

மனக் கண்ணும் மனோவேகமும் சேர்ந்து விட்டால் கேட்கவா வேண்டும்? என் மனக் கண்கள் இன்னும் மலர்ந்து விரிகின்றன. **சித்திரவெளியில்** இலக்கும், எழுதுகோலுமின்றி நீர்க் கோலம் போல் நினைவுகள் எதையோ எழுதுகின்றன! நினைவுகள் எதிலிருந்தோ எழுகின்றன.

கைவிரல்களில் வரையவும் எழுதவும் துடிப்பு இருப்பதுபோல் மன விளிம்பில் கற்பனையுள்ளம் படைத்தவனுக்கு இலக்கின்றி வரையவும் அழிக்கவும் பயன்படுகிற உருவெளி ஒன்று இருக்கிறது. தத்துவ நூலினர் 'சித்திர வெளி' என்கிறார்களே அதுதான் இது. புறத்தே வரையப்படுகிற எதுவும் முதலில் வரைந்து அழிக்கப்படுகிற இடம் இந்த மனவெளிதான்! கலைகள் பிறக்குமிடமும் இந்த மனவெளிதான்!

எனது மனவெளியில் அன்று அந்தத் தீவில் வரைந்த கோலங்கள் கணக்கற்றவை! காவியங்கள் மலர்ந்த பொற்காலம் என் மனக் கண்ணில் தெரிந்தது. பன்னீராயிரம் முந்நீர்ப் பழந் தீவுகளிலும் தமிழ் நாகரிகம் வாழ்ந்த பெருமை தெரிந்தது. இலங்குபுகழ் நிலங்களுக்கெல்லாம் கலங்கள் செலுத்தி வாணிகம் செய்த குடிப்பெருமை தெரிந்தது. **"அந்தக் காலத்தில் தமிழகத்தின் பண்பாடும், சமூக வாழ்க்கையும், எவ்வளவு மேம்பட்டிருக்க வேண்டும்? அத்தகைய மேம்பாட்டை ஒரு சமூகம் அடைய வேண்டுமானால் அதற்கு எத்தனை நூற்றாண்டுகளுக்கு முன்னாலிருந்தே அந்தச் சமூகத்திலே கலையும் கல்வியும் நல்லரசாட்சியும், நல்லொழுக்கமும் வளர்ந்து வந்திருக்க வேண்டும்? இதையெல்லாம் நினைக்க நினைக்கப் பண்டைத் தமிழ் நாட்டில் வாழ்ந்த நம் மூதாதையர்களிடம் பக்தியும் மரியாதையும் பொங்கி வளர்ந்தன"** என்று பேராசிரியர் கல்கி அவர்கள் சிவகாமியின் சபதம் புத்தக முன்னுரையில் எழுதியிருப்பதை நினைத்துக் கொண்டேன்.

மணிபல்லவம் கதை தொடங்குமுன் இலங்கை சென்று உரிய இடங்களைச் சுற்றிப் பார்த்தபோது, முன்பு மணிபல்லவமாக இருந்ததென்று கருதப்படும், இப்போதுள்ள நயினாத் தீவு மேற்குக் கரையில் கடலருகே அமர்ந்திருந்த சமயத்தில்தான் இந்த நினைவுகள் எல்லாம் எனக்கு உண்டாயின.

> "பழமையோர் பெருமையும் கிழமையும் கீர்த்தியும்
> மன்னிய அன்பினும் அவ்வியம் பாடி
> நீர்த்திரை வதும்பைக ஒத்தநந் தும்பு
> தோட்டிக் தாலாட்ட அத்திட்டமாம் முக்நோ
> நீரும் செய்கையும் வீரமும் பரிவும்
> என்னி இருகணும் கண்ணீர் நிறையக்
> கன்று பிரம் நீக்கிவுடன் கேட்ட
> வண்டமிழ் மொழி........"

—என்று மனோன்மணீயத்தில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை பாடியதுபோல் அன்று மாலை மணிபல்லவத் தீவுக்குள் **'எண்ணி இருகண்ணும் கண்ணீர் நிறையச்'** சிந்தனை செய்த பெருங் கதைதான் அடுத்த வாரத்திலிருந்து வாசகர்களை மகிழ்விக்கப் போகிறது.

என்னுடைய மனக்கண் திறந்து கண்ட பொற்காலத்தைச் சித்திரவெளியில் சிறுகப் புனைந்து சுவையான நாவலாக அளிக்கப் போகிறேன். பெருமைகளும், சூழ்நிலைகளும் பழையவை; ஆனால் சொல் புதிதாய்ச் சுவை புதிதாய்க் கதை புதிதாய் இதை உருவாக்க உறுதி பூண்டிருக்கிறேன். தமிழ்த் தெய்வம் முன்னின்று துணை புரிய வேணும்.

மணிபல்லவம் கதையில் பின்னால் வரப் போகும் ஒரு நல்ல காட்சி இவ்வாரக் கல்கி அட்டையை அலங்கரிக்கும்படி செய்திருக்கிறார் ஓவியர் வினு.

வரலாற்றுக் கதைகளுக்கும் கல்கி வாசகர்களுக்கும் பேருறவு உண்டு. அவ்வுறவு பெருக மணிபல்லவமும் உதவி செய்யுமென்று நம்பலாம்.

> 'இருந்தமிழே உன்னால் இருந்தேன் - இமையோர்
> விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'

என்று பாடியதுபோல் இந்தத் தமிழ்ப் பெருமையில் தமிழ் தெரிந்த எல்லோரும் திளைக்க வேண்டுமென்பது என் ஆசை. அது உங்கள் ஆசையாகவும் இருக்கட்டும். - நா.பா.

52

என்றைக்கும் என்னை
உய்யக் கொண்டு போகிய
அன்றைக்கு அன்று என்னைத்
தன்னாக்கி, என்னால் தன்னை
இன்தமிழ் பாடிய
ஈசனை, ஆதியாய்
நின்ற என் சோதியை,
என்சொல்லி நிற்பனோ ?

என்றைக்கும் என்னை உய்யக் கொண்டு; போகிய அன்றைக்கு (மட்டும்) அன்று (கழிந்த அந்த நாள் ஒன்றிலே மட்டும் அல்ல. திரும்பத் திரும்பக் கழிகிற நாள்தோறும் நாள் தோறும் புதிதாக அங்கீகரித்தபடி யான மகிழ்ச்சி) ஆனபடியால் போகிய அன்றைக்கு அன்று, என்றைக்கும் என்னை உய்யக் கொண்டான். உய்யக் கொண்டு என்னைத் தன்னாக்கினான். (இல்லாமல் போனால் அவனை நான் இப்படிப் பாட இயலுமா ?)

என்னைத் தன்னாக்கி என்னால் தன்னை இன்தமிழால் பாடச் செய்தான்.

அந்தசர்வேசுவரனை, ஆதிமூர்த்தியை, என் சோதியை என்ன சொல்லி நிறுத் திக் கொள்வேன் ? அறிவு போதாத எனக்கு விளக்கம் தந்தான் என்கிறார்.

"என்னால் அறிய முடியாதது என்று இருக்குமவனுக்கு அது அறியப் படும். அறிந்தேன் என்று இருக்குமவர் கட்கு அது அறியப்படாதது" என்பது சுருதி. பிரமாணங்களால் அறியப் படாதவனை அவன் கருணையால் நான் அறிந்து பாடினேன் என்கிறார்.

'பாடிய' என்கிறார். அதாவது என்னைக் கொண்டு அவன் தானே பாடினான்.

இவ்வாறே பாரதத்தைச் சொன்ன வியாசரையும் விஷ்ணு புராணத்தில் சொல்லப்படுகிறது. "கிருஷ்ணத்வை பாயனர் என்னும் பெயரையுடைய வியாசரை சர்வேசுவரனை நாரா யணன் என்று தெரிந்துகொள். நாரா யணனே பாரதம் பாடியவன். செந் தாமரைக் கண்ணனை அவனைத் தவிர வேறு யார் மகாபாரதத்தைத் தோற்று விக்க முடியும் ?"

'என்சொல்லி நிற்பன்' என்றால் என்ன சொல்லியும் போதாது. திருப்தி இல்லை.

என்னைவிட மேலான கவிஞர்கள் இருக்க என்னைக்கொண்டு பாடச்செய் தானே என்று வியந்து வணங்குகிறார்:

இன் கவி பாடும்
பரம கவிகளால்,
தன் கவி தான்
தன்னைப் பாடுவியாது. இன்று
நன்கு வந்து. என்னுடன்
ஆக்கி, என்னால் தன்னை
வன் கவி பாடும்
என் வைகுந்த நாதனே !

வியாச வால்மீகி ரிஷிகளையும் முதலாழ்வார்களையும் எண்ணி இப் படிச் சொல்லுகிறார்.

நன்கு வந்து - நன்கு உவந்து. என்னுடன் ஆக்கி—என்னைப் பிரியாத கருவியாகக் கொண்டு. வன்கவி— சொற் செறிவும் பொருட் செறிவு முள்ள பாடல்கள்.

* * *

சர்வேசுவரன் தம்மைக் கொண்டு திருவாய்மொழி பாடுவித்தானல்லவா, அந்தத் திருவாய்மொழியை, வால்மீகி பகவான் பாடின ராமாயணத்தை அயோத்தியிலே திருத் ' தம்பிமா ருடன் பெருமாள் ஓலக்கம் இருந்து கேட்டதைப் போல் திருவாறன்விளை என்கிற திவ்விய தேசத்தில் எழுந் தருளியிருக்கும் சுவாமி முன் பாடி அதை ஸ்ரீராமன் தன்னைப் பற்றிப் பாடியதை அயோத்தியில் தன்பாடல் களையும் பெருமாள் கேட்கும்படி செய்து பாக்கியம் பெற வேண்டும் என்று அடுத்த திருவாய்மொழி அந்தச் சந்நிதியில் பாட ஆசைப்படுகிறார் என்பது ஈடு வியாக்கியாதாவின் அழகிய அவதாரிகை. கவி பாடியவரே பாடவில்லை அங்கே. குசலவர்கள்தான் பாடினார்கள். இங்கே ஆழ்வாரே பாடுகிறார். அங்கே 'சீதையின் மகத் தான சரிதத்தைப் பிராட்டி கேட்க வில்லை. ராமச்சந்திரன் தான் கேட் டான். இங்கே ஆழ்வார் பாடிய பாடல்களைப் பிராட்டி சமேதமாகப் பெருமாள் கேட்கிறார்' என்று திரு வாறன்விளையில் பாடிய திருவாய் மொழியின் மேன்மையை எடுத்துச் சொல்லுகிறார்.

இன்பம் பயக்க,
எழில் மலர் மாதரும், தானும்
இவ் ஏழ் உலகை,
இன்பம் பயக்க,
இனிது உடன் வீற்றிருந்து
ஆள்கின்ற எங்கள் பிரான்
அன்புற்று அமர்ந்து.
உறைகின்ற அணிபொழில்
சூழ் திருவாறன்விளை
அன்புற்று அமர்ந்து.
வலஞ்செய்து கைதொழும்
நாள்களும் ஆகும்கொலோ?

எழில் மலர் மாதரும் தானும் இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்து இவ் ஏழ் உலகை இன்பம் பயக்க ஆள்கின்ற எங்கள் பிரான் உறைகின்ற திருவாறன்விளையை வலஞ் செய்து கைதொழும் நாட்களும் ஆகுங் கொல்? என்கிறார்.

பிரான் "அன்புற்று அமர்ந்து" உறைகின்ற கோயிலைத் தாம் "அன்புற்று அமர்ந்து" வலஞ் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்.

* * *

கண்ணபிரானுடைய மலர் அடி இங்கே இருந்துகொண்டே நாள்தோறும் எந்நேரத்திலும் மனத்தில் நினைப்பதற்கு வாய்க்குமோ என்று கேட்கிறார்.

வாய்க்கும்கொல், நிச்சலும்,
எப்பொழுதும் மனத்து
ஈங்கு நினைக்கப்பெற —
வாய்க்கும் கரும்பும்
பெருஞ் செந்நெலும்
வயல்சூழ் திருவாறன்விளை
வாய்க்கும் பெரும்புகழ்
மூவுலகு ஈசன்,
வடமதுரைப் பிறந்த
வாய்க்கும் மணிநிறக்
கண்ண - பிரான் - தன்
மலர் அடிப்போதுகளே?

மலர் அடிப்போதுகள்
என்நெஞ்சத்து எப்பொழுதும்
இருத்தி வணங்க,
பலர் அடியார் முன்பு அருளிய
பாம்பு - அணை அப்பன்
அமர்ந்து உறையும்
மலரின் மணி நெடு
மாடங்கள் நீடு
மதிள் திருவாறன்விளை
உலகம் மலி புகழ்பாட,
நம்மேல் வினை
ஒன்றும் நில்லா கெடுமே.

பிரீதியினால் தூண்டப்பட்டுப் பாடவே நம்மேல் வினை ஒன்றும் நில்லாமல் கெடும். பாபம் போகைக்காகத் தனித்து ஒரு முயற்சியும் செய்ய வேண்டா. பால் குடிக்க நோய் தீருமாறு போல் நம்முடைய பாபங்கள் தாமே நசித்துப் போகும்.

* * *

ஒன்றும் நில்லா கெடும் முற்றவும்
தீவினை;
உள்ளித் தொழுமின் தொண்டீர்!—
அன்று அங்கு அமர்வென்று.
உருப்பிணி நங்கை
அணிநெடும் தோள் புணர்ந்தான்,
என்றும் எப்போதும் என் நெஞ்சம்
துதிப்ப
உள்ளே இருக்கின்ற பிரான்,
நின்ற அணி திருவாறன்விளை
என்னும்
நீள் நகரம் அதுவே.

உள்ளித் தொழுமின் - மனத்தில் அவனை நினைந்துத் தொழுங்கள். வேறு விஷயங்களை நினைத்துக் கொண்டு தொழுதல் வேண்டாம்.

'உள்ளுவார் உள்ளத்தில் உளன் கண்டாய்' என்றார் முதலாழ்வார்.

உருப்பிணி - ருக்குமிணிதேவி.

என்றும் எப்போதும் என் நெஞ்சம் துதிப்ப-எல்லாக் காலத்திலும் எல்லா நேரத்திலும் என் நெஞ்சமானது துதிக்க வேண்டுமென்கிறார்.

திவ்விய தேசத்தில் அர்ச்சாவதாரமாக நிற்கிறான். என் உள்ளத்துக்குள்ளே இருக்கின்ற பிரான் வெளி உருவத்தில் நாம் எப்போதும் உள்ளித்தொழ நிற்கிறான்.

"உத்தமன் 'என்றும்' உளன் கண்டாய்" என்றார் முதலாழ்வாரும்.

'இவன் நமக்கு உளன்' என்று அச்சம் தீரும்படி கண்களாலே கண்டு அனுபவிக்கும்படி திருவாறன்விளையில் நிற்கிறான் என்கிறார்.

தியானத்துக்குரிய பாற்கடல் நாராயணனும் உள்ளுவார் உள்ளத்தில் உறையும் பிரானும் வேங்கடத்தில் தரிசனம் தரும் மூர்த்தியும் மூன்றும் அவனே என்று முதலாழ்வார் பாடியதும் இதுவே.

* * *

அன்றி மற்று ஒன்றுஇலம்
நின் சரணே என்று,
அகல் இரும் பொய்கையின் வாய்

நின்று, தன் நீள் கழல்
  ஏத்திய ஆனையின்
    நெஞ்சு இடர் தீர்த்த பிரான்
சென்று அங்கு இனிது
  உறைகின்ற, செழும்பொழில்
    சூழ், திருவாறன் விளை,
ஒன்றி வலஞ்செய்ய
  ஒன்றுமோ? தீவினை
    உள்ளத்தின் சார்வு அல்லவே.

நின் சரணே அன்றி மற்று ஒன்று இலம் என்று மாற்றுக.

முதல் அடி கீதையின் சரம சுலோகம். 'ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ' என்பது சரம சுலோகத்தின் முதலடி.

அகல் இரும் - அகன்றும் ஆழமு மாகிய.

என்று பொய்கை வாய் நின்று — பகவான் திருவடி ஒன்றே சரண் என்று மனத்தில் முடிவு கட்டியதும், செயலற்று நின்றதாம் யானை. முதலை யின் பலத்துக்கு எதிரிடையாகத் தன் னுடைய முயற்சி பிரயோகிப்பதை நிறுத்திவிட்டு பகவான் ஒருவனே சரண் என்று யானை ஏத்திற்று. இது 'நின்று' என்ற சொல்லின் பொருள் என்கிறார் ஈடு வியாக்கியாதா.

தன் நீள்கழல் — தன்னுடைய (பகவானுடைய) கழலைக் குறித்து.

ஏத்திய — துதித்த.

இவ்வாறு யானையின் இடரைத் தீர்த்த பிரான் அந்த வேலை முடிந்த தும் திருவாறன்விளையில் வீற்றிருக் கச் சென்றான். அந்த திவ்ய தலத்தை யடைந்து பிரதக்ஷிணம் செய்ய உங்க ளுக்கு மனம் வருமோ? அப்படிச் செய்திராயின் உங்கள் உள்ளத்தி லிருந்து தீவினைகள் அகலும் என்கிறார்.

"திருவாறன்விளை ஒன்றி வலஞ் செய ஒன்றுமோ? தீவினை உள்ளத் தின் சார்வல்லவே."

பகவானைப் பற்றிய தியானம் உள் ளத்தில் வந்து புகுந்தால் தீவினைக்கு அங்கே இடம் இராது. ஒளியும் இருளும் சேர்ந்து இருத்தல் இல்லை.

பம்பாயில் கலை விழாக்கள்

பம்பாய் பாரதீய கலா, சங்கீத சபாவின் ஏழாவது ஆண்டு விழா பத்து நாட்களுக்கு ஜாம் ஜாமென்று நடைபெற்றது. விழாவை டிசம்பர் 3ந் தேதி மகாராஷ்டிர முதன் மந்திரி ஸ்ரீ ஒய். பி. சாவன் ஆரம்பித்து வைத்தார். அன்று ஸ்ரீமதி பத்மா நரசிம்மனின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. இரண்டாம் நாள் பிஸ்மில்லாகானின் ஷெனாய் வாத்தியம் நாத வெள்ளம் பாய்ச்சியது. மறுநாள் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் கச்சேரி. ஸ்ரீ சாலக்குடி நாராயணசுவாமி வயலினும், ஸ்ரீ டி. கே. மூர்த்தி மிருதங்கமும், ஸ்ரீ கோதண்ட ராமய்யர் கடமும் வெகு வாய்ப்பாக அமைந்ததால், விதி விலக்கின்றி என்றுமே பிரமாதமாக விளங்கும் ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் கச்சேரி அன்று என்றை யும்விட அதிசிறப்பாக அமைந்தது. நான்காம் நாள் ராஜா - ஜிக்கி தம்பதியின் கவர்ச்சிகரமான மெல்லிசை நிகழ்ச்சியும், ஐந்தாம் நாள் ஸ்ரீமதி சாந்தா ஆப்தே உட்பட்ட நடிகர்கள் நடித்த மராத்தி நாடகமும் நடைபெற்றன. அடுத்த நான்கு தினங்களில் நடைபெற்ற 'பிரண்ட்' ராமசாமியின் நாடகங்கள் வெகு வாக இரசிக்கப்பட்டன. கடைசி தினத்தன்று நாடகக் குழு அளித்த வரவேற் புக்கு ஸ்ரீ பிருத்வி ராஜ்கபூர் தலைமை வகித்தார். பல சங்கங்களின் சார்பில் 'பிரண்ட்' ராமசாமிக்குப் பாராட்டு வழங்கப்பட்டது. ஸ்ரீமதி கமலா லக்ஷ்மணின் முதல்தரமான பரதநாட்டியக் கச்சேரியுடன் விழா முடிவடைந்தது.

பம்பாய் ஷண்முகானந்த சபையின் ஆதரவிலும் நாடக விழாவொன்று நடைபெற்றது. டி. கே. எஸ். சகோதரர்கள் ராஜராஜ சோழன், வித்யா சாகர், ஔவையார், கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனார் ஆகிய நான்கு நாட கங்களையும் நடித்துச் சபையோரின் பாராட்டுதலைப் பெற்றனர்.

(1) ஸ்ரீமதி எம். எஸ். அவர்களின் இன்னிசை. (2) கமலா, ராதா நடனம். (3) மகாராஷ்டிர முதன் மந்திரி சாவன் பேசுகிறார். (4) ஹிந்தி நடிகர் பிருத்வி ராஜ்கபூர் தமாஷ நடிகர் ராமசாமிக்கு மலர் மாலை அணிவிக்கிறார். (5) மராட்டி நாடக சபையினரின் நாடகம். (6) ஜானகிராமநாதனின் வீணைக் கச்சேரி. (7) அன்பின் ஜோதி நாடகத்தில் ஒரு காட்சி. (8) பிஸ்மில்லாகான் கோஷ்டி யினரின் ஷெனாய் இசை. (9) ராஜா-ஜிக்கியின் மெல்லிசை கீதம். (10) அமெரிக்கப் பெண்மணி இந்திராணியின் பரத நாட்டியம். (11) பத்மா நரசிம்மனின் இன்னிசை (12), (13) ஷண்முகானந்த சபையில் நடைபெற்ற டி. கே. எஸ். சகோதரர்களின் நாடக விழாவில், பிருத்வி ராஜ்கபூரோடு டி. கே. எஸ். சகோதரர்களையும், கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனார் நாடகத்துக்குத் தலைமை தாங்கிய கவர்னர் ஸ்ரீ பிரகாசா அவர்களையும் படத்தில் காணலாம்.


பம்பாயில்
கலைவிழாக்கள்



தங்க ரத்தினம்

சாதிப் பிரச்னை நம் சமுகத்தின் ஆணி வேரையே அரிக்கும் வேர்ப் புழு என்பதை யாவரும் அறிவர். ஆனால் அந்த வேர்ப் புழு எத்தனையோ நாவல்களுக்கும் நாடகங்களுக்கும், சினிமாப் படங்களுக்கும் ஜீவாதாரமாக இருந்து பேருதவி புரிந்து வருகிறது என்பதைப் பலர் அறிந்திருக்க மாட்டார்கள். இந்தத் தீராத பிரச்னை எத்தனையோ ஆண்டுகளாக நம் படாதிபதிகளின் பிரச்னையைத் தீர்த்து வைத்துக் கொண்டு, தான் மட்டும் சாகா வரம் பெற்றுச் சிரஞ்சீவியாக இருந்து வருகிறது. ஆகவே, இந்தப் பிரச்னையை நினைத்தால் எனக்கு நாரத்தங்காயின் நினைவு வரும். நாம் உண்ணும் உணவுகளையெல்லாம் ஜீரணிக்கும் நாரத்தங்காய் ஊறுகாய் தான்மட்டும் ஜீரணிக்காமல் அப்படியே இருந்துகொண்டு இருக்கும்.

எஸ். எஸ். ஆர். பிக்சர்ஸாரின் தயாரிப்பான "தங்கரத்தினம்" சாதி வேற்றுமையின் அடிப்படையில் வெளிவந்திருக்கிறது.

தங்கம், உயர் சாதியைச் சேர்ந்த மிராசுதார் நல்லமுத்துப் பிள்ளையின் மகன். அவன் சென்னையில் படித்துக் கொண்டிருக்கிறான். விடுமுறையில் கிராமத்துக்கு வருகிறான். சேரிப் பெண் ரத்தினத்தின் அழகில் மனத்தைப் பறி கொடுத்து விடுகிறான். தங்கத்தின் கல்லூரி நண்பன் செல்வத்தைச் சீதாவும், மீனுவும் காதலிக்கிறார்கள். ஆனால் சீதாவைத் தான் செல்வம் காதலிக்கிறான். தந்தையின் வறுமை காரணமாகச் சீதா மிராசுதார் நல்லமுத்துப் பிள்ளைக்கு வாழ்க்கைப்பட நேருகிறது. தன் தந்தை மணக்கப் போகும் பெண் சீதா என்பது தங்கத்துக்குத் தெரியாது: ஆயினும் அந்த மணத்தைத் தடுக்க முயல்கிறான். ஆனால் இடையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்டுவிட்ட சங்கடத்தினால் அந்த முயற்சி தோல்வி யடைகிறது. சீதா நல்லமுத்துவின் மனைவியாகிறாள். சமுதாயத்தின் வேற்றுமைகளை அகற்றிவிடத் தங்கம் தானே உழைப்பாளியாக மாறுகிறான். மிராசுதாரின் சந்தேகப் பேயின் காரணமாகச் சீதா தற்கொலை செய்துகொண்டு விடுகிறாள். இதனால் மனம் திருந்திய மிராசுதார் தங்கத்துக்கும் ரத்தினத்துக்கும் திருமணம் செய்து வைக்க இசைகிறார்.

சமீப காலத்தில் தொடர்ந்து பல படங்களில் தோல்வி கண்ட எஸ். எஸ். ராஜேந்திரன் "தங்கரத்தினத்"தில் தங்கமாக நடிக்கிறார். தங்கமாகவே இருக்கிறது அவர் நடிப்பு! "பிள்ளைக் கனியமுது" என்னும் படத்தில் கேட்ட அவரது அலறல் இந்தப் படத்தில் அடியோடு மறைந்துவிட்டது. மாறு வேஷத்தில் வந்து ரத்தினத்தை ஏமாற்றிய போது அவரது நடிப்பும், வேஷப் பொருத்தமும் நன்றாயிருக்கின்றன. சீதாவின் குற்றமற்ற தன்மையை அறிந்து, மனம் குமுறி அழுத போது நடிப்புத் திறமை நன்கு பிரதிபலிக்கிறது.

சீதாவாக வரும் எம். என். ராஜம் மாணவியாகத் துள்ளித் திரிந்தபோது இருந்ததை விட, மிராசுதாரைத் திருமணம்செய்து கொண்டுகடமைக்காக வாழ்ந்த போதுதான் நன்கு சோபிக்கிறார். அப்பொழுது அவரது 'மேக்கப்' பொருத்தமாக இருக்கிறது. அவர் முகத்தில் துடிக்கும் துள்ளலும் மறைந்து, அடக்கமும் அமைதியும் ஆட்சி புரிகின்றன.

எஸ். எஸ். ராஜேந்திரனின் ஜோடியாக விஜயகுமாரி நடிக்கிறார். நடித்து விட்டுப் போகட்டும். அவர் நடிப்பில் பாராட்டுவதற்கு ஒன்றும் இல்லை.

தங்கவேலு தம்முடைய திறமையான நடிப்பினால் படத்துக்கு உயிர் ஊட்டி அலுப்பில்லாமல் ஓடச் செய்கிறார். அவரது ஹாஸ்யங்கள் நன்கு களைகட்டுகின்றன.

மிராசுதார் நல்லமுத்துப் பிள்ளையாக வருவதற்கு வி. கே. ராமசாமி எல்லாவிதங்களிலும் பொருத்தமானவர்தான். ஆனால் அவர் அடித் தொண்டையிலிருந்து கத்துவது வார்த்தையே காதில் விழாமல் செய்து விடுகிறது. இயல்பாகப் பேசி, இயல்பாகவே நடித்தால் பாத்திரத்தின் இயல்பும் கெடாது.

படத்தின் தொலைவுக் காட்சிகள் மிகவும் நன்றாயிருக்கின்றன. ஒளிப்பதிவின் சிறப்பு படத்தின் உயிர்நாடியாக விளங்குகிறது.

படம் வேகமாக ஓடுகிறதோ இல்லையோ, எஸ். எஸ். ராஜேந்திரனும் விஜயகுமாரியும் மிகவும் வேகமாக ஓடியிருக்கிறார்கள். ஆகவே, படத்தின் ஓட்டத்தை யாரும் குறைகூற முடியாது!

"தங்க ரத்தின"த்தில் ஒரு விசேஷம். அறிஞர் அண்ணா, மற்றும் முற்போக்கு வீரர்கள் பலரும் வெள்ளித்திரையில் தோன்றுகின்றனர்; தம்பிகள் வீறுகொண்டு எழும் வண்ணம் மேடையில் முழங்குகின்றனர். திரைக் கதையின் ஊடே கட்சிப் பிரசாரம்

கலப்பதற்குப் பதிலாகக் கட்சிப் பிரசாரத்தோடு சிறிது கதையும் கலந்திருக்கிறது! திராவிட சமுதாயச் சீர்திருத்த மகாநாட்டுக் காட்சியும் காட்டப்படுகிறது.

''எனக்கு நீ, உனக்கு நான் பொருத்தமான ஜோடி'' என்றபாட்டு இனிமையாயிருக்கிறது.

நாகையா படத்தின் கௌரவ நடிகர். உணர்ச்சி வெள்ளமாகப் பொங்கி அற்புதமாக நடிக்கிறார். சீதாவின் தந்தையாக வருகிறார். உயிர் துறக்கும் அவர் பாத்திரம் படத்துக்கு உயிர் கொடுக்கிறது. ஆனால் அவர் பலமுறையும் பல படங்களில் ஏற்ற பாகம்தான்.

விதி செய்த சதியினால் சீதா மிராசுதாருக்கு இரண்டாந்தாரமாகிறாள். அவளை நன்கு அறிந்து மனமாரக் காதலித்த செல்வம், மிராசுதார் வீட்டில் அவளை எதிர்பாராத விதமாகச் சந்தித்துக் கொடுமையாக ஏசுகிறான். இது மிகவும் பழைய பாணி. இதை விட்டுவிட்டுச் செல்வம் கொஞ்சம் பகுத்தறிவோடு நடந்து கொண்டிருக்கலாம்.

தாங்க முடியாத கடன் பளுவினால் அருமை மகளை அந்தக் கடன் கொடுத்தவனுக்கே இரண்டாந்தாரமாக மணம் செய்து கொடுப்பது மிக மிகப் பழைய கதை. வயதுவந்த மகனொருவன் இருக்கும்போது அவன் தந்தை மறுமணத்துக்கு ஆசைப்பட்டு ஓர் இள நங்கையின் வாழ்வைப் பாழாக்குகிறான் என்பது அதைவிடப் பழைய கதை! தனது இரண்டாவது மனைவியும், தன் மூத்த தாரத்தின் மகனும் நெறி பிசகி நடப்பதாகச் சந்தேகிப்பது இன்னும் பழைய கதை! பழைமைக்குப் பயணச் சீட்டும், புதுமைக்கு நுழைவுச் சீட்டும் அளிக்கும் அறிவியல்வாதிகள் மேற்கூறிய பழைமைகளையெல்லாம் கட்டிக்கொண்டு அழுவானேன் என்பது பெரிய புதிராயிருக்கிறது!


கலப்பு மணத்தை ஆதாரமாகக் கொண்டு சாதி வெறியை ஒழிக்கும் கதையைப் படமாக்க விரும்பினால், நல்ல கதையைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். ஆதி காலத்துக் கதைகளான நந்தனாரையும், திருப்பாணாழ்வாரையும் விடச் சாதி ஒழிப்புக்குச் சிறந்த கதைகளே இல்லை என்று கூறலாம். அக்கதைகளைவிட நாம் புதிதாகப் புனைந்துள்ள கதைகளில் விசேஷமாக என்ன கூறியிருக்கிறோம் என்று சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம் தற்கால சமூக வாழ்வுக்கு ஏற்ற கதைகளாக இருப்பதோடு, அவைகள் அநுபவத்துக்கு ஒத்ததாகவும் இருக்க வேண்டும். சமூகக் கதைகள் தத்ரூபமாக நிகழுவது போல் இருந்தாலன்றி ரஸிகர்கள் உள்ளங்களைக் கவரமாட்டா.

தாழ்த்தப்பட்ட சமூகத்தினரும் மனிதர்கள் தாம். அவர்களிடமும், மனிதப் பண்புகளும், இறைமைக் குணங்களும் இருக்கின்றன என்பதைக் கதாபாத்திரங்களின் வாயிலாகக் காட்ட வேண்டும். உயர்சாதியைச் சேர்ந்தவர்கள்தான் நாகரிகமாகவும், நற்பண்புகள் உடையவர்களாகவும் இருக்க முடியும் என்ற பழைய கருத்து, காலம் எவ்வளவோ முன்னேறியும் மாறின பாடாயில்லை. திரைக் கதையில் அத்தகைய கருத்துக்கு ஒரு மாறுதல் பொருத்தமாகச் செய்தால் மிகவும் நன்றாயிருக்கும். அத்தகைய திரைக் கதையில் உருக்கமும் உணர்ச்சியும் நிறைந்திருக்க வேண்டும். வெறும் பிரசார அடிப்படையான கதையைப் படமாக்கி, அதையும் ஒரு கேலிக் கூத்தாகச் செய்துவிட்டால் அதில் உருக்கத்துக்கு எங்கே இடம் இருக்கும்?

தாழ்ந்த இனத்துப் பெண்ணை மணந்து கொள்ள மகன் தந்தையையே எதிர்த்துக் கொண்டானென்பது பலமுறையும் கையாளப்பட்ட கதை. அதில் புதுமையும் இல்லை; புரட்சியும் இல்லை.

கதாநாயகனாக நடித்திருப்பதோடு எஸ். எஸ். ராஜேந்திரன் படத்தின் டைரக்ஷன் பொறுப்பையும் ஏற்று மிகவும் சிறப்பாகச் செய்திருக்கிறார். சொந்தக் குரலில் கனீரென்று பாடியிருக்கிறார். தாமே ஒரு பாடலும் இயற்றி யிருக்கிறார்.

அழுத்தமான கதைப் பகுதியும், ஆழமான கருத்தும், பொருத்தமான சம்பவங்களும், திருத்தமான கொள்கையும் இருந்தால் ''தங்க ரத்தினம்'' தங்கமான படம் என்று எல்லோராலும் புகழப்படும் பெருமையைப் பெற்றிருக்கும்.



இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ் :

முதல் லைன் பீச், சென்னை - 1

சகலவிதமான

பாங்கி அலுவல்கள்

★

உங்களது சேவையே
கருதும் பாங்க்

தனது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மிகத் திறமையான சேவையளிப்பதே பாங்கியின் முக்கிய நோக்கமென்ற பொறுப்பு உணர்ச்சியையே இவ்வார்த்தைகள் பிரதிபலிக்கின்றன.

வர்த்தகம், தொழில் மற்றும் தனிப்பட்ட சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான எல்லாவிதமான பாங்கிங் வசதிகளையும் நாங்கள் அளிக்கிறோம்.

ஜி. எஸ். சுந்தரம்
காரியதரிசி

இருதய நோய் ஏற்பட இடம் தராதீர்கள்

★

லப் - டப் - இதுதான் இருதயத்தின் உண்மை இசை

ஒழுங்கற்ற நாடித் துடிப்பு

மயக்க உணர்ச்சி

கன உணர்ச்சி மற்றும் சிடுசிடுப்பு

துரித சுவாசம்

கன்னிய முகம்

இடது புஜத்தில் வலி

கால்கள் வீக்கம்

நடுக்கம் மற்றும் அதிசீதளம்


இவை
இருதயக்கோளாறு இருப்பதற்கு
நிச்சயமான அடையாளங்கள்

சிறந்த ஆரோக்யத்தை மீண்டும் பெற

கவிராஜ் பண்டிட்

துர்க்காதத் சர்மா

வைத்திய வாசஸ்பதியிடம்



நேரிலோ கடித மூலமாகவோ
கலந்து ஆலோசியுங்கள்

★

NAVRATNA KALPA PHARMACY
JULLUNDUR CITY (India)



சொக்கம்பட்டி கல்வி ஏஜண்ட் திரு வி. எஸ். இராமசுவாமிக்கும் சௌ. நாயம்மாளுக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது.



புது அக்ரஹாரம் திரு கே. ஆர். வீரராகவ அய்யங்காரின் புதல்வர் திரு வி. ரங்கசாமிக்கும், சௌ விஜயலக்ஷ்மிக்கும் விவாகம் சிறப்பாக நடந்தது.




புதுக்கோட்டை வருமானவரி அதிகாரி திரு வீரராகவன் அவர்களின் சகோதரர் திரு ரங்கநாதனுக்கும், சௌ சரோஜாவுக்கும் திருமணம் நடந்தது.




பம்பாய் கால்டெக்ஸைச் சேர்ந்த திரு - எஸ். ஏ. ராம் அவர்களின் புதல்வி சௌ அலமேலுவுக்கும், திரு சி. கே. சுப்பிரமணியனுக்கும் திருமணம்நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்




வித்வான் சிதம்பரம் பிள்ளை அவர்களின் புதல்வர் திரு திருநாவுக்கரசுக்கும், சௌ சுபாஷிணி தேவிக்கும் விமரிசையாகத் திருமணம் நடந்தது.



சேலம் ஜில்லா சுதந்திரக் கட்சி காரியதரிசி மாணிக்கம் அவர்களின் புதல்வி சௌ. தனலக்ஷ்மியைத் திரு ராம்தாஸ் மணம் புரிந்துகொண்டார்.





நாட்டிய ராமாயணம்

— எம். எஸ். சிவஸ்வாமி

திருக்கோவில்களால் நிறைவு பெற்றது தமிழகம் என்பது உலகப் பிரசித்தி. சிறியனவும் பெரியனவுமாக நாடு முழுதும் இவை பரவிக் கிடக்கின்றன. நமது கலாசாரமும் பண்பாடும், நமது தத்துவ நோக்கும் வாழ்வுக் கலையும், நமது லட்சியங்களும் ஆர்வங்களும், கோவில்களில் சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றன. பல தெய்வங்கள் இங்கே பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. வழிபாடுகள் தினந்தோறும் நடைபெறுகின்றன. ஆண்டுக்கொருமுறை பிரம்மோற்சவங்கள் என்று விசேஷத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. அவற்றை யெல்லாம் மக்கள் கண்டுகளித்து உள்ளத்தையும் உணர்வையும் தூய்மைப் படுத்திக் கொள்ளுகின்றனர்.

இவ்வளவு தெய்வங்களுக்குக் கோயில்கள் உள்ள நம் நாட்டில், கலை நுட்பங்கள் அனைத்தையும் திரட்டி உருவாக்கப்பட்ட கோயில்கள் உள்ள நமது தமிழகத்தில் கலைகளுக்கென்றே ஒரு தனிக் கோவில் இருக்க வேண்டுமல்லவா? அத்தகைய ஒரு கோவில், சென்னைக்கடுத்த அடையாற்றில் இருக்கிறது. இதற்குக் கலா க்ஷேத்திரம் என்று பெயர். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு பாரத கலாசாரத்தில் பித்துக் கொண்ட உயர் சிற்பிகள் சிலரால் சின்னஞ் சிறு முறையில் இதற்கு அஸ்திவாரம் போடப்பட்டது. ஆண்டுதோறும் ஒவ்வொரு கல்லாக அடுக்கிக் கோயில் எழும்பிக் கொண்டு வந்திருக்கிறது. எல்லாம் சாதாரண மண் செங்கற்கள் அல்ல; சிமெண்டு 'ப்ளாக்கு'களும் அல்ல; கலைச் செங்கற்கள். கலை யுணர்ச்சியில் புனிதத் தன்மையையும் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் அம்சங்களையும் காண வேண்டுமானால் இந்தக் கோவிலில் காணலாம். இங்கே செல்லும் போதும் திருக் கோவிலுக்குச் செல்லுவது போலவே தான் போக வேண்டும். சினிமாவுக்குப் போவது போல் உல்லாசத்துக்கென்று மட்டும் சென்றால், இந்த க்ஷேத்திரத்திலுள்ள சிற்பிகளை அவமதிப்பதாகும். இந்தச் சிற்பிகளுக்கெல்லாம் உயர் சிற்பியாக விளங்கும் ஸ்ரீமதி ருக்மிணி தேவி அப்படித்தான் ரசிகர்களை வரும்படி அழைக்கிறார். "இங்கே நடைபெறும் நடன காவிய நிகழ்ச்சிகளெல்லாம் மன உல்லாசத்துக்கு மட்டும் ஏற்பட்டவை அல்ல; இவற்றைக் காண்போர் மனத்தில் உயர் தத்துவப் பொருள்களைப் பற்றிய கிளர்ச்சியை உண்டாக்க ஏற்பட்டவை. இவ்வுணர்ச்சி அவர்களைப் புனிதப்படுத்தி அவர்களுக்கு நன்மை செய்யட்டும்" என்கிறார் ஸ்ரீமதி ருக்மிணி தேவி.

இப்போது இந்தக் கலைக் கோவிலில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிரம்மோற்சவ நிகழ்ச்சிகளில் முதன்மையாக விளங்குவது வால்மீகி ராமாயண காவியத்தை நடன காவியமாக அளிக்க மேற்கொண்டுள்ள முயற்சி. தலைமுறை தலைமுறையாக நமது பாரத தர்மத்துக்கு உறைவிடமாகத் திகழும் ராமாயணத்தை சாஸ்திரீய நடன வடிவத்தில் அமைப்பது ஜீவிய காலம் முழுதும் செய்ய வேண்டிய வேலை. எடுத்த எடுப்பில் செய்துவிட முடியாது. பகுதி பகுதியாகத் தான் நிறைவேற்ற வேண்டும். முதல் பகுதியாக 'சீதா சுயம்வரம்' இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு முதன் முதலாகத் தயாரித்து அளிக்கப்பட்டது. இது வரையில் பல முறை நடிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நடவையும் சிறிது சிறிதாக மெருகேற்றப்பட்டு, பரிபூரணத் தன்மையடைந்து வருகிறது. இன்னும் மெருகேறலாம். இந்த ஆண்டில் அடுத்த இரண்டு பகுதிகளைத் தயாரித்தளித்திருக்கிறார்கள். ஸ்ரீராம வன கமனம் என்பது இரண்டாவது பகுதி; பாதுகா பட்டாபிஷேகம் மூன்றாவது பாகம்.

நான்கு அங்கங்களாக அமைந்த "ஸ்ரீராம வனகமனம்" என்ற ராமகாவியம் அயோத்யா நகரம் பட்டாபிஷேகத்துக்காக அலங்காரம் செய்யப்படுகிற காட்சியுடன் ஆரம்பித்து மந்தரை கைகேயிக்குச் சேதி சொல்ல விரைவதும், மனத்தைக் கலைப்பதும், கைகேயியின்

கோபமும், தசரதன் துயரமும், ராமன் ராஜ்யத்தைத் துறப்பதும், சீதா-ராம ஸம்வாதமும், ராம, லட்சுமணர்கள் சீதையுடன் கானகம் புறப்படும் வரையில், ஒன்றன்பின் ஒன்றாகத் தட்டுத் தடங்கலின்றிச் செல்கின்றன. மூன்று அங்கங்களாக அமைந்த மூன்றாவது பாகமாகப் பாதுகா பட்டாபிஷேகம், பரதனும் சத்ருக்னனும் அயோத்திக்கு வருவதிலிருந்து பாதுகைகளைப் பெற்று அவற்றுக்குப் பட்டாபிஷேகம் செய்வதுடன் முடிகிறது.

ராமாயணத்தைப் படத்தில் காண்பிப்பதற்கும், நடன காவியமாக அமைத்துக் காட்டுவதற்கும் வித்தியாசங்கள் உண்டு. படத்தில் காட்டுவது சுலபம். படம் பிடித்து நகரத்தின் தோற்றத்தை அப்படியே காட்டி விடலாம். நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து காட்டிக் கொண்டே போகலாம். பாத்திரங்களும் நேரடியாகவே பேசுவார்கள்; அல்லது அவர்களைப் பேச வைக்கலாம். நவீன முறைகளைக் கையாண்டு சூழ்நிலைகளை மாற்றிக் கொள்ளலாம். நடன காவியத்தில் இந்த மாதிரி புற சாதனங்களின் உதவி கிடையாது. அபிநயங்களும், அங்க அசைவுகளும், நடனங்களும், முக பாவங்களுமே இங்கே செயல்புரிய வேண்டும். நடிகர்களின் நடிப்புக்கும் வரம்பு உண்டு. பரதநாட்டிய பத்ததியில் கையாளப்பட்ட முத்திரைகளையும், கதிகளையும், கதகளி நடன முறையில் அங்கீகரிக்கப்பட்ட அங்க அசைவு ஜதிகளையுமே பாத்திரங்கள் பிரதானமாக மேற்கொள்ள வேண்டும். பேச்சோ, பாட்டோ, நடிக பாத்திரங்கள் வாயிலாக வெளிவருவதில்லை. பாவங்களின் மாறுதல்களும் உணர்ச்சிகளின் வேகமும், கதையின் போக்கும் அபிநயங்கள் மூலமே வெளிவர வேண்டும்.

மேலும் சீதா சுயம்வரத்தைப் பிரதானமாகக் கொண்ட பாலகாண்டத்துக்கும் மற்ற இரு பகுதிகளையும் முக்கியமாகக் கொண்ட அயோத்யா காண்டத்துக்கும், அவற்றை நடன காவியமாக அமைக்கும் விஷயத்தில் வித்தியாசங்கள் இருக்கின்றன. முதல் பகுதியில் கதை அம்சம் மிகுதி. உள்ளத்தை நெகிழ்க்கும் உணர்ச்சி அம்சம் குறைவு. விசுவாமித்திரர் ராமனைத் தம்முடன் அனுப்பும்படி கேட்கும்போது தசரதன் துயருறும் காட்சிதான் சோகம் மிகுந்த கட்டம். ஆனால் அயோத்தியா காண்டம் முழுதும் சோகரசமும் கருணாரசமும் இழையோடுகின்றன. ராமாயணத்துக்கு ஆதார பாவமாக அமைந்துள்ள இந்தக் கருணாரஸத்தை நடன பாத்திரங்கள், பாவங்கள் மூலம் வெளிப்படுத்துவது சுலபமல்ல. மிகத் திறமை வாய்ந்த நடன ஆசிரியர்கள்கூட இது எவ்வளவு கஷ்டமானது என்பதைச் செயலில் முற்படும்போதுதான் அறிவார்கள். மந்தரையின் சூதும் வாதும் நிரம்பிய குறுகிய மனத்தையும், கைகேயியின் வெள்ளை உள்ளத்தையும் மாசுபடுத்தி நஞ்சென மாற்றக்கூடிய அதனுடைய கொடூரத்தையும், ராமனுடைய கம்பீரத்தையும், சீதையின் தாய்மையையும், லட்சுமணனுடைய முன் கோபத்தையும், பரதனுடைய பெருந்தன்மையையும், பாவங்களின் மூலம் வெளிப்படுத்த வேண்டுமென்றால் எவ்வளவு கஷ்டமென்பதை நினைத்துப் பார்த்தாலே திகைப்புண்டாகும். ஆசிரியர்கள் தைரியமாக இந்தக் காரியத்தைச் செய்ய, தங்கள் திறமையையும் கலை ஆர்வத்தையும் துணையாகக் கொண்டு முன்வந்தாலும், இதைப் பயில வேண்டுமென்ற உத்சாகமும், சாதாரணமாகப் பயின்றால் மட்டும் போதாது, கற்று மற்றும் பயின்று அதை ஒரு கலைப் படைப்பாகச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் நிறைந்த மாணவர்களும் மாணவிகளும் கிடைப்பது கடினம். கலா க்ஷேத்திரத்தில் மிகவும் கஷ்டமான இந்தக் காரியத்தைச் செய்ய முன்வந்த ஆசிரியர்களுடன் ஆர்வம் மிகுந்த மாணவர்களும் இருக்கிறார்கள் என்பதற்கு ராமாயணப் படைப்புகள் சான்று கூறுகின்றன.

நடனக்கலையில் தேர்ச்சி பெற்று முதிர்ந்த அனுபவமுள்ளவர் ஸ்ரீமதி ருக்மிணிதேவி. பரதநாட்டியத்தை அதற்கு உரிய கௌரவ ஸ்தானத்துக்கு உயர்த்திய பெருமையுள்ளவர். எந்தெந்த அம்சங்களை எந்தெந்த அளவில் எங்கெங்கு புகுத்தி, தாம் படைக்கும் சிருஷ்டிக்கு உயர்வை அளிக்க வேண்டும் என்பதை நன்கு அறிந்தவர். அவருக்கு உறுதுணையாக இருப்பவர் அவருடைய பிரதம

ராமாயண நாட்டிய நாடகத்தில் பங்கு கொண்ட கலாக்ஷேத்திர மாணவ மாணவிகளும், இசையமுது அளித்த குழுவினரும் காட்சிகள் முடிந்ததும் மேடையில் தோற்றமளிக்கின்றனர்.



சிஷ்யையும், தற்போது ஆசிரியை ஸ்தானம் வகிப்பவருமான ஸ்ரீமதி ஏ. சாரதா. பரத நாட்டியம், கதகளி இரண்டிலும் பயிற்சி பெற்றவர். நடனப் பயிற்சி மட்டுமின்றிப் பக்தியுள்ளம் உள்ளவர். அவர்களுடைய மேற்பார்வையில் இந்த நடன காவியங்கள் உருவாகி யிருக்கின்றன என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். 'கைகேயி' பாகத்தை ஏற்ற புஷ்பாவின் திறனும், மந்தரையின் பாகத்தை ஏற்று அதற்குச் சோபையளித்த சாரதாவின் நடனங்களும் குறிப்பிடத்தக்க அம்சங்கள். உணர்ச்சிகளை வெளியிடுவதில் கதகளி முறை சில அம்சங்களில் சிறந்தது. இம்முறையில் தேர்ச்சி யடைந்துள்ளவர் விசுவாமித்திரராகவும், தசரதனாகவும், குகனாகவும், மூன்று பகுதிகளிலும் தோன்றும் குன்னிராமன். தசரதனுடைய சோகம், உடல், உள்ளம் முழுவதையும் வியாபித்து உடலைக் குலுக்குவதும், பரதன் வருகிறான் என்பதைக் கேட்ட குகனுடைய ஆத்திரமும் அவன் அடையும் பரபரப்பும், கதகளி முறையில் உள்ளபடி கையாளப் படுவது, காவியத்தின் வேகத்துக்கு விறுவிறுப்பு அளிக்கின்றன. பாத்திரத்தின் உணர்ச்சி வேகம் அவரையும் ஆட்கொண்டு விடுகிறதோ என்ற பிரமை கூடச் சிலசமயம் உண்டாகி விடுகிறது. இரண்டு நடன முறைகள் ஒரே காலத்தில் கையாளப் பட்டாலும், ஒன்றையொன்று கலந்து மணிப்பிரவாளமாகச் செய்யப்பட வில்லை என்பதைக் குறிப்பிட வேண்டும். அதற்கு உண்டான முறைப்படி அந்தந்த இடங்களில் அந்தந்த முறை தனித்தே கையாளப்பட்டிருக்கிறது. காவியத்துக்குச் சோபையூட்டுவதாலும் உள்ளத்தைத் தொடுவதாலும் இதை இம்மூன்று நிகழ்ச்சிகளிலும் ஒரு பாராட்டத்தக்க அம்சம் என்றே சொல்ல வேண்டும்.

சில காட்சிகள் இந்நிகழ்ச்சிகளில் சித்திரிக்கப்பட்டிருப்பவை தயாரிப்பாளர்களின் கலை உணர்ச்சியை எடுத்துக் காட்டுகின்றன. விசுவாமித்திரர் ராம லக்ஷ்மணர்களுக்கு சித்தாசிரமத்தின் இயற்கை அழகுகளை வர்ணிக்கும் காட்சி; மிதிலாபுர மக்கள் ராம சௌந்தர்யத்தில் ஈடுபட்டதைக் காட்டும் காட்சி; சாளரத்தினின்று சீதை சபா மண்டபத்தில் ராமனைக் காணும் காட்சி; சுமந்திரன் ரதத்தை ஓட்டிச் சென்று, ராம லட்சுமணர்களையும் சீதையையும் காட்டுக்கு அனுப்பித் தேரைத் திருப்பிச் செல்லும் காட்சி; லட்சுமணனுடைய கனல் வீசும் பார்வை; சீதை கைகேயி அளித்த மரவுரியை அணிந்து கொள்ளத் தெரியாமல் தவிப்பது, வசிஷ்டரின் கோபம்; கங்கைக்குக் குகன் பூசை செய்யும் காட்சி; கங்கையை ராமலட்சுமணர்கள் கடக்கும் காட்சி; சித்திரகூடத்தில் இயற்கை அழகை சீதைக்கு ராமன் வர்ணிக்கும் காட்சி; சந்தியா வழிபாடு; - இப்படிப் பல கட்டங்கள் உள்ளத்தைத் தொடும் காட்சிகள். இவற்றையெல்லாம் கண்ணுறும்போது பரதநாட்டியத்தின் மூலம் ஒரு நாடகத்தை மேனாட்டு ''பாலே'' முறையில் எவ்வளவு வெற்றிகரமாகவும் திருப்திகரமாகவும் அமைத்துக் காட்ட முடியும் என்பது நன்றாக விளங்கியது.

பாவங்களையும் ஆழ்ந்த உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திக் காட்டிய இந்நிகழ்ச்சிகளின் அரங்க அமைப்பும், காட்சி ஜோடனைகளும் மிகவும் குறைவாகவே இருந்ததுடன், எளிய முறையில் அமைந்திருந்தன என்பதை நினைத்தால், நாட்டியத்தின் சிறப்பு இன்னும் உயர்வாகத் தெரியும். தென்னங்கீற்றுக் கொட்டகையில்தான் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலே நிமிர்ந்தால் கீற்றுகளைப் பார்க்கலாம். சலவைத் துணியும் ஜிகினா ஓரங்களும் கீற்றை மறைக்கவில்லை. மேடை சாதாரண நடனமேடை அளவுதான். இரண்டு மூன்று திரைகளைக் கொண்டே காரியம் முடிந்துவிடுகிறது. வெளித்திரையில் ஓர் ஆசிரமக் குடிலின் தோற்றம்; உள்திரை ஒன்று நதிக் கரையையும் வனத்தின் பகுதியையும் ஓவியமாகக் கொண்டது. மற்றொன்று நகரத் தோற்றத்தை மிக எளிய முறையில் விளக்கி வைப்பது. நடிகர்களின் ஆடைகள், பாத்திரங்களுக்கேற்ற முறையில் அமைந்திருக்கின்றன. இவ்வளவு எளிமை யிருந்தும் அரங்கத்தில் ஒரு புனிதத்தன்மை தென்படுகிறது. இளங்கொத்து மா இலைத் தோரணங்களால் அது ஏற்பட்டதா, ராமபிரான் படமும், அதற்குமுன் ஏற்றி வைக்கப்பட்ட குத்து விளக்கினாலும் ஏற்பட்டதா, அல்லது நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு முன் சுருக்கமாக நடத்திய பூஜையினால் அது ஏற்பட்டதா, அல்லது மெல்லிய பின்னணி சங்கீதத்தின் இனிமைக் குரலுடன் கலந்து காதின் வழியே பாய்ந்து உள்ளத்தைத் தொட்ட வால்மீகியின் ஸம்ஸ்கிருத சுலோகங்களால் ஏற்பட்டதா, அல்லது மேடைக்கு மட்டும் அழகான வெளிச்ச மூட்டிய மின்னொளியினாலும் ஏற்பட்டதா என்று பாகுபாடு செய்து கூறுவது கடினம். எனினும், சங்கீதத்தைப் பற்றியும், அதை அளித்தவர்களைப் பற்றியும் தனியாகக் குறிப்பிட வேண்டும்.

இசையமைத்துத் தந்தவர் ஸம்ஸ்கிருதத்தில் புலமை வாய்ந்தவரும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்தைத் தம் ஜீவிய காலம் முழுவதும் பாராயணம் செய்து வருபவரும், சங்கீத சாஹித்ய கர்த்தாவும், கலாக்ஷேத்திரத்தின் தலைவராகவுமுள்ள மைசூர் வாசுதேவாச்சாரியார் அவர்கள். வால்மீகியின் காவியத்திலிருந்தே, அவருடைய சுலோகங்களையே இசைப்படுத்தித் தொகுத்து ஸ்ரீராமபிரானுக்கே அர்ப்பணமாக அளித்துள்ளார். சீதா சுயம்வரத்துக்கு 75 சுலோகங்கள் வால்மீகி ராமாயணத்திலிருந்தும் 31 சுலோகங்கள் ஆனந்த ராமாயணத்திலிருந்தும் எடுத்து இசை யமைத்துத் தந்துள்ளார். ஸ்ரீராமவன கமனத்துக்கும், பாதுகா பட்டாபிஷேகத்துக்கும், எல்லா சுலோகங்களும் வால்மீகி ராமாயணத்திலிருந்தே எடுக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு அவர் இசையமைத்திருக்கும் விதம் அவற்றைக் கேட்டவர்களுக்கு மறக்க முடியாத அனுபவம். சுலோகத்தின் பாவத்துக்கு ஏற்ப ராகங்களும், இனிமையும், மேன்மையும் அற்புதமாகக் கலந்து நிற்கின்றன. ராக வரிசைகளிற் சில அபூர்வ ராகங்கள் கூடக் கவனம் செய்யப்பட்டிருக்கின்றன. 'சந்திரகாந்தா' என்னி

இந்துஸ்தானி சங்கீதத்திலகூட அபூர்வமாகக் கையாளப்படும் ராகம் இந்த ராக வரிசைகளில் பாடப்பட்டதை இசை நுட்பம் அறிந்தவர்கள் வியந்தனர்.

இசை அமைத்துக் கொடுத்ததை முறை தவறாமல், எழுத்துத் தவறாமல், கதி தவறாமல், சுலோகங்களின் அர்த்த பாவத்தைத் தாங்களும் உணர்ந்து, கேட்போர்களுக்கும் உணரும்படி அளித்த பெருமை பின்னணி இசை அளித்த ஸ்ரீமதி டி. பத்மாவனி, எஸ். சங்கரி, எஸ். கமலாராணி, எஸ். சாரதா முதலியவர்களைச் சாரும். துளிக்கூட விரசம் ஏற்படாதவாறு விருத்தமானாலும், பாட்டானாலும், சொல்லுக்கட்டானாலும், நிகழ்ச்சி முழுதும் சோர்வில்லாமல் பாடியதைப் பிரத்தியேகமாகப் பாராட்ட வேண்டும். ரமணியின் குழலிசை காதுக்கு மிக இனிமையாக அமைந்திருந்தது. இந் நிகழ்ச்சிகளில் சாஸ்திரிய சங்கீதம் இவ்வளவு சுத்தமாக அளிக்கப்பட்டது ஒரு சிறப்பு என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும்.

இந்த நாட்டிய நாடகப் பகுதிகளை ஆரம்ப முதல் முடிவு வரையில் கண்டு களித்த ஸ்ரீ ராஜாஜி அவர்களைப் பேசும்படி ஸ்ரீமதி ருக்மிணி தேவி கேட்டுக் கொண்டார். ஸ்ரீ வாசுதேவாச்சாரியாருக்குச் சால்வை போர்த்திக் கௌரவித்து விட்டு அவர் சொன்னார் :

"உங்களுடன் சேர்ந்து நானும் இந்த இன்பத்தை அனுபவித்தேன். உங்களைப் போலவே என் உள்ளமும் ஆனந்தத்தில் இளைத்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் பேச்சுக்கு இடமே இல்லை. இந்த அற்புதத்தை நேரில் நான் கண்டிராவிட்டால் ராமாயணத்தை இந்த மாதிரி வடிவத்தில் அளிக்க முடியும் என்பதை நான் நம்பியே இருக்கமாட்டேன். நான் இதை நிச்சயமாகச் சொல்லுகிறேன். இதற்கு யாரைப் பாராட்டுவது என்றே எனக்குத் தோன்றவில்லை. இவற்றைச் சொல்லி வைத்த ஸ்ரீ வாசுதேவாச்சாரியாரையா, சொல்லிக் கொண்ட இளைஞர்களையா, ஸம்ஸ்கிருத சுலோகங்களை அர்த்தபாவத்துடன் அளித்த பாடக பாடகிகளையா, இவற்றைக் கற்பனை செய்து அதன் மூலம் பக்தியைப் பரப்ப வேண்டும் என்ற உணர்ச்சி படைத்த ஸ்ரீமதி ருக்மிணி தேவியையா என்று சொல்லத் தெரியவில்லை. எல்லோரும் அவ்வளவு அழகாகச் செய்திருக்கிறார்கள்."

அவர் சொன்ன அவ்வளவு பாராட்டுக்களும் அங்கே கூடியிருந்தவர்களின் உணர்ச்சியைப் பிரதிபலித்தன.

கலாக்ஷேத்திரம் அளிக்கும் இம் மூன்று நிகழ்ச்சிகளும் அடிக்கடி பல இடங்களில் நடத்தப்பட வேண்டியவை. உயரிய விருந்து ஒன்று ஸ்ரீமதி ருக்மிணிதேவியால் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பல பேருக்குப் பரிமாறுவதற்கு அவர் அதை வைத்திருக்கிறார். சென்னையில் இப்போதெல்லாம் பேட்டைக்குப் பேட்டை சங்கீத சபைகளும், நடன சங்கங்களும் பெருகிவிட்டன. ஒவ்வொரு பேட்டையிலும் கலாக்ஷேத்திரத்தினர் தயாரித்துள்ள இப் புனிதமான படைப்புகளை நிகழ்த்திக் காட்டும்படி செய்ய வேண்டும். அதன்மூலம் அவர்கள் செய்யும் உயர்பணி பலருக்குத் தெரிவதுடன், அவர்கள் மேற்கொண்டுள்ள கட்டட நிர்மாண ஏற்பாடுகளிலும் மற்றவர்கள் பங்குகொள்ள வாய்ப்பு ஏற்படும்.

வால்மீகி ராமாயணம் முழுவதையும் நடன காவியமாக அமைத்துக் காட்ட வேண்டும் என்பது ஸ்ரீமதி ருக்மிணிதேவியின் அவா. இப்போது இரண்டு காண்டங்கள் முடிக்கப்பட்டிருக்கின்றன. மற்றப் பகுதிகளையும் அவர் விரைவில் முடித்து அளிப்பார் என்றே எதிர்பார்க்கலாம்.

28-12-60ல் கலாக்ஷேத்ராவில் நடைபெற்ற ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் கச்சேரி இவ்வாண்டு இசை விழா நிகழ்ச்சிகளில் மிக உயர்வான ஒன்று. அன்று அவர் தேர்ந்தெடுத்துப்பாடிய கீர்த்தனைகளும், தோடி ராக ஆலாபனையும், ஸ்வாதித் திருநாளின் ராமாயண ராகமாலிகையும், மீரா பஜன்களும் வெகு நாட்கள் ரசிகர்களின் மனத்தில் பதிந்திருக்கும். கச்சேரிக்குப் பின், ஸ்ரீ வாசுதேவாச்சாரியார் பாராட்டுரை வழங்கினார்.



இக்கரைச் சீமையில் அனுபவங்கள்

6. லண்டன் சாப்பாடு !

சோமு

இங்கிலாந்துக்குப் போய்ச் சேர்ந்த மறு வாரமே என்னுடைய வீட்டிலிருந்து விசித்திரம் விசித்திரமான கேள்விகள் தபாலில் வர ஆரம்பித்தன ! நம்முடைய வீட்டுப் பெண்களுக்குத்தான் நம்மை மிகவும் நன்ருகத் தெரியுமே ! ஆறாயிரம் மைல்களுக்கு அப்பால் தன்னந்தனியாகப் போயிருக்கிற இந்தக் கையாலாகாத ஆண் பிள்ளைகள் சாப்பாட்டுக்கு என்ன செய்யப் போகிருர்கள் என்று நம்முடைய அன்னபூரணிகள் கவலைப்படுவது இயல்பு தானே ?

அவர்களுக்கு நன்ருகத் தெரியும்: எத்தனையோ பாடுபட்டு உப்பும் மிளகாயும் புளியும் சேர்த்து எவ்வளவோ நயமாகத் தயாரித்துக் கொட்டி என்ன ருசியோடு சாம்பார் வைத்துக் கொடுத்தாலும், நாம் வாயசைக்காமல் சாப்பிட்டு விட்டு எழுந்திருப்போமா? சாப்பிடுவதையும் சாப்பிட்டுவிட்டு, முகத்தையும் ஒரு மாதிரியாக வைத்துக் கொண்டு, "சென்னைப் பட்டணத்தில் இப்பொழுதெல்லாம் தெருவிலேயே கொண்டு வந்து மலிவாக உப்பு விற்கிருர்களாம் !" என்று சொல்லுவோமே ! நமக்கு வேண்டும், வேண்டும், நன்ருக வேண்டும் என்று அவர்களால் சும்மா இருக்க முடிகிறதா! உப்போ புளிப்போ இல்லாமல் உளுத்தம் பருப்புத் தாளிதமே போடாமல் வெந்த காய்களை அப்படி அப்படியே தட்டிலே கொண்டு வந்து வைத்து விடுவார்கள். இங்கிலாந்துச் சீமையிலே என்று, நம்முடைய பெண்கள் கேள்விப்பட்டிருந்தாலும், இந்த நாக்கு நீண்ட ஆண் பிள்ளைகளுக்கு இப்படி ஒரு படிப்பினை வேண்டுந்தான் என்று நம்முடைய அம்மணிகளால் பேசாமல் இருக்க முடிவதில்லை !!

ஊரிலிருந்து வந்த முதலாவது கடிதத்தில் முதலாவது கேள்வி என்ன தெரியுமா? "லண்டனில் சாம்பார் கிடைக்கிறதா....?"

இந்தக் கேள்வியோடு நிறுத்தி விடவில்லை !

"பொரித்த குழம்பு என்ருல் உங்களுக்கு மிகவும் பிடிக்குமே என்று எங்கள் அம்மா அடிக்கடி சொல்லிக் கொண்டேயிருக்கிருள். லண்டனில் பொரித்த குழம்பு அகப்படுகிறதா? ரசத்துக்கு என்ன செய்கிறீர்கள்? எல்லாம் விவரமாக மறு தபாலில் எழுதுங்கள் !"

இப்படி ஒரு கடிதம் ! இதற்கு ஏதோ பதில் எழுதிச் சமாளித்து விட்டேன்! அடுத்த வாரம் என்ன கேள்வி வந்தது என்கிறீர்கள் ?

"சனியும் புதனும் தலைக்கு எண்ணெய் வைத்துக் கொள்ளாவிட்டால் உங்கள் உடம்புக்குப் பிடிக்காதே. லண்டனில் நல்லெண்ணெய் அகப்படுகிறதா? சிகைக்காய்ப் பொடிக்கு, என்ன செய்கிறீர்கள்? மறுதபாலில் பதில் எழுதவும் !" இப்படியொரு கடிதம் வந்தது.

இதற்கும் ஒருமாதிரியாக யோசனை செய்து, "சோப்பிலேயே எண்ணெயும் சிகைக்காய்ப் பொடியும் சேர்த்து ஒரு கலவைத் தண்ணீர் விற்கிருர்கள். அதைத் தேய்த்துக் கொள்ளுகிறேன் !" என்று பதில் எழுதினேன்.

கேள்விகள் அதோடு நின்றனவா! இல்லை! "நீங்கள் போகும்போது 'ஹோல்ட் ஆல்' எடுத்துக்கொண்டு போகவில்லையே ! லண்டன் குளிருக்கு என்ன செய்கிறீர்கள்? ஊட்டியில் கம்பிளி கிடைக்கிறதா? மறு தபாலில் ஒன்று விடாமல் விவரமாக எனக்கு எழுதுங்கள் !"

வாரந் தவருமல் எனக்கு இப்படிக் கடிதங்கள் வந்து கொண்டேயிருந்தன. எல்லாம் மறு தபாலிலேயே பதிலை எதிர்பார்த்தன. எனக்குத்தான் இப்படி என்று நினைத்தேன் ! என்னைப் போல் இந்த மாதிரி எல்லாக் கணவர்களுமே ஒரு தடவை இல்லாவிட்டால் ஒரு தடவை இத்தகைய கேள்விகளுக்குப் பதில் எழுதித்தான் பரீட்சையில் தேறியிருக்கிருர்கள் என்று லண்டனிலுள்ள ஒரு சில இந்திய நண்பர்கள் மூலம் அறிந்தேன் ! கொஞ்சம் மனத்துக்குச் சமாதானம் ஏற்பட்டது.



வாடர்லூ பாலத்தில்

உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், விட்டிலிருந்து வந்த இந்தக் கடினமான பரீட்சைக் கேள்விகளுக்குப் பதில் எழுதிப் 'பாஸ் மார்க்' வாங்குகிற முயற்சியில் எனக்குப் பெருந்துணை செய்தது, லண்டனின் புகழ் பெற்ற விடுதியாகிய 'இந்தியா கிளப்' தான்!

லண்டன் போய்ச் சேர்ந்ததும் 'பார்க் ஹவுஸ் ஹோட்டல்' என்ற விடுதியில் தங்கினேன் என்று கூறினேன் அல்லவா? இந்த விடுதியில் தங்கிய போதிலும், காலையிலே தவிர மற்ற வேளைகளில் எல்லாம் வெளியே எங்காவதுதான் சாப்பிட்டேன். சாப்பாடு என்றால் என்ன? சாம்பார் சாதமும் தயிர்ச் சாதமுமா? பெரும்பாலும் 'Snacks' ஸ்நாக்ஸ் என்று அழைக்கப்படுகிற உதிரித் தின்பண்டங்களே! 'டோஸ்ட்' என்கிற ரொட்டித் தயாரிப்பு நிச்சயம் கிடைக்கிறது எல்லா விடுதிகளிலும்! சில விடுதிகளில் உருளைக்கிழங்கு 'சிப்ஸ்' தருகிறார்கள். 'சிப்ஸ்' என்றால் உருளைக் கிழங்குப் பொரியல். அதாவது உப்போ உறைப்போ போடாமல் 'ஆலிவ்' எண்ணெயில் அல்லது வேறு ஏதாவது எண்ணெயில் போட்டுப் பொரித்து வைத்திருப்பார்கள். நம்மூரில் பொரியலுக்கு நறுக்குகிற மாதிரித் துண்டு துண்டாகப் பெரிது பெரிதாக உருளைக் கிழங்கை நறுக்கியிருப்பார்கள்! டன் கணக்கில் உருளைக்கிழங்கை இப்படி நறுக்குவதற்காக இயந்திரங்கள் உண்டு. அவற்றில் போட்டு நறுக்கிப் பிறகு பொரித்து வைத்திருப்பார்கள். உப்பும் மிளகுப்பொடியும் தனியாகச் சிறுசிறு பாட்டில்களிலே கொண்டு வந்து மேஜையின் மேல் வைப்பார்கள். இவற்றைப் பொரியலில் தூவிச் சாப்பிடலாம்.

நம்மூர் ஓட்டல்களில் உருளைக் கிழங்கு வறுவலைத்தான் "சிப்ஸ்" என்று சொல்வார்கள். அதிலும் பெரிய ஓட்டல்களில் வறுவல் என்று சொன்னால் எடுத்துத் தர மாட்டார்கள்! "பொட்டேட்டோ சிப்ஸ்" என்று இங்கிலீஷிலேதான் சொல்ல வேண்டும்! இங்கிலாந்தில் வறுவலை 'சிப்ஸ்' என்று சொல்வதில்லை. அதற்கு 'Crisps' 'க்ரிஸ்ப்ஸ்' என்று பெயர்! 'சிப்ஸ்' என்றால் பொரியல்; 'க்ரிஸ்ப்ஸ்' என்றால் வறுவல்!

லண்டனிலும் இங்கிலாந்தின் பிற பகுதிகளிலும் வறுவலும் பொரியலும் வாங்கிச் சாப்பிடுவது ஒரு சகஜமான பழக்கம். தெருவிலேகூட இவற்றை வைத்துக் கொண்டு சாப்பிட்டவாறு நடந்து போவதுண்டு. வறுவல் பொட்டலங்கள் மதுக்கடைகளிலேதான் மிக மிக ஏராளமாக விற்பனை ஆகின்றன! இந்த வறுவல் செய்கிற பெரிய பெரிய தொழிற்சாலைகள், லட்சக்கணக்கான பவுன்கள் வரவு செலவு நடக்கிற பல மாபெரும் தொழிற்சாலைகள், இங்கிலாந்திலே மிகப் புகழுடன் விளங்குகின்றன என்றால் இந்த உருளைக்கிழங்கு வறுவலின் கீர்த்தியைப் பார்த்துக் கொள்ளுங்களேன்!

வறுவல், பொரியல், டோஸ்ட் ஆகியவை தவிர, உருளைக்கிழங்கை முழுதாக வேக வைத்தோ, அல்லது வேக வைத்துப் பொடியாக்கியோ தட்டிலே கொண்டுவந்து தருவார்கள். தக்காளி, பல வகையான கீரைகள், ஒரு வகையான வெள்ளரிக்காய்த் துண்டு, சில தழைகள் ஆகியவற்றை ஒரு தட்டிலே வைத்துக் கொண்டு மிளகுப்பொடியும் உப்பும் தூவிச் சாப்பிடுவதும் உண்டு! அபூர்வமாகச் சில விடுதிகளில் வாரத்துக்கு ஒரு முறை அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை "ரைஸ் புடிங்" (Rice Pudding) என்று ஒரு நேர்த்தியான உணவு கிடைக்கும்! அரிசியைப் பாலிலே வேக வைத்துப் பாயசமாகத் தருவார்கள். இங்கிலாந்தில் "ரைஸ் புடிங்" கிடைத்து விட்டால் அது தேவாம்ருதமேதான்! மெய்யாகவே இது நமக்குப் பிடித்த முறையில் மிகவும் நேர்த்தியாகச் செய்யப்பட்டு வயிறும் நிரம்பக்கூடிய விதத்தில் இருக்கிறது.



பார்லிமெண்ட் சதுக்கம்

லண்டனுக்கு நான் போய்ச் சேர்ந்த மறு வாரத்தில் நண்பர் கிருஷ்ணமூர்த்தி ஒருநாள் மாலை "தோசை சாப்பிடலாம் வருகிறீர்களா?" என்று மெதுவாகக் கேட்டாரே பார்க்கலாம்! வெறும் ரொட்டியும், பிஸ்கட்டும், பழங்களுமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்த எனக்குத் தோசை என்றதும் நாக்கிலே தண்ணீர் சொட்டியது!

பாதாள ரயில் வண்டியில் ஏறிச் சென்று சாரிங்க்ராஸ் என்ற ஸ்டேஷனில் வந்து இறங்கினோம். அப்போதுதான் இந்தச் சாரிங்க்ராஸ் என்ற ஸ்டேஷனுக்கும் வாடர்லூ என்ற ஸ்டேஷனுக்கும் நடுவே பாதாள ரயிலானது "தேம்ஸ்" நதியின் கீழே ஓடுகிறது என்பதைத் தெரிந்து கொண்டேன்.

சாரிங் க்ராஸ், ஸ்ட்ராண்ட், ட்ரபால்கர் ஸ்கவேர் என்ற மூன்று ஸ்டேஷன்களும் மூன்று புறத்தில் இருக்க, நடு மையத்திலே நிற்கிறது "இந்தியா க்ளப்!" நெடுஞ்சாலையானது ஒருபுறம் கிங்ஸ் வே என்ற அரச பாட்டையை நோக்கிச் செல்கிறது. மறுபுறம் 'பக்கிங்ஹாம் அரண்மனை'யை நோக்கிச் செல்கிறது. இப்படிப்பட்ட முக்கியமான சாலையிலே "க்ரேவன் வீதி" என்று ஒரு தெரு திரும்புகிறது. அந்த க்ரேவன் வீதியிலேதான் இருக்கிறது "இந்தியா க்ளப்!" அதைத் தாண்டி நடந்து சென்றால் "தேம்ஸ்" நதியின் கரையை அடையலாம். ஒரு பக்கம் புகழ் பெற்ற வாடர்லூ பாலம்! ஆங்கில இலக்கியத்திலே பாடல் பெற்ற பாலம் அது. இன்னொருபுறம் பாராளு மன்றமும் 'பிக் பென்' கடிகாரமும் "வெஸ்ட் மின்ஸ்டர் ஆபி" என்கிற சரித்திரப் பிரசித்திபெற்ற புனித நிலையமும் காட்சி தருகின்றன.

பழைய காங்கிரஸ் பக்தரும், திருமங்கலம் கல்கி ஏஜண்டுமான



திரு எஸ். எஸ். மணி காலமானார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். 'கல்கி' பத்திரிகையில் அளவற்ற அபிமானம் கொண்டவர். அவரது மறைவினால் வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிப்பட்ட அற்புதமான சூழலிலே நிற்கிறது ''இந்தியா க்ளப்''. இதற்கு இரண்டு மூன்று கட்டடங்கள் தாண்டி ''பெஞ்ஜமின் ப்ராங்க்ளின்'' குடியிருந்த வீடும், எதிரே ஒரு பெரிய சங்கீத மண்டபமும் இருக்கின்றன. திரும்பி நடந்து சென்றால் இந்திய ஹை கமிஷன் காரியாலயத்துக்குச் செல்லலாம். அதற்குச் சமீபத்தில் ''புஷ் ஹவுஸ்'' என்ற பெருங் கட்டடம். அதிலேதான் பி. பி. ஸி. யின் வெளி நாட்டு இலாகாவும் இந்தியப் பகுதியும் உள்ளன.

சுவை மிகுந்த இந்தக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டே இந்தியா கிளப்புக்குள் நுழைந்தேன். உள்ளே போனதும் ஒரு மரப்படிக் கட்டு வரிசை நம்மைப் பூமிக்குள்ளேயுள்ள நிலவறைக்குக் கொண்டு செல்கிறது. இந்த நிலவறைதான் சாப்பாட்டு இடம்! இந்தியா கிளப்பில் இந்த நிலவறை குளிருக்கு ஏற்ற கணகணப்போடு பெட்டகம் போல் அழகாக இருக்கிறது.

உள்ளே நுழையும்போதே பெருங்காய வாசனை ''கம்''மென்று கமழ்ந்தது! அறைக்குள்ளே சென்று இடதுபுறமாகத் திரும்பி ஒரு மேஜைக்கு எதிரே போய் உட்கார்ந்தேன்! சுற்றி வர ஒருசில இந்திய முகங்களோடு ஆங்கிலேய முகங்களுமே கண்டேன். ஆகா! நம்முடைய தோசையின் பெருமையே பெருமை என்று மனத்துக்குள் அரிசியையும் உளுந்தையும் வாழ்த்திக் கொண்டேன்! அப்போது, ''ஸா ஆ-ஆ-ஆ-ஆர்!'' என்று ஒரு குரல் கேட்டது! தென்னிந்தியாவுக்கே உரிய நீட்டல் அளபெடையிலே ''ஸா-ஆர்'' என்று நெளிந்த அந்த அழைப்புக் குரலைக் கேட்டதும், ''ஆதிமூலமே'' என்று சொல்லியவாறு திரும்பினேன். இந்தியா க்ளப்பின் முக்கிய நிர்வாகியும் லண்டன் நகரத்தின் ''அன்ன தாதா''வுமான இராமலிங்கம் வந்து தோன்றினார்!

நம்முடைய சென்னை நகரத்தின் முக்கிய வழக்கறிஞராகிய சுப்பராயர் அவர்களிடம் நீண்ட நாட்கள் இருந்து கைதேறியவர் இராமலிங்கம்! இப்பொழுது லண்டனிலே தமிழ் மணம் கமழும்படியாக மசாலாதோசையும் உருளைக்கிழங்குப் பொடிமாசும், வெங்காய சாம்பாருமாக அள்ளி வீசிக் கொண்டிருக்கிறார் அவர்!

தோசையும் சாம்பாரும் கொண்டு வந்து கொடுத்துக் கொண்டே மிக்க அன்போடு ஒரு ரசமான தகவலையும் வழங்கினார் இராமலிங்கம். ''இந்த இந்தியா க்ளப்பில் ஓர் அறை இன்னும் இரண்டு நாளில் காலியாகிறது. இங்கே நீங்கள் வந்து தங்குவதாக இருந்தால் அந்த அறையை இப்பொழுதே உங்களுக்கு 'ரிஸர்வ்' செய்து விடுகிறேன். என்ன சொல்லுகிறீர்கள்?''

இவ்வாறு கேட்டார் இராமலிங்கம். சாம்பார் வாசனை சமையலறைக்குள்ளேயிருந்து 'கம கம' என்று வந்து கொண்டிருந்தது. மிளகு ரசமும் சேர்ந்து சக்கைப் போடு போட்டுக் கொண்டிருந்தது! அதை நுகர்ந்து கொண்டே ''யோசனை என்ன! கட்டாயம் இங்கே வந்து விடுகிறேன்!'' என்று மேஜையின் மேல் ஓங்கியடித்தேன்.

இதன்பிறகு நான் லண்டனிலிருந்து ஸ்காட்லாந்து புறப்படுகிற வரை ''இந்தியா க்ளப்''பிலேதான் இருந்தேன். தினந்தோறும் காலையில் ''ஜோசப்'' என்ற தமிழ் இளைஞர் உப்புமாவோ அல்லது தோசையோ கொண்டு வந்து கடகடத் தருவார். 'கார்ன்ப்ளேக்ஸ்' என்ற தித்திப்பான கஞ்சியும் கிடைத்தது. அது மட்டுமா? தென்னிந்தியக் காப்பியும் கிடைத்தது!

'தென்னிந்தியக் காப்பி' என்று ஏன் சிறப்பாகக் குறிப்பிடுகிறேன் என்றால், நம்மைப் போல் இத்தனை ''கன''மாகவும், உறுதியாகவும் காப்பி தயாரிப்பவர்கள் சென்னை மக்களைத் தவிர வேறு யார் உண்டு?

ஆனால் இது விஷயத்திலும் ஒரு திகைப்பு எனக்கு ஏற்பட்டது சில நாட்கள் கழித்து! தமிழர்களைப் போலவே உறுதியான கனமான காப்பியைலண்டன் நகரத்தில் ''காப்பி பார்'' என்று அழைக்கப்படுகிற விடுதிகளில் தயாரித்துக் கொடுக்கின்றனர். இங்கிலாந்திலேயுள்ள எழுத்தாளர்களும், ஓவியர்களும், நடிக நடிகைகளும் ''பப்'' என்று அழைக்கப்படும் மதுபானக் கடைகளிலே சந்தித்துக் கலைச் சர்ச்சைகளை நடத்துவதே வழக்கமாக இருந்து வந்தபோது, பத்து ஆண்டுகளுக்கு முன்பு ''காப்பி பார்'' நாகரிகம் இந்த நாட்டிலே நன்கு பரவ ஆரம்பித்தது. இறகும் கையுமாக உலவிக்கொண்டிருக்கிற சித்திரக்காரர்களை எல்லாம் இப்பொழுது இந்தக் காப்பி பார்களிலே பார்த்தேன்.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு பரவ ஆரம்பித்த இந்தக் 'காப்பி பார்' நாகரிகத்தில் சில வேடிக்கையான பழக்க வழக்கங்களைக் கண்டேன். ''திக்''காகக் காப்பி தயாரித்து, அதிலே பாலாடை நுரையை மேலே போட்டு அழகழகான கோப்பைகளிலே கொண்டு வந்து வைக்கிற நேர்த்தியையும், மஞ்சள் நிறத்திலே காட்சி தருகிற ஒருவகையான சர்க்கரைப் பொடியையும், சுற்றிவர அழகாக வைக்கப்பட்டிருந்த விசித்திரமான காட்சிப் பொருள்களையும் பற்றி காப்பி பார் அதிபரிடம் விசாரித்தேன். அப்போது அவர் அந்த முழு வரலாற்றையும் சொன்னதோடு, ''கிம்மிக்'' (''Gimmick'') என்று அழைக்கப்படுகிற அலங்கார முறையைப் பற்றியும் சில செய்திகள் கூறினார்!

(தொடரும்)

பட்டா கொண்ட பட்டுசாமி

— தாமரை மணாளன் —

"விடியுமுன்னே கல்யாண வீட்டோ, இழவு வீட்டோ பார்த்து அரட்டையடிக்கப் புறப்பட்டுவிட்டீர்களே, உங்களுக்குக் கொஞ்சமாவது குடும்பப் பொறுப்பு இருக்கா?" என்று ஆத்திரத்துடன் இரைந்தவாறு வந்தாள் பார்வதி அம்மாள்.

மனைவியை அலட்சியமாகப் பார்த்துவிட்டு, வெற்றிலைப் பெட்டியிலிருந்து பாக்கை எடுத்து வாயில் போட்டார் பட்டுசாமி.

"வயது வந்த பெண் வீட்டிலிருக்க! அவளுக்கு ஒரு கல்யாணம் பண்ண வேண்டும் என்று கொஞ்சமாவது அக்கறை இருக்கிறதா?"

"சரி சரி, நேரமாகி விட்டது! முகூர்த்த நேரத்துக்கு முன்னால் போகாவிட்டால் சாம்பசிவம் சண்டைக்கு வருவான்" என்று கூறி அவசரமாக வாசற்புறத்தை நோக்கி நடந்தார் பட்டுசாமி.

'மடேர் மடேர்' என்று தலையிலடித்துக் கொண்டாள் பார்வதி அம்மாள். அவர் தலையில் அடிக்க முடியுமா?

"சவத்து மூதிக்கு ஓர் இழவும் தெரியலே. பெண்ணுக்கு வயசாயிட்டுதாம். ஏழையோ பாழையோ எவன் தலையிலாவது கட்டிவிட வேண்டுமாம். ஏழைக்கும் பாழைக்கும் கொடுக்கவா பதிமூன்று பவுனைப் பத்து வைத்திருக்கிறேன்? சொன்னாலும் புரியவில்லை. 'லபோ லபோ' என்று அடித்துக் கொள்கிறாள்" என்று சலித்துக் கொண்டே வழி நடந்தார் பட்டுசாமி.

பாவம், பார்வதியம்மாள், லௌகீகத்துக்கு அடிமைப்பட்ட சாதாரணப் பெண் ஜென்மம் தானே! கணவரின் இறுமாப்பையும், லட்சியத்தையும் புரிந்துகொள்ள முடியவில்லை.



பட்டுசாமி என்பது அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர். ஆனால் முப்பதாவது வயதில் 'பட்டா கொண்ட பட்டுசாமி' என்று தம் பெயரையும் புகழையும் ஏக காலத்தில் விஸ்தரித்துக் கொண்டார் பட்டுசாமி.

போகும்போது எப்படியோ, அவர் இந்த உலகத்துக்கு வரும்போது வெறுங் கையோடுதான் வந்தார் பட்டுசாமி. மகவின் சாகசச் செயல்களுக்கு இடமளிப்பதை உத்தேசித்துத்தானோ, என்னவோ ஆஸ்தி நிலையைப் பூஜ்ய மதிப்பில்தான் வைத்துப் போனார் அவர் தந்தை. ஏழையின் வயிற்றில் அவருக்கு ஜனனம் அளித்தாலும், அவருடைய மூளைக்கும் அதிர்ஷ்டத்துக்கும் முடிச்சைப் போட்டுத்தான் அனுப்பினான் பிரம்மா. 'உருட்டு' 'புரட்டு' என்ற வித்தை வேலைகளெல்லாம் அவருக்குக் கைவந்த தொழில் முறைகள். மாதிரிக்கு ஒரு சம்பவம்.

ஒரு தடவை தம் கைவசமிருந்த நிலத்தைக் காட்டி ஏழுபேரிடம் கடன் வாங்கியிருந்தார் பட்டுசாமி. ஒவ்வொருவரிடமிருந்து வாங்கிய தொகையும் சொத்தின் மதிப்புக்குக் குறைவிராது. சொல்லி வைத்தாற்போல் எல்லாரும் பணத்துக்கு நெருக்க ஆரம்பித்தனர். தனித்தனியாக ஒவ்வொருவரிடமும் நிலத்தைக் கிரயம் செய்து கொடுத்து விடுவதாக வாக்களித்து நாள் குறித்து விட்டார்.

குறித்த நாளில் ஏழுபேரும் பத்திரமும் கையுமாகக் கிராமக் கர்ணத்தின் வீட்டுக்கு நிலத்தைப் பற்றிப் புள்ளி விசாரிக்கப் போன போதுதான் அந்தப் பெரிய உண்மை தெரிய வந்தது. நிலம் அவருடையதல்லவென்றும், யாரோ சிங்கப்பூரிலிருப்பவர் ஒருவருடையதென்றும், வெகுகாலமாகப் பட்டுசாமியின் கைவசம் குத்தகை என்ற பெயரில் இருப்பதாகவும் அறிய நேர்ந்தது.

கடனுக்குப் பதிலாக அவரை நையப் புடைத்தாவது ஆத்திரத்தைப் போக்கிக் கொள்ளலாம் என்று மடக்கிய ஏழு பேருக்கும் நிதானமாகப் பட்டுசாமி எடுத்துரைத்தார். "என்மேல் யாராவது கை வைத்தால் நானாகவே விஷயம் கிரிமினல் கேஸாகி விடும். அப்புறம் நீங்கள் கம்பி எண்ண வேண்டியதுதான். பேசாமல் இருந்தால் இன்றைக்கில்லாவிட்டாலும் நாளைக்கே உங்கள் கடனையெல்லாம் தீர்ப்பேன்."

அதற்குமேல் அவர்கள் அவர்மீது கைவைக்கத் துணியவில்லை. ஆனால் ஒருவர் சிங்கப்பூரிலிருக்கும் நிலச் சொந்தக்காரருக்கு விஷயத்தைத் தெரிவித்துத் தம் ஆத்திரத்தைத் தணித்துக் கொண்டார்.

சிங்கப்பூராரிடமிருந்து காரசாரமாகக் கடிதம் வந்தது. குத்தகை ஏற்பாட்டின்படி, குத்தகைப் பணத்தை வருஷா வருஷம் நிலச் சொந்தக்காரர் பேரில் பாங்கியில் போட்டு வரவேண்டும். இவ்விதமிட நிலக்காவல் பேரால் பட்டுசாமியே கட்ட வேண்டும். அதைக் குறிப்பிட்டு, "எல்லாம் ஒழுங்காக நடக்கிறதா?

நிலத்தை விலை பேசுவதாக வதந்தி வருகிறதே, உண்மையா?'' என்றெல்லாம் கேட்டெழுதியிருந்தார். அவர் வியாபார நெருக்கடி காரணமாக வெகுகாலம் ஊர்ப்பக்கம் வரவில்லை. அவருக்கும் குத்தகைதாரரான பட்டுசாமிக்கும் கடிதத் தொடர்புதான்.

அவருடைய கடிதத்துக்கு உடனடியாகப் பதில் எழுதி விட்டார் பட்டுசாமி. பன்னிரண்டு வருடங்களாகக் குத்தகைத் தொகையை, ஏற்பாட்டின்படியே பாங்கில் தாம் போட்டு வந்ததாகவும் பன்னிரண்டு வருட அனுபவ பாத்தியதையால் நிலம் சட்டப்படி தமக்குச் சொந்தமாகி விட்டதால், பணத்தைப் பாங்கிலிருந்து எடுத்து விட்டதாகவும் கூடிய சீக்கிரம் நிலத்தைத் தம் பெயருக்குப் பட்டா செய்து கொள்ளப் போவதாகவும் கடிதத்தில் கண்டிருந்தது.

பட்டுசாமியின் கடிதத்துக்குப் பதிலாகச் சிங்கப்பூரார் மூச்சுவிடவில்லை; விடுவதற்கு அவருக்கு மூச்சு இருந்ததோ, என்னவோ, தெரியாது!

நிலம் அவருக்குச் சொந்தமாகப் போவதை அறிந்த கடன்காரர்கள் மீண்டும் படையெடுக்க முயன்றனர். உடனே பட்டாவைத் தம் பெயருக்கோ, தம் வாரிசுகளான மகன் பெயருக்கோ மாற்றாமல் தம் மகள் பெயருக்கு எழுதித் தம்மைக் காப்பாற்றிக் கொண்டார்! இவ்வாறு தற்காத்து, தம் கடன் காத்து பட்டாவையும் காத்து வெற்றி வாகை சூடியதால் வெறும் பட்டுசாமி, பட்டா கொண்ட பட்டுசாமி ஆனார்.

கல்யாண வீடு என்றால் சாதாரணமாகச் சாப்பாடும் சீட்டுக் கச்சேரியும்தான் பட்டுசாமிக்குச் சுவாரசியப்படும். ஆனால் அன்று அவர் நண்பர் சதாசிவத்தின் மகனான கதிரேசனின் கல்யாணத்தின்போது இன்னொரு விஷயம் அவருக்குச் சுவாரசியப்பட்டுவிட்டது.

'ட்வீட்' பாண்ட், சில்க்ஷர்ட் சகிதம் கலகலப்பான சுபாவத்துடன் கல்யாண வீட்டில் நடமாடிய இளைஞனைச் சுற்றிப் பட்டுசாமியின் கண்களும் கருத்தும் சுழன்றன. அவன் பட்டணத்திலிருந்து கதிரேசன் கல்யாணத்துக்கு வந்த நண்பன்.



அவனைப் பார்த்ததும், 'பசையுள்ளவனாகத் தோன்றுகிறதே; வீட்டை விட்டுக் கிளம்பும் போதே அவள் அடித்துக் கொண்டாளே! கமலாவை இவன் தலையில் கட்ட முடியுமா?' என்று பட்டுசாமி நோட்டம் விட்டார்.

அன்று மாலையிலேயே கல்யாணத்துக்கு வந்த பூபதியைத் தம் பெண்ணைப் பார்க்க அழைத்துப் போய் விட்டார் பட்டுசாமி. அவனுக்குப் பெண் பிடித்து விட்டது. பெண்ணுக்கும் மாப்பிள்ளையைப் பிடித்து விட்டது. மற்ற விஷயங்களை எப்படிச் சாமர்த்தியமாகச் சமாளிப்பது என்று சிந்தித்தார் பட்டுசாமி. ''நம் அந்தஸ்துக்கு இருபத்தையாயிரமாவது வரதட்சிணை கொடுக்க வேண்டுமென்று வீட்டில் அவள் பிடிவாதம் செய்கிறாள். நான்தான் எடுத்துச் சொன்னேன்: 'நமக்குப் பிற்காலம் ஆண் பிள்ளையைப் போல் அவளும் சரிபங்கை எடுத்துக் கொள்ளட்டும்; சட்டத்திலும் அதற்கு வழி இருக்கிறது' என்று. அதற்குப் பிறகுதான் அவள் வாயை மூடிக் கொண்டாள்'' என்றவருக்குச் சட்டென்று ஒரு யுக்தி தோன்றியது.

''மாப்பிள்ளை! நம் வயல்களைப் பார்த்து விட்டு வருவோம், வருகிறீர்களா'' என்று உரிமையோடு அவனை வயல்வெளிப் பக்கம் அழைத்துப் போனார்.

பச்சைப் பசேலென்று பயிராகியிருக்க நிலங்களில் கிட்டத்தட்ட பாதியைத் தமக்குச் சொந்தமென்று அளந்தார்.

வயல் பக்கம் நின்று கொண்டிருந்த ஒருவரிடம் போய், 'நம்ம நிலமெல்லாம் எப்படி இருக்கிறது?' என்று கூடமாகக் கேட்டார். அவர் 'ஏதோ உங்கள் புண்ணியத்தில் நன்றாக இருக்கிறது' என்று தன்னடக்கமாகப் பதில் சொன்னார். அவர் அப்படித்தான் பதில் சொல்வார் என்று பட்டுசாமிக்குத் தெரியும்.

பத்தடி தூரம் நகர்ந்த பின் பூபதியிடம், 'இவர்தான் என் பண்ணையாள்' என்று அறிமுகப்படுத்தி விட்டு நடையை எட்டிப் போட்டார். அந்த ஊரில் பெரிய நிலச்சுவான்தாரரான அவருக்குப் பட்டுசாமியின் வார்த்தைகள் காதில் விழ நியாயம் இல்லை.

இப்படி அற்பமானது முதல் அற்புதமானது வரையிலும் தோரணை காட்டித் தம் பெருமையை மாப்பிள்ளையின் மனத்தில் பதிய வைத்தார் பட்டுசாமி.

''எனக்குப் பெரியவங்க கிடையாது. நீங்களே பெரியவங்களாக இருந்து எல்லாக் காரியத்தையும் கவனித்துக் கொள்ளுங்கள்'' என்று தன் சம்மதத்தைத் தெரிவித்தான் பூபதி. இவ்வளவு இலகுவில் காரியம் முடியும் என்று பட்டுசாமி எதிர்பார்க்கவில்லை.

கல்யாணச் செலவை யார் ஏற்றுக் கொள்வது என்பது பற்றி முதலில் பட்டுசாமிக்குப் பிரச்னையே எழவில்லை. அவர் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லாதபோது பிரச்னைக்கு இடமில்லைதான். ஆனால் அதைப் பிரச்னையாக்கியது பார்வதி அம்மாள்.

கணவரின் தீவிரப் போக்கைக் கண்டு அந்த அம்மாள் பயந்து விட்டாள். வரதட்சிணையில்தான் மண்ணடித்தாயிற்று; கல்யாணச் செலவையும் மாப்பிள்ளை தலையில் கட்டினால் 'பெண் வேண்டாம்' என்று ஓட்டம் பிடித்து விடுவானோ என்று அவளுக்கு அச்சம்.

மனைவி அதைக் கூறியதும், கொஞ்சம் சிந்தித்தார் பட்டுசாமி. அவரது யோசனை உதயமாகியது. நாட்டின் பொருளாதாரம் உயர, ஒவ்வொருவரும் ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துப் பதிவுத் திருமணம் செய்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதோடு தாமே அந்த ஊருக்கு முன் மாதிரியாகத் தம் மகளுக்குப் பதிவுத் திருமணம் செய்ய முன் வந்தார்.

திருவளர் செல்வன் பூபதிக்கும் சௌபாக்கியவதி சுசீலாவுக்கும் மங்களகரமாகப் பதிவுத் திருமணம் நடந்தேறியது.

திருமணம் முடிந்த மூன்றாம்நாள்.

எப்பொழுதுமே பட்டுசாமியின் மூளை ரொம்பச் சுறுசுறுப்பு. மாப்பிள்ளையின் சொத்துக்களை மேற்பார்வையாளன் என்ற பெயரிலாவது தம் கைவசமாக்கிக் கொள்ள, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளில் அவர் சிந்தனை லயித்திருந்தது.

அச்சமயம் வீட்டுக்குள்ளிருந்து ஹாலுக்கு வந்தான் புது மாப்பிள்ளை பூபதி.

“மாப்பிள்ளை, உங்களுக்கு இந்தப் பட்டிக்காட்டில் நேரமே போகாதே...” என்று ஆரம்பித்தார் பட்டுசாமி.

“அப்படியொன்றுமில்லை. உங்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தாலே பொழுது தானாய்ப் போகுமே” என்று சிரித்துக் கொண்டே பதில் சொன்னான் பூபதி.

“அதனால்தான் நானும் உங்களோடு இருந்துவிடலாமா என்று யோசிக்கிறேன்.” அவனை விஷயத்துக்கு இழுத்தார் பட்டுசாமி.

“தாராளமாக...” என்று வெகு தாராளமாகச் சொன்னான் பூபதி.

“உங்களுக்கு இங்கிருக்க அவ்வளவாக வசதிப்படாது. பட்டணத்திலே இருக்கிற உங்க பங்களாவுக்கே போய்விடுவோம்” என்று தொடர்ந்தார்.

“ஏன் இங்கேயே பிரமாத வசதியாக இருக்கிறதே. பட்டணத்திலே நான் இருந்த அறை ரொம்ப மோசம். ஓர் ஆள்கூடப் படுக்க முடியாது.”

“என்ன! அறையா?” என்று தடுமாறினார் பட்டுசாமி.

சுருக்கமாக விளக்கினான் அவர் மாப்பிள்ளை. “ஆமா, மாமா; சின்ன அறைதான். ஐந்து ரூபாய்தானே வாடகை. அதையும் கல்யாணத்துக்கு முன்னாலேயே - ஒரு வருஷமா வாடகை பாக்கி இருக்கிறதென்று பிரமாதமாகச் சண்டைக்கு வந்தான் வீட்டுக்காரன். அறையைக் காலிபண்ணிச் சாவியை அவன் முகத்தில் எறிந்து விட்டு வந்துவிட்டேன். மனுஷனுக்கு மானம் தானே பெரிது. என்ன மாமா. இங்கே இவ்வளவு வசதியாக நம் வீடு இருக்கும்போது அது எதுக்கு?”

பட்டுசாமியின் மண்டைக்குள் எரிமலை வெடித்தது.



“அடப்பாவி! உன் யோக்கியதை இவ்வளவுதானா? ஐம்பதாயிரத்துக்குச் சொத்து இருக்கிறது என்று அந்தப் பயல் கதிரேசன் சொன்னானே!” என்று அலறினார்.

“அபாண்டமாகச் சொல்லாதீர்கள் மாமா! கதிரேசன் ரொம்ப நல்லவன். ஒரு கல்யாணத்தை நடத்திவைத்த புண்ணியவான். என் கல்யாணத்தை நடத்தப் பொய்கூடச் சொல்லவில்லை. ஏதோ உண்மைக்கும் பொய்க்கும் பொதுவாகச் சில வார்த்தைகள் சொல்லி வைத்தான். ஐம்பது ரூபாய் என்று அவன் சொன்னதை நீங்கள்தான் ஐம்பதாயிரம் என்று நினைத்துக் கொண்டீர்கள்.”

“வெறும் ஐம்பது ரூபாயா! சண்டாளர்களா, எல்லாரும் சதி பண்ணி என்னை ஏமாற்றி விட்டீர்களே!” என்று கத்தினார்.

“ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்? இப்பொழுது என்ன நடந்துவிட்டது? நம் இருவர் அந்தஸ்தும் ஒரே நிலைதான். நீங்கள் பேராசைப் பட்டதால் ஏமாந்தீர்கள். நான் கல்யாணத்தைக் கல்யாணத்துக்காகச் செய்துகொள்ள முன்வந்ததால் ஆண்டவன் எனக்கு ஒரு நன்மையைக் காட்டியிருக்கிறார். இப்பொழுது தான் சுசீலா சொன்னாள். நீங்கள் கடன்காரர்களுக்குப் பயந்து உங்கள் நிலத்தை அவள் பெயருக்குப் பட்டா செய்திருக்கிறீர்களாம். இந்த வீடு கூட அவள் பெயருக்குத்தானே இருக்கிறதாம்! ஆகவே நேற்றுமுதல் இவை சட்டப்படி என் உடைமை. நீங்களும் என்னைப்போல் சட்டத்தை மதிப்பவராதலால் வீணாகக் கலாட்டா பண்ணாதீர்கள். பெண் கிடைக்காமல் தவித்த எனக்கு அருமையான பெண்ணைக் கொடுத்துக் கல்யாணம் செய்து வைத்த உங்கள் உதவிக்காக நீங்கள் வேறு வீடு பார்த்துக் கொள்ளும் வரையில் இங்கேயே தங்கிக் கொள்ளலாம்” என்று கூறிவிட்டு வீட்டுக்குள் போய்விட்டான் பூபதி.

பட்டுசாமிக்குத் தலை சுழன்றது; மயக்கம் வரும்போலிருந்தது. ஆனால் அவர் ரோஷக்காரர். வீட்டுக்குள் மயங்கிவிழவில்லை. வெளித் திண்ணையில் போய்த்தான் விழுந்தார்!


ஒவ்வொரு வீட்டின் சமையலறையும் அவ் வீட்டின் இருதயம் போன்றது. பக்குவமாக பதார்த்தங்கள் தயாரிப்பதில் கைதேர்ந்த இல்லாள் இல்லத்தின் ராணி என கருதப்படு



இல்லத்தின் ராணிக்கு இன்றியமையாதது!

கிறாள். சுதா வனஸ்பதி மற்றும் விமலா சுத்திகரிக்கப்பட்ட தாவர எண்ணெய்—இவற் றின் தரத்தை அறிந்த பெண்மணி குடும்பத் தாரின் விருப்பிற்கு எளிதில் பாத்திரமாகிறாள். அவளுடைய ருசிமிக்க சமையல் பெரிதும் போற்றப்படுவதோடு—சுதா மற்றும் விமலா நயமான விலைகளில் கிடைப்பதினால்—அவ ளுடைய சிக்கனமும் மெச்சப்படுகின்றது.





கேரள அரசாங்கத் தயாரிப்பு

SUDHA சுதா வனஸ்பதி

VIMALA விமலா

சுத்திகரிக்கப்பட்ட தாவர எண்ணெய்

கவர்ன்மெண்ட் ஹைட்ரோஜெனேஷன் பாக்டரி, கோழிக்கோடு

(அரசாங்கத் துறையில் உள்ள வனஸ்பதி பாக்டரி இது ஒன்றே)

அன்பே தெய்வம்

'ஸந்யாஸி' என்ற நாடகத்தின் மூன்றும் காட்சி கிராமியப் பாடல் ஒன்றோடு தொடங்குகிறது. மலைப் பாதையின் அருகே கிடக்கும் குத்துக்கல் ஒன்றின் மேல், ஸந்யாஸி அமர்ந்திருக்கிறான். பாதையின் வழியே, ஆடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் பாடிக்கொண்டு செல்கிறான் :

முகத்தைத் திருப்பிடாதே
 முத்தம்மா - முந்தி
முந்தி வந்து
 சொக்குகின்ற வேனிலும்
அகத்தைத் திறந்தபடி
 காட்டுது - விஞ்சும்
ஆசை கொஞ்சும்
 பூக்கரங்கள் நீட்டுது.

ஆமாம், காதற் பாடல்தான். இளவேனில் என்னும் எழில் அணங்கு வந்து நிற்கிறாள் ; தன் மலர்க்கரங்களை நீட்டுகிறாள் ; தன் அகத்தைத் திறந்து காட்டி அங்கே அலை மோதும் அழகை யெல்லாம் உலகிலே கொட்டுகிறாள் ; காணும் காதலன், தன்னுடைய காதலி மட்டும் முகத்தைத் திருப்பிக் கொள்ளுகிறாளே என்று பாடுகிறான் :


காட்டுத்தழை சலசலக்கும் பேரமலோ-துயர்க்
 கண் கலங்கி மாலை சிந்தும் விம்மலோ ?
மோட்டு வயல் வானம் எங்கும் அன்பு-மெல்ல
 மெல்ல வந்து காதில் இங்கு துள்ளுது.

ஆடி ஆடி ஆடி ஆடிப் பூக்களும் - நடம்
 ஆடும் தோப்பிலே ஆடும் இந்த இருளிலே
கூடிக் கூடி ஏதேதுவோ பேசுது-கொஞ்சி
 கொஞ்சியாய் இரகசியங்கள் வீசுது

'ஆனால் நீ மட்டும் முகத்தைத் திருப்பிக் கொள்கிறாயே? நாமும் இம் மலர்களைப் போலக் கூடிக் கூடி அன்பின் ஆயிரம் ஆயிரம் இரகசியங்களைப் பேசி மகிழ வேண்டாமா? எங்கே, உன் முகத்தைச் சிறிது காட்டு. இந்த இளவேனிலைப் போலவே நீயும் உன் பூக்கரங்களை நீட்டு' என்று பாடுகிறான் காதலன் :

முகத்தைத் திருப்பிடாதே முத்தம்மா-ஒளி
 முழுநிலவு முகமெனைத் காட்டடி.
அகத்தைத் திறந்து கொட்டி ஆசையாய்-
 உன்றன்
 அழகு மின்னும் பூக்கரங்கள் நீட்டடி.


கிராமிய மெட்டிலே அமைந்த பாடல்; ஆனால் சிறந்த கவிஞன் ஒருவனுடையது; ஆகவே அதன் அமைப்பு எளியதாய்



இருந்தாலும் கவிதையின் ஒளி அதனுள்ளேயும் வீசாமல் இல்லை.

இந்தப் பாடலைக் காதிலே வாங்கியும் வாங்காமலும், ஸந்யாஸி வீற்றிருக்கிறான். வாஸந்தி என்ற சிறுமியின் களங்கமற்ற அன்பு தனக்கு விலங்காக அமைந்து மாயை என்னும் சிறையில் தன்னை வீழ்த்திவிடுமோ என்று அஞ்சி ஓடி வந்தானே, இப்போது அவன் என்ன நினைக்கிறான்? அவனே சொல்கிறான், கேட்போம் :

'நீலக் கடலின் நெஞ்சிலே, மாலைப் பொழுதின் பொன், உருகிக் கரைகிறது. மலையின் மார்பிலே சாய்ந்த காடு, பகலொளியின் கடைசித் துளிகளைப் பருகிக் கொண்டிருக்கிறது. ஏதோ. இடது புறத்தில் மரங்களின் ஊடே, ஊரிலுள்ள குடிசைகள் தென்படுகின்றன. அந்தி விளக்குகள் அங்கங்கே பளிச்சிடுகின்றன. தயிலும் தன் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டு நிற்கும் தாயைப் போல, இருள் முன்றானையால் முகத்தை மூடிக் கொண்டு நிற்கின்றன குடிசைகள். இயற்கையே, நீ என் அடிமை. நான் தன்னந் தனியாய், அரசனைப் போல் அமர்ந்திருக்கும் இப் பெரிய விசால மண்டபத்தில். நீ உன் வண்ண விசித்திரமான இரத்தின கம்பளத்தை விரித்திருக்கிறாய். அதன்மேல் நின்று நட்சத்திரப் பதக்கம் மார்பிலே மின்ன நீ ஆடுகிறாய். ஆடு,



"வனமஹோத்ஸவம் காண்ட்ராக்ட் எடுத்திருப்பதாகக் கூறினீர்களே, நீங்கள்தான் செடிகளை நடணுமோ?"

"ஊம்.... நட்ட செடிகள் காய்ந்ததும் சுள்ளிக் கத்தைக்தாக நான் எடுத்துக் கொள்ள வேண்டியது!"

ஆடு." உன்னால் என்னை ஒன்றும் செய்து விட முடியாது!

பழைய ஸந்யாஸிதான்; நாடகத்தின் முதற் காட்சியில் எந்த நிலையில் இருந்தானோ அதே நிலையில்தான் இன்னும் இருக்கிறான் என்று தோன்றுகிறது. உண்மை அதுதானா? இருங்கள், மலைப் பாதையில், சில ஆயர் சிறுமியர் பாடிக் கொண்டு வருகிறார்கள். இதுவும் காதல் பாட்டுத்தான். ஆனால் இது கண்ணனிடத்தில் கோபியர் காட்டிய காதல், இறைவனை நோக்கித் திரும்புகின்ற உயிரின் அன்பு:

ஆடும் இருள் நதி தாண்டி வந்தே-இசை
அங்கேயே வா என்றழைக்குதடி.
விடிந்ததும் உள்ளே இருந்தேனடி-என்னும்
வேறெண்ணம் இன்றிக் களித்தேனடி.

தேடி இரவில வேய்ங்குழலின்-நாதம்
தேனாய் எங்கெங்கும் பெருகுதடி.
வீடு மறந்தேன் நெஞ்சினிலே-தொல்லை
வேதனை முள்ளொன்று தைத்ததடி.

எந்த வழியென்று கண்டவரும்-இந்த
ஏழைக் கதனை உரையாரோ?
அந்த வழியில் விரைந்திடுவேன்-அவன்
ஆசை முகம் தேடிச் சென்றிடுவேன்.

என்றன் சிறுமலர் ஏந்திச் சென்றே-அவன்
இன்மலர்ப் பாதத்தில் வைத்திடுவேன்
என்றன் நெஞ்சம் அவன் வேய்ங்குழலும்-ஒன்றி
ஏகமதாச் சென்றணைத்திடுவேன்.

ஓர் உயிருக்கும் மற்றோர் உயிருக்கும் இங்கே உலகத்தில் உள்ள அன்பு என்ற உறவுக் கயிற்றைப் பிடித்துக் கொண்டே, உயிர்களுக்கெல்லாம் உயிரான தத்துவத்தைத் தொட்டுவிடலாம். மனித உறவுகளைத் துறந்து அன்று, அவற்றின் மூலமாகவே விடுதலையைப் பெறலாம் என்று ஸந்யாஸியின் மனத்தில் எண்ணம் அரும்புவது போல அவன் பேசுகிறான்:

'நான் எடுத்த பிறவிகள் எத்தனையோ! ஆனால் ஒரே ஒரு தடவைதான், இன்று போல அந்திப் பொழுதொன்று என் வாழ்க்கையில் மலர்ந்தது. அன்று, பாட்டும் காதலும் என் வாழ்க்கைக் கலத்தை நிறைத்து வழிந்தோடின. யாரோ ஒருத்தி என்னருகில் அப்போது இருந்தாள். அவள் ஒளிமுகம், இதோ மறையும் மாலை வெள்ளியின் கடைசிலே தெரிகிறது.'

யாரைப்பற்றி இந்த ஸந்யாஸி பேசுகிறான்? இப்போது பாலைவனமாக வறண்டுள்ள இவன் நெஞ்சிலும், என்றோ ஒரு நாள் அன்பென்னும் பச்சைப் பசுங்கொடி பூத்ததோ? அதைத்தான் இப்போது எண்ணுகிறானோ?

வாஸந்தி என்ற சிறுமியின் நினைவு அவனுக்கு வருகிறது. அவளுடைய துயரம் நிறைந்த கருவிழிகள், கண்ணீர்த் திரையூடே நீண்டு, அகன்று, அவன் மனத்தில் எழுகின்றன. 'அவள் எங்கே இருக்கிறாளோ? இப்போது என் முன்னே உள்ள இந்த நட்சத்திரத்தை, தன் குடிசை வாசலில் அமர்ந்து, மாலைப் பொழுதின் யானாத் தனிமையின் வழியே, அவளும் பார்த்துக் கொண்டிருப்பாளோ? ஆனால் நட்சத்திரம் மறையும், மாலை கழியும், இரவு முதிரும், அவள் கண்கள் தாமாகவே மூடிக் கொள்ளும், கண்ணீர் வற்றிப் போகும். விம்மல், தூக்கத்தில் அடங்கிவிடும். இல்லை, திரும்பிப் போக மாட்டேன். உலகமென்னும் கனவு தன்போக்கில் வடிவாகட்டும். நான் போய் அதன் போக்கிலே சுழன்று, புதிய பிரமைகளைப் படைத்துக் கொள்ள வேண்டுமா? வேண்டாம். பார்ப்பேன், கருதுவேன், அறிவேன், அவ்வளவுதான்.'

பார்ப்பதற்கும், கருதுவதற்கும், அறிவதற்கும், வாழ்க்கை நிகழ்ச்சிகள் சில, ஸந்யாஸியின் முன் நடைபெறுகின்றன.

முதல் நிகழ்ச்சி:

கந்தல் ஆடை உடுத்தி ஏழைச் சிறுமி ஒருத்தி தன் தந்தையைத் தேடிக் கொண்டு ஸந்யாஸி இருக்கும் இடத்துக்கு வருகிறாள். அவளுடைய களங்கமற்ற முகம் ஸந்யாஸிக்கு வாஸந்தியின் நினைவைக் கொண்டு வருகிறது. அவள் தந்தை ஒரு விறகு வெட்டி; காட்டிலே சுள்ளி பொறுக்கி விற்று, வயிறு வளர்ப்ப

வன். என்றாலும், அவனுடைய ஏழை மகள் அவனிடம் வைத்திருக்கும் அன்பைப் பார்த்து ஸந்யாஸி வியப்படைகிறான். இந்தச் சிறுமி தன்னை அப்பா என்று அழைக்கலாகாதா என்ற ஏக்கத்தோடு, அவனுக்கு ஆசி கூறி, வழியனுப்புகிறான் ஸந்யாஸி.

இரண்டாம் நிகழ்ச்சி :

நாளெல்லாம் தன் குடும்பத்துக்காக உழைக்கும் தாய் ஒருத்தி வருகிறாள் இரு குழந்தைகளோடு. கணவனும், அவனுடைய வயதான தாயும், நான்கு மக்களும் அவளுக்கு இருக்கிறார்கள். வறுமையில் உள்ள குடும்பம். ஆனால் இந்த ஏழைத்தாயின் அன்பு குடும்பச் சுமையைப் பெருமையோடு தாங்குகிறது. அன்பின் மற்றொரு சாட்சியாக, அவள் ஸந்யாஸிக்குத் தென்படுகிறாள்.

மூன்றாம் நிகழ்ச்சி :

இரு நண்பர்கள் பாதை வழியே ஒன்றாக நடந்து வந்து, பிரியப் போகிறார்கள். 'ஒன்றாக இருந்த போது எவ்வளவு இனிமை, இப்போது பிரிய வேண்டி இருக்கிறதே' என்று ஒருவன் கவலைப்படுகிறான். மற்றவன் சொல்கிறான் : 'பிரிவு என்பது தவிர்க்க முடியாத நியதி. என்றாவது ஒருநாள் பிரியத்தானே போகிறோம். நாம் ஒன்றாக இருந்தது ஏதோ கண நேரந்தான். என்றாலும், அதை எண்ணி மகிழ்வோம். கண நேரத்திற்காவது நம்மை ஒன்றாக இருக்கும்படி விட்ட விதியை, ஒன்றாகச் சேர்த்த அந்த வான் மீன்களை வாழ்த்துவோம்.'' சாவு என்ற பிரிவைக் கூட மதியாமல் உதறி எறியுமே நட்பென்னும் அன்பு. இந்தப் பிரிவு அதற்கு, ஒரு பொருட்டா என்ற குறிப்பு சொற்களில் தோன்றுகிறது. ஸந்யாஸிக்கு 'அன்பு இவ்வளவு உடையதா?' என்ற எண்ணம் வருகிறது. அன்பு என்பதுதான் உண்மையான விடுதலையோ? பிறர் என்ற எண்ணமில்லாமல், பிறர்க்காகவே வாழும் தியாகந்தான் உண்மையான துறவோ? இப்படியெல்லாம் ஸந்யாஸி எண்ணுகிறான். என்னவோ! இரவு இருள்கிறது. அவன் பேசுகிறான், வாஸந்தியைப் பற்றி எண்ணி, அன்பினால் கனிந்த உள்ளத்தோடு, மனித உறவையே விடுதலைச் சாதனமாகக் கருதத் தலைப்படும் ஞானத்தோடு, பேசுகிறான் :

'இரவு இருள்கிறது. வெறிச்சோடிய பாழாய் முதிர்கிறது. எல்லோராலும் கைவிடப்பட்ட ஒரு பெண்ணைப் போல், அசைவற்று ஒடுங்கிக் கிடக்கிறது. இந்த நட்சத்திரங்கள் இரவுப் பெண்ணின் கண்ணீர், கனற்பொறிகளாய் மாறிய கண்ணீர். ஐயோ, குழந்தாய், உன் சிறு உள்ளத்தின் துயரம் என் வாழ்வு முழுவதையும், என் இரவுகள், அனைத்தையும் சோக மயமாக்கி விட்டதடி! உன் சிறு கை என்னை அன்போடு தொட்டதே, அதை இந்தக் காற்று என்னைத் தொடும்


கயிலை மகாசந்நிதானமவர்களுக்குக் கனகாபிஷேகம்

கருணைமாநிலம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குரு மகாசந்நிதானமவர்கள் நாட்டுக்கும் மொழிக்கும் சமயத்துக்கும் ஆற்றிவரும் நல்லறப் பணிகளைப் பாராட்டுவதற்காகவும் நன்றியைத் தெரிவிப்பதற்காகவும் அவர்களுக்குக் கனகாபிஷேகம் செய்விப்பதென மாயூரத்தில் அண்மையில் கூடிய தஞ்சை, திருச்சி, தென்னார்க்காடு, மதுரை, சென்னை, திருநெல்வேலி, கோவை மாவட்டங்களின் பிரமுகர்கள் கூடிய சிறப்புக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. இவ்விழாவை நடத்துவதற்கு ஒரு பாராட்டுக்குழு அமைக்கப் பட்டிருக்கிறது. இதற்குத் தலைவராக சென்னை உயர்நீதி மன்ற முன்னை நீதிபதி உயர் திரு என். சோமசுந்தரம் பிள்ளை அவர்களையும், சர் பி. டி. இராஜன் எம். எல். ஸி., உயர்திரு ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை, பி.ஏ., எம். எல். ஸி. ஆகியோரைத் துணைத் தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. மற்றும் செயலாளர், பொருளாளர், உறுப்பினர் கொண்ட நிர்வாகக் குழுவும் அமைக்கப் பட்டிருக்கிறது. இவ்விழாவை நடத்துவதற்கு உடனடியாக ரூ. 25 000 நன்கொடை வாக்களிக்கப் பட்டிருக்கிறது.



பொது மக்கள் அனைவரும் இந்தப்பணியில் ஈடுபட்டு நிதி உதவுவதுடன் இவ்விழா எல்லா வகையிலும் சிறப்புற்றுத் திகழ உதவும்படி பொது மக்களை இக்கூட்டம் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறது. பொது மக்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுமென்று அவர்களை இக்கூட்டம் வேண்டிக் கொள்கிறது. இதற்கு நிதி உதவ விரும்பும் அன்பர்கள் அடியிற்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகிறார்கள்

உயர்திரு பி. திருஞானம் பிள்ளை, பி.ஏ., பி. எல்.
பட்டமங்கலத் தெரு, மாயூரம், தஞ்சை மாவட்டம்.



" தலை நோக நின்றாலும் உனக்கு என் பெண்ணைத் தரமாட்டேன்!"

போது அதன் மெல்லிய அசைவிலே காண்கிறேன். உன் பரிசம் இன்னும் என் நெற்றியிலே உள்ளது. அழியவில்லை. உன் கண்ணீர் இந்த ஏழைத் துறவியின் நெற்றியில் இருக்கிறது. உலரவில்லை. உன்னை விட்டு விட்டு ஓடி வந்தேனே. அப்போது உன் துயர விம்மல்கள் என்னைத் தொடர்ந்து வந்தன. அவை என் நெஞ்சில் இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கின்றன. சாகும் வரையில் அவற்றை நான் சுமந்திருப்பேன்.'

இதோடு நாடகத்தின் மூன்றும் அங்கம் முடிவடைகிறது. நான்காம் அங்கம் அளவிலே மிகச் சிறியது. ஸந்யாஸி தன் துறவைத் துறக்கிறான் :

'என்னுடைய துறவு தொலையட்டும். நான் செய்த வாக்குறுதிகளெல்லாம் போகட்டும். என் தண்டு, என் கமண்டலம் இவற்றை இதோ உடைத்தெறிகிறேன். காலக் கடலைக் கடந்து செல்லும் வாழ்வென்னும் மாட்சிமைக் கப்பல், அதில் எனக்கு இடம் கிடைக்கட்டும். அதில் பயணம் போகும் காலாந்தரிகளோடு கூடி நானும் போவேன் : என்ன மடையனடா நான் ! சூரியனையும் சந்திரனையும் ஒதுக்கிவிட்டு, மின்மினிப் பூச்சியின் ஒளியைத் துணைக் கொண்டு வழி நடந்தேன்! வானத்தில் பறக்கும் பறவை சூன்யத்தை நாடியா செல்கிறது ? இல்லை. இங்கே இந்த மகத்தான பூமிக்குத் திரும்பிவரவே உயரப் பறக்கிறது. நான் விடுதலை பெற்றேன்; ஒன்றுமில்லாத சூனியத்திலிருந்து. வேண்டாம், வேண்டாம் என்று அனைத்தையும் ஒதுக்கி வேலே, அந்தத் தளையிலிருந்து நான் விடுபட்டேன். பொருள், வடிவம், நோக்கம் இவற்றைத் துறந்தன்று, இவற்றின் நடுவில் நின்றே விடுதலை அடைந்தேன். வரம்புடையதுதான் உண்மையில் வரம்பில்லாதது. கண்டமே அகண்டம்; அன்பே அதன் உண்மையை உணரும் ஆற்றல். வாஸந்தி, வாஸந்தி, எங்கே இருக்கிறாய்? இந்தப் பிரபஞ்சத்தின் உயிர்த்தத்துவம் நீதான். உன்னை நான் விடமுடியாது. எங்கே இருக்கிறாய்?'

வாஸந்தி என்ற அன்பு வடிவத்தைத் தேடிக்கொண்டு, அதுவே விடுதலைக்கு வழிகாட்டி என்ற உறுதியோடு ஸந்யாஸி புறப்படுகிறான்.

உலகத்தில் அவன் நிலையை உணர்வார் இல்லை. முதியவன் ஒருவன் வருகிறான்.

'வாஸந்தி, ரகுவின் மகள். அவள் எங்கே?'

'அவள் எங்கேயோ ஊரை விட்டுப் போனாள். அந்த மட்டுக்கும் நல்லது தான். அவள் எங்கே போனால் என்ன?' என்கிறான் அந்தக் கிராமத்து முதியவன்.

கிராமத்து மக்கள் பலர் வருகிறார்கள்.

'வாஸந்தி, ரகுவின் மகள். அவள் எங்கே, யாருக்காவது தெரியுமா?'

'எங்கேயோ போனாள்.'

'எங்கே ?'

'யார் கண்டது ?'

'ஒன்று நிச்சயம். எங்கள் இளவரசர் அவளைக் கலியாணம் கட்டிக்கொள்ளப் போவதில்லை.'

சிரித்துக்கொண்டு போகிறார்கள். தாய் ஒருத்தி குழந்தையோடு வருகிறாள்.

'சாமி, இந்தக் குழந்தைக்கு உடம்பு சரியில்லை. ஏதாவது மந்திரம் போட்டுப் பாருங்க, சாமி.'

ஸந்யாஸி சிரிக்கிறான் :

'மகளே, நான் ஸந்யாஸி இல்லை.'

'பிறகு ?'

'நான் தேடிக்கொண்டு போகிறேன்.'

'யாரை?'

'நான் இழந்த உலகத்தை. உனக்கு ரகுவின் மகளைத் தெரியுமா? அவள் எங்கே?'

'ரகுவின் மகளா, அவள் இறந்து போனாளே !'

'இறந்து போனாளா? இருக்கவே இருக்காது.'

'அவள் போனால் உங்களுக்கென்ன, சாமி.'

'அவள் சாவு எனக்கு மட்டுமா, எல்லோருக்குமே சாவு.'

'எனக்கு விளங்கவில்லையே' என்கிறாள் அந்தத் தாய். ஸந்யாஸி சொல்கிறான். அழுத்தமாகச் சொல்கிறான் :

'அவள் ஒரு நாளும் இறந்திருக்க முடியாது !'

நாடகம் இதோடு முடிவடைகிறது. சத்தியத்தைக் காண்பதற்கு வழி அன்பு தான். அதுவே மனிதனை தெய்வ நிலைக்கு உயர்த்துகிறது. அன்பின் வழியது உயிர் நிலை; அது மறைந்தால் உயிரே மறைந்து விடும். அன்பே சாதனம், அதுவே சாதனை, 'அன்பே சிவம்' என்றெல்லாம் நம்முடைய சிந்தை எண்ணிக்கொண்டே போகிறது. இதுவே நாடகத்தின் வெற்றி.


அவசரச் சாப்பாடு அவர் வேலையைக் கெடுத்திருக்கும்...
மிஸ்டர் ராமன், சீக்கிரம் சாப்பாட்டை முடியுங்கள். ஒரு அவசரமான வேலை இருக்கிறது!
இதோ முடித்து விடுகிறேன்!
அவசரத்தில் சாப்பிட்டதால் வயிறு சரியில்லை. இந்த வேலையோ மிகவும் முக்கியமானது.
ஈனோ சீக்கிரத்தில் குணமளிக்கும்.
ஆஹா! என்ன புத்துணர்ச்சி! ஈனோ எவ்வளவு வேகமாக வேலை செய்கிறது!
பிறகு
சபாஷ், மிஸ்டர் ராமன்! வேலையை நொடிப் பொழுதில் முடித்தீர்களே!
ஈனோ அற்புதமானது!
ஒரு தேக்கரண்டி ஈனோ ஒரு டம்ளர் ஜலத்தில் போட்டால் உடனே பொங்கி கரைந்து நேர்த்தியான, புத்துணர்ச்சியளிக்கும் பானமாக மாறும். தளதளக்கும் ஈனோ 'ப்ரூட் ஸால்ட்' இதந்தையளித்து சமனமூட்டக்கூடியது. வயிற்றுக் கோளாறுகளிலிருந்து உடனடியாக நீடித்த நிவாரணமளிக்கிறது. ஜீரணசக்தியை சரியாக்குகிறது.
ENO
'FRUIT SALT'
ஈனோ அவருக்கு சீக்கிரத்தில் குணமளித்தது
ஈனோ
'ப்ரூட் ஸால்ட்'
'ஈனோ', 'ப்ரூட் ஸால்ட்', என்ற வார்த்தைகள் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்குகள்
பீச்சம் (இந்தியா) பிரைவேட் லிமிடெட்

யுத்த கீதம்

வங்காளி நாவல்:
தேபேஷ்தாஸ்

தமிழாக்கம்:
ஸேனு

அத்தியாயம் 16

டில்லியிலே செங்கோட்டையில்....

நேதாஜி இதன் உச்சியில்தான் மூவர்ணத் தேசியக் கொடியை ஏற்ற வேண்டுமென்று முயன்றார். அங்கேயே தேவல் சிம்மனும் இப்போது வந்திருந்தான். அவனுடைய பட்டாளத்தார், "டில்லி சலோ!" 'டில்லி சலோ!'' என்று கோஷமிட்டுக் கொண்டு வர முயன்ற டில்லிதான் அது! ஆனால் வெற்றி பெற்ற சுதந்திரப் படை வீரனாக அவன் அங்கே வரவில்லை. மன்னருக்கு எதிராகப் போர் புரிந்த பகைவன் என்ற முறையில் அங்கே கைதியாகக் கிடந்தான். வழக்கு ஒத்திப் போடப் பெற்றதால் அப்போதைக்கு அவன் உயிர் தப்பியது. ஆனால் இதற்குள் இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த மூன்று பெரிய அதிகாரிகளை இராணுவக் கோர்ட்டார் விசாரிக்கத் தொடங்கி விட்டார்கள். ஷா நவாஸ், ஸைகல், தில்லன் இவர்களுடைய விசாரணையைப் பொறுத் திருந்தது தேவல்சிம்மனின் எதிர்காலம். மொத்தத்தில் இவர்கள் எல்லாருடைய குற்றமும் ஒன்றுதான்.

இராணுவக் கோர்ட்டார் அந்த மூன்று பெரிய இந்திய தேசிய இராணுவ அதிகாரிகளையும் எப்படியாவது குற்றவாளிகள் என்று நிரூபிப்பதில் மும்முரமாக இருந்தார்கள். ஆயுள்பரியந்தம் தீவாந்தர சிட்சையும் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று விதித்து விட்டார்கள். தலைமைச் சேனாதிபதி ஆகின்லெக்கிடம் அதைப் பரிசீலனைக்கு அனுப்பியிருந்தார்கள். அவர் கையெழுத்திட்டதும் தண்டனை ஊர்ஜிதமாகிவிடும்.

இதற்குள் பாரதநாடு முழுதும் பெரிய கிளர்ச்சி மூண்டுவிட்டது. பாரத நாட்டின் விடுதலைக்காக வெளி நாட்டில் நடக்கும் போரில் நேதாஜி தலைமை வகித்திருந்தார். இந்திய தேசிய இராணுவப் படைவீரர் மணிப்பூர், நாகா மலைப் பிரதேசத்தை முதலில் சுதந்திரப் பிரதேசமாக ஆக்குவதில் மும்முரமாக ஈடுபட்ட செய்தியை அறிந்ததும் அடிமையாகக் கிடந்த பாரதத்தில் எல்லாருமே உற்சாகத்திலும் மகிழ்ச்சியிலும் மூழ்கினார்கள். இந்த உணர்ச்சி வெள்ளத்தினால் பிரிட்டிஷ் சிம்மாசனத்துக்கு ஆட்டம் கண்டு விட்டது!

இந்திய தேசிய இராணுவம் யுத்தத்தில் தோற்றுவிட்டது. ஆனால் இந்தத் தோல்வியே அதற்கு வெற்றியாக முடிந்தது.

அந்த இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த தேவல்சிம்மன்தான் இப்போது செங்கோட்டையின் ஒரு மூலையில் சிறைப்பட்டுத் தன் எதிர்காலம் எப்படி இருக்குமோ என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தான்.

1946ம் ஆண்டு ஜனவரி மாதம் மூன்றாம் தேதி. செங்கோட்டைக்கு வெளியே வெற்றிக் கூச்சல் வானத்தைப் பிளந்தது. என்ன சேதியோ, யார் கண்டார்கள்! நேதாஜியின் படையே போரில் வெற்றி பெற்று வந்தாலொழிய இந்த மாதிரி வெற்றிக் கூச்சலுக்கு இடமே இல்லை. இப்படி 'ஜெய் ஹிந்த்' கோஷம் கேட்பதற்கு அதைத் தவிர வேறு காரணம் இருப்பதாகத் தோன்றவில்லை, கைதியாக இருந்த தேவல்சிம்மனுக்கு.

சுவரில் மூலையடித்துக் கிராதிக் கதவுடன் சங்கிலியால் இணைத்து வைத்திருக்க கதவிலுள்ள பூட்டுத் திறந்தது. காவல் தலைவன் உள்ளே நுழைந்து யாரோ மூன்றுபேர்கள் தேவல்சிம்மனைப் பார்க்க அனுமதி பெற்று வந்திருப்பதாகத் தெரிவித்தான்; அப்படி அவர்களைப் பார்க்கச் சம்மதமானால் ஒவ்வொருவராக அவர்களைப் பார்க்க அனுமதிப்பதாகவும் சொன்னான்.

தேவல்சிம்மன் அந்தக் காவல் தலைவனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்து, "மூன்று பேரா?" என்று கேட்டான்.

"ஆம்!" என்று கூறி வெளியார் வந்து கைதிகளைப் பார்க்கும் அறையில் அவனை அழைத்துப் போனான் காவல் தலைவன்.

முதலில் மிதா அவனை எதிர்கொண்டழைத்தாள். தேவல்சிம்மனின் கையைப் பிடித்துக் கொண்டு, "கடவுள் நல்லதே ஏற்படும்படி அருள் புரிந்துவிட்டார். தேவல்பாபு! நீங்களும் விரைவிலேயே விடுதலை ஆவீர்கள்!" என்றாள்.

விடுதலையா? ஆமாம். அதோ அந்த 'ஜெய் ஹிந்த்' கோஷம் அவனுடைய காதில் விடுதலை மந்திரத்தை உபதேசிப்பதுபோல் இருந்தது. நிமிர்ந்து நின்று அவன் தெளிவற்ற குரலில், "நேதாஜி வாழ்க! சுதந்திர இந்தியா வாழ்க!" என்று கூறினான்.

"ஆமாம். உங்களுக்குத்தான் வெற்றி! நாடு முழுதும் எல்லாரும் கூடி உங்களை

விடுதலை செய்யும்படி கோருகிறார்கள். காந்திஜி, பண்டித நேரு இவர்களுடைய கோரிக்கையை மீறித் தண்டிக்கும் துணிவு இன்று பிரிட்டிஷாருக்கு இல்லை. ஷா நவாஸ், ஸைகல், தில்லன் இவர்களுக்கு இட்ட தண்டனையை ஆகின்லெக் ரத்து செய்து விட்டார். உங்களையும் நிச்சயமாக விட்டு விடுவார்கள்; நாளைக்குள்ளேயே நீங்கள் விடுதலையாகி விடுவீர்கள்!'' என்றாள்.

''மிதா! நீ எப்படி இங்கே வந்தாய்? நான் விடுதலையாகலாம்; இருந்தாலும் அவர்கள் உன்மேல் சந்தேகப்படுவார்களே?'' என்றான் தேவஸிம்மன்.

''இனி அந்தப் பயம் இல்லை. அவ்வளவு ஆபத்திலும் தலைகொடுத்துப் போர்முனையில் இருந்ததால் அவர்கள் பிரத்தியேக அநுகூலமாக என்னை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். என்னைப் பெரிய அதிகாரியாகவும் ஆக்கியிருக்கிறார்கள்.''

''மிகவும் சந்தோஷம், மிதா! நீ டில்லிக்கு வந்தது கர்னல் ராய் சம்பந்தமாகத்தானே? அவர் அப்படி என் பாகமாகத் திரும்பி விட்டதால் ஆபத்தில் சிக்கிக் கொண்டாரா, என்ன?'' என்று கேட்டான் தேவஸிம்மன்.

அப்போது மிதா ''அவரைப் பற்றி அப்புறம் பேசலாம்'' என்றாள்.

''ஏன்? அவரைப் பற்றி உன்னிடம் பேசித்தான் ஆகவேண்டும். அவ்வளவு துணிச்சலும் அத்தனை புத்தி நுட்பமும் உள்ளவரைப் பற்றித்தான் உன்னிடம் பேசவேண்டும். உன் முயற்சியால்தானே அவர் வழக்கின் போக்கையே அடியோடு மாற்றிவிட்டார்!'' என்றான்.

மிதா சும்மா இருந்தாள்.

ஆனால் தேவஸிம்மனால் சும்மாவிருக்க முடியவில்லை. ''இதோ பார், மிதா! ஒரே நிமிஷத்தில் அப்படி ஒரு மாறுதல் உன்னால்தான் அது ஏற்பட்டது. அவருடைய மனசில் நீ எவ்வளவு சிறப்பாக இடம் பெற்றிருக்கிறாய் என்பதற்கு அதுவே நிச்சயமான அறிகுறியாயிற்றே. இப்போது என் வாழ்த்துக்களைத் தெரிவிக்கலாமா?'' என்றான்.

மிதாவின் முகம் வெளுத்து விட்டது.

தேவஸிம்மன் மட்டும் பேசிக்கொண்டே போனான்: ''நீ வீரப் பெண்மணி, மிதா! எனக்குத் தண்டனை-மரண தண்டனை கிட்டியிருந்தாலும் நீ எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு என்றாவது ஒருநாள் சுகமாக வாழ வேண்டும் என்றுதான் கோரினேன். இதோ எனக்கு விடுதலையே கிடைக்கப் போகிறது! இனி கவலையில்லாமல் நீ நிம்மதி



யாக வாழ வேண்டும். நீங்கள் இருவரும் நீடூழி வாழவேண்டும், மிதா!" என்றான்.

மிதாவின் கண்களிலிருந்து நீர் வழிந்தது.

"இதென்ன, மிதா! அப்படியானால் நான் எண்ணினபடி நடக்காதோ?" என்றான் தேவல்சிம்மன்.

"உங்களுக்கு அதனால் இன்பம் இருக்குமா? அதைப் பறித்துவிட்டு என் கனவு நிறைவேறித்தான் என்ன பலன்? நாங்கள் குடித்தனம் நடத்தித்தான் என்ன இலாபம்?" என்றாள்.

"இதில் என்ன தவறு? இந்த உலகத்தில் எல்லாருடைய ஆசையும் நிறைவேறி விடுகிறதா, என்ன? ஆகவே, 'எல்லாருமே ஒரேமாதிரி' இன்பமாக வாழ்வதென்பது நடக்காத காரியம்! 'அவர்மேல் காதல் கொண்டேனே, அது ஒன்றே போதும், பரம திருப்தி' என்றாயே; உன்னுடைய காதல் எனக்குக் கிட்டாவிட்டாலும் பரவாயில்லை; எனக்கு இதுவரையில் கிட்டியதே போதும். அன்று நீ சொன்னதை நான் மறக்கவே மாட்டேன்."

"அது இருக்கட்டும்; நீங்கள் இன்னும் இந்தச் செங்கோட்டையில் சிறைப் பட்டுத்தானே கிடக்கிறீர்கள்!...மற்ற விவரங்களெல்லாம் வெளியில் வந்த பிறகு பேசிக் கொள்ளலாமே...வெளியே இன்னும் இரண்டு பேர்கள் உங்களைப் பார்க்கக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒருத்தி உத்தமா; இன்னொருத்தர்..."

மிதா மௌனமாக இருக்கவே தேவல் சிம்மன் அந்த ஆசாமி யார் என்று ஊகித்துக் கொண்டான். "கர்னல் ராய் தானே? அதைச் சொல்லத் தயங்குவானேன், மிதா!" என்றான்.

மிதா முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள். அடுத்த கணம் அவள் முகத்தில் ஓர் ஒளி படர்ந்தது. "உங்கள் வழக்கை நடத்தியதிலிருந்து அவருடைய வாழ்வே புதுவிதமாக மாறிவிட்டது! சீமை மோகம், சீமை எஜமான் உத்தரவு, இராணுவ உடை ஒழுங்கு இவை எல்லாவற்றையும் விடத் தேசந்தான் உயர்வானது என்று அவர் தெரிந்துகொண்டார். உண்மையில் உங்களைப் பார்த்த பிற்பாடுதான் அவர் தாம் இன்னார் என்பதை உணர்ந்தார். இதிலே எனக்கு எவ்வளவு இன்பம், எவ்வளவு மதிப்பு தெரியுமா?" என்றாள்.

"எனக்கும் இதனால் எவ்வளவு பெருமை ஏற்பட்டிருக்கிறது, பார்! அதுவும் என் அதிர்ஷ்டந்தான். உன்னிடமிருந்த மதிப்பு காரணமாகத் தானே என்னிடமும் அவருக்கு மதிப்பு ஏற்பட்டது!" என்றான் தேவல்சிம்மன்.

மிதா, "அவர் வேலையை விட்டாயிற்று. ஹைகோர்ட்டில் சேர்ந்து தொழில் நடத்துவதாக இருக்கிறார். நம் நாட்டுத் தலைவர்கள் எல்லாரும் அவருடைய எதிர்காலம் பிரமாதமாக இருக்கும் என்கிறார்கள்" என்றாள்.

தேவல்சிம்மன் சிரித்துக் கொண்டே, "என்னையும் நான் வாழ்த்திக் கொள்ள வேண்டியதுதான். நான்தானே அவருடைய முதல் கட்சிக்காரன்" என்றான்.

நேரம் ஆகிக்கொண்டிருந்தது; காவல் தலைவன் சற்றுத் தொலைவில் நின்றிருந்தான். மிதா உடனே, "எங்கள் இரண்டு பேருக்கும் உத்தமா உங்களை எப்படி உள்ளூற நேசிக்கிறாள் என்பது தெளிவாகத் தெரிந்து விட்டது. சாட்சியம் சொல்லும்போதே அது தெரிந்தது. இல்லாவிட்டால், அப்படி மூர்ச்சையாகி விழுவாளா? தில்லிக்கு வந்ததும் கவனித்தேன். தினமும் அவள் இந்தச் செங்கோட்டையைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டிருக்கிறாள். ஏன் என்று சொல்லவும் வேண்டுமா?" என்றாள்.

தேவல்சிம்மனின் முகத்தில் ஒரு கடுகடுப்புத் தென்பட்டது. "சரி; சரி; பிறத்தியாருக்காகவும் நீ வக்காலத்து வாங்கிப் பேசாதே!" என்றான்.

பின்னால் காவல் தலைவன் சற்றே இருமும் சத்தம் கேட்டது. 'நேரமாகிறது, புறப்படுங்கள்' என்பதுதான் அதற்கு அர்த்தம்.

மிதா புறப்பட்டு விடுவாள். தேவல் சிம்மனின் வாழ்க்கையிலிருந்து இதோ கடைசி முறையாக அவள் போய் விடுகிறாள்.

இந்த இராணுவ விசாரணையிலிருந்து அவன் மீண்டால் - மீள முடியும் என்பதை மிதாதான் தெளிவுபடுத்தி விட்டாளே - என்ன நடக்கும்? ... ஐயோ! அதுவும் ஒரு வாழ்வா? உயிரோடு இருந்தும் மரணதண்டனை அநுபவிக்கிற மாதிரிதான்!

ஆனால் இப்போது அவளுக்குச் சிரித்த முகத்தோடு விடை தரவேண்டும். அதோ அந்தக் கிராதிகளுக்கு அப்பால் இருக்கும் அறையில் கர்னல் ராய் காத்திருப்பாரே! அவரெதிரில் மிதா முகம் வாடித் திரும்பினால்-? அது தேவல்சிம்மனுக்குப் பெருந் தோல்விதானே? அவன் தோற்றிருக்கலாம்; ஆனால் அதைப் பொருட்படுத்தக் கூடாது. சிரித்த முகத்தோடு அந்தத் தோல்வியை ஏற்று மிதாவுக்கு அவன் விடை தரவேண்டும்.

வீரனுக்கு அதுதானே அழகு! தேவல் சிம்மன் தலை நிமிர்ந்து நின்றான்.

ஏகரே வேஷ்டியும் ஜிப்பாவும் அணிந்து கொண்டு உள்ளே வந்த அவர்

தாம் ஒரு சமயம் தற்கால இராணுவ உடையுடன் ஒழுங்காக விளங்கிய கர்னல் ராய் என்று சொல்லவே முடியாது. அப்படி இருந்தது அவர் தோற்றம்! ஆனால் முன் போலவே தன்னம்பிக்கையுடன் அவர் வந்து நின்றார். அவருடைய நடத்தையும் பாணியும் முன்மாதிரியே இனிமையாகத்தான் இருந்தன. பெரிய மனிதர் என்ற செருக்கில்லாமல் பண்பாடும் பணிவும் உள்ளவராகவே அவர் காட்சியளித்தார்.

ராய் மிகவும் மெதுவான குரலில், "தங்களிடம் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கவே வந்தேன்" என்றார்.

தேவல்சிம்மன் வியப்புடன், "என்னிடம் நன்றி தெரிவிக்க வந்தீர்களா? நான் அல்லவா என்னை உயிர் தப்ப வைத்ததற்காக உங்களுக்கு என்றென்றும் நன்றிசெலுத்தவேண்டும்!" என்றான்.

"இல்லை; இல்லை. உங்களுக்கு நான் சொல்வது புரியவில்லை. நீங்கள்தான் என் கண்ணைத் திறந்தீர்கள். பெறுவதற்கரிய செல்வத்தை உங்களால்தான் பெறக் கொடுத்து வைத்தேன்!"

"உங்கள் வெற்றி இன்னும் பெரிய பெரிய வெற்றிக்கு வழிகோலும்படி ஆண்டவனை வேண்டிக் கொள்கிறேன். நம் நாடு இந்த 'ஜய் ஹிந்த்' என்ற ஜயத்வனியை என்றென்றும் மறக்காமல் இருக்க வேண்டும்" என்றார்.

"இதற்கு உங்களைத்தான் வாழ்த்த வேண்டும். உங்கள் சொந்த நலனையும் கருதாமல் நீங்கள் எனக்காக மட்டுமன்றிச் சுதந்திர இந்திய இராணுவம், நம் நாடு எல்லாவற்றுக்காகவுமே உழைக்கிறீர்கள்."

தன்னலம் கருதாமல் உழைத்ததைப் பற்றி அவன் குறிப்பிட்டபோது அவருக்கு மிதாவைப் பற்றித்தான் உடனே நினைவு வந்தது. இராணுவப் பதவியை அவர் விட்டு விட்டார். ஆனால் அதையும் விட இன்னும் உயர்வான பொருள் கிடைத்து விட்டது அவருக்கு. மிதா அவருக்குக் கிடைத்து விட்டாளல்லவா? 'தேவல் சிம்மன்தான் உண்மையிலேயே தன்னலமற்றவர்; அவர் எவ்வளவு சகஜமாக அத்தனை கஷ்டத்தையும் பொறுத்துக்கொண்டு, தோல்வியை ஒப்புக்கொண்டு விலகி நிற்கிறார், பாருங்கள்!' என்று மிதாவே தெளிவாகச் சொல்லியிருந்தாள்.

ஆகவே, தேவல்சிம்மன் நன்றாக வாழ வேண்டும் என்பதுதான் அவருடைய கோரிக்கை. அதைச் சொல்லத்தான் அவர் இங்கே வந்திருந்தார். தேவல்சிம்மனின் பெருமை தெரிந்ததால்தானே மிதா அவருக்குக் கிடைத்தாள்! ஆகவே, அவனுக்கு அமைதி ஏற்படுவதையே அவர் விரும்பினார்.



பையன்: காலைத் தவறி மிதித்து விட்டு மன்னிக்கணும் என்று சொன்னேன். மரியாதைக்காக அந்தப் பெரியவர் ஓர் ஆப்பிள் கொடுத்தார்.

தகப்பனார்: அப்புறம்?

பையன்: எனக்கு இன்னொரு ஆப்பிள் வேண்டும் போல் இருந்தது. அதற்குள் அவர் காலைமடக்கிக் கொண்டு விட்டார்!

சற்றே தயங்கி விட்டுப் பிறகு மெதுவாக, "இன்னொருத்தியும் வந்திருக்கிறாள் உங்களைப் பார்க்க. அவளுடைய நிலையை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்; அவ்வளவுதான்" என்றார்.

தேவல்சிம்மன் மிதாவின் மனம் புண்படும்படி சற்று எரிச்சலுடன் பேசினாலும் ராயிடம் அப்படிப் பேச முடியுமா? ஆகவே, மௌனமாக நின்றான்.

ராய்க்கும் அவன் மன வேதனை புரிந்தது. ஆனாலும் அவர் ஒன்றும் நேராதது போல் அவனை உள்ளூற வாழ்த்தி விட்டு அங்கிருந்து வெளியேறினார்.

அடுத்த கணம் உத்தரா அவனெதிரே வந்து நின்றாள். அவளிடம் என்ன பேசுவதென்றே தேவல்சிம்மனுக்குப் புரியவில்லை. அவளை 'மாதா ஹரி'யாக ஆக்கிவிட வேண்டுமென்ற கற்பனையில் அவன் ஒரு சமயம் ஈடுபட்டிருந்தான். ஆனால் ஒரு நோக்கம், ஒரே கருத்து இவற்றோடு ஒரு வேலையில் இறங்கினால் ஒருயிர் ஆகிற நிலை ஏற்பட்டு விடும் என்பதை யாரும் இதுவரை தேவல்சிம்மனுக்குத் தெரிவித்ததில்லை. ராஸ நாட்டியத்தின்போது பதிவு செய்த பேச்செல்லாம் அவனுக்கு இப்போது நினைவுக்கு வந்தன. ஓர் இளம் பெண்ணின் புதிய அமைதியான அன்புதான் அது!

இரண்டு சக்கிமுக்கிக் கற்களைத் தேய்த்தால் தீப்பொறி உண்டாகிறது. ஆனால்

தேவல்சிம்மன் என்றுமே உத்தமாவோடு அந்தரங்கமான கருத்து எதையும் வெளியிடவில்லை. அவள் எந்த முறையில் பேசினாலும் அதற்கு அவன் செவி சாய்த்ததில்லை. எல்லாம் ஒருதலைக் காதலாகவே இருந்தது.

ஆனால் ஒரு கல்லின்மேல் இன்னொரு கல் விடாமல் வந்து மோதினாலும் தீப்பொறி உண்டாகத்தானே உண்டாகும்? அப்படியானால் தேவல்சிம்மனுக்கும் இந்த விஷயத்தில் ஒரு பொறுப்பு இல்லையா?

ஆமாம்; உத்தமா விஷயமாக ஒரே ஒரு பொறுப்பு அவனுக்கு உண்டு. அவனால்தானே அவள் இராணுவ விசாரணையின்போது அவ்வளவு அவதிப்பட நேர்ந்தது. அவனை மீட்கப் போய்த்தானே உத்தமாவின் தனிப்பட்ட உதயம் - அன்பு வெளியாயிற்று!

ஆனால் ஏற்கனவே அவன் மீதாவுக்குத் தன் உள்ளத்தை அர்ப்பணம் செய்துவிட்டானே! இந்த உலகில் இனி யாருக்குக் கொடுக்கவும் அவனிடம் ஒன்றும் இல்லையே! உலகில் ஒருவன் கையில் ஒன்றும் இல்லாமல் கடனாளியாகிவிட்டால் சிறைக்குப் போகவேண்டியிருக்கும். தேவல்சிம்மனின் மனம் வெறிச்சென்று ஆகிவிட்டபோது உத்தமா அவனைக் காதலிக்கிறாள் என்பதற்காக அவளை வாழ்க்கைத் துணைவியாக்கி மனம் என்னும் அந்தச் சிறையில் வாழ்நாள் முழுவதும் அவளை அடைத்து வைப்பதா, என்ன?

ஏதாவது பேச வேண்டுமே என்பதற்காக, அப்போது "உன்னையும் நேதாஜியின் சேவையில் இழுத்துவிட்டு எவ்வளவோ தொல்லை கொடுத்து விட்டேன்; எவ்வளவு ஆபத்தில் இழுத்துவிட்டும் நீ அதைப் பெரும் பாக்கியமாக எண்ணி ஏற்றுக் கொண்டாய். உன் ஆதரிச வாழ்வத்தை என்றும் போற்றுவேன். உன் அப்பாவுக்கு என் வணக்கத்தைத் தெரிவி" என்றான் தேவல்சிம்மன்.

அப்பா என்றதும் உத்தமா, "அவரும் இங்கே டில்லியில்தான் இருக்கிறார். நீங்கள் விடுதலை ஆனதும் அவரைப் பார்க்க வரவேண்டும்" என்றாள்.

மறுபடியும் இந்த வெறிச்சென்ற மனத்தில் போராட்டம் நேரவேண்டுமா? அவன் தனக்காகத் தயங்குபவனல்ல. ஆனால் உத்தமா? ஆம்; அவளுடைய நன்மைக்காக அவன் அவளிடமிருந்து விலகியே இருக்க வேண்டியதுதான். எவனுக்குக் கொடுக்க அவனுக்குச் சக்தி இல்லையோ அவன் கண்ணெதிரே அடிக்கடி படுவோம் என்று இங்கிதமாகச் சொல்வது கூடச் சரியன்று.

இருந்தாலும், தேவல்சிம்மன் "உன்னைப்போன்ற ஒரு பெண்ணின் தகப்பனார் நாடே போற்றும் தகுதி பெற்றவர். நிச்சயமாக வந்து அவரைப் பார்க்கிறேன்" என்றான்.

சற்றுப் பொறுத்து அவன், "உங்கள் ஊரில் இப்போது எல்லாம் சரிப்பட்டு விட்டிருக்கும். அங்கே உன்னை எவ்வளவு மதிப்பாக நடத்துவார்கள், தெரியுமா? இதை எண்ணும்போதே எனக்கு இன்பமாக இருக்கிறது! சர்க்கார் தங்கள் தரப்பில் உன்னைச் சாட்சியாகப் போட்டாலும் நீ மிகவும் துணிச்சலாகவும் வீரமாகவும் நடந்து கொண்டாய். உங்கள் ஊராருக்கு இப்போது அது நிச்சயமாகத் தெரிந்திருக்கும்" என்றான்.

உத்தமா தலைகுனிந்தபடியே மிகவும் மெதுவான குரலில், "மறுபடியும் எப்போது பார்ப்பது?" என்றாள்.

அதற்குத் தேவல்சிம்மன் பதில் அளிப்பதற்குள் சிப்பாய் ஒருவன் வந்து, "அந்த அம்மாள் புறப்பட்டாக வேண்டும். நேரம் ஆகிறது" என்றான்.

தேவல்சிம்மனுக்கும் இப்படி வெறிச்சென்ற அந்தி நேரம் வந்துவிட்டதா? ஒரு நிமிஷ நேரம் இந்தச் சிந்தனையில் மூழ்கியிருந்தான் தேவல்சிம்மன். பிறகு தன்னைச் சமாளித்துக்கொண்டு நின்றான். அவன் வீரன்; யுத்த டருஷன்! அவன் தோற்கலாம்; ஆனால் அதைச் சட்டை செய்யவில்லை அவன். வாழ்வோடும் தன் விதியோடும் போராடும் வலிமை இருக்கிறதே, அது ஒன்றே எல்லாவற்றையும் விட அவனுக்குக் கிடைத்த பெரிய இலாபம். அவனுடைய அந்திநேரம் வெறிச்சென்றில்லை; அதில் செம்மை படிந்திருக்கிறது. சுதந்திரப் போரில் அவன் தன் உடலினின்று இரத்தத்தைச் சிந்தியிருக்கிறான். இரத்தம் தோய்ந்த தன் இதயத்தை அர்ப்பணம் செய்திருக்கிறான். அந்த இரத்தத்தின் செம்மையே வானத்தில் நிறைந்திருக்கும் - வேறு ஒன்றும் இல்லாதபோது அதுவாவது நீடித்திருக்கட்டும்.

உத்தமா மெல்ல மெல்ல இரும்புக் கிராதி போட்ட கதவண்டை சென்றாள். என்ன தோன்றியதோ தெரியாது, ஒருதரம் திரும்பிப் பார்த்தாள். தேவல்சிம்மனும் அவளைப் பார்த்தபடி நிமிர்ந்து நின்றிருந்தான். அவனுடைய முகம் அந்திச் செவ்வொளிபட்டு ஒளிர்ந்தது.

'ரிட்ரீட்' வாசிக்கும்போதே ஆங்கிலேயர்களுடைய 'யூனியன் - ஜாக்' கொடியையும் அன்றாட வழக்கம்போல் செங்கோட்டையின் உச்சியிலிருந்து மெல்ல மெல்ல இறக்கினார்கள். கோட்டையின் செங்கல் சுவர்களில் அந்தியின் செவ்வொளி ஏதோ துயரின் சாயல் போல் படிந்தது.

(முற்றும்)

சபரிமலை யாத்திரை




பாற்கடலைக் கடைந்த பிறகு கிடைத்த அமிர்தத்தைப் பெற்ற அசுரர்கள் ஆடிப் பாடிக் களித்துக் கொண்டிருந்தனர். அந் தருணத்தில் அவர்கள் ஆடல் பாடல்களை யெல்லாம் நிறுத்திவிட்டு, அமிர்தம் அருந்த வேண்டும் என்ற ஆசையையும் புறக்கணித்து விட்டுத் திகைத்துக் கண் நிலைகுத்தியபடியே ஒரு திசையை நோக்கியவாறு இருந்தனர்.

அப்படி அவர்களது உள்ளத்தைக் கவர்ந்த அந்த அதிசயம் என்ன? அது ஓர் அழகியின் தோற்றம்தான். அமிர்தத்தையும் வேண்டாமல் அவளையே விரும்பும்படி செய்த அந்தப் பேரழகி யார்? -- ஆம்! அவள் மோகினி! தன் அழகு வலை வீச்சால் அத்தனை அசுரர்களையும் அமைந்து வாய் பிளந்து நிற்கச் செய்தாள். மோகினியின் ஆட்டபாட்டங்களில் அசுரர்கள் அமிர்த கலசத்தை மறந்தனர். மோகினி லாகவமாக அந்தக் கலசத்தைத் தன் கையில் பெற்றுக் கொண்டாள்.

மோகினி அசுரர்களிடமிருந்து பெற்ற அமிர்த கலசத்துடன் வெற்றிப் புன்னகை முகத்தில் இழையோட அன்ன நடை பயின்று வந்தாள். அவளது அளவற்ற சௌந்தரியத்தைக் கண்டு நஞ்சுண்ட நாயகனே மதி மயங்கிப் போய்விட்டார். இறைவனின் திருவிளையாடல்களுக்கு எல்லை ஏது? 'தீமையை ஒழிக்கக் கடவுள் அவதாரம் செய்வார்' என்பது உண்மையாயிற்று. அவர்களது மையலினால் சாஸ்தா உதயமானார். தேவர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினர். ராக்ஷஸி மகிஷியின் கொட்டம் அடங்க வழி பிறந்து விட்டது என்று அவர்கள் குதூகலித்தனர்.

அடர்ந்த காடு. வன விலங்குகள் நிறைந்த அந்தக் காட்டிலே ஒரு குழந்தை 'வீல்' என்று கத்திக்கொண்டிருந்தது. அந்தச் சமயத்தில் காட்டில் வேட்டையாட வந்த பந்தளம் ராஜா அந்தக் குழந்தையின் குரல் கேட்டு ஓடோடி வந்தான். ஜோதி சொரூபமான அந்தக் குழந்தையைக் கண்டதும் தனக்கு வாரிசு கிடைத்ததாக மகிழ்ந்து அரண்மனைக்கு எடுத்துச் சென்றான்.



காட்டிலே கிடைத்த அந்தத் தெய்வக் குழந்தை அரண்மனையிலே சீரும் சிறப்பும் பெற்று வளர்ந்தது. ஆனால் ஊர் பேர் தெரியாத குழந்தைக்கு அடித்த அதிர்ஷ்டத்தைக் கண்டு பொறாமை ஏற்படுவது இயல்பு தானே? ராணி நோய் தீரப் புலிப் பால் வேண்டும் என்று மந்திரி அவனைக் காட்டுக்குத் துரத்தினான். ஆனால் அவன் அனுப்பியதும் நல்லதாகப் போயிற்று. இல்லாவிட்டால் மகிஷியை மர்த்தனம் செய்திருக்க முடியுமா?

காட்டிலே நாரத முனிவரைச் சந்தித்த போது அவரிடமிருந்து தன் பிறப்பின் இரகசியத்தை உணர்ந்தான் சிறுவன். மகிஷியைக் கொல்ல வேண்டிய பொறுப்பை அறிந்தான். அடுத்தகணமே தன் வல்லமையினால் மகிஷியை நிர்மூலம் செய்துவிட்டு, ராணிக்குத் தேவையான பாலுக்காகப் புலிக் கூட்டத்தையே அரண்மனைக்கு இழுத்து வந்து சேர்த்தான். அப்பொழுதுதான் அவன் தெய்வாம்சம் பொருந்தியவன் என்றறிந்து சபரிமலையில் அவனுக்குக் கோவில் எடுப்பித்தனர் மக்கள்.

வனவிலங்குகள் மிகுந்த சபரிமலையில் கோவில் கொண்டு மக்களையும், ஜந்துக்களையும் அவன் காத்து வந்தான். சாஸ்தா, ஐயப்பன் என்ற தெய்வப் பெயர் பூண்டு, கேரள மக்களின் உள்ளம் கவர்ந்த கடவுள் இன்று லட்சக்கணக்கான மக்களின் வழிபடும் தெய்வமாக விளங்கி வருகிறார். மக்கள் இந்தக் கோவிலுக்குச் செல்லக் கடுமையான விரதம் எடுத்து, மிருகங்களின் மத்தியில் இறைவனைத் தரிசிக்கச் செல்கிறார்கள். மகர விளக்கு உற்சவம் ஜனவரி 13ந் தேதியிலிருந்து 19ந் தேதி வரை நடைபெறுகிறது. தெய்வ நம்பிக்கையிலேயே தழைத்திருந்த தென்னாட்டிலே கேரள மக்களின் காக்கும் தெய்வமாக விளங்கும் ஐயப்பன் தான் வீற்றிருக்கும் சபரிமலைக்கு ஏராளமான மக்களை ஈர்த்து அவர்களுக்கு இன்னமும் அருள்பாலித்து வருகிறான்.



படித்துப் பாருங்கள்



My Dateless Diary

சில புத்தகங்கள் எடுத்து வைத்துக் கொண்டவுடனே ஒரே மூச்சில் படித்து முடித்துவிட வேண்டும் என்று தோன்றும். படித்து முடித்தவுடன் இன்னொருதரம் படிக்க வேண்டும் என்றால் வேப்பங்காயாகக் கசக்கும். ஆனால் இந்தப் புத்தகம் எடுத்தவுடனே ஒரே மூச்சில் படித்துக்கொண்டே போக வேண்டும் என்று தோன்றுகிறது. படித்து முடித்தவுடன் மீண்டும் மீண்டும் படித்த பகுதியையே படிக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

வெளிநாடுகளுக்குச் சென்று வருபவர்கள் எத்தனையோ பேர்கள் தங்கள் அனுபவங்களை எழுதியிருக்கிறார்கள். அவர்களில் இரண்டு வகை. வெளிநாடுகளில் காணும் புதுமை களைக் கண்டு, அவற்றில் தங்கள் உள்ளத்தைப் பறிகொடுத்து விட்டு வியந்து நிற்ப வர்கள் ஒரு வகை. வெளிநாடுகளுக்குச் சென்றாலும், தங்கள் உள்ளத்தையும் பண்பாட்டையும் பறிகொடுக்காமல் காண்பவர்கள் மற்றொரு வகை. இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்தவர் ஆசிரியர் ஸ்ரீ ஆர்.கே.நாராயண்.

ஸ்ரீ ஆர். கே. நாராயண் ஆங்கிலத்தில் பல கதை கட்டுரைகள் எழுதிப் புகழ் பெற்றவர். அவரது ஆங்கில நூல்களை அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளில் விரும்பி வர வேற்கிறார்கள். அவர் ஆங்கிலத்தில் எழுதினாலும், வாழ்க்கை, அனுபவம், பாவத்திலும் தமிழ்நாட்டு, அல்லது தென்னாட்டு மணம் கமழ்கிறது. அவர் ஆங்கிலத்தில் கூட, தமிழ் மணம் கமழ்கிறது. தமிழ்நாட்டுப் பழமொழிகள், வழக்குகளையும் அவரது ஆங்கில நடையில் ஆங்கில மொழி அமைப்புக் கெடாமல் மொழிபெயர்த்து வழங்கும் போது, தமிழும் ஆங்கிலமும் உணர்ந்தவர்கள் பெருவியப்பும் இன்பமும் அடைகிறார்கள்.

இந்நூலாசிரியர் 1956 ம் வருடம் அமெரிக்காவுக்குச் சென்று ஒன்பது மாத காலம், கிழக்குக் கோடியிலிருந்து மேற்குக் கோடி வரையிலும், வடக்கிலிருந்து தெற்கே மெக்ஸிகோ எல்லை வரையிலும் சுற்றிப் பார்த்து, பேரிப் பழகிப்பெற்ற அனுபவங்களை அவ்வப் போது குறித்து வந்திருக்கிறார். நாட்குறிப்பு என்று சொல்ல வேண்டியிருந்தாலும், தேதி குறிப்பிடாததால், "என் தேதியில்லாத நாட் குறிப்பு" என்று இந்தப் புத்தகத்துக்குப் பொருத்தமாகவே பெயரிட்டிருக்கிறார்.

அவர் தமது நியூயார்க் நகர அனுபவத்தைச் சொல்லும்போதும், டெலிவிஷன் ஒலி பரப்பின் வேடிக்கைத்தைச் சொல்லும்போதும், நாமும் அவருடன் அமெரிக்க நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்வது போலவும், டெலிவிஷனைப் பார்ப்பது போலவும் பிரமை ஏற்படுகிறது.

ஆங்கிலம் தெரிந்தவர்கள் எல்லாம் படித்து அனுபவிக்க வேண்டிய புத்தகம் இது. இரண்டரை ரூபாயில் அமெரிக்காவைச் சுற்றிப் பார்த்து விட்டு வந்து விடலாம்!

பிரசுரம்: Indian Thought Publication, Mysore. விலை: ரூ. 2.50.

உதயசூரியன்

நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப் படையின் மூலமும் பதவுரையும் பொழிப்புரையும் நல்ல பெரிய எழுத்துக்களில், படிப்பதற்கு எளிதாக இருக்கும் முறையில் அச்சிடப்பட்ட நூல். தமிழ்க்கடவுள் முருகன் துதியாகும் இந்நூலுக்கு 'உதயசூரியன்' என்று அரசியல் கட்சி மணம் வீசும் தலைப்புக் கொடுத்திருக்க வேண்டியதில்லை.

தெளிவுரை: புலியூர்க் கேசிகன், பதிப்பு: மல்லிகைப் பதிப்பகம், தியாகராய நகரம், சென்னை-17 விலை: ரூ. 1 - 50.

Pakistan Cricketers Tour of India

தேர்த் திருவிழாவைப் போல் மக்கள் பல்லாயிரக் கணக்கில் கூடுவது மட்டையடி மட்சாற்சவத்துக்குத்தான். சென்னை நகரசபை ஸ்டேடியத்தில் ஜனவரி மாதம் 13ந் தேதி யிருந்து ஐந்து நாட்கள் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் நடக்கும் கிரிக்கெட் ஆட்டப் போட்டி எப்பொழுது வரும் என்று சென்னை ரசிக மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்திய, பாகிஸ்தான் கிரிக்கெட் ஆட்டக்காரர்களைப் பற்றியும், பாகிஸ்தான் குழுவின் ஆட்டத்திறமை பற்றியும் விளக்கத்துடன் தெரிந்துகொள்ள ரசிகர்களுக்கு ஆவல் இருப்பது இயல்புதானே? அதைப் பூர்த்தி செய்ய ஸ்போர்ட் அண்ட் பாஸ்டைம் ஸ்தாபனத்தார் பாகிஸ்தான், இந்திய மட்டையடி மன்னர்களின் படங்களோடு விளக்கக் குறிப்புகளும் கொண்ட ஒரு புத்தகம் வழங்கியிருக்கிறார்கள்.

கிடைக்குமிடம்: ஸ்போர்ட் அண்ட் பாஸ்டைம், கஸ்தூரி பில்டிங்ஸ், மவுண்ட்ரோட், சென்னை - 2. விலை ரூபாய் 1.

ஸ்ரீமத் கம்பராமாயணம் வாலிவதம்

வாலி வதம் என்னும் சிறு நூலை வெளியிட்டுள்ள விசுவநாத ஐயர் கம்பராமாயணத்தை 'உண்ணும் சோறுகவும், பருகும் நீருகவும்' கொண்டு வாழும் இராம பக்தர். கம்பராமாயணத்தில் முன்னும் பின்னுமாக அமைந்த பல பாடல்களின் துணை கொண்டு இராமன் வாலியைக் கொன்றது குற்றமாகாது என்று விளக்கிக் காட்டியுள்ளார்.

பிரசுரம்: ஆசிரியர், 75, ரங்கநாதபுரம், கோயமுத்தூர்-9. விலை குறிப்பிடப்படவில்லை.

அமுதம் படைத்த கை

"கார்மேகங்களே, செல்லுங்கள். மகள் பிரிவைத் தாங்காது வாட்டமுற்றிருக்கும் அன்புத் தந்தைக்குச் சேதி கூறுங்கள். உங்களது நீர் நிறைந்த நெஞ்சம் போல் கருணைக் கடலானவரும், நல்லோருக்கு நற்பணி புரியும் உங்களைப் போல் நன்னோக்கம் கொண்டவரும், அழுக்கைப் போக்கிச் சுத்தம் செய்யும் உங்களது பணியைப் போல் மக்களின் அஞ்ஞான அழுக்கைப் போக்கி ஞான ஸ்நானம் செய்வித்தவருமான என் தந்தையிடம் சென்று கூறுங்கள். உலகோருக்கு நாங்கள் அருள் மழை பொழிகிறோம். உங்கள் அருள் மழை காரணமாக உங்கள் பொற்கரம் பட்டு வளர்க்கப்பட்ட நங்கைநல்லாள் உங்களது ஆசியினால் தன் இல்லத்தரசருடன் மகிழ்வு கொண்டு வாழ்கிறாள்" என்று கூறுங்கள்.

"மாருதமே, நீயும் ஓடிச்சென்று என்னைக் கண்டெடுத்த மகானுக்கு நற்செய்தி கூறு. துர்வாசனையை நீக்கி, சுகந்தத்தைப் பரப்பும் உன்னைப் போல் மாயை என்னும் நச்சை நீக்கி அரங்கனின் அருட்பார்வையின் மகத்துவத்தைப் பரப்பியவரும், ஆணுக்கும் பெண்ணுக்கும் புஷ்பங்களிடையே உறவு கூட்டிவைக்கும் உன்னைப்போல் ஆண்டவனுக்கும் மானிடனுக்கும் உறவு காட்டும் தத்துவத்தைக் கூட்டியவரும், ஜில்லென்று உடலை ஸ்பர்சித்து உணர்ச்சியை எழுப்பும் உன்னைப் போல் பல்லாண்டுபாடி அதன்மூலம் தூங்கும் மனிதனைத் தட்டி எழுப்பி எம்பெருமானின் திவ்யதரிசனத்தைக் காட்டியவருமான என் தந்தையிடம் சென்று கூறுங்கள். 'உலகோருக்கு நாங்கள் சேவை செய்கிறோம். ஆண்டவனுக்குச் சேவை செய்திடும் உங்களது மெய்க் கரங்களில் தன் வளமை கண்ட உங்களது திருக்குமாரத்தி தன் இதயம் கவர்ந்த அன்பருடன் செவ்வனே வாழ்கிறாள்' என்றும் பறையுங்கள்....."

உயிருக்குயிரான தந்தைக்குச் சேதி சொல்லி அனுப்பத் துடித்தாள் கோதை.

பிறந்த வீட்டில் அனுபவித்த ஒவ்வொரு நினைவுத் துகளும் அவள் முன்னால் நின்று மனத்தில் பதிந்து பதிந்து சென்றன.

அவளுக்கு இப்பொழுதும் நன்றாக நினைவிருக்கிறது. இப்பொழுதுபோல் அப்பொழுதும் மார்கழித் திங்கள். கன்னிப் பருவத்திலே மார்கழி நோன்பு நூற்று ஆண்டவனின் கைத்தலம் பற்ற அவள் நிச்சயித்துக் கொண்டாள். அவரும் எவ்வளவு உற்சாகத்துடன் அதை வரவேற்றார்! சிற்றஞ் சிறு காலையிலேயே அன்பு மகளைப் படுக்கையினின்று எழுப்பி விடுவார் பெரியாழ்வார். கோதை தன் தோழிகளுடன் 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளில் நீராடப் போதுவீர் போதுமின்' என அனைவருக்கும் அழைப்பு விடுத்து, அவர்களது வீட்டு வாயிலில் நின்று 'நேசமுடையாய் திறவேலோ ரெம்பாவாய்', என்றோ, 'உன்னைக் கூவுவான் வந்து நின்றோம்' என்று அறைகூவி அழைக்க, தோழிகளும் அவள் கூற்றுக்குப் பணிந்து அவளுடன் நீராடப் போகும் அழகைக் கண்கொள்ளாக் காட்சியாகக் கண்டு களிப்பார் தந்தை.

அவருக்குத் தெரியும், கோதையின் தோழிகளில் ஒருத்தி சற்று வாயாடி. முதல் நாள் அவளே முதலில் வந்து கோதையை எழுப்புவதாக வாக்களித்திருந்தாள். கோதை அவள் வாக்கை மறவாமல் நையாண்டியாக அவளிடம் 'எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும் நங்காய்' என்றாள். பிறகு, 'எல்லே இளங்கிளியே இன்னும் உறங்குதியோ' என்றும் கேட்கிறாள். தோழிக்குத் தன் அவமானத்தை யெல்லாம் கோபத்தில் மறைக்கப் பார்க்கிறாள். 'சில்லென்றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்...' என்று சினத்தோடு பதில் வருகிறது.

இந்த வாதப் பிரதிவாதங்களில் விஷ்ணு சித்தர் எல்லையற்ற இன்பம் காண்பார். உலகம் தூய்மை காண மாத மும்மாரி பெய்து மக்கள் நலம் பெறும் நோன்பை நூற்கக் கன்னிப் பெண்கள் நெய்யுண்ணாது, பாலுண்ணாது, மையிட்டெழுதாது, மலர் முடியாது பனி மழை பெய்யும் காலத்தே உள்ளம் தூய்மை பெற்று உடலையும் தூய்மையாக்கச் செல்லும் இந்தத் தன்னலமற்ற குழந்தைகளின் மேம்பாட்டை யாரே ரசிக்கமாட்டார்!



அவர் ஆண்டவனுக்கு மலர் எடுத்துச் செல்லும்போது பரமனிடம் இந்தப் பெண்களுக்காக நல்லாசியையே பிரார்த்தித்து நிற்பார்.

நோன்பு முடியும் தருவாயில் கோதைக்கு ஒரு கொண்டாட்டம்: விரதத்தில் அனுசரிக்க வேண்டிய முறைகளைத் தவறாது அனுசரித்த பிறகு இருபத்தேழாம் நாளில் கோலாகலம், பாலும் நெய்யும் அந்நாள்வரை பத்தியமாக நின்ற வஸ்துக்கள். இன்று விரதத்தில் பங்கெடுக்க வந்து விடும். பல்கலனும் அணிந்து, ஆடையுடுத்து அதன்பின்னே 'பாற்சோறு மூட நெய்பெய் முழங்கை வழிவார'த் தயாரித்த ஆறமுதை எம்பெருமானுடன் மானசிகமாக உண்ணும் அற்புதக் காட்சியின் போது பெரியாழ்வார் நேரிடையாகப் பங்கெடுத்துக் கொண்டு விடுவார்.

ஆனந்தக் களிர்ச்சியுடன் ஆண்டவனுக்கு அர்ப்பித்த பிரசாதத்தைக் கன்னிப் பெண்களுடன் அவரும் வாயில் போட்டுக் கொள்ளும் போது அவருக்கு வாயெல்லாம் தித்திக்கும்; உள்ளமெல்லாம் சிலிர்க்கும். "அம்மா கோதை! ஆண்டவனை அர்ச்சிக்கும் பாக்கியத்தைக் காட்டிலும் திருத்துழாயின் மடியிலே திருமகளாக உன்னைக் கண்டெடுத்த பாக்யத்தை நான் பெரிதாக எண்ணுகிறேன். நான் மலர்மாலை சூட்டி மகிழும் காலத்தில் நீ பாமாலை சூட்டினாய். இந்தப் பரந்த உலகிலே சிறு உடலோடு அரிய ஜோதியாகப் பரந்தாமன் பிரகாசிப்பதை, அவனது பரந்த மகிமைகளைச் சிறு பாட்டிலே ஏற்றி அந்த ஆனந்தமூர்த்தியின் மங்கா ஒளியை உலகுக்கு எடுத்துக் காட்டிவிட்டாயே அம்மா! அவன் பெயர் கூறி நீ கொடுக்கும் பிரசாதம் துளியே யாயினும் அமிருதத்தின் இனிப்பைப் பெற்று விட்டது" என்பார்.

தந்தையின் சொல் கேட்டு ஸ்ரீ வில்லிபுத்தூர் திருச்செல்வி உள்ளம் புளகாங்கித மடைவாள். அவர் ருசித்துச் சாப்பிடும் அழகில் மயங்கி நிற்பாள்.

இப்பொழுதோ....

இப்பொழுதும் அப்பா அனுபவிக்கத்தான் செய்வார். கோதையைப் போலவே அவர் மற்றப் பெண்களையும் நோக்குபவர். கோதை கொடுத்துச் சென்ற பாவை நோன்பைக் கன்னிப் பெண்கள் இன்னமும் நோற்றுக் கொண்டிருப்பார்கள். தந்தையும் அவர்களோடு ஒன்றிப் போய் ஆனந்தத்தில் மூழ்கிக் கிடப்பார். மகளைப் பற்றின நினைவு அவருக்குக் கண்டிப்பாக வரும் என்பதில் ஐயமில்லை. ஆயினும் எம்பெருமானின் கல்யாண குணங்களோடு பொருந்தின பணியாக இருந்தால் அவர்களோடு ஒட்டி விடுவார். பிரசாதத்தை உண்டு களிப்பார். அவர் முகத்தில் காணப்படும் மகிழ்ச்சி மறக்க முடியாதது... அவரது திருக்கரங்களில் வளர்ந்து அவர் செவிக்கு ஊட்டிய பரந்தாமனின் திவ்ய நாம விருந்து அல்லவோ அவளது மங்கள நல்வாழ்வுக்கு வழிகோலியது.

"கோதை...!"

எண்ணச் சுழலில் மூழ்கிக் கிடந்த கோதை திரும்பினாள். அவளை ஆட்கொண்ட ரங்கராஜன் அருகில் நின்றிருந்தார். கோதை அவர் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

"கோதை! தந்தையின் நினைவிலேயே இருந்தால்? என் நினைவும் உள்ளத்தில் சற்று இடம் பெற வேண்டாமா?"

"உள்ளத்தில் ஒருவரது பிரதிபிம்பம் ஆழமாகப் பதிந்து விட்டபோது, 'நினைவு' என்ற பதத்துக்கான அவசியமே இல்லையே! மறதி நேரிடும் போதல்லவா நினைவை நாடிப் போக வேண்டும்?" என்று மென்னகையுடன் ஆண்டாள் கூறினாள்.

"பாமாலை சூட்டிக் கொடுத்தவளிடம் வாக் சாதுர்யத்தையும் நான் எதிர்பார்த்துத் தான் நின்றேன் கோதை! உன்னை வளர்த்தெடுத்த உன் தந்தை மிகுந்த பாக்கிய சாலிதான். நோன்பின் அழகைக் கண்டு களித்தவர் அவர்...."

"ஆம், ஸ்வாமி! தங்களது பிரசாதத்தை உண்ணும்போது அவர் அனுபவிக்கும் ஆனந்தம் அவர் முகத்தில் பிரதிபலிக்கும். அந்த அழகு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்" என்று ஆழ்வார் திருமகள் களிப்புடன் கூறினாள்.



மனைவியின் தோள் மீது கைவைத்த அரங்கத்தரசன் "கோதை! ஒரு வேடிக்கை பார்த்தாயா? எனக்கென நீ நோன்பு நோற்றாய். என்னையும் நீ அடைந்து விட்டாய். ஆயின்.." என்று நிறுத்தினார்.

"ஆயின் என்ன?"


"நெய் முழங்கை வழிவார நீ தயாரித்த அமுதமோ என்னை வந்தடையவில்லை. மானசிகமாக எனக்கு அர்ப்பணித்து விட்டு அதன் இனிப்பை உன் தந்தை அனுபவித்தார்." உதடுகள்

எஸ்ரங்கநாயகி

விரியக் குறும்புப்]{புன்னகை தெளியோடக் கூறினார் மாயவன்.

கோதையின் மனத்திலே சட்டென்று உணர்ச்சி விழித்தெழுந்தது. கணவரின் கூற்றும் அவளுக்கு உண்மையாகவே பட்டது. அவர் கூறியதுபோல் உலகோர் அளிக்கும் அமுதத்தில் ஆண்டவனது பங்கு, அதில் கிடைக்கும் வாசனை. உலகோரது பங்கு இனிப்பான ருசி.

நாட்கள் மேலேறிச் சென்றன. கோதை பெருநல்லாள் பாவை நோன்பில் ஒவ்வொரு நாளும் மனத்தை ஈடுபடுத்தினாள். தோழிகளை எழுப்பும் கற்பனைக் காட்சியில் ஈடுபட்டாள். அத்துடன் ஒரு சிறு குறையும் மனத்தில் படிந்து விட்டது. கணவருக்குத் தன் கையினால் தயாரித்த அமுதத்தை அளிக்கும் நன்னாளை என்றுதான் காண முடியும்?



மருமகளிடம் வேலைகளை ஒப்படைப்பது மாமிக்கு உகந்ததாகத் தோன்றவில்லை. காதலித்துக்கைப்பற்றிய பெருமை கொண்டவள் மருமகள். கணவனுடன் இனித்து வாழட்டும் என்பதே ரங்கராஜனைப் பெற்றெடுத்தவளின் எண்ணம். ஆகையால் அன்னம் தயாரிப்பதிலும் பாங்குறப் பால் காய்ச்சுவதிலும் அவளே ஈடுபட்டாள். ஆழ்வார் திருமகளுக்கு வாய்ப்பு இல்லை. இனி மாமியிடம் சென்று, "என் மணாளனுக்கு என் கையினால் தயாரிக்க நான் விரும்புகிறேன்" என்று வெட்கத்தை மறைத்து எவ்விதம் கூறுவது? இனி யாது செய்வது?

அன்று பொங்கல் திருநாள். பழையன கழிதலும் புதியன புகுதலுமாக ஒவ்வொரு இல்லத்திலும் புதுப்பானை தயாரித்து, புத்தமுதம் ஆக்க இனிதான ஏற்பாடுகள் நடந்து விட்டன. ரங்கமன்னனைப் பெற்றவள் இல்லத்தைப் பாங்குற அலங்கரித்து விட்டாள். இனி பொங்கும் பாலில் அமுதம் தயாரிக்கும் வேலை ஒன்றுதான் பாக்கி!

"ஆ, அம்மா! அப்பப்பா..." உள்ளிருந்து குரல் வந்ததும் அன்னை திடுக்கிட்டாள். பதறியபடியே உள்ளே ஓடினாள். அங்கே அவள் ஈன்றெடுத்த செல்வன் வயிற்றைக் கைகளால் பிடித்தபடியே துடிப்புடன் காணப்பட்டார்.

"என் செல்வமே, ஏனடா இப்படி நேர்ந்தது?" என்று மகனை அணைத்து உள்ளம் உருகத் தாயார் கேட்டாள்.

"தெரியவில்லையே அம்மா! வயிற்றிலே தாங்கொணா வலி. என்ன செய்வேன்!" என்று மாயவன் கூறினார்.

இதற்குள் கோதை பதைபதைத்து வந்து விட்டாள். அவள் மனம் துடிதுடித்தது. மணாளனுக்கு இவ் வலி வர யாதுகாரணமோ? பண்டிகை நாளில் இவர் இவ்விதம் துடிதுடிக்கிறாரே! பதியைக் கவனியாமல் இருந்து விட்டோமோ?

"கோதை! நீ இங்கிருந்து இவனைக் கவனித்துக்கொள்ளம்மா. நான் இதோ ஒரு நொடியில் பொங்கல் பானையை அடுப்பில் ஏற்றி இத் திருநாளில் புத்தமுதம் தயாரித்து விட்டு வந்து விடுகிறேன்" என்றாள் தாயார்.

பள்ளிகொண்ட பெருமானோ சட்டென்று தன் தாயின் கையைப் பற்றியபடி, "வேண்டாம் அம்மா, வேண்டாம்! நீ இங்கிருந்தால் அதுவே என் வயிற்று வலியைப் பொறுக்கச் சக்தி தரும்!" என்று கூறினார்.

தனயனின் வேண்டுகோளை மறுக்கவும் தாயாருக்கு விருப்பமில்லை. "ஏனடா இப்படிக் குழந்தைபோல் படுத்துகிறாய்? கோதை இருப்பது போதாதோ?"

ரங்கராஜன் தலையை அசைத்து விட்டார். அன்னை அருகில் இருந்தால்தான் வலி தெரியாமல் இருக்குமாம். சிறு பெண்ணான மனைவிக்கு ஒன்றும் தெரியாதாம்....

இனி வேறு வழியில்லை. மகனின் விருப்பத்துக்கும் செவிசாய்த்து; குறித்த நேரத்தில் இன்னமுதமும் தயாரிக்க வேண்டுமென்றால் அதற்கு ஒரே ஒரு மார்க்கம்தான் உண்டு.

"கோதை! இன்று இத் திருநாளை வீணடிக்காமல் கறந்து வைத்திருக்கும் பாலை நீதான் அடுப்பில் ஏற்றி அமுதம் தயாரிக்க வேண்டும் அம்மா. குழந்தைபோல் படுத்துகிறானே உன் கணவன்!" என்று மாமி கட்டளையிட்டாள்.

கோதை வலியுடன் அவதிப்படும் கணவரை விட்டு அங்கிருந்து செல்ல விரும்பவில்லை. ஆயினும் மாமியின் கட்டளையாயிற்றே! என் செய்வது? பொங்கல் அமுதம் தயாரிக்க மெதுவாக அங்கிருந்து சென்றாள். ரங்கமன்னன் மெதுவாக அன்னையின் மடியில் படுத்துக் கண்களை மூடினார்.

நறுமணம் வீசியது. பொங்கல்அமுதம் தயாராகிவிட்ட சூசனை தெரிந்தது.

ஆழ்வார் மருமகன் மெதுவாக எழுந்து உட்கார்ந்தார். "அம்மா!" என்று மெள்ள விளித்தார்.

"ஏனப்பா?"

"எனக்கு என்றேனும் வயிற்றுக் கோளாறு ஏற்படும்போது நம் பசு 'லட்சுமி'யின் பாலைக் கறந்து தருவாயே! அது போல் இப்பொழுதும் கொடும்மா. வயிற்றுவலி பறந்துவிடும்."

"ஆமாமடா மகனே! நீ சொல்வது சரி... எனக்கும் இப்பொழுதுதான் நினைவுக்கு வருகிறது....ஆனால்..."

"ஏனம்மா, என்ன தயக்கம்?"

"அந்தப் பாலில்தான் இன்று பொங்கல் மணம் வருகிறது..."

"ஓ, அப்படியா!... அப்படியானாலும் ஒன்று செய். வெண்ணெயில் வெல்லம் குழைத்துச் சூடு தணிக்க இலையில் வைத்துக் கொடுப்பாயே, அதையாவது கொடும்மா!"

"அதுவும் சரிதான். ஆனால் என்ன செய்யட்டும்? அந்த வெண்ணெயை நெய்யாக்கி வெல்லத்துடன் அமுதத்தில் விட்டதனால் அல்லவோ இவ்வளவு நறுமணம் வீசுகிறது... இப்பொழுது என்னசெய்வேன்?" கைகளைப் பிசைந்தபடி தாயார் கூறினாள். அமுதம் தயாரிக்கும் முன்பே இந்த மருந்துகள் நினைவுக்கு வராமல் போய்விட்டனவே! இந்தப் பிள்ளையும் தானாகட்டும், அப்பொழுதே சொல்லியிருக்கக் கூடாதோ....

ரங்கராஜனே துள்ளிக் குதித்து எழுந்தார். "அம்மா! எல்லாம் இனிதே முடிந்து விட்டது" என்று கூறினார்.

"என்னப்பா கூறுகிறாய் நீ?"

"இந்தத் திருநாளில் தயாரித்துள்ள அமுதத்தை; நான் புசிக்காவிட்டால் உன் மனம் துயரம் அடைந்திருக்கும் அல்லவா?"

"ஆமாமடா."


"அதனால்தான் இவ்விதம் நேர்ந்தது போலும். என் வயிற்று வலியைப் போக்கக் கூடிய பாலும் நெய்யும், வெல்லமுமே பொங்கலமுத உருவாக மாறியுள்ளது. ஆகையால் எனக்கு முதலில் இலையில் பொங்கலமுதம் பரிமாற, ஏற்பாடு செய், அம்மா!" குதூகலத்துடன் கூறினார் பரந்தாமன். அன்னை மகனை ஊடுருவி நோக்கினாள். அவளுக்கு எல்லாமே விளங்கி விட்டது போல் தோன்றியது. மனைவியின் பொற்கரம் பட்டுத் தயாராகும் அமுதத்தை ருசிக்க இந்த மாயக் கள்வன் கள்ளத்தனம் செய்தானோ?

மகிழ்ச்சி நிரம்ப அன்னை இலைபோட உட்புறம் சென்றபோது, 'ஆ அம்மா!' என்று இம்முறைகூப்பாடுபோடவில்லைரங்கத்தரசன்.

களிப்பு மிக எய்திக் கணவர் அமுதத்தை ருசித்துச் சாப்பிடுவதை நோக்கி ஆண்டவனை ஆண்டவள் பரமானந்தம் எய்தினாள். 'பாற்சோறு மூட நெய்பெய் முழங்கை வழிவார' இன்னமுதத்தை ரங்கராஜன் அனுபவித்து உட்கொண்டார். மகனுடன் அமர்ந்து அவரது தந்தையும் அமுதத்தை ருசித்துக் களிப்படைந்தபோது கோதைக்குத் தன் தந்தையின் நினைவு வந்தது.

மாலை கோதை தனித்திருந்தபோது அரங்கமா நகரத்தரசன் அவளது அருகில் வந்து நின்றார். "கோதை!" என்று மென்மைக் குரல் கொடுத்தார்.

கோதை மெதுவாகத் தன் தலையைத் தூக்கினாள். கண்களை உறவாட விட்டாள். பிறகு மெதுவாகப் பதியின் திருமார்பில் சாய்ந்து. "அன்பரே! இந்த எளிய கரங்களினால் உங்களுக்குப் பாலமுதம் படைத்து மனத்தைக் குளிர்விக்கத் தாங்கள் ஏற்படுத்திக் கொடுத்த சந்தர்ப்பத்துக்கு நான் எவ்விதம் நன்றி தெரிவிப்பேன்!" உள்ளம் கனியக் கூறினாள் கோதை. மாயவன் மென்னகையுடன் அவளை அணைத்தார். உள்ளமும் உள்ளமும் உறவாடியபோது அவர் பெருமிதம் கண்டார்.



பொங்கலுக்குப்



5 ரூபாய்க்கு 6 ரூபாய்

இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்.

தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் 50 அற்புதமான புத்தகங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது. இவை உங்கள் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் உற்சாகமூட்டுபவை; உங்கள் நண்பர்களுக்கும் பொங்கல் பரிசாக வழங்குவதற்கு ஏற்றவை. உங்களுக்குத் தேவையானவற்றைத் தேர்ந்தெடுங்கள். சிக்கனமான முறையில் வாங்கலாம். இவற்றில் 6 ரூபாய் மதிப்புள்ள புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுங்கள். ஆனால், ரூபாய் 5 கொடுத்தால் போதும்! இதேபோல் 12 ரூபாய் ஆர்டருக்கு 10 ரூபாய்; 18 ரூபாய் ஆர்டருக்கு 15 ரூபாய் என்று செலுத்துங்கள்.

அற்புதமான 50 புத்தகங்கள்
இவற்றிலிருந்து தேர்ந்தெடுங்கள்

நாவல்

1.	கப்பண்ணு —மாஸ்தி வெங்கடேச ஐயங்கார்	1.00
2.	அன்னையின் குரல் —ஆலன் பேடன்	3.00
3.	முதிர்ந்த பாலம் —தோர்ன்டன் ஒயில்டர்	1.50
4.	கோகொரோ —நாத்சுமே ஸோஸெகி	1.00
5.	காதல் வாழ்க! —டேவிட் கார்னட்	2.40
6.	பெண்ணும் பொன்னும் —ஜியார்ஜ் எலியட்	1.40

கதைகள்

7.	தேர்ந்தெடுத்த தென்மொழிக் கதைகள்	1.60
8.	சீன ஜப்பான் கதைகள்	1.65
9.	கதைக் கடல் —தொகுத்தவர்: டாக்டர் வே. ராகவன்	1.50
10.	இந்திய நாடோடிக் கதைகள்	1.40
11.	காந்தீய உலகம் முதலிய விஞ்ஞானக் கதைகள்	1.90
12.	ஆயிரம் கிரஹத்துக் கதைகள் —தொகுத்தவர்: இ. சந்திரசேகரன்	1.65

வாழ்க்கை

13.	ஆல்பர்ட் ஷ்வைட்ஸரின் சுயசரிதம்	1.75
14.	இமயத்துப் புலி டென்ஸிங் சொல்லியது	2.00

வரலாறு

15.	தமிழ் நாட்டு வரலாறு —டாக்டர் எம். ஆரோக்கியசாமி	1.50
16.	உலக வரலாறு —டி. பாலசுப்ரமணியன்	2.50
17.	ஆதிமனிதன் —இர்விங்-அன்னு கோல்டுமேன்	1.50

நாடகம்

18.	பத்து நாடகங்கள் —தொகுத்தவர்: பீ. ப. சோமசுந்தரம்	1.25
19.	ஆண்டுவிழா —கன்னட நாடகங்கள்	1.65
20.	சிவம் —தெலுங்கு நாடகங்கள்	1.65
21.	அடிமை —மலையாள நாடகங்கள்	1.80
22.	கருமி —மோலியர்	1.00

கவிதை

23.	புதுத்தமிழ்க் கவிமலர்கள் —தொகுத்தவர்: திருலோக சீதாராம்	1.00
24.	நாடோடிப் பாடல்கள் —தொகுத்தவர்: ஆர். அய்யாசாமி	0.95

மதம், வேதாந்தம்

25.	மகரிஷிகள் வரலாறு —கே. எஸ். இராமசாமி சாஸ்திரி	1.10
26.	மெய்யடியார்கள் —டி. எம். பி. மகாதேவன்	1.40

(தொடர்ச்சி - எதிர்ப்பக்கத்தின் பின்புறம்)

புத்தகப் பரிசு

மதிப்புள்ள புத்தகங்கள் !

பத்து ரூபாய்க்கு மேல் தபால் செலவும் இனும்

10 ரூபாய்க்கு அல்லது அதற்குமேல் வாங்கினுல் தபால் செலவையும் பாக்கிங் செலவையும் நாங்கள் ஏற்றுக்கொள்வோம். ஆனுல், அதற்குக் குறைவாக வாங்கினுல், நீங்களே தபால் செலவை ஏற்க வேண்டும்.

முன் பணம் அனுப்பவேண்டாம்

கீழே உள்ள கூபனைப் பூர்த்திசெய்து உடனே அனுப்புங்கள். புத்தகங்கள் உங்கள் வீடு தேடி வி.பி.பி. மூலம் வந்துசேரும்.

சலுகை எத்தனை நாள் ?

பொங்கலை ஒட்டியே இந்த விசேஷ சலுகை. 1961 ஜனவரி முதல் தேதி முதல் பிப்ரவரி 15 வரைதான் இச்சலுகை கிடைக்கும்.

அரிய சந்தர்ப்பத்தை இழக்காதீர்கள். இன்றே இந்தக் கூபனைப் பூர்த்தி செய்து எங்களுக்கு அனுப்புங்கள். எங்கள் முகவரி:

- **தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்**, 8, விக்டோரியா கிரஸெண்ட், சென்னை-8.
  அல்லது, கீழ்க்கண்ட எங்கள் விநியோகஸ்தர்களுக்கும் அனுப்பலாம்.
- **எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை**, திருநெல்வேலி ஜங்ஷன்.
  (திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி, கோவை, சேலம், நீலகிரி மாவட்டங்களுக்கு மட்டும்)
- **பழனியப்பா பிரதர்ஸ்**, தெப்பக்குளம், திருச்சி
  (திருச்சி, தஞ்சை, மதுரை மாவட்டங்களுக்கு மட்டும்)
- **புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்**, 135, பவழக்காரத்தெரு, சென்னை-1
  (செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களுக்கு மட்டும்.)

50 ரூபாய்க்கு ஆர்டர் செய்தால் 12 ரூ. மதிப்புள்ள புத்தகங்கள் பரிசாகக் கிடைக்கும். அதற்குமேல் வாங்கினுல், அதே விகிதாசாரப்படி பரிசுப் புத்தகங்கள் அனுப்பப்படும்.

SJ-899

பொங்கல் புத்தகப் பரிசு

அன்புடையீர்,

கீழேயுள்ள புத்தக எண்களில் எனக்கு வேண்டியவற்றைச் சுற்றி வட்டமிட்டுக் காட்டியிருக்கிறேன். அந்த எண்களுக்குரிய புத்தகங்களைக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு வி.பி.பி. மூலம் அனுப்பிவையுங்கள்.

1 2 3 4 5 6 7 8 9 10 11 12 13 14 15 16 17 18
19 20 21 22 23 24 25 26 27 28 29 30 31 32 33 34 35
36 37 38 39 40 41 42 43 44 45 46 47 48 49 50

பெயர் ....

தபால் விலாசம் ....
....
....

....
கையெழுத்து

தேதி..............................

27. மனிதனின் சமயம் 1.40
—ரவீந்திரநாத டாகுர்

கலை

28. பரதநாட்டியம் 2.00
—த. பாலசரஸ்வதி,
டாக்டர் வே. ராகவன்

29. இந்தியக் கிராமிய நடனங்கள் 2.00
—கபில வாத்ஸ்யாயன்
சச்சிதானந்த வாத்ஸ்யாயன்

மருத்துவம்

30. வைத்தியக் கலை-தொத்தாத நோய்கள் 1.25
—டாக்டர் கே. என். சஞ்சீவி

31. வீட்டு வைத்தியர் 1.90
—காப்டன் என். சேஷாத்திரி நாதன்

32. சுகாதாரமும் சுகவாழ்வும் 2.50
—காப்டன் என். சேஷாத்திரி நாதன்
டாக்டர் ஆர். சாம்பமூர்த்தி

பொது அறிவு

33. வானக் காட்சி 2.00
—ஆர். கே. விசுவநாதன்

34. கோன்-டிகி 2.00
—தார் ஹையர்டால்

35. சமையல் கலை 1.50
—ஏ. கே. ஜோஷ்வா
சி. எஸ். ரத்னம்

36. மனித உரிமைகள் 0.95
—ஏ. ஜி. வெங்கடாச்சாரி

37. பொது மக்களும் சட்டங்களும் 2.60
—ஜி. சி. வெங்கடசுப்பாராவ்

38. ஜனத்தொகையும் குடும்பக் கட்டுப்பாடும் 1.95
—டாக்டர் எஸ். சந்திரசேகர்

39. பினேட்டோவின் சர்க்கஸ் 0.90

40. உடற்பயிற்சிக் கலை 1.50
—எல். கே. கோவிந்தராஜுலு

41. பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் 2.10
—எல். கே. கோவிந்தராஜுலு
திருமதி டி. ஜே. ஜோசப்

42. நமது உடல் 0.95
—காப்டன்
என். சேஷாத்திரி நாதன்

43. இலங்கைத் தீவு 1.40
—ஜெ. விஜய துங்கா

44. இந்தோனேஷியா 2.10

சிறுவர் நூல்கள்

45. முயல்குட்டி முத்து 1.00
—பியேட்ரிக்ஸ் பாட்டர்

46. ராஜாவும், காட்டு எருமையும் 1.00
—ஆர். கே நாராயண்

47. மந்திர வித்தை 1.00
—எம். எல். சபரிராஜன்

48. விஞ்ஞானியாக வேண்டுமா? 1.00
—பெர்தா மாரிஸ் பார்க்கர்

49. வானத்தைப் பார்ப்போம் 1.50
—பெ. நா. அப்புஸ்வாமி
ஜெ. பி. மாணிக்கம்

50. கடற்கரையில் மாலைநேரம் 1.50
—திருமதி பி. முராரி

நெஞ்சில் நிறைந்தவள்

கி. ராஜேந்திரன்

அத்தியாயம் 23

உருமாறிய நளினி

வானமும் பூமியும் இணை சேரும் காலம் நெருங்கி விட்டது. அந்தப் பொன்னாளைப் போற்றி வரவேற்க, கொண்டாட வாண வேடிக்கைகள் சீறிப் பாய்ந்தன, மின்னி மறைந்தன. வாத்திய கோஷங்களாக 'உய்'யென்ற பேய்க் காற்றும் இடிமுழக்கமும் ஒன்றுசேர்ந்தன. பலம் கொண்டமட்டிலும் பூமியைத் தாக்கிப் பெரு ஓசையுடன் எங்கெங்கும் பரவியது கடுமழை. கரம் விரித்து மாரியை விரும்பி ஏற்றுக்கொண்ட நிலப்பரப்பு தீராத தாகத்துடன் நீரைக் குடித்துக் குடித்துப் பம்முவதாகத் தோன்றியது. ஆயிரமாயிரம் விதைகள் பூமித்தாயின் அடிவயிற்றில் உயிர் பெற்றன...


அவசரம் அவசரமாக ஒரு வீட்டு வராந்தாவில் ஒண்டிக் கொண்டான் கமலபதி. சாரலுக்குப் பயந்து எல்லாக் கதவுகளையும் இழுத்துச் சாத்தி யிருந்தார்கள் அந்தக் குடும்பத்தினர். உள்ளே 'கேரம்' விளையாடிய அவர்கள் ஒருவரை ஒருவர் கேலி செய்து சிரிப்பது இலேசாகக் கேட்டது. தான் வந்து சேர்ந்திருக்கும் பகுதி எது என்பதைச் சுற்றிலும் கண்ணோட்டி அறிய முயன்றான் கமலபதி.

எங்கே போகிறோம், எதற்காகப் போகிறோம் என்ற நினைப்பே யின்றிக் கால்கள் இட்டுச் சென்ற திக்கில் தன்பாட்டுக்கு நடந்த அவனைத் தன் நிலைக்குத் திருப்பி விட்டது மழை. அதுவரைக்கும் தனக்குப் புரியாத ஒன்றைப் புரிந்துகொள்ளப் பிரயாசைப்பட்டுக் குழம்பிக் கொண்டிருந்தான் அவன்.

நளினி கூறியதென்ன? 'உயிருடன் இருக்கும் என்னை ஒதுக்கி, இறந்துவிட்ட ஒருவனுக்காக அவதிப்படுவது ஏன்?' என்று கேட்டாளா? அல்லது 'நானும் செத்துப் போவேன்' என்று பயமுறுத்தினாளா? ஒருவேளை 'அவனாவது ஒரேயடியாக மடிந்துவிட்டான்; என்னை அணுஅணுவாகச் சாக அடிக்கிறீர்களே!' என்று குற்றம் சாட்டிப் புலம்பும் கருத்திலே அவள் அப்படிப் பேசியிருக்கலாமோ? ஏதுவுமே சரியாக விளங்கவில்லை கமலபதிக்கு.

சற்றுத் தூரத்தில் நெடிய மரம் ஒன்று சரசரவென்று வேரோடு பெயர்ந்து விழும் பயங்கரச் சத்தம்கேட்டது. தனித்திருக்கும் நளினி திடீரென்று வீசும் புயலையும் தங்கு தடையில்லாமல் கொட்டித் தீர்க்கும் கடுமழையையும் கண்டு கலவரமடைந்தாள்...?

அறைக்குள்ளே புகும் தண்ணீரைத் தடுக்க எண்ணி ஜன்னல் கதவுகளைத் தாளிட முயலுகிறாள் நளினி. வெளியில் ஆவேசம் வந்ததுபோல மரங்கள் தலை விரித்தாடுகின்றன. நளினியின் பீதி அதிகரிக்கிறது. உலகில் உள்ள வெளிச்சத்தை யெல்லாம் பேராசையுடன் பறித்துக்கொண்டு ஒளிப் பிழம்பாய் நெளிந்து மறைந்து விடுகிறது ஒரு மின்னல். எங்கும் அந்தகாரம் சூழ்கிறது. வீரிட்டு அலறுகிறாள் நளினி. பூமண்டலத்தையே இரு கூறாகப் பிளக்க முயலும் பேரிடியோசையைக் கேட்கச் சகியாமல்





காதுகளைப் பொத்திக் கொள்கிறாள். பின்னர் எதற்குமே சக்தியற்றவளாகத் துவண்டு சரிகிறாள்....

''நளினி! பயப்படாதே, நளினி! இதோ வந்துவிட்டேன்!'' என்று அலறிப்புடைத்துக்கொண்டு ஓடினான் கமலபதி. நனைந்த ஆடைகள் வேகத்தைக் குறைத்தன. நேரடியாக முகத்தில் விழுந்த நீர்த் துளிகள் கண்களைத் திறக்கவொட்டாமல் செய்தன. இருளைப் போக்க வேண்டிய விளக்குக் கம்பங்களில் இடித்துக் கொள்ளாமல் செல்வதே மிகவும் கடினமாக இருந்தது.

ஒருவாறு வீட்டை அடைந்தபோது, திறந்திருந்த கதவு அவனைத் திகைக்க வைத்தது. மெல்லத் தன்னைச் சுதாரித்துக்கொண்டு, ''நளினி!'' என்று அழைத்தான் கமலபதி.

பதில் இல்லை!

''நளினி! நளினி! நளினி!''

அவள் பெயரைச் சொல்லி விளித்தான், கெஞ்சினான், குழைந்தான், குமைந்தான். கங்குல் அவனைக் கருணையற்றவன் என்று குத்திக் காட்டியது. நிசப்தம் அவனை நெஞ்சில் ஈரமற்றவன் என்று தூற்றியது.

'நளினி! நீ எங்கே இருக்கிறாய்? என்னுடன் இனி வசிக்க விருப்பமின்றி உன் அப்பாவிடம் போய்விட்டாயா? ஒரு நாளும் இல்லை! 'கணவனைப் பற்றிப் பிறரிடம் குறை' கூறிக் கொண்டிருக்கும் கேவலமான குணம் என்' நளினிக்குக் கிடையாது. மாலதியிடம் போய் மன்றாடுகிறாயா? சீச்சீ! இருக்கவே இருக்காது. விநாடி நேர மனத் தடுமாற்றத்தை மலையாக்கி மாலதியை ஏசக் கூடிய அளவுக்குப் பண்பு கெட்டவள் அல்ல என் நளினி. நான் அவளுக்கு இழைத்து விட்ட கொடுமைகளால் மனம் வெதும்பினாலும், அந்த வேதனைகளை வெளியிடாமலே ஆறுதல் தேட அவள் அக்காள் காவேரியை நாடிச் சென்றிருக்கலாம். நிச்சயமாக அவள் அங்கேதான் போய் இருக்கிறாள். வேறு எங்கேயும் அவள் சென்றிருக்கவே முடியாது!'

உடனடியாக அதனை உறுதிப்படுத்திக் கொள்ள ஆசைப்பட்டான் கமலபதி. அவன் நடேசனிடம் காரியதரிசியாகப் பணியாற்றி வந்தபோது காவேரி, பக்கத்திலிருந்த ஒரு மருந்துக் கடையில் அனுமதி பெற்று அவனை அடிக்கடி டெலிபோனில் கூப்பிடுவதுண்டு. நேரமாகி விட்டதென்று கடையை மூடாதிருக்க வேண்டுமே சொந்தக்காரர்கள்?

தண்ணீர் படிந்திருந்த படிக்கட்டுகள் வழுக்கி விட்டன. விழுந்து எழுந்து விரைந்தான் வீதி முனைக்கு. அங்கிருந்த டெலிபோன் பழுதடையாமலிருந்தால், வீசிய சண்டமாருதத்தில் டெலிபோன் கம்பிகள் அறுந்து தொங்காதிருந்தால்,



டெலிபோன் புத்தகத்தைப் புண்ணியவான்கள் யாரேனும் தூக்கிச் செல்லாதிருந்தால் பேசிவிடலாம் அக்காளுடன்! பளிச்சென்று தெரு விளக்குகள் எரியத் தொடங்கி இவ்வளவுக்கும் இடையில் அவன் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்து இதயத்தைக் கசக்கி உதிரத்தைப் பிழிந்தெடுத்த ஓர் எண்ணத்தை உதறித் தள்ள ? உதவியது. நல்ல சகுனம்; நளினிக்கு ஒரு தீங்கும் நேர்ந்திராது என்று தீர்மானித்துக் கொண்டான் கமலபதி.

தாற்காலிகமாக மழை நின்றிருந்தது. இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில நட்சத்திரங்கள் மின்னுவோமா வேண்டாமா என்று யோசிப்பதுபோல எட்டிப் பார்த்தன. மங்கலாகக் காணப்பட்ட முழுமதி இயற்கையின் அசுர வேகத்தைக் காண வெட்கியது போலக் கருமேகத் திரைக்குள் மறைந்து கொண்டிருந்தது.

மருந்துக் கடைக்காரர் அலுத்துக் கொண்டார். "இந்த அகால நேரத்தில் உங்கள் அக்காளை அழைத்துவர இங்கே ஆள் இல்லை, ஸார்!" என்றார். தலைபோகிற காரியம் என்று நம்ப வைத்து அவரையே எழுந்து போகச் செய்தான் கமலபதி. மனதார அவனைச் சபித்தவாறே அவர் கிளம்புவது முணுமுணுப்பாகக் கேட்டது கமலபதிக்கு.

ஒவ்வொரு விநாடியையும் விரல்விட்டு எண்ணியவாறே இருப்புக் கொள்ளாமல் தவித்தான் அவன். டாக்சி ஒன்று மூக்கிலே திரும்பி முன்னேறியது. கூர்ந்து கவனித்தான் கமலபதி. பின்புறத்தில் இரண்டு பெண்கள் இருப்பது தெளிவாகப் புலனாயிற்று. யார் அவர்கள்? யோசிப்பானேன்? நளினியும் காவேரியுமாகத்தான் இருக்கும்! சந்தேகம் இல்லை.

கையிலிருந்த ரிஸீவரை நிம்மதிப் பெருமூச்சுடன் நோக்கிய அவன், கடைக்காரர் எக்கேடாவது கெட்டுப் போகட்டும் என்று அதைக் கொக்கியில் மாட்டிவிட்டு டாக்ஸியுடன் போட்டி போடத் துணிந்தான். பிரயாணிகளை இறக்கிவிட்டு, சில்லறையையும் பெற்றுக் கொண்டு காத தூரத்தைக் கடந்துவிட்டான் காரோட்டி, கமலபதி வீட்டை அணுகுவதற்கு முன்பாக.

கடதடவென்று அவன் வாசல் கதவைத் தட்டியபோது பரபரப்புடன் அதனைத் திறந்தது - "மாலதி! 'உஷ்' என்று அழகாகக் குவிந்த உதடுகளின் மீது ஒரு விரலைப் பொருத்தி அளவுக்கு அதிகமாகச் சத்தப்படுத்தியதற்காக அவனைக் கடிந்து கொண்டாள் அவள்.

அண்டத்தை அதிரவைத்த பேரிடிகள் தன் தலையிலே விழுந்திருக்கக் கூடாதா? நளினியைப் பற்றித் தான் கொண்டிருந்த

உயர்வான அபிப்பிராயங்கள் தவிடு பொடியாக வேண்டியதுதானா?

''என்ன பிரமித்து நின்று விட்டீர்கள்? என்ன நடந்தது இங்கே!''

வேண்டா வெறுப்பாக உள்ளே நுழைந்தவன், சட்டென்று தப்புக் கணக்குப் போட்டு விட்டதற்காகத் தன்னைத் தானே திட்டிக் கொண்டான். மாலதிக்கு ஒரு விவரமும் தெரியாதென்பது வெட்ட வெளிச்சமாயிற்று அவனுக்கு. ''நானும் அதைத்தான் கேட்க வந்தேன் மாலதி! என்ன நடந்தது? நளினி எங்கே காணோம்?''

''அசதியாக இருக்கிறதென்றாள். படுக்க வைத்திருக்கிறேன்; மழையில் நனைந்ததால் உடம்புக்கு ஏதாவது வந்து விடப் போகிறதே என்ற கவலையில்.''

நாலே எட்டில் பக்கத்து அறையை அடைந்தான் கமலபதி. ''நளினி, கொட்டுகிற மழையில் வெளியே தலை நீட்டலாமா நீ?'' என்று வாஞ்சையுடன் கோபித்தவாறே சென்றவன் நிலைப்படி அருகிலேயே ஸ்தம்பித்து நின்றான்.

அவன் வருகை அறிந்து கட்டிலில் நிமிர்ந்து உட்கார்ந்தது நளினியா? அல்லது நளினியின் சாயலுடன் கூடிய மாலதியா? வாசலில் இருந்த மாலதி இங்கே எப்படி வந்தாள்? இல்லை, இல்லை! மாலதியாக உருமாறிய நளினி இவள்!

நளினி இப்போது உடுத்தி இருந்தவை மாலதியின் ஆடைகள். காதிலிருந்த தோடு, கழுத்தை அலங்கரித்த சங்கிலி, கரத்தில் குலுங்கிய வளையல்கள் எல்லாமே மாலதியினுடையவை. கேசத்தை வாரிப் பின்னியிருந்தது மாலதியின் பாணியிலே. நெற்றித் திலகம், நகப் பூச்சு, கண்ணுக்கு மைதீட்டிய விதம் சகலத்திலும் மாலதியைப் பின்பற்றி இருந்தாள் அவள்.

''நளினி! இதென்ன அசட்டுத்தனம்?''

''பிடித்திருக்கிறதா உங்களுக்கு? முதலில் அதைச் சொல்லுங்கள்!''

''சகிக்கவில்லை'' என்றான் கமலபதி.

நளினியின் முகம் சற்றுப் பிரகாசமடைந்தது. அவளருகே சென்று மண்டியிட்டுத் தரையில் அமர்ந்தான் கமலபதி.

''நளினி! குழந்தைத்தனமாக நடந்து கொள்கிறாய் நீ! மாலதிக்கும் எனக்குமிடையில் நீ நினைப்பது போல் ஒன்றுமில்லை. நிச்சயமாகச் சொல்கிறேன். ஒன்றுமேயில்லை.''

''பொய்யையே திரும்பத் திரும்பச் சொன்னால் மெய்யாகி விடுமோ?'' புன்முறுவலுடன் வேடிக்கையாகக் கேட்டாள் நளினி.

''என் வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்து ஒப்புக்கொள்ள வேண்டாம். அது மட்டும் போதாது. மாலதிக்கும் எனக்குமிடையில் ஒன்றுமே இல்லை என்பதை உள்ளபடியே உன் மனம் தீர்மானமாக, தீவிரமாக நம்பவேண்டும்! நம்புவாயா?'' என்று கேட்டான்.

''நம்புகிறேன்'' என்றாள் அவள் குரலில் குதூகலம் கொந்தளிக்க.

''களைப்பாயிருக்கிறது என்றாயாமே உடம்புக்கு என்ன? டாக்டரை அழைத்துக்கொண்டு வரவா?''

''டாக்டரும் வேண்டாம், ஒரு மண்ணும் வேண்டாம். நீங்கள்தான் வேண்டும் எனக்கு.''

''அப்படியானால் உடனே இந்த வேஷத்தைக் களைந்தெறிந்து விட்டு நளினியாக நீ மாற வேண்டும்.''

கலகலவென்று சிரித்தாள் நளினி. ''விடமாட்டீர்கள் போலிருக்கிறதே?''

சட்டென்று ஏதோ நினைவுக்கு வந்தவனாக, ''நளினி! அக்காவுக்கு டெலிபோன் செய்துவிட்டு நொடிப்பொழுதில் திரும்பி விடுகிறேன். அதுவரைக்கும் மாலதியுடன் பேசிக்கொண்டிரு'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான் கமலபதி.

இரண்டாவது முறையும் மருந்துக் கடைக்காரர் மனமிரங்குவார் என்று அவனுக்குப் படவில்லை. முயன்று பார்ப்பதிலும் தவறில்லையே? கடையைச் சாத்திக் கொண்டே போய்விட்டார் அவர். மறு பக்கத்தில் டெலிபோனைச் சீண்டுவாரில்லை. ஏமாற்றத்துடன் அவன் வந்து சேர்ந்தபோது, நளினியின் மாம்பழக் கன்னங்களை மாதுளையாகச் சிவக்குமாறு வருடிக் கொடுத்து திருஷ்டி கழித்தவாறே காவேரி உட்கார்ந்திருந்தது அவனுக்கு ஆச்சரியமளிக்கவில்லை. மிக முக்கியமான விஷயம் என்று மருந்துக் கடைக்காரர் அவனைத் துரிதப்படுத்திய பிறகு தம்பியுடன் டெலிபோனில் பேசமுடியவில்லையானால் அச்சமாகத்தானே இருக்கும்? எந்நேரமானாலும் ஒரு டாக்ஸி பிடித்துக்கொண்டு நேரிலேயே கண்டு போக வருவாள் என்பது அவன் எதிர்பார்த்ததுதான். அவளுக்கு அந்த அநாவசியத் தொந்தரவு தர வேண்டாம் என்றுதானே மறுபடியும் டெலிபோனுக்கு ஓடினான் அவன். தெருவில் டெலிபோன் இருந்த முனைக்கு எதிர்ப் பக்கத்திலிருந்து அவள் வந்திருக்க வேண்டும்.

''பெண்டாட்டியிடம் பணம் கொடுத்து வைப்பதில்லையா தம்பி? டாக்ஸிக்குச் செலவாகுமென்று பஸ்ஸுக்காகக் காத்திருந்து தொப்பலாக நனைந்து விட்டாளாமே?'' என்று கூறி முகவாயைத் தன் தோளில் இடித்துக் கொண்டாள் காவேரி.

"மாதக் கடைசி அக்கா !" என்றான், கமலபதி காதைச் சொறிந்துகொண்டே.

இதன் பிறகு அக்காளையும் மாலதியையும் அனுப்பி வைக்க வேண்டுமே என்ற ஞாபகம் வந்தது அவனுக்கு. 'இதென்ன சங்கடம்? ஒன்றுமில்லாததற்கு இத்தனை களேபரமா ?' பையைத் தடவிப் பார்த்துக் கொண்ட அவன், "ரொம்ப நேரமாகி விட்டதே? நீ இங்கே இறங்கியே இருக்க வேண்டாம். அதே டாக்ஸியில் ஹாஸ்டலுக்குத் திரும்பியிருக்கலாம்" என்றான் மாலதியிடம்.

"பேஷ்! அவளை விரட்டியடிப்பதிலேயே கண்ணாயிருக்கிறாயே!" என்றாள் காவேரி. "ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு இன்னும் பத்து நாட்களுக்காவது இங்கேயே தங்குமாறு நானும் நளினியுமாகச் சேர்ந்து வற்புறுத்தியிருக்கிறோம் மாலதியை. அவளும் அதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறாள்."

"என்ன அக்கா புதிர் போடுகிறாய்?" அக்காவின் போக்கு அசம்பாவிதமாகத் தான் பட்டது அவனுக்கு. அதைக் குறித்து அவன் அதிகமாக விவரிக்கு முன்னர் காவேரியே முந்திக் கொண்டாள்.

"மாலதியிடம் இன்னும் நெருக்கமாகப் பழகப் பிரியப்படுகிறாள் நளினி. நான் சிபாரிசு செய்ய வேண்டும் என்றாள். 'தம்பி என் பேச்சையும் தட்டமாட்டான்; நளினியின் ஆசையையும் கெடுக்கமாட்டான் !' என்று சொல்லி விட்டேன். அக்காவின் வாக்கைக் காப்பாற்று !" என்று அவன் வாயை அடக்கி விட்டாள் அவள். "அதோடு பத்து நாளைக்காவது நளினி எல்லாக்காரியங்களையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்யாமல் இருந்தால் நல்லதுதானே? உடம்பு தேறும். குழந்தைகளையும் அவரையும் விட்டு விட்டு நான் வந்திருப்பதென்பதும் நடக்காத காரியம். நளினிக்குத் துணை வேறு யார் ?"

மறுத்துரைக்க முடியவில்லை கமலபதியினால். அக்காளின் கூற்றிலுள்ள உண்மை, உதவ முன்வந்துள்ள மாலதியைப் புண்படுத்த விரும்பாத மனப்பான்மை இவை ஒருபுறமிருந்தாலும், இதயபூர்வமாக நளினி தன்னை நம்புகிறாள் என்ற எண்ணமே போதுமானதாக இருந்தது, இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதமளிக்க. நம்பிக்கையில்லாமலா மாலதியை வீட்டோடு வந்து வசிக்குமாறு கோரியிருக்கிறாள் நளினி ?

அவனுடைய சந்தோஷம் பல மடங்காகப் பெருகியது, மறு நாளைக்கு நடேசன் எவ்வளவோ மன்றாடியும் அவருடன் பங்களாவுக்கு வர நளினி பிடிவாதமாக மறுத்த போது.

பெரிய நோட்டாக நீட்டிப் பெரிய டாக்டரை இட்டு வந்து வைத்தியம் செய்விப்பதாகச் சொன்ன பெரிய மனிதர், "யாருக்காக இவ்வளவு சொத்தையும் சேகரித்து வைத்திருக்கிறேன் நான்? போகும் போது அவ்வளவையும் தலையில் கட்டிக் கொண்டா போகப் போகிறேன்?" என்று புலம்புவது போல ஆசை காட்டினார் கமலபதிக்கு.

ஏளனச் சிரிப்பு அவருக்குக் கிடைத்த முதல் பதில். அடுத்து "உங்கள் பெண்ணைத்தான் கல்யாணம் செய்துகொண்டிருக்கிறேன் நான். பணத்தை யல்ல" என்ற கமலபதியின் சொற்கள் அவரை நாண வைத்தன.

தலை குனிந்தவாறே திரும்பிய போதிலும் அவரது திருஷ்டியிலிருந்து மாலதி தப்பவில்லை. "யார் இவள்? இதற்கு முன்னால் பார்த்த ஞாபகம் இல்லையே?" என்றார் அவர்.

"கல்யாணத்தின்போது வந்திருக்கிறாள், அப்பா! புன்னைவனத்தில் இவருடைய வீட்டுக்கு எதிர் வீடு இவள் அப்பாவுடையது. இப்போதைக்கு என்னுடன்தான் இருக்கிறாள்" என்று விளக்கினாள் நளினி.

"ஓகோ!" என்ற நடேசன் ஒரு மாதிரியாக மாலதியை நோக்கியவாறே வெளியேறிச் சென்றார்.

எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது கமலபதிக்கு. 'ஓகோ என்ன ஓகோ! அந்த ஓகோவுக்கு என்ன அர்த்தம்?' என்று மனம் குமைந்தான் அவன்.

அத்தியாயம் 24

நட்சத்திரத் திருமணம்

சூரிக்கும் சரோவுக்கும் திருப்பதியிலே திருமணம். அடக்கமாக நடக்க ஏற்பாடான அந்தக் கல்யாணத்துக்குச் சென்னையிலிருந்து ஒரு பெரிய பட்டாளமே திரளாகக் கிளம்பியது. உறவினர்களையும் நண்பர்களையும் தவிர, திரைப் படத் துறையில் ஈடுபட்டிருக்கும் முக்கியஸ்தர்கள் பலரும் வருகை தந்து சிறப்பிப்பதுடன் முன்னுக்கு வந்து கொண்டிருக்கும் புதிய டைரக்டரையும் புதுமுகத்தையும் ஆசீர்வதிக்க வேண்டாமா? முன்னின்று நடத்தி வைப்பவர்தான் இலேசுப்பட்டவரா? பெருந்தனக்காரர் நடேசன் அல்லவா?

பத்திரிகைப் பிரதிநிதிகளும் புகைப்பட நிபுணர்களும் குட்டி போட்ட பூனை போலக் குறுக்கேயும் நெடுக்கேயும் அலைந்து கொண்டிருந்தார்கள். பிரபல திருமணம் என்ற தலைப்பை அழுத்தமான கோட்டினால் அடித்து விட்டு நட்சத்திரத் திருமணம் என்று மாற்றி எழுதினார் ஒரு நிருபர். அதனடியில், பெரியவர்களாகப் பார்த்து முடிவு செய்த திருமணமா அல்லது காதல் கல்யாணமா என்பது குறித்துச் சிறிது காலமாகவே சகோதரப் பத்திரிகைகளில் சக்கைப் போடாக நடந்து வரும் பெரிய சர்ச்சைக்குப் பதிலளிக்கும் வகையில் இரண்டிலுமே உண்மை உண்டு என்று தீர்ப்புக் கூறியிருந்தார்.

பிரேமை பொங்கித் ததும்பும் வசனங்களைக் காலை இளம்பரிதி 'செட்டி'லே சொல்லிக் கொடுக்கும் போது அவர்களிடையே அந்தரங்கக் காதல் மலர்ந்து விட்டதென்று ஏராளமான ரசிகப் பெருமக்கள் மனப்பூர்வமாக நம்பி மகிழ்வார்களேயானால் அதிலும் தவறில்லை என்று ஒப்புக்கொண்ட அவர், அடுத்தாற்போல் என்ன ரகம் புடவைகளை, எந்த மாதிரியில் எந்தெந்த நடிகைகள் உடுத்தியிருக்கிறார்கள் என்று குறிப்பெடுத்துக் கொள்வதிலும் கண்ணாயிருந்தார்.

வர்ணப் படமெடுக்க ஒரு காமிரா, சாதாரணக் கறுப்பு வெளுப்பு புகைப் படங்களுக்கென ஒரு காமிரா, அவற்றுக்குத் தேவையான ஏனைய உபகரணங்கள் எல்லாவற்றையும் சுமக்க முடியாமல் சுமந்தவாறே எந்தக் கணத்தில் யாருடைய அதரங்களில் புன்னகை நெளியும் என்று ஆவலோடு எதிர் நோக்கிக் காத்திருந்தார் 'ஸ்டில் போட்டோகிராபர்' ஒருவர்.

மாலையும் கழுத்துமாகக் காட்சியளித்த இளம் தம்பதியை உள்ளன்போடு வாழ்த்தினான் கமலபதி. சரோவை ஆசை தீரத் தழுவிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள் நளினி.

"நடுவில் சற்று உடம்பு சுகமில்லாமல் இருந்தாயாமே? இப்போது எப்படி இருக்கிறது நளினி? ரொம்பக் கவலைப் பட்டு விட்டேன் நான்!" என்றாள் சரோ.

"உன் திருட்டுத்தனமெல்லாம் அம்பலமானதும் உண்டான சந்தோஷத்தில் நோய் நொடியெல்லாம் பறந்து போய் விட்டது!" என்று செல்லமாக அவள் கன்னத்தைக் கிள்ளினாள் நளினி.

நெடுநாள் தோழனின் முதுகைத் தட்டிக் கொடுத்து, "படம் கோவிந்தா வானாலும் பலன் கிடைத்து விட்டது, உன்னைப் பொறுத்த வரையில். இல்லையா?" என்று கிண்டலாகக் கேட்டான் கமலபதி.

"இரைந்து பேசி மானத்தை வாங்காதேடா, பாவி!" என்று எச்சரித்தான் சூரி. -- பெருமிதத்தோடுதான்! "நூறு நிருபர்கள் என்னை வட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள் இப்போது!"

"பண்ணையாரும், குமாரசாமியும் இந்தப் பக்கமே எட்டிப் பார்க்கவில்லை என்பதை அவர்களுடைய கழுகுக் கண்கள் இதற்குள் கவனியாமலா இருந்திருக்கும்?"

"என் முகத்திலேயே விழிப்பதில்லை என்று சபதம் எடுத்திருக்கிறார்களாம்,

அப்பனும் மகனும். நான் என்ன செய்வேன்? அவர்கள் அதிர்ஷ்டம் அப்படி!''

''அவர்களுக்கும் இந்தத்தொழிலுக்கும் சேர்ந்து ஒரு முழுக்குப் போடு, சொல்கிறேன்'' என்றான் கமலபதி.

''ஆகட்டும், பார்க்கலாம்'' என்றான் குரி. பண்ணையாரைப் போல் ஏமாந்துபோய்ப் பணம் இளக்குபவர்கள் யாரேனும் அகப்படும் வரையில் அவனுக்கு ஜோலி இல்லை. ஆனால் சரோவின் நிலை இதற்கு நேர் மாறாக இருந்தது. புகழேணியின் உச்சிக்கு விரைவாக ஏறிச் சென்று கொண்டிருந்தாள் அவள். காதல் கல்யாணம் அளித்துள்ள 'பப்ளிசிட்டி'க்கோ கணக்கு வழக்கு இல்லை! எட்டுப் படங்களில் நடிக்கக் கையெழுத்துப் போட்டிருப்பதாயும் வேறு பல ஒப்பந்தங்கள் குறித்து ஆலோசித்து வருவதாயும் செய்திகள் வெளியாகியிருந்தன. அவளுடைய மானேஜராகச் செயலாற்றவே குரிக்குப் போது சரியாக இருக்கும் என்று எண்ணிக் கொண்டான் கமலபதி.

தடபுடலெல்லாம் ஒருவாறு ஓய்ந்த பிறகு சென்னையில் பிரபலமான ஓட்டல் ஒன்றில் நடக்க விருந்த வரவேற்பு வைபவத்தில் கலந்து கொள்ள அனைவரும் புறப்பட்டார்கள். எண்ணி முப்பது மோட்டார்கள் மலைப்பாதையில் அடுத்தடுத்து இறங்கி வந்த காட்சியே தனிச் சோபையுடன் திகழ்ந்தது.

'காஷ்மீரத்துக்கு ஈடாகுமா?' என்று அந்த இன்ப ரகசியங்களைக் கமலபதிக்குக் காதும் காதும் வைத்தாற்போல் நினைவூட்டினாள் நளினி. உரக்கப் பேச முடியாமல் நெருக்கி அடித்துக் கொண்டு ஏழு பேர்கள் ஏறியிருந்தார்கள் அந்தக் காரிலே. நளினியுடன் தான் ஏறிக் கொண்ட அதே வண்டியில் மாலதி காவேரி ஆகியோரையும் ஏற்றி விட்டு, சிதம்பரமும் சோமுவும் முன் பக்கத்தில் முண்டியடித்துக் கொண்டு உட்கார்ந்தது கமலபதிக்கு வியப்பாயிருந்தது. பின்னால் வரும் கார்களில் நிறைய இடம் இருக்கிறதே என்று எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. பிடிவாதத்துக்குக் காரணம் போகப் போகத் தெரிந்தது.

''இவ்வளவு ஆர்ப்பாட்டத்துடன் இல்லையானாலும் நம்ப வீட்டில் நடக்க வேண்டிய இன்னொரு கல்யாணம் பாக்கியிருக்கிறது'' என்று ஆரம்பித்தார் சிதம்பரம்.

மணமக்களைப் பார்த்து அவனையுமறியாமல் ஏக்கப் பெருமூச்சு விட்ட மாலதியின் உருவம் கமலபதியின் எதிரே தோன்றியது. ஜன்னலுக்கு வெளியே முகத்தை நீட்டிக் குளிர்ந்த மலைய மாருதத்துடன் அளவளாவிக் கொண்டிருந்த அவளைக் கடைக் கண்ணால் நோக்கியவாறே, ''மாலதியைத்தானே குறிப்பிடுகிறீர்கள்?'' என்று கேட்டான்.

''ஆமாம் தம்பி! என்னமோ நீ மனசு வைத்தால் ஆகாதது இல்லை.''

''ஏதோ கோபத்தில் ஒண்ணு கிடக்க ஒண்ணு பேசியிருக்கலாம். உடனுக்குடனேயே அதையெல்லாம் மறந்து விடுவேன் நான்'' என்றார் சோமு.

கமலபதிக்குச் சிரிப்பு வந்தது. தன் மகள் திரைப்பட வானிலே ஒளி வீசும் நட்சத்திரமாக விளங்கப் போகிறாள் என்று கனவு கண்ட போது அவருக்கிருந்த செருக்கு, இப்போதுள்ள குழைவு திருப்பதிக்கும் திருச்சானூருக்கும் உயரத்தில் உள்ள வித்தியாசமாகவல்லவா இருக்கிறது?

''சரோவுடைய அண்ணன் ராஜூவை இங்கே சந்திக்கப் பேசிக்கிட்டிருந்தோம்...'' என்று தொடர்ந்தார் சோமு.

கமலபதிக்கு நெஞ்சு வரைக்கும் கசந்தது. ''சரிதான்'' என்றான் அவன் முற்றுப்புள்ளி வைப்பது போல்.

''தங்கமான பிள்ளை'' என்றார் சோமு விட்டுக் கொடுக்காமல்.

''ரொம்பவும் புத்திசாலி'' என்று ஒத்துப் பாடினார் சிதம்பரம்.

பணம் பேசுகிறதென்று புரிந்து கொண்டான் கமலபதி.

''நளினியும் நீயும் கொஞ்சம் அழுத்தமாகச் சொன்னால் நடேசன் தட்டப் போவதில்லை.''

''நீங்கள் கொஞ்சம் கூடக் கவலைப்பட வேண்டாம்'' என்று வாக்களித்தாள் நளினி. ''அப்பாவிடம் பேசி மாலதிக்கும் ராஜூவுக்கும் கல்யாணம் செய்து வைப்பது என் பொறுப்பு!''

சோமுவும் சிதம்பரமும் எழுப்பிய மகிழ்ச்சிக் கூக்குரலுக்குப் பின்னால், ஜன்னலுக்கு வெளியே கண்ணோட்டம் செலுத்தி இயற்கை அன்னையிடம் தன்னுடைய தாபத்தை மானசீகமாக வெளியிட்ட மாலதியின் விசும்பல் ஒலி மறைந்து கொண்டது.

* * *

ஞாயிற்றுக் கிழமையானாலும் கல்யாணக் கெடுபிடியில் தான் கவனிக்கத் தவறிய முக்கிய அலுவல்கள் சிலவற்றைக் கருதிக் காரியாலயத்துக்கு வந்திருந்தான் கமலபதி. அவன் வரப் போவதை முன்கூட்டி அறிந்து கொண்டு மாலதியும் பிரசன்னமாகியிருந்தாள். அவனுடன் தனித்துப் பேச அவளுக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பம் அது. விளக்கம் கோர வேண்டிய விஷயங்கள் அவள் நெஞ்சுக்குள் குமுறிக் கொண்டிருந்தன.

"நீ எங்கே வந்தாய் மாலதி?" என்ற கேள்வி அவனுக்குப் பிடிக்கவில்லை.

"உங்களுக்கு உபகாரமாக இருக்கலாம் என்று எண்ணித்தான். நான் அருகில் இருப்பதே உங்களுக்கு வெறுப்பைத் தந்தால் சொல்லிவிடுங்கள்; போகிறேன்" என்றாள் ஆத்திரத்தோடு.

கமலபதி சிரித்தான். "மகாராணி ரொம்பக் கோபமாக இருக்கிறார்களோ இன்றைக்கு?" என்றான் விளையாட்டாக.

"ஏன் கோபம் வரக்கூடாது எனக்கு? உங்கள் மனைவியின் அதிகப் பிரசங்கித்தனத்தை யெல்லாம் சகித்துக் கொண்டு மௌனமாக இருக்க நான் ஒன்றும் தெய்வப் பிறவியல்ல!"

மிகுந்த சிரமப்பட்டுத் தன் சீற்றத்தை அடக்கிக் கொண்டான் கமலபதி. "நளினி சூது வாது அறியாதவள், மாலதி! வஞ்சனையில்லாமல் உன் கல்யாணத்துக்கு உதவுவதாகச் சொன்னாள் அன்றைக்கு."

"ஐயோ, பாவம்! வாயில் விரலை வைத்தால் கடிக்கக்கூடத் தெரியாது!" என்று ஏளனம் செய்த மாலதி, பின்னர் "வஞ்சனையே உருவானவள்! சூழ்ச்சி புரிவதையே தொழிலாகக் கொண்டவள்! என்னை ஏமாற்ற முயல வேண்டாம்!" என்று குற்றம் சாட்டியபோது குரோதம் ஊற்றெடுத்தது அவள் கண்டத்திலிருந்து. "உங்களை அணு அணுவாகச் சித்திரவதை செய்வது போதாதென்று என்னையும் படுகுழியில் தள்ளப் பார்க்கிறாள்."

"மாலதி!" என்று கூவினான் கமலபதி பொறுமை இழந்து. "நீ பிதற்றுகிறாய்!"

"கொட்டுகிற மழையானாலும் பரவாயில்லை என்று நனைந்தபடியே என் அறைக்கு வந்து என் ஆடைகளையெல்லாம் கேட்டு வாங்கி உடுத்திக் கொண்டு வந்தாளே, அது உங்களைக் குத்திக் காட்டி ஏளனம் செய்வதற்குத்தானே!"

"விகல்பமாக உளறுவதை நிறுத்தப் போகிறாயா இல்லையா?"

"என்னை ஒரு வாரத்துக்கு வீட்டோடு வந்திருக்கச் செய்தாளே, அது எதற்காக? தாலி கட்டிய கணவனைச் சந்தேகித்துப் பரீட்சித்துப் பார்க்கத்தானே? வேண்டுமென்றே உடம்பு பலவீனமென்று நடித்தது ஏன்? உங்கள் மனத்தை நோகச் செய்யத்தானே?"

"போதும் மாலதி போதும், பைத்தியம் முற்றி விட்டது உனக்கு!"

"எனக்கா பைத்தியம்? இன்னும் கொஞ்ச நாட்களுக்கு அவளுடன் சேர்ந்து வாழ்ந்தால் உங்களுக்குத்தான் பிடித்து விடும், பைத்தியம்! கணவனைச் சதா சந்தேகித்துத் துன்புறுத்துபவள் மகா பாவி! நரகத்துக்குத்தான் போவாள் அவள்!"

"நளினியைப் பழிக்கும் நாக்கு வெந்து விடும், மாலதி! அதிலும் நீ அவளைத் தூற்றி ஏசுவதை என்னால் பொறுக்கவே முடியாது" என்றபோது கமலபதிக்குத் தொண்டையை அடைத்தது. "மாலதி! மகாபாவி நான்தான். நரகத்துக்குப் போகப் போகிறவனும் நானேதான்!"

குழந்தைபோல் அவன் விசித்து விசித்து அழுவதைக் கண்டு நிலைகுலைந்து போனாள் மாலதி. "நான் பேசியதெல்லாம் தப்புத்தான். தயவுசெய்து அழாதீர்களேன்!" என்று கெஞ்சினாள்.

"மாலதி! எங்களுக்குக் கல்யாணமாகு முன்னரே எங்கள் உள்ளங்கள் ஒன்றுபட்டு விட்டன. அவற்றைப் பிரிக்க யாராலும் முடியாது! எங்கள் குடும்ப வாழ்க்கை பயனுள்ளதாக இல்லாமல் போகலாம்; ஆனால் நாங்கள் ஒருவரை ஒருவர் மனதாரக் காதலிக்கிறோம். அதை எந்தச் சக்தியாலும் அழிக்க முடியாது! புரிகிறதா உனக்கு?"

"நன்றாகப் புரிகிறது" என்றாள் மாலதி சில விநாடிகள் பொறுத்து. "உங்களுக்கு உதவப் போவதாக அசட்டுத்தனமாக எண்ணி வந்தேன். அதற்கு அவசியமில்லை என்பதை நிதர்சனமாகத் தெரிந்து கொண்டேன். என்னை மன்னித்து விடுங்கள். போய் வருகிறேன்!"

மாலதி எழுந்து நடந்தாள். கமலபதி அவளைத் தடுக்கவில்லை. (தொடரும்)

டாக்டர் ஸ்ரீஹரி அவர்களின் சுற்றுப் பிரயாணம்

கல்கியில் நாட்டு வைத்தியப் பகுதி எழுதிவரும் டாக்டர் ஸ்ரீஹரி அவர்கள் 9-1-61 சென்னையிலிருந்து காலை 10-45 மணிக்குப் புறப்பட்டு 11-1-61 டெல்லி சேர்ந்து, ஜந்தர் மந்தர் ரோட்டிலுள்ள ஸௌத் இந்தியன் கிளப்பில் தங்குகிறார். 12-1-61 டெல்லியிலிருந்து மாலை 6-30 மணிக்குப் புறப்பட்டு 13-1-61 மாலை 4-மணிக்கு நாகபுரி சேர்ந்து ரயில்வே ரிடையரிங் ரூமில் தங்குகிறார். 14-1-61 நாகபுரியிலிருந்து மாலை 4-30 மணிக்குப் புறப்பட்டு 16-1-61 காலை 6-மணிக்கு ஸெகந்திராபாத் சேர்ந்து, ஸெகந்திராபாத் தாஜ் மஹால் ஹோட்டலில் தங்குகிறார். 17-1-61 ஹைதராபாத் ஷாலிதான் பஜார் ரோட் தாஜ்மஹால் ஹோட்டலில் தங்குகிறார். 18-1-61 ஹைதராபாத்திலிருந்து இரவு 8-மணிக்குப் புறப்பட்டு 19-1-61 மாலை 3-30 மணிக்குச் சென்னை சேருவார்.

திருவில் ஒரு மறு

வை. சுப்ரமண்யம்

ஸ்டேஷனுக்கு ஓடி வந்தும் கூட அவன் கடைசி வண்டியைத்தான் காண முடிந்தது. 'அவுட்ட'ரை நெருங்குகிற இடத்தில் பழுப்பு வர்ணமடித்த ஒரு கள்ளிப் பெட்டி நகர்வது போல் நகர்ந்து கொண்டிருந்தது அது. கையில் பையுடன் கம்பங்களோடு ஒரு கம்ப மாய்ச் சிறிது நேரம் அப்படியே நின்றான் அவன். ஓடி வந்ததில் கண்ட இரைப்பைக் காட்டிலும் ஏமாற்றத்தில் எழுந்த உணர்ச்சியே படபடத்துக் கொண்டிருந்தது.

அடுத்த வண்டி இனி விடியற்காலையில் நாலு மணிக்குத்தான். இன்னும் உள்ள எட்டு மணி நேரத்தையும் தூங்காமல் கழித் தால்தான் அந்த வண்டியையாவது பிடிக்க லாம். காட்சி முடிந்த பின் வெறிச்சிட்ட மேடைபோல் ஸ்டேஷன் இந்தக் கோடிக்கும் அந்தக் கோடிக்கும் இருளைப் போர்த்துக் கொண்டு வெறுமையாய்த் தோன்றியது. கடமை முடிந்து இங்கும் அங்கும் செல்கிற ஸ்டேஷன் பணியாட்கள் அப்படியே பெயர்ந்து செல்லும் கம்பங்கள்போல் காட்சி யளித்தனர். பள்ளத்தில் நின்றுகொண்டு பேசுபவன் குரலாகக் கேட்டன, அவர்க ளுடைய ஒன்றிய பல குரல்களும்.

கீழே கட்டையைப் போட்டலாம், படுத்துக் கொண்டே விழித்துக் கொண்டிருக்கலாம் என்ற நினைவில் பிளாட்பாரத்தை விட்டுச் சற்று உள்ளே தள்ளிச் சென்று இடத்துக்கு நோட்டம் விட்டான் அவன். கடப்பைக் கல் பதித்த தரை இருளில் இன்னும் கரே லென்று, மழையும் குளிரும் இல்லாதபோதே ஜில்லென்று குளுமை காத்துக் கிடக்கும்; இப்போது மழை பெய்த கவட்டில் ஐஸ் கொண்டு மெழுகிய தரை போலிருந்தது. அப்படியும் இப்படியும் பார்த்து விட்டு, கடைசியாகப் பார்ஸல் பெட்டி ஒன்றின்மேல் ஒண்டிக் கொண்டபடி உட்கார்ந்தான். உட் காரத்தான் இடம் இருந்தது அதில். உள்ளே யிருந்து அடித்த சிறு வெளிச்சத்தில் அந்தப் பெட்டிமேல் பச்சையில் படர்ந்திருந்த எழுத் துக்கள் தெரிந்தன. 'கண்ணாடிகள், ஜாக் கிரதையாகக் கையாளவும்' என்ற பொருள் கொண்ட வார்த்தைகள்.

மறு விநாடி அவன் உடம்பு கூசிக்கொண் டது. பாரம் தாக்காத வண்ணம் எச்சரிக்கை யாக உட்கார்ந்து கொள்வதுபோல் ஒருக் களித்துக் கொண்டு உட்கார்ந்தான். அப் போது அவனுள் ஒரு சிறு நினைவும், அதை யொட்டிய — அவன் உணர்வுகூட அதிராத - ஓர் இளஞ் சிரிப்பும் தோன்றின.

'ஊரில் இருக்கிறபோது மணிமங்கலத்தார் வீட்டுக்குப் போனாலும் இதேமாதிரி ஒரு கள்ளிப்பெட்டிதான் நமக்கு வாய்க்கிற வழக்கம். இங்கேயும்கூட அதேமாதிரி ஒரு பெட்டிதானா?'

பெரும் ஜ்வாலைக்கு ஒரு பொறியே முதல் தோற்றம்போல், இன்னும் எட்டு மணி நேர அவகாசத்தையும் உணர்ந்தே கழிப்பதற்கு அவன் மனத்தினுள் எதையாவது கல்லிவிட்டுக் கொள்ள நினைத்ததன் முதல் இழை இது. ஸ்டேஷனுக்குள் நுழைவதற்கு முன்னும் உள்ளம் பரபரக்க மணிமங்கலத்தார் வீட் டைப்பற்றிய நினைவிலேயே உழன்ற மனச் சுழலின் தொடர்ச்சிதான் இந்த இழை!

வெறும் ஜடப் பொருளான கள்ளிப் பெட்டியே நினைவில் வந்த பிறகு வீட்டிலுள்ள வர்களைப் பற்றிய நினைவு வராமல் போகுமா?

'மாமி இந்நேரம் என்ன பண்ணிக் கொண் டிருப்பாள்? கதைக்குப் போய் விட்டு வீடு திரும்புகிற நேரம்... ஜனகா? அவள் ஆங்கிலம் படிக்கிற நேரம் இது! மனசில் ஒரு பக்கம் குறுக்கும் நெடுக்குமாய் அலைகிற பூனையையும் இன்னொரு பக்கம் பாடப் புத்தகத்தில் 'ஸி. ஏ. டி-கேட்'டாகக் கம்பீரமாகப் பார்க்கும் அச்சுப் பூனையையும் நினைத்துக் கொண்டு பொழுது போக்கிக் கொண்டிருப்பாள். ஆனால் ஜனகாவைப் பார்த்து எத்தனை மாசங்கள் ஆகிவிட்டன! இரண்டாவதுக் குரிய இங்கிலீஷ் பாடப் புத்தகம் கூட வாங்கி யிருப்பாள். ஆறு வயசான எதிர் வீட்டு நாலுக்குட்டியும் இரண்டாவது படிக்கிறான்; இருபது இருபத்தொரு வயசான ஜனகாவும்... ஆமாம்; அவள் எதற்கு ஆங்கிலம் படிக்க வேண்டும்? அவளுக்கு வாத்தியாராகப் போய்விட வேண்டுமென்ற உத்தேசம் போலிருக்கிறது!...சுவாமி! ஆண்டவனே... அவளுக்கு வாத்தியார் வேலை கிடைக்க வேண்டாம்; கல்யாணம் ஆகிவிட்டும்; புல்லானாலும் புருஷன்னு வருகிற புருஷன் கையைப் பிடித்துக் கொண்டு அவள் புக்ககத் துக்குப் போய் விடட்டும் ......'

ஏதோ மணிச் சத்தம் சிந்தனையைத் தடைப் படுத்தவும் அவன் ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தான். டெலிபோனில் பேசிக் கொண் டிருந்தவர் ஸ்டேஷன்மாஸ்டராக இருக்க வேண்டும்.

'வண்டியைத்தான் நமக்குக் கிடைக்காமல் பண்ணி விட்டார்கள்; மனசில் தோன்று கிறதை அக்கடா என்று நினைத்துக் கொண்டு போவதற்குக்கூட இவர்கள் விடமாட்டார்கள் போலிருக்கிறதே. கூட்ஸ் வண்டி வருகிற



தாம்; வந்தால் என்ன, வராவிட்டால் என்ன?...மணிமங்கலத்து வீட்டுக்குப் போய் விட்ட என் மனசைப் பிடித்து மறுபடியும் கும்பகோணம் பிளாட்பாரத்துச் சந்துக்கு எதற்கு இழுக்கிறீர்கள்?....மணிமங்கலத்தில் பிறந்து எங்கேயோ வாழ்ந்து மறைந்தும் போய்விட்ட அந்த மனிதர் நாணுவுக்கு அப்புறமும்கூட அந்த வீடு மணிமங்கலத்தார் வீடாகத்தான் விளங்கியது. அந்தப் பெயரைச் சொன்னால் இரண்டு ஆத்மாக்களுடைய பேரும் உருவும் எல்லாருக்கும் ஞாபகம் வரும். மாமி — அவளுடைய ஒரே பெண் ஜனகா. அப்புறம் அந்தக் குடும்பத்துக்கு நான் ஒரு மானேஜ்மெண்ட் ஆள்போலப் போய்ச் சேர்ந்தேன். எனக்கும் அவர்களுக்கும் உறவா, முறையா? என்னமோ ஒரு நாள் போனேன். நாணு போன பிறகு மூன்று நாலு மாசங்கள் கழித்து ஒரு நாள் அரை மணி அவகாசத்தை மாமியிடம் பேசிக் கழிப்போமே என்று போனேன். அவர்களிடம் எனக்கு முன்பின் பரிச்சயம் ஏது?

''நாணு பாவம் எல்லாருக்கும் உபகாரியாக இருந்தார், மாமி! இப்படித் திடீரென்று ஆகுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லையில்லே... அவர் போகிறதற்கு இரண்டு வருஷம் முந்தித் தான் எனக்குப் பரிச்சயம். நான் இங்கே வீட்டுக்குக்கூட வந்தது கிடையாது...''

''என்னமோ அப்பா, போய்ச் சேர்ந்தார். கப்பலை கவிழ்த்துவிட்டுப் போய் விட்டார். வீட்டிலே போட்டது போட்டபடி கிடக்கு. இந்தப் பெண்ணுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணி வைத்துவிட்டுப் போயிருந்தாரானால் நானும் பயணம் புறப்பட்டு விடுவேன், சிவ சிவான்னு. அவர் போனது எந்த வழின்னு... நீ இந்த வீட்டிலே இதற்கு முன்னாலே காலடி வைக்காவிட்டால் என்ன? நான்தான் உன்னைத் தினமும் பார்த்துக் கொண்டிருக்கிறேனே — கிழக்கும் மேற்குமாய் நீ ஒரு நாளைக்கு நாற்பது நடவை போகிறது வருகிறது என்ன குறைகிறது...? என்னமோ இனிமேலாவது நாங்களும் உங்க ஊர்க்காரர்கள்தான் என்கிறதை நீ ஞாபகம் வைத்துக் கொண்டு தினம் ஒரு நடை வந்து விசாரிச்சுட்டுப் போ. நாங்க இரண்டு பேரும் பெண் ஜன்மங்கள்....''

மாமியின் கண்கள் கழுத்தண்டை விரிசல் விட்ட குடம் போல் கசிந்தன. தேறுதலாக ஏதாவது



சொல்லியாக வேண்டும் என்ற நினைவில் வார்த்தைகளுக்குத் தேடி ஏதோ சொல்லி வைத்து விட்டு வந்து சேர்ந்தேன்.

அன்று முதல் அந்த வீட்டுடன் எனக்கு ஒரு பிணைப்பு ஏற்பட்டுவிட்டது. அநுதாபம் ஏற்படுத்திய பிணைப்பில் அவர்கள் கண் கொண்டு ஊராரைக் கண்ணோட்டம் விட்டுப் பார்த்ததில் யாரும் அவர்கள் மேல் அநுதாபப்படுவதாகவோ, ஒரு பழக்க தோஷமான தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள யாருமே விரும்பியதாகவோ தெரியவில்லை. ஊரிலுள்ள சில பயல்கள் குறுக்கும் நெடுக்குமாகக் காரணமில்லாமல் அலைந்தனர். விளக்கை என்னவென்று உணர முடியாத அற்பங்கள் போல் ஜனகாவை நினைத்துக் கொண்டு சுற்றும் அந்தப் பதர்கள் அத்துடன் நிறுத்திக் கொண்டனர். அவர்கள் வீட்டுத் திண்ணையில்தான் என் வாசம் மெல்ல மெல்லப் பற்றிக் கொண்டது. அந்தமாதிரி வயசுப் பிள்ளைகளைப் போன்றவன்தான் நான் என்றாலும், என்னிடம் எல்லாருக்குமே கொஞ்சம் பயம். சின்ன விஷயங்களுக்குக்கூடக் கைகால் வாங்கிவிடுகிற பேச்சைத்தான் முதலில் ஆரம்பித்துவிடுகிற வழக்கம் எனக்கு.

'நாணு செய்து விட்டுப் போன காரியத்தைப்பற்றி மாமி சொன்னது நூற்றுக்கு நூறு உண்மைதான். கப்பலைக் கவிழ்த்து விட்டுப் போயிருக்கிறார் என்றல்லவா மாமி சொன்னாள்; கப்பலைத் திட்டமிட்டுக் கவிழ்த்திருக்கிறார் என்பது என் எண்ணமாக விளைந்தது. ஊரிலுள்ளவர்களுக்கெல்லாம் சம்பாத்தியத்தில் கணக்கு வழக்கு இல்லாமல் 'ஒத்தாசை' என்ற பெயரால் வாரி விட்டுவிட்டு மாமியையும் ஜனகாவையும் மஞ்சள் நூல்களின் ஆதாரத்தில் இணைய விட்டுவிட்டல்லவா போயிருக்கிறார்! அவர் குடும்பத்தை எட்டிக் கூடப் பார்க்க விரும்பாத ஆத்மாக்கள் அவர் இல்லாததைப் பற்றி வருத்தப்படுகிறார்கள். இருந்தால் அவர் உதவி தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருக்கும் என்ற எண்ணம்தான் போலும்!



'ஆனால் அவர் ஓர் இணையில்லாத சொத்து வைத்துவிட்டுப் போயிருப்பதைச் சொல்லவேண்டும். அதுவும் மஞ்சள் என்றதும் ஞாபகம் வருகிறது. மஞ்சள் புதையலில் கல்லி எடுத்த பொற்பாவைபோல்' அந்த ஜனகாவைப் பெற்று வைத்து விட்டுப்' போயிருக்கிறாரே! அவள் தோற்றம் திருவின் தோற்றம். எதிரில் நிற்பவன் கூசுவான்; ஒரு தடவைக்கு இரண்டாம் தடவை நிமிர்ந்தால் தான் முகம் தெரியும் என்ற அளவுக்கு நல்லஉயரம்; அசைவுக்கு ஒரு நிறம் தெரிக்கும் அவளிடம். அவள் எட்டி நிற்கையிலேயே ஒரு மணம் வீசும்; பூவும், மஞ்சளும் கஸ்தூரியும் சேர்ந்த கலவையின் மணம் என்பதைத் தவிர அவள் அங்கே நிற்கிறாள் என்ற உணர்வி

னால் நாம் கொள்ளும் பிரமையோ என்னவோ, அவளது சுவாசமும் ஏதோ ஒரு தெய்வீக மணத்தைப் பரப்புவது போன்றிருக்கும். அவள் இயக்கம் திருவின் இயக்கம்!

அந்த வீட்டில் எனக்கு ஒரே உபசார மயம்; அவர்களை நான் உபசாரம் செய்யப் போக எனக்குப் புகழ் மாலை; என் பணிகளுக்குப் பாராட்டுக்கள்; என் ஆதரவு தெம்பைத் தருகிறது என்ற மாமியின் வாய் நிறைந்த பேச்சில் மனம் நிறைந்த திருப்தி. எனக்கு உள்ளூறக் கலகலத்துக் கொண்டு வந்தது. நானு அப்படி இப்படியென்று விட்டுச் சென்றிருந்ததெல்லாம் குடும்பம் நடக்க உதவிக் கொண்டு வந்தது. 'இனிமேல்?' என்ற கேள்வி என்னைக் குடையத் தொடங்கியது.

இனிமேல் என் கையை அசைக்க வேண்டியதுதான். போயும் வந்தும் நான் மேற்கொள்கிற உத்தியோகத்தில் என்னதான் பிரமாதமாகப் புரட்டிவிட முடியும்? உத்தியோகத்தையே மூடி மறைத்து வகித்து வருவது எனக்குப் பழக்கமாகி விட்டது. அது என் ராசி என்று சொல்வதா, அவ்வளவுதான் கொடுப்பினை என்பதா? என் எல்லைக்குள் அப்படி ஒரு தொழில்; வேணுமென்றால் சட்டையை மடக்கிக் கொண்டு போவேன்; வேண்டாமென்றால் துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வந்து விடுவேன். அம்மாவும் நானும் வயிறு கழுவ ஒரு மாநிலம் விளைந்து கொண்டிருந்த தெம்பு அந்த மண்ணின் உறுதியைப் போல் மனத்தைக் கவிந்து கொண்டிருந்தது.

''பட்டாபி! எங்களுக்காக நீ அநாவசியமாகக் கஷ்டப்படுகிறாப்போல் தெரிகிறது. நீ என்ன பண்ணுகிறே, எப்படி எங்கள் குடும்பத்தைப் படகு தள்ளுகிறமாதிரி தள்ளிக் கொண்டு போகிறே? எனக்குந்தான் அந்தக் கதையைச் சொல்லேன்'' என்பாள் மாமி.

''நீங்கள் இந்தக் கவலையெல்லாம் படவேண்டாம், மாமி!'' என்று பூட்டுப் போட்டுக்கொண்டு வந்தேன் அவ்வப்போது.

ஆனால் என் வாயை ஜனகா கிண்ட ஆரம்பித்து விட்டாள்.

''பட்டாபி! என்ன இப்படி ஒரேயடியாக எங்களைக் கரையேற்றுவதிலே இறங்கி விட்டாய்?'' என்று ஒரு நாள் சிரித்துக் கொண்டே கேட்டாள் ஜனகா. மின்னியும் மறைந்தும், உள்ளிருந்தும், இருளிலிருந்தும் பொதுப்படை முறையில் என்னிடம் பேசிக் கொண்டு வந்திருந்த அவள் இப்போது இப்படி ஒரு சகஜ எல்லைக்கு வந்திருக்கிறாள். அவள் பேச்சைக் கேட்டு விட்டால் நாளெல்லாம் மனம் குளிர்ந்திருக்கலாம். அவள் வாக்கு திருவின் வாக்கு!

''எப்படியோ குடும்பம் நடக்க வேண்டாமா, ஜனகா? அணில் முதுகு மண்தான் என் கைங்கரியம்!''

''பணத்துக்கு என்ன பண்ணுகிறே? கிடைக்கிற பணத்தை எங்களுக்காகச் செலவழித்து விட்டால் நீயும் உங்க அம்மாவும் என்ன செய்வீர்களாம்?''

''நீயும் உங்க அம்மாவும் என்ன செய்வீர்களோ அதைச் செய்வோம். ஜனகா, இது மாதிரியெல்லாம் கேட்டுக் கொண்டிருக்காதே. ஏதோ நடக்கிறவரை நடக்கட்டும்...''

நான் பேசும்போது சுவரையோ வேறு எதெது கண்ணில் படுகிறதோ அதைப் பார்த்துக்கொண்டுதான் பேசுவேன். அவளுடைய கண்ணொளியின் கூர்மையைச் சந்தித்துக் கொண்டு பேசவோ, அவளது அதரங்கள் குழைக்கும் புன்னகைச் சுடரை ஏந்திக் கொள்ளவோ மனத்தில் திராணி இராது. அவளும் என் பார்வை மீள்வதை எதிர்பார்த்துப் பேசுகிறாள் என்பதை நான் அறிவேன். அப்படியும் எனக்குத் துணிவிராது. பார்வைக்குரிய சந்தர்ப்பங்கள் வெறுமையைத் துழாவிக் கொண்டு சென்றதையுணர்ந்து அவள் பெருமூச்சு விடுவதும் என் காதில் விழும்.

தாயக் கட்டம் ஆடுவர்; தாயும் மகளும். என் தலையைக் கண்டால், ''பட்டாபியையும் சேர்த்துக் கொள்ளலாமே, அம்மா!'' என்பாள் ஜனகா. ''போடி, அவன் புருஷன்; பெண்களோடே சேர்ந்து ஆட வருவானாக்கும்!'' என்பாள் மாமி. ஆனால், ஜனகா நினைத்தது நடைபெறும். அதற்கான சொல்வீச்சும், செயல் திறமையும் கொண்டு விளங்கினாள் அவள். அந்தச் சாதனை ஒரு வசீகர அடிப்படையைச் சேர்ந்தது. அந்த வசீகரத்துக்கு அடிமையாகிற தடத்தைத் தேடிக் கொண்டுதான் என் மனம் சென்றது. மூவரும் சேர்ந்து தாயமும், புலிக்கட்டமும் ஆடுவது முதலில் ஒரு பிரச்னையாக நின்றாலும், போகப் போக நானும் ஜனகாவும் மட்டும் சேர்ந்து ஆடுவதில் முடிந்தது.

நாங்கள் ஆடினோம்; எங்கள் மனத்தில் எதுவோ வேறொரு ஆட்டத்தை உருவப்படுத்திக் கொண்டிருந்தது. பத்திரிகை ஒன்றில் நான் ஏதோ ஒரு கதை படித்தேன். இதற்கு முன்பெல்லாம் கூட எப்போதோ அபூர்வமாய்க் கதைகள் படித்திருக்கிறேன். இந்தக் கதை என் மனத்தில் நின்றது. அந்தக் கதையில் வந்த ஆணும் பெண்ணும் என் மனத்தில் ஆடினர். தாயக் கட்டங்களும் புலிக் கட்டங்களும் அப்போதுதான் என் நெஞ்சைச் சிறை வைத்தன. இரண்டு நாட்களுக்கெல்லாம் ஜனகா என் முன்னால் வந்து அந்தக் கதையைக் குறிப்பிட்டு, ''அதை நீ படித்தாயா, பட்டாபி?'' என்றாள்.

''படித்தேன்.....ம்.....அ'' அதற்கு மேல் நீட்ட ஒன்றுமில்லை. அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தேன். எனக்கு ஏற்பட்டிருந்த இந்த நிமிர்வுத் துணிச்சல் அவளை விட்டு மறைந்திருந்ததைக் கண்டேன். அவள் முகம் திருவின் முகம்! பூவிதழ் மேல் குங்குமம் பரத்தினாற்போல் அவள் கன்னமும் அதில் கனிவும் தோன்றின.

அன்று மாலையில் எங்கோவொரு அலுவலாய்ச் சென்றிருந்தவன் திரும்பிக் கொண்டிருந்தேன். குளக்கரை ஓரமாய்ச் சேரும் பாட்டையைப் பிடிக்க வயல் வரப்புமேல் வந்து கொண்டிருந்தேன். சூரியனுடன் எதிர்க்கட்சியாடப் புறப்பட்டாற்போல் முழு நிலவு புறப்பட்டுக் கொண்டிருந்தது. பெரிய வடிவம். கீழிறக்கினால் அந்தக் குளத்தையே அந்தச் சந்திரவட்டத்தைக் கொண்டு மூடி



ரஷ்யாவுக்குச் செல்லும் பிரபல நடிகர் திரு சகஸ்ரநாமம் அவர்களை விமான நிலையத்தில் நண்பர்களும், பிரமுகர்களும் குதூகலத்தோடு வழியனுப்பி வைத்தனர்.

விடலாம். இந்த அழகைப் பார்த்து ரஸித்த கண்கள் பார்வையைத் திருப்பிய இடத்தில் குளக்கரைப் பிள்ளையாருக்கு எண்ணெய் வார்த்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்தாள் ஜனகா. அந்தச் சூழ்நிலையில் அவளைக் கண்டதும் என் மனம் பறந்தது. என்னைக் கண்டுவிட்டு அவளும் நின்றாள்.

"எங்கே இப்படி! பெரிய மிராசுதார் பத்துக் காணிப் பட்டாவையும் ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வருகிறாற்போல் வருகிறாயே!" என்றாள் ஜனகா. குறும்பு இழைய ஓடிய அவளது மனநிலை எனக்குப் புரிந்தது.

"பத்துக் காணி மட்டும்தானா? பாக்கி எங்கே? இதோ இந்த ஊர் நிலம் முழுதும் என்னுடையது என்றுதான் வைத்துக் கொள்ளேன், ஜனகா...."

"அடேயப்பா! அத்தனை சுயநலமா?"

"சுயநலமில்லை. எனக்கு வருவதை அப்படியே உங்களுக்கு வழங்கி விடுகிற என் வழக்கம்தான் உனக்குத் தெரியுமே! நீ லட்சுமியின் உருவமாய் வந்திருக்கிறதற்கு இது என்ன பிரமாதம் ஜனகா!"

"அடா! அடா! அடா! அந்தக் கதை பண்ணுகிற வேலையா?"

"ஜனகா! உன்னை மாத்திரம் அந்தக் கதை தொடவில்லையா?"

அவள் மௌனமாய் நின்றாள். அந்த மௌனத்தினூடே அவள் எனக்கு எதையோ புரிய வைக்க முயன்றாள். அந்த முயற்சி அவள் உள்ளத்தில் எழுந்த ஒளியின் ஒரு கூரிய ரேகையால் என் கண்களைத் தொட்டுச் சென்றது.

"ஜனகா!" என்றேன். இந்த அழைப்புத்தான் எங்கள் இளைவு எதிரொலித்த பின் முதன் முதலாக எழுந்த உணர்ச்சியாலேயே கரைந்த அழைப்பாகும். அவள் என்னை நிமிர்ந்து பார்த்துவிட்டு மெல்ல நகர அடி எடுத்து வைத்தாள்.

"என்னைக் கூப்பிட்டுப் பிரயோசனமில்லை. அம்மாவிடம் மூட்டை அவிழ்க்கப் பார். அம்மா வேறு இன்றைக்குக் காலையில் உன்னைக் குறிப்பிட்டு ஏதோ சொல்ல வந்தவள், 'அவன் இருக்கிறபோது நமக்கு என்னடி? உனக்குக் கூடப் பிறந்த அண்ணன் மாதிரி அவன்தான் பொறுப்பாய் எல்லாவற்றையும் கவனிக்கிறானே' என்றாள். காலையிலேயே எனக்குச் சுருதி குளறின மாதிரியிருந்தது!" அவளுக்குப்பின் அவளது சொற்கள் தேங்கின.

'அட கடவுளே!' என்று திரும்பிப் பார்த்தேன். பிள்ளையார் இருளில் உணர்வற்று வீற்றிருந்தார். ஜனகா வார்த்து விட்டுச் சென்ற எண்ணெய் மட்டும் போதாமல் சுடர் காத்து நிற்கிறாற் போல் ஒளி குன்றித் தெரிந்தது தீபம்.

மறுநாள் மணிமங்கலத்தார் வீட்டுக்குச் செல்லும் போதே மாமியிடம் பேச்சு எடுப்பதற்குப் பொருத்தமான வார்த்தைகள் தேட நினைத்து, என்னைப் பொறிகளினால் புள்ளி வைத்துச் சிந்தனை இழைகளினால் கோலம் இட்டபடி சென்று கொண்டிருந்தேன். நான் பேச்செடுக்க அவசியமில்லாமலே மாமி பேசினாள்: "பட்டாபி, நீ இன்றைக்கு முதல் இங்கே வருவதை நிறுத்திக் கொள்ளணும்!"

நெஞ்சைச் சுட்டுவிடச் சிறு பொறி ஒன்றே போதும்; சட்டித் தணலை வாரி மண்டையில் கொட்டுகிறாளே மாமி!

"ஏன் இப்படிச் சொல்கிறீர்கள்?"

"நான் சொல்லலை; ஊர் அப்படிச் சொல்லச் சொல்கிறது. என் பெண் ஜனகாவோட நல்ல வாழ்க்கையை நினைக்க இப்படிச் சொல்ல வேண்டியிருக்கு. நீயே அவள் கையைப் பிடிக்கிற ஆசை ஒன்று என் மனசிலே இத்தனை நாட்கள் அகல் மாதிரி எரிந்து கொண்டு வந்தது. அதுவும் இல்லேன்னு ஆச்சு நாலு நாள் முன்னாடி!"

"அது எப்படி மாமி ஆயிற்று அப்படி?"

"நல்ல எண்ணத்தோடதான் அவளுக்கு நீயான்னு சுவாமி கிட்டே பூப்போட்டுப் பார்த்தேன். நீ அவளுக்கு அண்ணாதானாம்!"

பூவாவது!... மாமி என்ன காரியம் செய்துவிட்டாள்!.......அதற்குமேல் அங்கே நிற்கப் பிடிக்காமல் நகர்ந்து வந்துவிட்டேன்.

நான் ஊரைவிட்டே வெளியேறினேன். அதுவே ஜனகாவுக்கு நான் செய்யும் உப

காரம். என் தோழில் என்னைக் கை நீட்டி எப்போதும் வரவேற்கும்; நானும் இரண்டு கைகளையும் நீட்டி ஏற்பேன். ஜனகாவை எண்ணிக் கொண்டே நாட்களைக் கழிப்பேன்.

ஊரிலிருந்து அடிக்க காற்றில் செய்திகள் ஏதாவது கலந்துவரும். அவை உண்மையா, வதந்தியின் இலக்கணத்துக்கு ஆதாரமா என்று தெரியாது. ஜனகாவும் மாமியும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்றொருசெய்தி. ...என் உணவில் எனக்கு ஒரு கவளம் கூடச் செல்லாது............ஜனகம் படிக்கப் போகிறாளாம்; அவள் நடத்தைக்கு ஒரு கறை பட்டுவிட்டதால் இனிமேல் கல்யாணம் ஆவது கஷ்டமாம்; அதனால் வாத்தியாராகிவிடப் போகிறாளாம்...கதையாவது! நெஞ்சில் புரை கொண்டவர்களின் கதை. 'அவளையே சுற்றிக் கொண்டிருந்தானே அந்தத் தடிக் கட்டை கிட்டே பிடிச்சுக் கொடுத்துடறது தானே அவளை' என்பார்களாம்; என் காதிலேயே எதிரொலித்தது. 'அப்படிச் செஞ்சிருக்கலாமே. அந்த ரகசியம்தானே தெரிய மாட்டேங்கறது!' என்பது ஒரு பதிலாம்...மாமி கொஞ்சம் அவசரப்பட்டு விட்டதன் விளைவு இதெல்லாம் என்பது எனக்கு ஞானோதயம் போல் பட்டுப் பிரயோசனம்?

''ஒரு முக்கால் ஸ்ட்ராங் பசும் பால் காப்பி!''

கேட்ட குரலாயிருக்கிறதே என்று திரும்பிப் பார்த்தேன். மணிமங்கலம் ஆசாமி ஒருவர்; காப்பிக்காக உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அலைபவர்.

'' அட பட்டாபியாடா? இங்கேதான் இருக்கிறயா? எங்கே ஊர்ப் பக்கமே உன்னைக் காணறதில்லே?''

'' ஊரிலே என்ன மாமா இருக்கு? இங்கே பொழைப்பு நடக்கிறது. ரெண்டு காசைக் கண்ணாலே கண்டு அம்மாவுக்கு அனுப்பவும் முடிகிறது!''

'' அதுக்காக மாசத்திலே ஒரு நாள் இரண்டு நாள் ஊருக்கு வரக் கூடாதுன்னு இருக்கா? நீ ஆள் அட்ரஸ் இல்லாமேன்னு போயிட்டே? அந்த மணிமங்கலத்தார் வீட்டு மாமிகூட வீடு விடா உன்னுடைய விலாசத்தை விசாரித்துக் கொண்டிருந்தா...''

''எதற்குன்னு தெரியுமா மாமா?''

'' அதான் அந்தக் குட்டியை - ஜனகாவோ என்னவோ அதன் பேரு - உன் கழுத்திலே கட்டி விடலாம்னுதான்...''

''ஆனால் அந்த மாமிக்குவிருப்பமில்லையே?''

'' அட முதல்லே அப்படி நினைச்சாளாம்; இப்போ என்னமோ மனசு மாறி உன்னைத் தேடறா. உடனே ஊருக்குக் கிளம்பிப்போ... காப்பியிலே ஜீராவைப் போட்டுப்பிடாதே. அசல் ஜீனியைப் போட்டுக் கொண்டா போ!''

''சரி; நீங்க மணிமங்கலத்துக்குத் தானே மாமா போகிறீர்கள்....நான்--''

''நான் சொல்கிறது மூணு மாசத்துக்கு முந்திய கதையாக்கும். நான் மணிமங்கலத்துக்குப் போகலே. இங்கேதான் என் பெண் வீட்டிலே இருக்கேன்...''

பெரிய ஆராய்ச்சி மணி அடித்து ஓய்ந்தது என் காதுகளில். வறண்டுபோன உணர்வுகளைத் திரட்டுகிற சக்தியுடன் ஒலித்துக் கொண்டிருந்தன அந்த மணி அலைகள். சாயங்காலம் இந்தச் சேதியைக் கேட்டேன். கடை கட்டிய பிறகு கிளம்பி ஸ்டேஷனுக்கு வருவதற்குள் அந்தப் பாழாய்ப்போன வண்டி போய்விட்டதே....மணி என்ன?...

★

மணி மூன்று. வண்டி வரப் போகிற அறிகுறிகளுக்கு ஏற்பாடு செய்தனர். ஸ்டேஷனில் உள்ளவர்கள். நீண்ட இருளில் வெகு தூரத்துக்கப்பால் தெரிந்த சிவப்பு வெளிச்சம் விழுந்த பகுதியில் மட்டும் இருப்புப் பாதைகளின் வளைவு தெரிந்தது. அந்த வளைவைக் கடந்து வரப்போகிற வண்டி பட்டாபியைத் தன்னுடன் ஏற்றிச் சென்று அவன் வாழ்க்கையிலும் பெரியதொரு திருப்பத்தை ஏற்படுத்தப் போகிறது...

நாலு மணிக்கு வர வேண்டிய வண்டி நாலே கால் மணிக்கு வந்தது. வண்டியில் ஏறியதுதான் தெரியும் பட்டாபிக்கு. வண்டியை விட்டுவிடக்கூடாது என்ற கருத்தில் தான் இத்தனை நேரமும் தூங்காமல் கிடந்தான். இப்போது தூக்கம் அவனது முடிவுகளுக்குக் காத்துக் கொண்டிருக்கவில்லை.


அவன் கண் விழித்தபோது சூரியோதயம் ஆகி வெளி உலகை ஒளி மயமாக்கிக் கொண்டிருந்தது. அவன் இறங்க வேண்டிய ஸ்டேஷனில் இறங்கியதும் அவன் பெட்டியில் ஏற வந்தவர்களை ஏறிட்டுப் பார்த்தான். மாமியும், மணக் கோலத்தில் ஜனகாவும் - பக்கத்தில் மாப்பிள்ளையும்!

பட்டாபியின் கால்கள் கீழே இறங்கவே தள்ளாடின. அந்த வண்டி நிற்கிறதா, இன்னும் தன்னை இழுத்துச் செல்கிறதா என்று கூடத் தெரியாத பிரமையில் கீழே குதித்து அவர்களை வெறித்தான்.

''பட்டாபியா! நீ என்ன இப்படிப் பண்ணிவிட்டே? ஆள் இருக்கிற இடம் தெரியாமல் போவாயோ ஒருத்தன்....! நேற்றுத்தான் ஜனகாவுக்குக் கோவிலிலே வைச்சுக் கல்யாணத்தை முடிச்சேன்...'' ஒரு விநாடி மாப்பிள்ளையைத் திரும்பிப் பார்த்தாள் மாமி. அவன் எங்கோ பராக்குப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் மீண்டும் தாழ்ந்த குரலில் அவசரமாகப் பேசினாள்: ''ஊரிலே ஜனகாவைப் பத்தின புரளி அதிகமாகப் போயிடுத்து. அந்தச் சமயத்திலே இந்தப்புள்ளி வந்து சேர்ந்தார். ஜனகாவைப் பார்த்துட்டுத் தாமாகவே அவளைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்னார். அவர் காதுலே எதுவும் விழறதுக்கு முந்திக் கல்யாணத்தை முடிச்சுட்டேன்.''

ஏதாவது பேசவேண்டுமென்ற எண்ணத்தில் தவித்தான் பட்டாபி. எவ்வளவோ பேச வேண்டுமென்று துடித்தாள் ஜனகா என்பதை அவளது படபடத்த இமைகள் அறிவித்தன. அவன் உருவை ஒருமுறை விழியால் விழுங்கிக் கொண்டு முகத்தைத் திருப்பிக்கொண்டாள் அவள்.

வண்டி ஊதியது. அவன் காத்துக் கிடந்து ஏறிவந்த வண்டி அவர்களை ஏற்றிச் சென்றது. அந்த ஸ்டேஷனில் அவன் மீண்டும் ஒரு கம்பமாக நின்றான்.



வீடுகள்
எடுப்பாயிருக்க!

லினோலியம் விரிப்புகளை தரைகளில் விரித்து கவலையற்ற நல்வாழ்க்கை நடத்துங்கள். கண்ணைககவரும் நிறங்களில் எழில்கொண்ட பல தினுசு லினோலியங்கள் கிடைக்கும்.

லினோலியம் தரைவிரிப்புகள் நல்வாழ்வுக்கு ஏற்றவை

இந்தியா லினோலியம்ஸ் லிட்.. 14. ராதா பஜார் லேன் கல்கத்தா -1

தென்னரங்கத்து இன்னமுதன்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்


இலங்கை ஓர் அழகான தீவு. இந்தியத் தாயின் கழுத்தில் அணியும் திலகப் பதக்கம் போல் அமைந்த தீவு. ஆகவே அதனை திலகத் தீவு என்றனர் கவிஞர்கள். நாற்புறமும் கடல் சூழ்ந்து நடுவே மலைச்சிகரம் உயர்ந்து எங்கும் பசுமை கொழித்துக் கொண்டிருக்கும் நாடு அது. காடெல்லாம் பசுமை, மலை எல்லாம் பசுமை, காணும் வயலெல்லாம் பசுமை என்னும்படி தென்னை, கமுகு, வாழை நிறைந்திருப்பதுடன் மலைச் சிகரங்களை யெல்லாம் தேயிலைச் செடிகள் வேறே மூடிக்கொண்டிருக்கும். அந்த நாட்டில் கருமையே இல்லை. வானுலாவும் கார்மேகங்களையும், தெருக்களில் பறந்து செல்லும் மோட்டார்கார்களையும் தவிர வேறு கருமையை அங்கு காண்பதே அரிது. இப்படி வளம் கொழிக்கும் இலங்கையில், சைவம் என்றும் நிலைபெற்று நின்றிருக்கிறது. பௌத்தம் வந்து சேர்ந்திருக்கிறது. ஆனால் இந்த வைணவம் மட்டும் அங்கு சென்று சேரவில்லை. அந்த மகாவிஷ்ணுவே அங்கு செல்ல மறுத்திருக்கிறார். 'பாஸ் போர்ட்' 'விசா' எல்லாம் கிடைக்கவில்லையோ என்னவோ? விஷ்ணு அங்கு செல்ல மறுத்த காரணம் தெரிய நாம் பழைய இதிகாச காலத்துக்கே செல்ல வேண்டும். இலங்கையில் மலைமேல் கோட்டை கட்டிக்கொண்டு வாழ்ந்திருக்கிறான் இராவணன். அவன் அயோத்தி அரசனான ராமனின் மனைவி சீதையை எடுத்துச் சென்று அசோகவனத்தில் சிறை வைத்திருக்கிறான். சிறையிருந்த செல்வியை மீட்க ராமன் படை திரட்டிக்கொண்டு இலங்கைக்கே சென்றிருக்கிறான். ராவணன் தம்பி விபீஷணன் ராமனுடன் சேர்ந்து அவன் வெற்றி பெற உதவியிருக்கிறான். ராவணன் வதம் முடித்துத் திரும்பும்போது, இலங்கையையே விபீஷணனுக்குத் தந்து அவனுக்கு அங்கே முடிசூட்டியிருக்கிறான். பின் தம் துணைவியாம் சீதையுடன் அயோத்தி திரும்பித் தானும் பட்டாபிஷேகம் செய்து கொண்டிருக்கிறான் ராமன். இந்தப் பட்டாபிஷேக விழாவுக்கு வந்த விபீஷணனுக்குப் பரிசாகத் தான் ஆராதித்து வந்த அரங்கநாதனையே கொடுத்திருக்கிறான். அரங்கனோடு கூடிய விமானத்தையே எடுத்துச் சென்ற விபீஷணன் காவிரிக்கரை சேர்ந்ததும் அங்கு நீராட எண்ணி விமானத்தை அங்கே இறக்கி யிருக்கிறான். அவ்வளவுதான்; நீராடிவிட்டு விபீஷணன் விமானத்தை எடுத்தால் அவனால் எடுக்க முடியவில்லை. அரங்கனும் அந்த இடத்தை விட்டுக் கிளம்ப மறுத்துவிடுகிறான். விபீஷணன் ஏமாந்த்தோடே, வெறுங் கையனாகவே இலங்கைக்குத் திரும்பி யிருக்கிறான். என்றாலும் விபீஷணன் வேண்டிக் கொண்டபடி இலங்கையை நோக்கிய வண்ணமாகவே காவிரிக் கரையில் சயனித்து விடுகிறான் அரங்கன்.

குடதிசை முடியை வைத்து,
குணதிசை பாதம் நீட்டி,
வடதிசை பின்பு காட்டி,
தென்திசை இலங்கை நோக்கி

அரவணையில் துயில்பவனாகத்தானே இன்னும் காட்சி கொடுக்கிறான் அரங்கநாதன். அந்த அரங்கநாதனைக் காணவே ஸ்ரீரங்கம் செல்கிறோம் நாம் இன்று.

அரங்கன் கோயிலுக்குச் செல்ல வழி ஒன்றும் சொல்ல வேண்டாம். 'பணியரங்கப் பெரும்பாயல் பரஞ்சுடரை யாம் காண, அணியரங்கம் தந்தானை அறியாதார்' என்று ஆயிரம் வருஷகாலத்துக்கு முன்பே பாடி வைத்திருக்கிறான் **கவிச்சக்கரவர்த்தி கம்பன்**. அவனைத் தென்தமிழ் நாட்டினர் மாத்திரம் அல்ல, மற்ற வடநாட்டினருமே நன்கு அறிவார்கள். திருச்சியை அடுத்த ஸ்ரீரங்கம் ஸ்டேஷனில் இறங்கி மேற்கு நோக்கி நான்கு பர்லாங்கு நடந்தால் கோயில் வாயில் வந்து சேரலாம். இது தவறு. கோயிலின் பிரதான வாயிலுக்கு வருமுன் கோயிலைச் சுற்றிக் கட்டியுள்ள மதில்களை யெல்லாம் கடக்கவேணுமே.


ரங்க விமானம்



மதில் முக்கால் மைல் சதுர விஸ்தீரணத்தை நிறைத்துக் கொண்டிருக்கிறது. ஏழாவது மதில் சுவரின் நீளம் 3072 அடி. அகலம் 2521 அடி என்றால் கோயில் எவ்வளவு பெரியது என்று தெரியுமல்லவா. சப்த லோகங்களுமே இக்கோயிலின் சப்தபிராகாரங்களாக அமைந்திருக்கின்றன என்பர். இங்கு இந்த மதில்கள் எழுந்த வரலாறே சுவையானது. அன்று விபீஷணன் கொண்டு வந்த ரங்க விமானமும், ரங்கநாதனுமே காவிரி மணலில் புதைந்து விடுகிறார்கள். காடு மண்டிவிடுகிறது. தர்ம

வர்மா என்னும் சோழமன்னன் வேட்டைக்கு வந்தபோது ஒரு கிளி அவன் காதில் அங்கு ரங்க விமானம் புதையுண்டு கிடந்த ரகசியத்தைச் சொல்கிறது. காடு வெட்டி நிலந்திருத்திச் சோழமன்னன் ரங்க விமானத்தை வெளிக் கொணர்கிறான். கோயில் கோபுரம், விமானம், மண்டபம், எல்லாம் கட்டி அரங்கநாதனை அங்கு கிடத்தி வைக்கிறான். கிளி சொன்னதை மறக்காமல் **கிளி மண்டபம்** ஒன்றையும் கட்டுகிறான். தன் பெயரால் தர்மவர்மா பிரதக்ஷிணம் ஒன்றையும் எழுப்புகிறான். இவன் பின்னர் வந்த மன்னரும் மக்களும் ஒவ்வொரு பிராகாரமாகக் கட்டி முடிக்கிறார்கள். இப்படி எழுந்த பிரதக்ஷிணங்களும் மதில்களும் ஆறு. அவை தாம் ராஜ மகேந்திரன் பிரதக்ஷிணம், குலசேகரன் பிரதக்ஷிணம், ஆலி நாடன் பிரதக்ஷிணம், அகளங்கன் பிரதக்ஷிணம் திரு விக்ரமன் பிரதக்ஷிணம், மாடமாளிகைப் பிரதக்ஷிணம் என்பவை. ஏழு மதில்களையும் ஏழு ஆடைகளாக வளைந்திருக்கிறார் அரங்கநாதன் என்பர். இதனையே அடைய வளைஞ்சான் என்றும் கூறுவர் பாமர மக்கள். இந்த மதில்கள் எல்லாம் யார் யாரால் எப்போது எப்போது கட்டப்பட்டன என்று விரித்தல் இயலாது. ஒன்றுமட்டும் சொல்லாமல் இருக்கவும் முடியாது. இந்தக் கோயிலுக்குப் பெரிய மதிலைக் கட்டியவன் ஆலி நாடனான **திருமங்கை மன்னனே**. அவனது காதலி குமுதவல்லியின் விருப்பப்படி பரம பாகவதர்களுக்குத் ததியாராதனை கைங்கர்யம் செய்வதை மேற்கொள்கிறான். தன் கையில் பொருள் இல்லாதபோதெல்லாம் வழிப்பறி செய்கிறான். இவனுக்கு அருள் பாலிக்கவே அரங்கனும் அவன் துணைவி ரங்கநாயகியும், திருமணத் தம்பதிகளாக வந்து இந்த மங்கை மன்னனும் கலியன் கையில் சிக்கிக் கொள்கிறார்கள். கலியனும் அந்த ஆடை அணிகளையெல்லாம் கவர்ந்து கொள்கிறான். கவர்ந்த பொருளையெல்லாம் மூட்டையாகக் கட்டியபோது அதை எடுத்துச் செல்ல இயலாதவனாக நின்றிருக்கிறான். அப்படி எடுக்க இயலாதபடி செய்த மந்திரம் என்ன என்று கேட்டபோது, மணவாளக் கோலத்தில் வந்த அரங்கன் நாராயணனது அஷ்டாக்ஷர மகா மந்திரத்தையே உபதேசித்திருக்கிறான். இவ்வாறு ஞானோதயம் பெற்ற கலியனே பின்னர் திருப்பதிகள் பலவற்றுக்கும் சென்று பாடிப் பாடி நாராயணனைப் பரவி யிருக்கிறான். தேடிச் சேர்த்த பொருளை எல்லாம், அரங்கனுக்கு மதில் கட்டுவதிலேயே செலவழித்திருக்கிறான். இவன் கட்டிய மதிலே ஆலி நாடன் திருமதில் என்ற பெயரோடு நின்று நிலவுகிறது இன்றும்.

ஏழு பிராகாரங்களோடு கூடிய இந்தக் கோயிலுக்கு இருபத்தொரு கோபுரங்கள். அவைகளில் முக்கியமானவை இரண்டு: ஒன்று கிழப்பக்கம் உள்ள வெள்ளைக் கோபுரம். மற்றொன்று தென்பக்கம் உள்ள நான்முகன் கோபுரம். கோயிலுள் நுழையும் பிரதான வாயில் இந்த நான்முகன் கோபுர வாயிலே. தென்திசை நோக்கி அரவணையில் துயிலும் அரங்கநாதனைத் தரிசிக்கத் தென் வாயில் வழியாகச் செல்வதுதானே முறை. இந்த



வெள்ளைக் கோபுரம்

வாயில் வரை வண்டியும் காரும் செல்லும். இதற்கும் தெற்கே மண்டபங்கள், முற்றுப் பெறாத கோபுரம் எல்லாம் உண்டு. இனி நாம் நான்முகன் கோயில் வாயிலைக் கடந்து உள்ளே செல்லலாம். அப்போது உங்கள் முன் நிற்பது ரங்க மண்டபம். அதையும் முந்திக் கொண்டு ஒரு நாலுகால் மண்டபம். அதில் முறுக்கு மீசையும் திருகிக் கட்டிய கொண்டையும் உடைய ஒரு பெரியவர் கூப்பிய கையராய் நிற்பார் சிலை உருவில். இவரையே கம்பர் என்பார்கள். அந்த ராமகாதை எழுதிய கவிக் கம்பருக்கும் இந்தச் சிலைக் கம்பருக்கும் யாதொரு ஒற்றுமையும் காண இயலாது. இவர் அந்த ரங்க மண்டபம் கட்டிய நாயக்க மன்னர்களில் ஒருவராக இருக்கலாம். ரங்க மண்டபம் - கார்த்திகை மண்டபம் எல்லாம் கடந்துதான் பிரதான கோயிலுள் நுழைய வேணும். அங்குள்ள பெரியதொரு மண்டபத்தில் கருடாழ்வார் பெரிய வடிவில் அரங்கநாதனைச் சேவித்த வண்ணம் நின்று கொண்டிருப்பார். அவரையும் வணங்கிவிட்டு மேல் நடந்தால் அடுத்த கட்டு. அங்கே பொன் போர்த்த கொடி மரம் பலிபீடம் எல்லாம். அவை இரவில் மின்விளக்கொளியில் கண்டால் சோதிமயமாக இருக்கும். இவற்றை யெல்லாம் கடந்துதான் கருவறைப் பக்கம் வர வேணும். இங்குள்ள கருப்பக்கிருஹம் பிரணவாகாரத்தில் அமைந்திருக்கிறது. அந்தக் கருவறையின் மேல் உள்ள விமானம்தான் **ரங்க விமானம்**. அந்த விமானத்துக்கே பொன் தகடு வேய்ந்து அதில் பரவாசுதேவனையும் உருவாக்கி நிறுத்தி யிருக்கிறார்கள். இந்த விமானமே ஆதியில் விபீஷணன் எடுத்து வந்த விமானம் என்பர். இந்த விமானத்தோடு கூடிய கருவறையிலேயே அரங்கநாதன் அறிதுயில் கொள்ளுகிறான். 'கருது செம்பொனின் அம்பலத்தில் கடவுள் நின்று நடிக்கிறான்'



என்று பாடிய கவிஞன், இந்தக் 'காவிரித் திருநதியிலே கருணை மாமுகிலை துயில்வதையும்' பாட மறக்கவில்லை. சுமார் பதினைந்து அடி நீளமுள்ள அந்தக் கருவறையை முழுவதும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறான் ஆதிசேடன். அவனது பாயலில் அழகாகக் கண் வளருகிறான் அரங்கநாதன். இரண்டு திருக்கரங்களே அவனுக்கு. ஒரு கை தலையைத் தாங்க மற்றொரு கை முழங்கால்வரை நீண்டு கிடக்கிறது. ஆதிசேடனும், அரங்கநாதனும் சுதை உருவில் உருவானவர்களே. ஆதிசேஷன் பொன்முலாம் பூசிய தகடுகளால் மொதியப்பட்டிருக்கிறான். அரங்கனோ நல்ல கன்னங்கரிய வடிவினனாகத் தைலக் காப்புக்குள்ளே புதையுண்டு கிடக்கிறான். அகன்ற மார்பிலே முத்தாரம், கௌஸ்துபம், வனமாலை எல்லாம் புரள்கின்றன. தலையிலே நீண்டுயர்ந்த கிரீடம் அணி செய்கிறது. இத்தனை கோலத்துடன் இருக்கும் அவன் தனிமையையே நாடியிருக்கிறான். என்றும் இணைபிரியாத துணைவியான ஸ்ரீதேவி பூதேவிகளுக்குக்கூட அங்கு இடம் இல்லை. நாபிக் கமலத்திலிருந்து பிரம்மாவும் எழவில்லை. இதற்கெல்லாம் ஈடு செய்யவே அந்தக் கிடந்த கோலத்தின் முன்பு நின்ற கோலத்தில் செப்புச் சிலை வடிவில் அழகிய மணவாளன் இரண்டு அணங்குகளோடு தங்க மஞ்சத்தில் நின்று கொண்டிருக்கிறான். இந்த உத்சவரே வெளியில் எல்லாம் எழுந்தருளிப் பக்தர்களுக்கு எல்லாம் காட்சி தருகிறார். இருவரையும் கண்குளிரத் தரிசித்த பின் வெளிவந்து பிராகாரங்களை யெல்லாம் சுற்றிக் கொண்டு மேல் நடக்க வேணும்.

இந்த அரங்கநாதன், தன்னை ஆராதித்து வந்த ராமனைப்போல் ஏகபத்தினி விரதன் அல்ல. எப்போதும் உள்ள ஸ்ரீதேவி பூதேவியோடு இன்னும் ஐந்து பேர்கள் இவரது மனைவியர். அதனால்தானோ என்னவோ தனிமையை விரும்பிக் கருவறையில் ஒருவரையுமே நுழைய விடாமல் கதவடைத்துக் கொண்டிருக்கிறான். எத்தனை மனைவியர் இருந்தாலும் இவரது பட்டமகிஷி ஸ்ரீரங்க நாயகிதான். இவள் தனிக் கோயிலில் குடியிருக்கிறாள். ரங்கநாதரைத் தரிசித்தபின் கொஞ்சம் சுற்றி வளைந்து நடந்தே இவள் கோயிலுக்குச் செல்ல வேணும். செல்லும் வழியிலே ஒரு மண்டபம். அங்குதான் கம்பனது ராமாயண அரங்கேற்றம் நடக்கும்போது சித்திரத்தில் தீட்டிய நரசிம்மமே தலையசைத்துச் சிரக்கம்பம் செய்து பாராட்டியது என்பது வரலாறு. அந்த மண்டபத்தை எல்லாம் கடந்தே ஸ்ரீ ரங்கநாயகி சந்நிதிக்கு வர வேணும். அவள் படிதாண்டாப் பத்தினி. அவள் உத்சவகாலங்களில்கூடத் தன் கோயிலை விட்டு வெளியே வருவதில்லை. ஸ்ரீ ரங்கநாதர் தான் அவளைத் தேடிக் கொண்டு அவள் கோயிலுக்கு வருகிறார். ரங்கநாயகிக்கு அடுத்தபடியாக ரங்கநாதருக்கு உகந்த மனைவி உறையூர் கமலவல்லிதான். உறையூரிலிருந்து அரசாண்ட நந்த சோழன் மகள் அவள். தாமரை ஓடையிலே கமல மலர்களோடு மலராகப் பிறந்தவள் இக்கமலவல்லி. இவள் அரங்கநாதனிடம் ஆராத காதல் கொள்கிறாள். அதிரூப சுந்தரியான இவளை மணக்க இந்த ரங்கநாதருக்குக் கசக்கவா செய்யும்? அவளையும் மணந்து கொள்கிறார். அதன்பின் அரங்கத்திலும் உறையூரிலுமாக இருந்து வாழ்கிறார். இக்கமலவல்லியைப்போலவே சேரமன்னன் குலசேகரப் பெருமானது மகள் சேரகுலவல்லியும் ரங்கநாதனையே காதலித்து மணந்து கொள்கிறாள். இவர்களைத் தவிர, ஸ்ரீ வில்லிபுத்தூரில் பெரியாழ்வார் திருமகளாக அவதரித்த ஆண்டாளும் இந்த ரங்க விடத்திலே காதல் கொள்கிறாள். அவளுக்கும் இந்த அரங்கநாதன் ரங்க மன்னராகவே சேவை சாதித்து அவளையும் மணந்து கொள்கிறான். இவர்கள் எல்லாம் போகட்டும்; டில்லி சுல்தானின் மகள் ஒருத்தியின் உள்ளத்திலும் அல்லவா இவன் காதல் விதை விதைக்கிறான். முகமதியர்கள் இந்த நாட்டைப் படையெடுத்து இங்குள்ள கோயில் கோபுரங்களையெல்லாம் இடித்துத் தரைமட்டமாக்கியதெல்லாம் சரித்திரம் கூறும் உண்மை. இப்படிப் படையெடுத்த பாதுஷா ஒருவன், ஸ்ரீரங்கம் வரை வந்து இங்குள்ள பல விக்கிரகங்களை எடுத்துச்சென்றிருக்கிறான். விக்கிரகங்களோடு விக்கிரகமாக அழகிய மணவாளனுமே சென்றிருக்கிறான். ஆனால் பாதுஷாவின் மகள் இந்த அழகிய மணவாளனின் அழகில் ஈடுபட்டு அவனை மட்டும் தன் அந்தப்புரத்துக்கு எடுத்துச் சென்றிருக்கிறாள். அவன் அழகுக்கு அடிமையாகி விடுகிறாள். பின்னர் ஸ்ரீரங்கத்து ஸ்தலத்தார் பாதுஷாவை அணுகி, அவன் எடுத்துச் சென்ற அழகிய மணவாளனைத் திரும்பத் தரக் கேட்டிருக்கிறார்கள். பாதுஷாவும் தன் மகள் தூங்கும் சமயம் அறிந்து அழகிய மணவாளனை அவர்களிடம் கொடுத்து

அனுப்பி யிருக்கிறான். விழித்தெழுந்த பாதுஷாவின் மகள் தன் அழகிய மணவாளனைக் காணாது. அவனைத் தேடி ஸ்ரீரங்கத்துக்கே ஓடி வந்திருக்கிறாள். இத்தனை பிரேமை கொண்ட மங்கையை இந்த அரங்கநாதன் பின்னர் மணந்து கொண்டதில் வியப்பில்லை. இந்தப் பாதுஷா மகளே துலுக்க நாச்சியார் என்ற பெயரிலே, ஸ்ரீரங்கம் கோயிலுக்குள்ளேயே தனிக்கோயிலில் இருக்கிறாள். சித்திர உருவிலே இக்கோயிலில் உறையும் பெருமானுக்கு நிவேதனம் ரொட்டியும் வெண்ணெயும். அக்காரடிசிலும் அரவணையும் அந்தப் பாதுஷா மகளுக்கு ஒத்துக் கொள்ளாதே. பின்னர் அவள் கொடுப்பதைத்தானே இவர் ஏற்றுக் கொள்ள வேணும். இதற்கென்றே மாமனாராகிய பாதுஷா கொற நாட்டில் இரண்டு கிராமங்களையே சீதனமாக வேறு கொடுத்திருக்கிறாராம்.

இப்படியெல்லாம் மனைவியர் பலரைச்சேர்த்துக்கொண்டிருக்கிறாரே, இது சரிதானா என்று ஒரு கேள்வி. கண்ணனாகக் கோகுலத்தில் அவதரித்தபோதும் இவர் எண்ணிறந்த கோபியரது காதலனாக வாழ்ந்திருக்கிறாரே. பெருமானைப் பதியாக அடைய உயிர்களாகிய பக்தர்கள் எல்லோரும் எப்போதுமே தவங்கிடக்கிறார்கள். அருளாளனான பெருமானும் அவர்களையெல்லாம் தன் காதலிகளாக ஏற்றுக் கொள்ளத் தயங்குவதில்லை. இந்தத் தத்துவ உண்மையை விளக்குவதற்கே இத்தனை திருவிளையாடல்கள் என்று மட்டும் நாம் தெரிந்து கொண்டால் உண்மை என்ன என்று விளங்கும் அல்லவா?

அரங்கனையும் அவனது துணைவியரையும் தரிசித்து விட்டுத் திரும்பி வெளியே வரும்போது கலை அன்பர்கள் கண்டு களிக்க வேண்டிய சிறிய கோயில் ஒன்றும் இங்கு உண்டு. அதுதான் ரங்க மண்டபத்தை அடுத்த வேணு கோபாலன் சந்நிதி. அங்கே உள்ள வேணு கோபாலனைவிட அவனைச் சுற்றி நிற்கும் கோபியர்கள் அழகு அழகான சிற்ப வடிவத்தினர். அரங்கத்து அரவணையான் கோயில் சரித்திரத்தைப்பற்றி எளிதாகச் சொல்லிவிட முடியும் என்று தோன்றவில்லை. ராமானுஜர், கோயில் நிர்வாகத்தைச் சீர்செய்திருக்கிறார். மணவாள மாமுனிகள் கைங்கர்யங்கள் பல செய்திருக்கிறார். விஜயநகர சாம்ராஜ்ய நாயக்க மன்னர்களோ கோயிலை விரிவாகக் கட்டிப் பல நிபந்தங்கள் ஏற்படுத்திச் சிறந்த பணியைச் செய்திருக்கிறார்கள்.

இந்த அரங்கத்து அரவணையானை ஆழ்வார்கள் எல்லோரும் பாடியிருக்கிறார்கள். பதின்மர் பாடிய பாண்பெருமாள் என்ற புகழ் இவர் ஒருவருக்குத்தானே.

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே

என்ற தொண்டர் அடிப் பொடியாரது பாடலை எத்தனை தரம் வேண்டுமானாலும் பாடிப் பாடிப் பரவலாமே. 'திருவரங்கப் பெருநகருள், தெண்ணீர்ப் பொன்னி திரைக் கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும் கருமணியைக் கோமளத்தைக் கண்டு களிக்கும்' குலசேகரரது பக்தி எவரது பக்திக்குக் குறைந்தது? அரங்கத்து இன்னமுதாரது குழல் அழகிலும், வாய் அழகிலும் தன்னை இழந்து நின்றவள் ஆண்டாள். பெரியாழ்வாரோ,


எய்ப்பு என்னை வந்து நலியும்போது
அங்கு ஏதும் நான் உன்னை
நினைக்கமாட்டேன்
அப்போதைக்கு இப்போதே சொல்லி
வைத்தேன், அரங்கத்து அரவணைப்
பள்ளியானே!

என்று முன்கூட்டியே எச்சரிக்கை செய்து வைத்து முக்தி பெற வழி சொல்லுகிறார். அரங்கனும் இவர்களுக்கெல்லாம் அருள் செய்ததுபோல், நமக்கெல்லாம் அருள் செய்யத் தவறமாட்டார் என்று உறுதியோடு ஒரு பக்தர் கூறுகிறார்:

நாவுண்டு, நீ உண்டு,
நாமம் தரித்தோதப்
பாவுண்டு நெஞ்சே
பயமுண்டோ — பூவுண்டு
வண்டுறங்கு சோலை
மதில் அரங்கத்தே உலகை
உண்டு உறங்குவான்
ஒருவன் உண்டு.

சென்ஸஸ் 1961

பிப்ரவரி 10உ முதல் மார்ச் 5உ வரை



வரப்போகும் ஜனகணிதையானது இதுவரை நம் நாட்டில் எடுக்கப்பட்டுள்ளவைகளை விட மிகவும் விரிவானதாக இருக்கும். இதை வெற்றிகரமாகச் செய்து முடிக்க லக்ஷக்கணக்கான நபர்கள் ஒன்று சேர்ந்து உழைத்து வருகிறார்கள்.

ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்டுள்ள வேலைகளை அவர்கள் நன்கு தெரிந்து கொள்ளும்படி போதிக்கப்பட்டு வருகிறார்கள். மேலும் பிரத்தியட்சப் பயிற்சியும் விரிவாக அளிக்கப்படும்.

கணக்கெடுக்க ஒவ்வொருவரிடமும் அவர்கள் வருவார்கள். மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் நீங்கள் ஒவ்வொருவருமே முக்கியமானவர்கள்தான்.

உங்களால் முடிந்தவரை அவர்களுக்கு உதவுங்கள்.

நீங்கள் அளிக்கும் எல்லா விவரங்களும் மிகவும் ரகசியமாகவே இருக்கும். யாருக்கும் தெரிவிக்கப்பட மாட்டாது

இந்திய அரசாங்கத்தால் வெளியிடப்பட்டது

DA-60/565

புரியாத உள்ளம்

பீஷ்மன்

மணி மூன்றுக்கு மேல் ஆகி விட்டது. நான்போகும் போது. சாப்பாடு கிடைப்பது சந்தேகம்தான். இருந்தாலும் ஒரு நைப் பாசை. ஒரு வேளை சாப்பாட்டை வைத்துக் கொண்டு காத்திருந்தால்...?

மண்டையைப் பிளக்கும் வெய்யிலில் வேகமாக நடையைக் கட்டினேன். மூங்கில் கதவு சாத்திக் கிடந்தது.

பாத்திரங்களைத் தேய்த்துக் கவிழ்த்து விட்டு, வாசற் குறட்டில் தலை சாய்த்துக் கொண்டு மாமி குறட்டை விடத் தொடங்கி விட்டாளோ? வெய்யிலில் நடந்து வந்த களைப்பும் பசியின் மயக்கமும் நினைக்கும் போதே தலையைக் கிறக்கின. நல்லவேளை! கை வைத்ததுமே கதவு திறந்து கொண்டது.

பளிரென்று அடிக்கும் வெய்யிலில் மண் முற்றத்தில் விரித்திருந்த சாக்கிலே மிளகாய் வற்றல் காய்ந்து கொண்டிருந்தது. தொட்டிக்குக் கீழே கிடந்த எச்சில் இலையைக் கொத்திக் கொண்டிருந்த காகம்தான் தன் சுக்கிரப் பார்வையால் என்னை வரவேற்றது.

கதவுக்குப் பின்னால் மூன்று கால்களுடன் காலம் காலமாய்த் தவம் கிடக்கும் கட்டிலில் சாக்குத் தலையணை கவனிப்பாரற்றுக் கிடந்தது. கோபாலய்யர் வெளியே போய்விட்டார் போலிருக்கிறது. இல்லையென்றால், இந்நேரம் இந்தக் கட்டிலை முழுக்க ஆக்கிரமித்துக் கொண்டு நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டிருப்பாரே! சாப்பிடும் வேளை தான் அவருக்கு உள்ளே வேலை. மற்றப் பொழுதில் வீட்டிலிருந்தால் அவருக்குக் கட்டில்தான் கதி. அநேகமாய் வெய்யில் கொளுத்தும் போதுதான் அவர் வீட்டில் தங்குவார். மற்ற நேரங்களில் பஜனை மடத்திலோ, கோவில் வாசலிலோ, இல்லை சாமா வீட்டுத் திண்ணையில் நடக்கும் சீட்டுக் கச்சேரியிலோதான் அவரைப் பார்க்கலாம். குடும்பக் கவலை யெல்லாம் மாமிக்குத்தான். நான்கு குழந்தைகள்! பெரியவன் ஐந்தாம் படிவம் படித்துக் கொண்டிருந்தான். அடுத்ததும் பிள்ளைதான். ஏழாம் வகுப்போ, எட்டாம் வகுப்போ படித்துக் கொண்டிருந்தான். கடைசி இரண்டும் பெண்கள். ஒன்றுக்குப் பத்து வயதும் அடுத்ததற்கு ஏழு வயதும் இருக்கலாம். இந்தக் குடும்பத்தை மாமிதான் 'சம்ரட்சித்து'க் கொண்டிருந்தாள்!

என்னைப்போல, வயிற்று நோய்க்கு ஆளாகி ஹோட்டல் சாப்பாட்டுக்குப் பயந்து நடுங்கும் நான்கைந்து தனிக் கட்டைகள் அந்த வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். காலையில் சில்லறையாய் இட்டிலி வியாபாரம் வேறு நடந்து கொண்டிருந்தது. மத்தியானம் ஏதாவது பட்சணங்கள் பண்ணி வைத்திருப்பாள் மாமி. சாயங்காலம் பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் பெரிய பெண் ஒரு தூக்குச் சட்டியில் அவற்றை எடுத்துக் கொண்டு அக்ரஹாரத் தெருவில் வீடு வீடாய் ஏறி இறங்கி விலையாக்கி விட்டு வருவாள். கோபாலய்யர் கொடுத்து வைத்தவர்தான்! இயந்திரமாய் உழைத்து அவருக்கு ஒரு கவலையும் வைக்காமல் மாமி குடும்பத் தேரை ஓட்டி வருகிறாளே!

செருப்பைக் கழற்றிக் கட்டிலுக்கடியில் போட்டு விட்டு, தொட்டித் தண்ணீரில் செம்பை முக்குகையில் அரவம் உணர்ந்து மாமி உள்ளேயிருந்து வெளியே வந்து விட்டாள். வழக்கமாகக் காணும் மங்கலப் புன்னகையைக் காணோம். சிவந்திருந்த கண்களைப் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டு, ''வாங்கோ!'' என்றாள் மாமி.

''நேரம் ரொம்ப ஆயிடுத்தே. சாப்பாடு இருக்கோ?''

''உங்களுக்கு மட்டுமென்ன, இன்னும் மூணு பேருக்குக் காணும் சாப்பாடு இருக்கு!'' என்றாள் மாமி. சொல்லிவிட்டு உள்ளேபோய் இலைபோட்டுத் தண்ணீர் எடுத்து வைத்தாள்.

''இருக்காது என்றுதான் நினைத்தேன்'' என்று சொல்லிக் கொண்டே இலைமுன் உட்கார்ந்தேன்.

மாமி மௌனமாகப் பரிமாறிக் கொண்டிருந்தாள். நிலையடியில் நிழல் தட்டியது.

''மணி மூணாயிடுத்தே, சாப்பிட்டாயா இல்லையா, கோமு?''

உள்ளே நான் சாப்பிடுவதைப் பார்த்ததும் பேசிக்கொண்டே வந்த அடுத்த வீட்டுப் பாட்டி நிலையடியிலேயே நின்று விட்டாள்.

''நீங்க சாப்பிடலை இன்னும்?'' என்றேன்.

மாமி வெறுமனே தலையை ஆட்டினாள்.

''கோபாலன் எதற்கோ கோபித்துக் கொண்டு போயிட்டானும். சாப்பிடாமல் போயிட்டான். இவள் என்னமோ மறுகி மாருக போகிறாள். எங்கே போகப் போகிறான்? பஜனை மடத்திலோ, ஓட்டலிலோ கொட்டிண்டு சாமா வீட்டுத் திண்ணையில் கச்சேரிக்கு உட்கார்ந்திருப்பான். இருட்டினதும் தன்னாலே திரும்பி வரான்!''

''இல்லே, பாட்டி...'' எதையோ சொல்ல வந்த மாமி ஏனோ நிறுத்திக் கொண்டாள். இடது கையில் சிப்பலில் சாதத்துடனும் வலது கையில் அகப்பையுடனும் நின்ற அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தேன். மாமிக்குக் கண்கள் கலங்கியிருந்தன.

என் அன்னையைப் போல் நிற்கும் அவள் முகத்தில் துயரம் பொங்குவதைப் பார்க்கையில் எனக்குச் சாப்பிடப் பிடிக்கவில்லை. இந்த அம்மாளுக்குத்தான் கணவனிடம் எத்தனை அன்பு!

''எல்லாப் புருஷர்களையும் போல இருந்தால்தான் தேவலையே? ஒரு வேலையா வெட்டியா ஒன்றும் கிடையாது. கையொடிய

வேலை செய்து இவள் சம்பாதிக்க மூணு வேளையும் உட்கார்த்தி வைச்சுச் சாப்பாடு போடறா. அதைப் பேசாமல் சாப்பிட்டுட்டுப் போகாமல்......'' பாட்டி தனக்கே உரிய ராகத்துடன் பேசிக் கொண்டிருந்தாள்.

'' பாட்டீ.......!''

'' சரிதாண்டி, நீ சும்மா இரு!'' என்று சொல்லிவிட்டு அவள் மேலே பேசிக்கொண்டு போனாள். '' அப்படி என்ன நடந்துவிட்டது இவன் கோபிச்சுக்கும்படி. 'மணி பன்னிரண்டாயிடுத்தே, சாப்பாடு உண்டா இல்லையா?' என்று கத்தினானாம். கைக் காரியமா இருந்திருக்கிறாள். 'இப்போ எந்த வேலை நட்டுக் கெட்டுப் போகிறது? அவ்வளவு அவசரம்? மா சலிச்சண்டிருக்கேன். குறையும் முடிச்சுட்டு வரேன். கொஞ்சம் இருங்கோ!'ன்னு சொல்லிவிட்டாளாம். இதிலே என்ன தப்போ தெரியலே. 'உனக்கு நான் அவ்வளவு இளப்பமாப் போயிட்டேனா' ஆகா ஊகூன்னு கத்திட்டு 'இனிமேல் இந்த வீட்டுப்படி மிதிக்கிறதில்லே'ன்னு வேறே சொல்லிட்டுப் போயிட்டானாம். எங்கே போயிடப் போறான்......?''

நான் சாப்பிட்டு முடித்திருந்தேன்.

சமையல் கட்டுச் சுவரோரமாய்ப் புடவைத் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு மாமி கேவிக் கொண்டிருந்தாள்.

'' நான் அப்படிப் பேசியிருக்கப் படாது, பாட்டி. தப்புத்தான் பண்ணிட்டேன். அவர் வந்து சேரணுமே? இப்படி அவர் கோபிச்சுக்கொண்டு போனதே இல்லே!''

'' கவலைப் படாதேங்கோ. கட்டாயம் வந்துடுவார். நீங்க வீணா பட்டினி கிடக்காதேங்கோ!''

வாய் வார்த்தையாறுதல் இதயப் புண்ணை ஆற்றி விடுமா?

என்ன துயரம் இது? வேறொருவனாயிருந்தால் இப்படி ஒரு மனைவி கிடைத்ததற்கு எவ்வளவோ பெருமைப் படுவான். இந்தக் கோபாலய்யர் அந்தத் தெய்வ நெஞ்சை இப்படிச் சித்திரவதை செய்கிறாரே!

எழுந்து சென்று கை கழுவிவிட்டுப் புறப்படத் தயாரானேன். நான் வந்த காரியம் ஆகிவிட்டது!

'' வரட்டுமா......?''

மாமி தலையை ஆட்டினாள். அப்புறம் என்ன நினைத்துக் கொண்டாளோ? ''அவரை எங்கேயாவது பார்த்தேளானால்.........'' என்று கூறி நிறுத்தினாள்.

''நானே சமாதானம் பண்ணி அழைத்துக்கொண்டு வந்துடறேன்!''

இப்படிப் பதில் சொல்லிவிட்டதன் மூலம் அவள் துயரத்தைப் போக்கி விட்டதாக நினைப்பு எனக்கு.

'' ஐயோ, அசட்டுப் பெண்ணே!'' என்று பாட்டி மாமியைக் கேலி பண்ணிக் கொண்டிருந்தாள்.

பாட்டி சொல்வது ஒருவகையில் சரிதானே? என்றாலும் அப்படி ஒப்புக்கொள்ள முடியவில்லை. கோபாலய்யரைப் போன்ற ஓர் ஆத்மாவுக்கு வாழ்க்கைப்பட்டும் இத்தனை குழந்தைகளைப் பெற்று வளர்த்துக்கொண்டு ஒரு கடுகடுப்போ சலிப்போ இல்லாமல் எப்போதும் மலர்ந்த புன்னகையுடன் வளைய வந்து கொண்டிருந்த மாமியை 'அசட்டுப் பெண்' என்று எப்படிச் சொல்ல முடியும்?

ஆபீசுக்குப் போகும் வழியில்தான் சாமா வீடு. கோபாலய்யர் அங்கே இருந்தால் மனிதரை எப்படியாவது சமாதானப்படுத்தி வீட்டில் கொண்டு சேர்த்துவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். ஏமாற்றமாகத்தான் போய்விட்டது. சாமா வீட்டுத் திண்ணை காலியாக இருந்தது. திண்ணையை அடுத்திருந்த நடையில் சாமா வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தார்.

'' ஜமா சேரலையாக்கும்?'' என்றேன் வாசலுக்கெதிரே போய் நின்று கொண்டு.

'' எங்கே தொலைஞ்சுட்டான்களோ? யாரையுமே காணோம்!'' என்று அவர் அங்கலாய்த்துக் கொண்டார்.

'' கோபாலய்யர் கூட வரலையாக்கும்......''

'' விடிஞ்சது முதலே காணோமே. வீட்டிலே ஒத்தாசையாப் பத்துத் தேச்சண்டிருப்பான்! எங்கே ஆபீசா......?''

போலிச் சிரிப்பை உதிர்த்துவிட்டு நடந்தேன். கோபாலய்யர் இங்கேயும்வரவில்லையா? எங்கே போயிருப்பார்? ஒருவேளை கோபித்துக் கொண்டு ஊரை விட்டே போய் விட்டாரோ? போய்விட்டால் தானென்ன குடியா முழுகி விடப் போகிறது; மாமி ஏனோ இப்படி மறுகித் தவிக்கிறாளோ!

நடக்கும்போது இதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு வந்தவன் ஆபீஸ் வேலையில் தலையைப் புதைத்துக் கொண்டதும் இதைப் பற்றி மறந்தே போனேன். வேலை முடிந்து வீட்டுக்கு வந்த பின்னர் கூடக் கோபாலய்யரைப் பற்றிய நினைப்பே எழவில்லை. ஏதேதோ அவலச் சிந்தனைகள் எழுந்து பொழுதைத் தின்று விட்டன.

எட்டு மணிச் சங்கு அலறியது. நான் சாப்பிடப் புறப்படும் வேளை அதுதான். சாப்பாட்டு நினைப்பு எழும்போதே கோபாலய்யரும் நினைவிலே வந்து நின்றார். மனுஷன் இன்னுமா வீட்டுக்கு வராமல் இருக்கப் போகிறார்? ஒருவேளைச் சாப்பாட்டுக்கு அந்த நேரம் தவறிவிட்டாலே அவருக்குப் பசி தாங்காதே! அப்படியாவது வேலை செய்து வளர்ந்த உடம்பா அது? - வேளைக்குத் தின்று விட்டு, சீட்டாட்டமும் பஜனையுமாய் மொழு மொழுவென்று வளர்ந்த கட்டை இனி வணங்கி எந்த வேலையில் ஈடுபட முடியும்? கோபம் தணிந்து பசி உணர்ந்ததும் தாமே திரும்பியிருப்பார். மாமிக்கு என்னவோ அஞ்ஞானம்!

இப்போது எனக்கு இப்படித்தான் தோன்றியது. ஆனால், சாப்பிட நான் வீட்டில் நுழைந்தபோது மாமிதான் சோக பிம்பமாய் உட்கார்ந்திருந்தாள். காலம் காலமாய் அவள் நெஞ்சம் சுமந்த துக்கமெல்லாம் இப்போது அந்த முகத்திலே வந்து தேங்கி நின்றன.

'' மாமா வரலையா இன்னும்...?''

இல்லையென்பதற்கு அடையாளமாக உதட்டைப் பிதுக்கினாள் மாமி. அவள் கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன. மத்தியானமெல்லாம் அழுதிருப்பாள் போலிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அங்கு போய் உட்கார்ந்து சம்பிர

மமாகச் சாப்பிட என்னவோ போலிருந்தது. நிலைவாயிலிலேயே நின்றேன்.

"குழந்தைகளெல்லாம் எங்கே காணோம்?"

"ராஜுவும் மணியும் அப்பாவைத் தேடிப் போயிருக்கா. பட்சணத் தூக்கை எடுத்துக் கொண்டுபோன குழந்தைகளையும் இன்னும் காணலே. எங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்கிறதுகளோ? - நீங்க வந்து சாப்பிடுங்களேன்!" என்றாள் மாமி.

"எனக்குப் பசிக்கலே. அவர் வந்துவிட்டாரான்னு தெரிந்துகொண்டு போகத்தான் வந்தேன்!" - முழுப் பொய்தான். ஆயினும் மனத்தில் ஊமை வேதனையொன்று உறுத்திக் கொண்டிருப்பதென்னவோ உண்மைதானே?

"ராத்திரி சாப்பிடாமல் படுத்துக்கலாமோ! ஏதோ ரெண்டு வாயாவது சாப்பிடுங்கோ!" மாமி இலை போட்டு விட்டாள். கடமை வேறு கவலை வேறு என்று உணர்ந்துவிட்டாற் போன்றிருந்தது அவள் செய்கை.

வேறு வழியில்லை. சாப்பிட்டேன். பெண்கள் இருவரும் வெற்றுத் தூக்குச் சட்டியுடன் திரும்பி விட்டார்கள்.

"ஒன்னுகூட மிச்சமில்லேயம்மா! எல்லாம் வித்தாச்சு!" - பெரியவள் ராஜியின் முகமெல்லாம் பெருமை பொங்கி வழிந்தது. சுருக்குப் பையிலிருந்து கலகலவென்று அம்மாவின் கையில் நாணயங்களைக் கொட்டினாள்.

இந்தச் சின்ன வயதில் வியாபாரத்தில் அவர்களுக்கு இருக்கும் பொறுப்பும் கரிசனமும்! - மாமி அவர்களையெல்லாம் அப்படித் தயாராக்கி விருக்கிறாள்.

குழந்தைகளை இவ்வளவு பொறுப்புணர்ச்சியுள்ளவர்களாக வளர்க்கத் தெரிந்த மாமி கோபாலய்யரை மட்டும் ஏன் அவர் போக்கிலேயே விட்டு விட்டாள்? முயன்று பார்த்துப் பயனில்லையென்று ஓய்ந்துவிட்டாளோ? - புரியவில்லைதான். சோர்ந்த முகங்களுடன் பையன் களிருவரும் வந்து சேர்ந்தார்கள்.

"பஜனை மடத்துப் பக்கமே அப்பா வரலையாம். சாமா மாமா வீட்டுக்கும் காலையிலிருந்துவரவில்லையாம்! கோவில்லே, வரலக்ஷ்மி விலாஸிலே போய்ப் பார்த்துட்டோம்!"

'அப்பாவைக் காணவில்லை' என்ற நினைப்பின் பயம் அந்த முகங்களில் அடித்து வைத்தாற் போலிருந்தது. முட்டைக் கட்டிக்கொண்டு சுவரில் சாய்ந்தவாறு அவர்கள் உட்கார்ந்து விட்டார்கள்.

மனசை ஏனோ சங்கடம் செய்தது.

"வந்துவிடுவார். எங்கேயாவது பக்கத்து ஊருக்குப் போயிருக்கலாமோ என்னவோ? நீங்க இலையைப் போட்டுக்கொண்டுசாப்பிடுங்கோ!"

மாமி தான் குழந்தைகளிடம் பேசினாள். பொங்கிவெழும் துயரத்தை அவர்கள் முன் எவ்வளவு எளிதாக மறைத்து விட்டாள்!

"போயிட்டு வரேன். நானும் தேடிப் பார்க்கிறேன்."

எனக்கே நான் ஏதோ சம்பிரதாய ஆறுதல் கூறுவதாக நன்றாகத் தெரிந்தது. அடி மனத்தில் வெட்கம் பிடுங்கித் தின்றது.

ரூமின் கதவைச் சாத்திக் கொண்டு புறப்பட்டேன்.

கோபாலய்யரை எங்கும் காணவில்லை.

முதல் நாள் இருந்த பரபரப்பை மாமி வீட்டில் அப்புறம் காணவில்லை. ஒன்று, இரண்டு, மூன்று....நாட்கள் ஊர்ந்து ஊர்ந்தே ஓடிவிட்டன. மாமியின் முகத்தில் மட்டும் முதல் நாள் தோன்றிய சோகம் அப்படியே அறைந்து வைத்தாற் போல் தேங்கிக் கொண்டிருந்தது. சாப்பாட்டுக் கடை வழக்கம் போல் நடந்து கொண்டுதான் இருந்தது. அங்கு போகும்போதெல்லாம் எனக்கு மனத்தை என்னவோ சங்கடம் செய்தது. மாமாவின் பேச்சை எடுப்பதற்குக் கூடத் தெம்பில்லாத நெஞ்சுடன் மௌனியாய்ப் போய் வந்து கொண்டிருந்தேன்.

ஒரு வாரம் ஓடி விட்டது. நானே இப்படிக் குமைகையில் அந்த உத்தமி எப்படித் தவிக்கிறாளோ? கொதித்துக் கொதித்து அடங்கி விடும் உலை நீரைப் போல் தனக்குத் தானே மறுகி மறுகி ஊமைச் சோகமாய் அவள் வேதனை ஒடுங்கி விட்டதோ?

காலைப் பத்திரிகைச் செய்தியில் அரை மனமாய் உட்கார்ந்திருந்தவனைப் பத்திரிகையில் வெளியாகி இருந்த ஒரு செய்தி தூக்கி வாரிப் போட்டது.

'நான்கூவேலி பெரியகுளத்திலா?'



நினைவு எழுப்பிய கேள்வியின் கொக்கியில் மாட்டிக் கொண்டு நினைவே தடுமாறியது.

'ஆள் அடையாளம் புரியவில்லை. நல்ல பெரிய சரீரம். யானைப் படித்துறையில் வந்து பிணம் ஒதுங்கி யிருந்ததாம்.'

பத்திரிகைச் செய்தியைப்படிக்க ஓடவில்லை. மாமாவாகத்தான் இருக்குமோ? மஞ்சள் பூசிய முகமும்நெற்றி நடுவில் காலணா அளவில் குங்குமப் பொட்டுமாய் நிற்கும் மாமியின் முகம் கண்ணெதிரே தெரிந்தது. மஞ்சள் குங்குமம் இழந்து...நினைக்க முடியவில்லையே!..

மாமியிடம் இதை எப்படித் தெரிவிப்பது? அவர்தாம் என்பது என்ன நிச்சயம்? நாமே போய்ப் பார்த்து விட்டு வந்தாலென்ன?

ஒன்றும் புரியாமல் நான் திணறித் தவித்துக் கொண்டிருப்பதைவிட, மாமி வீட்டுக்குப் போய் இந்தச் செய்தியை மெதுவாகத் தெரிவித்து, மூத்த பையனை அழைத்துக் கொண்டு நான்கனேரிக்குப் போய்ப் பார்த்து விட்டு வருவது உசிதம் என்று தோன்றியது.

பத்திரிகையைக் கையில் சுருட்டிக் கொண்டு பாரமேறிய மனத்துடன் நடந்தேன்.

நான் போகும் போது மூத்த பையனையும் அழைத்துக் கொண்டு எங்கோ புறப்பட்டுக் கொண்டிருந்தாள் மாமி.

மாமியின் முகத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை. அவர்களுக்கு முன்னதாகவே விஷயம் தெரிந்து விட்டதோ?

பையன் நான் வந்ததைக் கவனித்து விட்டான். "அம்மா! ராஜு மாமா!"

கலங்கியிருந்த கண்களுடன் மாமி என்னைத் திரும்பிப் பார்த்தாள்.

"நான்கனேரிக்குப் போயிட்டு வரேன்!"

என் நெஞ்சு ஒரு கணம் துடிப்பதை நிறுத்தியே விட்டது. என்னவோ சொல்ல வாயெடுத்தேன். குரல் எழவில்லை.

மாமிதான் பேசினாள்.

"இப்படித்தான் ஏதாவது நடக்குமின்னு எனக்குத் தெரியும். அவர் மானி. ஒரு பேச்சுப் பொறுக்கமாட்டார். நான் அப்படிப் பேசியிருக்கப்படாது. இத்தனை வருஷங்களாக எப்படியோ அவரை ஒரு வேலைக்கும் போக விடாமல் பார்த்துக் கொண்டு வந்தேன். இப்போ அறியாத்தனமாய் ஏதோ சொல்லப் போய் அவர் மறுபடியும் வேலைக்குப் போய்விட்டார்!"

"வேலைக்குப் போய்விட்டாரா....?"-என் அதிர்ச்சியை என்னால் தாங்க முடியவில்லை.

"ஆமாம். நான்கனேரியிலே ஓர் ஓட்டலிலே வேலை பார்க்கிறாராம். பக்கத்து வீட்டு ராமு பார்த்து விட்டு வந்து சொன்னான்."

"நிஜமாகவா....?"

"ஆமாம். அது தான் போய் அவர் காலிலே விழுந்து மன்னிப்புக் கேட்டு அவரை அழைத்துக் கொண்டு வரப் போகிறேன்."

மாமி புறப்பட்டு விட்டாள்.

நெஞ்சிலிருந்து பெரிய பளுவொன்று இறங்கி விட்டாலும் அவள் போக்கு எனக்குப் புரியாத புதிராகத்தான் இருந்தது.

கொஞ்ச நேரத்துக்குள் இந்தப் பத்திரிகைச் செய்தி என்னை எப்படிக் கலக்கி விட்டது? என் வேண்டுதல் வீண் போகவில்லை தான். ஆனால், உருப்படியாய் ஏதோ வேலை பார்க்க ஆரம்பித்திருக்கும் அவரை இந்த மாமி எதற்காகப் போய் அழைத்து வரவேண்டும்? - ஒரு வேளை, தன் ஆட்சியிலேயே அவரை வைத்துக் கொண்டிருக்க நினைக்கிறாளோ? சே! என்ன அசட்டு எண்ணம்! அந்த முகத்தின் தெய்வீகத்தைப் பார்த்தவன் இப்படி நினைப்பதே தவறு. பின்? - புரியவில்லைதான்.

ஆபீஸ் விட்டு வரும்போது சாமா வீட்டுத் திண்ணையில் ஜமா சேர்ந்திருப்பதைக் கவனித்தேன். கோபாலய்யர் அட்டகாசமாகப் பேசிக் கொண்டு அங்கே உட்கார்ந்திருந்தார். கச்சேரியில் அவர்களுக்கு இருந்த சுவாரசியத்தில் தெருவில் போகிறவர்களையெல்லாம் அவர்கள் கவனிப்பதேது?

'மாமி அவரை ஏன் அழைத்துக்கொண்டு வந்துவிட்டாள்?'

மனத்தை அரிக்கும் கேள்விக்கு விடைகாண, கோபாலய்யரின் வீட்டுக்குச் சென்றேன்.

ரூங்கில் கதவு கிறீச்சிட்டது.

"வாங்கோ...வாங்கோ!" மஞ்சள் பூசிய முகம். நெற்றி நடுவில் காலணா அகலக் குங்குமப் பொட்டு. முகம் நிறைந்த மங்கலப் புன்னகை! அவர் வந்து விட்டதில் அவளுக்குத்தான் என்ன மகிழ்ச்சி!

"காப்பி இருக்கோ?"

"ஓ! போட்டுத் தரேனே!"

உள்ளே போய் மணையில் உட்கார்ந்தேன்.


"ஆமாம், உருப்படியாய் ஒரு வேலை பார்க்கப் போனவரை ஏன் அதை விடச் சொல்லி அழைத்து வந்தீர்கள்?"

காப்பி டபராவை என் எதிரே வைத்து விட்டு மாமி பேசினாள்:

"அவர் சம்பாதிக்கிறதைவிட ஆயுசோடே நல்ல உடம்போடு அவர் இருக்கிறது முக்கியமில்லையா? பத்து வருஷங்களுக்கு முன்னெல்லாம் ஓடியாடி வேலை செய்து கொண்டு தான் இருந்தார் அவர். கோட்டையடுப்பைத் திகு திகுன்னு எரிய விட்டு விட்டு அதன் முன்னாலே நின்று கொண்டு பெரிய பெரிய கலியாணச் சமையலெல்லாம் செய்வார். கை நிறையச் சம்பாதித்தார். எதற்கும் கொடுத்து வைக்கணுமோல்லியோ? ஒரு சமயம் நெஞ்சு வலிக்கிறதென்று வந்து படுத்துக் கொண்டார். மூணுமாசம் துடியாய்த் துடித்தார். கையிலிருந்த பணத்தையெல்லாம் கொட்டி வைத்தியம்பண்ணினேம். 'இந்தத் தடவை தப்பியாச்சு அம்மா. இனிமேல் அடுப்படி வேலையோ, பளு தூக்கற வேலையோ இவர் செய்யக்கூடாது. இப்படியே பூப்போல அலுங்காமல் இருக்க வேண்டிய உடம்பு இது. மறுபடியும் இந்தமாதிரி வந்தால் ரொம்பச் சங்கடம்!' அப்படீன்னு டாக்டர் சொல்லிட்டுப் போயிட்டார். அதுக்கப்புறம்தான் இந்தக் கடை ஆரம்பிச்சது. நான்தான் அவர் காலிலே விழுந்து அவரை ஒரு வேலைக்கும் போகவிடாமல் பார்த்துக் கொண்டேன். இப்போ ஒரு சோதனையா இப்படி நடந்து போச்சு! அவரைச் சமாதானம் செய்து அழைத்துக்கொண்டு வருவதற்குள்ளே பெரும்பாடாய்ப் போய்விட்டது. காப்பி ஆறிப்போகிறது. குடியுங்கோ!"

குடித்தேன். காப்பியாக இருக்கவில்லை அது: அமிர்தமாக இனித்தது.


கேசப்
பராமரிப்பின்
ரகசியம்
ஸ்வஸ்திக்
பெர்ப்யூம்டு காஸ்டர் ஆயில்
தயாரிப்பாளர்: ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ்
லிமிடெட், பம்பாய்



குழந்தை

எஸ். பூமிநாதன்

மேஜையின் முன் அமர்ந்து, மளமள வென்று காரியத்தைக் கவனிக்க ஆரம்பித்தார் கைலாசம். பழக்க தோஷத்தால், கண்ணும், கையும் வேலையில் ஒரு யந்திரத்தைப்போல் ஈடுபட்டிருந்தன...ஆனாலும் மனசென்னமோ மானேஜரின் பேச்சைச் சுற்றிய படியே இருந்தது...!

'ஊர்க் குழந்தைகளைவிடத் தம் குழந்தை ரொம்பவும் உயர்வு என்று எண்ணியிருப்பதாகவல்லவா மானேஜர் எண்ணிவிட்டார்? அவர் பேச்சின் கருத்து அதுதானே?"

"முருகா!" என்றது மனம்.

"குழந்தை தேடுமே?"...மனசுக்குள்தான் சொல்லிக் கொண்டதாக அவர் நினைவு. ஆனால் அந்தக் குரல் மானேஜருக்குக் கேட்டிருக்க வேண்டும்.

எதையோ எழுதக் குனிந்தவர் சட்டென்று தலையை நிமிர்த்தி, எதிரே நின்ற கைலாசத்தைக் கூர்ந்து கவனித்தார்.

"மிஸ்டர் கைலாசம்! இதோடு பலதடவை கவனிச்சிட்டேன். காதாலேயும் கேட்டுட்டேன். முக்கியமான சமயங்களிலே, கூடக் கொஞ்சநேரம் இருந்து அவசரமான வேலையைப் பார்த்திட்டுப் போங்கன்னு சொன்னால். எல்லாம் குழந்தை தேடும்னு நீங்க முணுமுணுக்கிறது நல்லாவே இல்லே."

"இல்லீங்க சார்......!"

"மத்தவங்களுக்குக் குடும்பமோ, குழந்தைகளோ இல்லேன்னு அர்த்தமா? இல்லே, நாங்கள் இருதயமே இல்லாதவங்க...! அப்படின்னுறது உங்க நினைப்பா?"

"ஐயய்யோ!......இல்லீங்களே......அந்தக் குழந்தை..." என்று இழுத்தார் கைலாசம்.

"அதான் சொல்லிட்டீங்களே உங்களைத் தேடும்னு...... பிறத்தியார் குழந்தைங்களெல்லாம் இப்படிப் பெத்தவங்களைத் தேடாதுங்கற மாதிரியா? எனக்கும் குழந்தைங்க இருக்கு...வீட்டுக்கும், நேரத்துலே போகத்தான் எனக்கும் ஆசை. ஆனா என்ன செய்றது? இந்த வேலையை இன்னிக்கே முடிக்க அனுப்பணுமே? அதற்கு நான் இருந்தாகணும்; உதவிக்கு 'சீனியர் ஹாண்ட்'டாகிய நீங்களும் இருந்தாக வேணும்."

"சார்......"

"வேணுமானால் ஒண்ணுசெய்யுங்க. பாவம், உங்களை, உங்க குழந்தை தேடும். நீங்க அஞ்சு மணிக்கே புறப்படுங்க. நான் எப்படியோ சமாளிச்சிக்கிறேன்."

"வேணும் சார்!...என்னே மன்னிச்சிடுங்க."

"அதெல்லாம் எதுக்குமிஸ்டர் கைலாசம்?"

"இல்லீங்க.......நான் இருந்திட்டே போயிடறேன்" என்றார் கைலாசம்.

மானேஜர், தலைகுனிந்து, மேஜையில் கிடந்த கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தார். கையிலிருந்த காகிதக் கட்டுகளுடன் அறையை விட்டு வெளியேறினார் கைலாசம்.

"முருகா!" என்றது அவர் மனம்.

அன்று ஒருநாள் அப்படித்தான் அந்த டைப்பிஸ்ட் ரங்கநாதனும், கைலாசத்தின் குழந்தையைச் சாக்கிட்டு, கொஞ்சம் கேலியாகப் பேசி விட்டான்...!

"என்ன சார் கைலாசம்! ஆபீஸ் முடிஞ்சதுமே எப்ப பாத்தாலும் குழந்தை தேடும்னு ஓடுறீங்களே, அப்படி என்ன சார், உங்க குழந்தைகிட்டே அதிசயம் அற்புதம் இருக்கு... உங்களுக்கோ மூணு குழந்தைன்னு வேற சொல்லியிருக்கீங்க? அதிலே இந்தக் குழந்தை மட்டும் உசத்தியானதா இருக்கோ? இல்லே, வீட்டம்மாவுக்குப் பயந்துக்கிட்டு, அதுக்காகக் குழந்தையைச் சாக்கா வைச்சுப் பறந்து போறீங்களோ வீட்டுக்கு?" என்றான் ரங்கநாதன் சிரித்தபடியே.

ஆபீஸ் முடிந்ததும், சிப்பந்திகள் ஏதோ ஒரு விஷயமாக ஒன்றுகூடிக் கொஞ்சம் பேசப் போவதாகவும், கைலாசமும் அதில் கலந்து கொள்ள வேண்டும் என்ற செதியை ரங்கநாதன் அன்று அவருக்குத் தெரிவித்த சமயம் கொஞ்சமும் தயங்காமல் சட்டென்று, "குழந்தை தேடுமே! நான் போகணுமே?" என்று சொல்லி விட்டார் கைலாசம்.

அவ்வளவுதான்......! ரங்கநாதன் ஒரு டைபிஸ்ட். அவன் வாயும் ஒரு டைப் மிஷின் தான்...... எப்போதும், எதையாவது படபட வென்று பொரிந்து தள்ளியபடியே இருக்கும். இதிலே, தான் வேடிக்கையாகப் பேசுவதாக வேறு நினைப்பு...! அன்று முழுதும் ரங்கநாதன் கைலாசத்தை விடவில்லை...!

'கைலாசம் சாரா? அவரை விட்டுடுங்க. கணக்குலே சேர்க்காதீங்க. ஏன்னு, அவரை வீட்டுலே குழந்தை தேடுமாம்... நாம் அத்தனை பேரும் சந்நியாசிகள்தானே? காலையிலே இது நமக்கு ஆபீஸ்: மாலையிலே ஆண்டிகள் மடம்... நாம் கூடிப் பேசலாம். அவர் குடும்பஸ்தர்...போகட்டும்."

ரங்கநாதன் இப்படி வேடிக்கையாகப் பேசினான். மற்றவர்களும் சிரிப்போடு அதில் கலந்து கொண்டார்கள்.

கைலாசமோ எதுவும் பேசவில்லை. ரங்கநாதனிடம் முகத்தைக் கடுகடுத்து விடவும் இல்லை. அவர் மனம் எப்படி இருந்ததோ? அதை முகத்தின் வழி காட்டாமலேயே இருந்து விட்டார்!

"இப்படி ஏதாச்சும் ஒரு சாக்கை வைத்திருப்பது ஒரு வகையிலே பிழைக்கிற வழியாகவும் இருக்கலாம்" என்று அபிப்பிராயப் பட்டார் இன்னொரு குமாஸ்தா.

'முருகா!' என்றது கைலாசத்தின் மனம். அவ்வளவுதான்...அவர் பேசாமலேயே இருந்து விட்டார்.

இன்று மானேஜரே அதைச் சுட்டிக்காட்டிப் பேசி விட்டார்!

கைலாசம் தம்மை நொந்து கொண்டார். இனி, மறந்தும் "குழந்தை தேடும்" என்று வாய்விட்டுச் சொல்லிவிடக் கூடாது. மனதில் ஓர் உறுதி உருவானது. இதுவரையில் அப்படிச் சொன்னதற்காக மனசுக்குள்ளேயே தம்மை நன்றாக நொந்து கொண்டார். கண்களில் நீர் துளித்தது. மானேஜரின் பேச்சும் துளித்த கண்ணீரில் கரைந்து மறைந்தது.

* * *

"பிரமாதம் மிஸ்டர் கைலாசம்...... ரொம்பவும் நன்றி" என்றார் மானேஜர், வேலையை முடித்துக் கொண்டு வந்து தம்மிடம் கொடுத்த கைலாசத்தைப் பார்த்து!

"பரவாயில்லீங்க சார்" என்றார் பணிவோடு கைலாசம்.

"மிஸ்டர் கைலாசம்! வேலைத் தொந்தரவு, நெருக்கடி இதாலேதான் கொஞ்சம் முன்னாலே உங்க குழந்தையைப் பத்தி எதையெதையோ மனம்போனபடி பேசிவிட்டேன்."

"அதனாலே என்னுங்க?"

"என்னே...'எக்ஸ்கியூஸ்' பண்ணிடுங்க."

"பரவாயில்லீங்க..."

"அப்ப, நீங்க போகலாம்."

"சரிங்க சார்."

வீட்டுக்கு வந்த கைலாசம், மாலையில் ஆபீஸில் நடந்த பேச்சை மறந்தவராகக் குடும்பக் காரியங்களில் தம் கவனத்தைச் செலுத்தியிருந்தார்.

மானேஜரையே மறந்திருந்தவர் முன் அந்த மானேஜரே வந்து நின்றார். கைலாசத்துக்கு எப்படி இருக்கும்?

"சாரா? வாங்க சார்! இந்த நேரத்திலே வந்திருக்கீங்களே? வேலையிலே ஏதாச்சும் பிழை இருந்திடுச்சா? இப்ப அதுக்கு நான் ஏதாச்சும் செய்யணுமா?"



இந்த மானேஜர் புதியவர், அந்தஸ்து, மதிப்பு, கௌரவம் இவற்றைக் கொஞ்சம் பெரிதாக நினைத்திருப்பவர். சிப்பந்திகளைத் தேடி அவர்கள் வீட்டுக்குப் போவது கிடையாது. கைலாசத்துக்கு இதெல்லாம் தெரியும். சாயங்காலம், என்னைத்தும் பிடியுண்டு. சிந்தை தவ அதில் செலுத்தி வேலை செய்ததில் ஏதாவது பிழை நேர்ந்திருக்குமோ? அதைக் கூறவேதான் மானேஜர் தம் வீட்டைத் தேடி வந்திருப்பாரோ?

''அதெல்லாம் ஒண்ணுமில்லே மிஸ்டர் கைலாசம்! வீட்டுக்குப் புறப்பட்டேன்... ஒரு நினைப்பு. உங்க குழந்தையைப் பார்த்துவிட்டுப் போகணும்னு...ரிஜிஸ்டர்லே உங்க வீட்டு விலாசத்தைப் பார்த்து, நேரே இங்கே வந்தேன்'' என்றார் மானேஜர்.

''குழந்தையா?''

''என்ன சார் இது? உங்களைத் தேடுறான்னு சொல்லீங்களே. அந்தக் குழந்தையேதான் சார்!'' என்றார் மானேஜர்.

அப்போதுதான் மானேஜர் கையைக் கவனித்தார் கைலாசம். அதில் இரண்டொரு பொட்டலங்கள் இருந்தன. மிட்டாய், பிஸ்கோத்து வகையறாக்களோ...?

....கைலாசம் தயங்கினது மானேஜருக்கு எப்படி இருந்ததோ? என்ன கருத்தைக் கொடுத்ததோ?

''ஏன் சார்? உங்க குழந்தையைப் பார்க்கக் கூடாதோ?'' இதற்கு மேலே ஒன்றும் கேட்கத் தோன்றவில்லை அவருக்கு. குழந்தையைப் பார்க்க வந்திருப்பதாகச் சொல்லும் ஒரு மனுஷன் முன் தயங்குவதென்றால்? குழப்பந்தானே உண்டாகும்?

''ஒரு நிமிஷம் சார்! இதோ வந்திடுறேன்'' என்ற கைலாசம் வீட்டுக்குள் போனார். அவருக்கு வந்தவரை உட்காரச் சொல்லக் கூடத் தோன்றவில்லை. மானேஜருக்கு அப்படியே திகைத்து நின்றார்!

கைலாசம் வீட்டுக்குள்ளிருந்து வந்தார். தனியாக வரவில்லை அவர் பின்னாலும் யாரும் வரவில்லை! அவர் தம் இரண்டு கைகளாலும் தாங்கியிருந்தது......?

அது ஒரு பெண் குழந்தை......வயது ஐந்திருக்கும். இடுப்பு வனப்பில் வயதுக்குரிய வளர்ச்சியும் இருந்தது. அழகும் களையும் இருந்தது......ஆனால்......இடுப்புக்குக் கீழே... கால்கள் இரண்டும் சூம்பிக் கிடந்தன...... துவண்டு தொங்கின...!

''இதுதான் சார் அந்தக் குழந்தை.''

குழந்தையும், மானேஜரைப் பார்த்துச் சிரித்தது...சிநேகத்தோடு. தாமும் சிரித்தபடி மானேஜரும் தம் கையிலிருந்த பொட்டலங்களைக் குழந்தையிடம் கொடுத்தார்.

''ஒரு நிமிஷம்!'' என்று மீண்டும் சொன்னபடி கைலாசம் வீட்டுக்குள் போனார்.

மானேஜருக்கு நெஞ்சுக்குள் எங்கோ சில்லிட்டது...! மனதை என்னவோ செய்தது.

அந்த ஒரு நிமிஷத்துக்குள் அவருக்கு என்னென்னவோ நினைவுகள்!

கைலாசம் மீண்டும் வீட்டுக்குள்ளிருந்து திரும்பி வந்தார்...!

''இதான் சார் என்னைத் தேடுற குழந்தை. மத்த ரெண்டு குழந்தைகளும் இப்படி இல்லே. அவை பாட்டி வீட்டுக்குப் போயிருக்கு...... இது ஒண்ணுதான் இந்த நிலைக்கு ஆளாயிருக்கு... அம்மாவைவிட அதிகமாக என்னைத்தான் தேடும். அதிலேயும் சாயங்காலம் ஐந்து ஆகி, நான் வீட்டுக்கு வரும் நேரமும் தாண்டிப்போனால் போதும், அது தவித்துப் போகுமாம். இதற்காகவே எக்கேடு கெட்டாலும் ஓடி வந்துவிடுகிறது. சிகிச்சை எல்லாம் நடந்துகிட்டுத்தான் இருக்கு...... முருகன் பெயரைச் சொல்லியே இந்தக் குழந்தையைச் சுமந்துவர்றேன்...வீட்டிலே கையில் சுமக்கிறேன்......ஆபீசிலே மனசிலே சுமக்கிறேன்...'' என்றார் கைலாசம் அமைதியாக.

''என்னை மன்னிச்சிடுங்க மிஸ்டர் கைலாசம்!'' என்றார் மானேஜர். மெல்லத் தழுதழுத்தது அவர் குரல்...!

''இல்லீங்க......இந்த விவரம் ஆபீசிலே யாருக்குமே தெரியாது. தெரிந்து பேசினும் தானே தவறு......தெரியாமல் பேசினால் அதெப்படி குற்றமாகும்?'' என்றார் கைலாசம்.

என்னையே உனக்கு அர்ப்பணம் செய்யும் அறிவு வாய்க்கப் பெற வேண்டும். அதனால், என் பேச்சு யாவும் உன் மந்திர ஜபமாகவும், செய்கைகள் முத்திரைகளாகவும், நடப்பது பிரதட்சிணமாகவும், உணவருந்துவது உனக்களிக்கும் ஆகுதியாகவும், சயனிப்பது நமஸ்காரமாகவும், இவ்வாறே எனது எல்லா நுகர்ச்சிகளும் உன்னை வழிபடுவதன் உருவமாக இருக்க வேண்டும்.

- ஸ்ரீ ஆதி சங்கரர்;
சௌந்தர்ய லஹரீ


மிக அழகிய...
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!


'அனஸின்'
இப்பொழுது சுகாதார முறையில் ஸீலிட்ட புதுமாதிரி
யான ஸெல்லோபேன் பாக்கட்டுகளில் கிடைக்கிறது
4 மருந்துகள்
அடங்கியுள்ள
அனஸின் மிகச் சிறந்தது
ANACIN
ANACIN
ANACIN
ANACIN
புதுமாதிரியாக சுகாதார முறையில் ஸெல்லோபேன் பாக்கெட்டுகளில் கிடைக்கும் 'அனஸின்' ஒரு டாக்டர் குறித்துக் கொடுக்கும் பாதுகாப்பான மருந்துக்கு ஒப்பாக, இதில் விஞ்ஞான முறையில் நான்கு மருந்துகள் ஒன்றுகலந்துள்ளதால், வலிகளின்று அதிவிரைவில் பூரண நிவாரணம் அளிக்கிறது. 'அனஸின்' (1) தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, தசைவலி ஆகியவற்றிற்கு அதிவிரைவில் நிவாரணம் அளிக்கிறது. (2) பதட்டத்தைப் போக்கி, சாந்தமளிக்கிறது—இதனுடன் இனிப்பான பலனைப் பெறுவீர்கள். (3) சோர்வை விரட்டுகிறது. (4) ஜுரத்தைத் தணிக்கிறது. நான்கு மருந்துகள் அடங்கியுள்ள 'அனஸின்' வலிகளின்று நிவாரணம் பெற மிகவும் சிறந்தது. வீட்டில் எப்பொழுதும் 'அனஸின்' வைத்திருங்கள்.
32 வில்லைகள் அடங்கிய, போசடிக்கு இடங்கொடாதவாறு அடைக்கப்பட்ட
சீசாக்களிலும் கிடைக்கிறது.
Registered User: GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD.

2.41-TAM

சொர்க்கத்தின் நிழல்

அத்தியாயம் மூன்று

ஜெகசிற்பியன்

உள்ளுக்கும் வெளிக்குமாக அலை மோதிக் கொண்டிருந்தாள் அபரஞ்சியம்மாள். நேரம் செல்லச் செல்ல அவளுக்கு இருப்பே கொள்ளவில்லை. அக்கம் பக்கத்து வீட்டார் ஆசையோடு கைக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு போக அனுமதித்துவிட்டுப் பிறகு அதைத் திரும்பக் கொண்டுவந்து சேர்க்கும்வரையில் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு வளையவரும் தாயைப் போலத் தவித்தாள் அவள்.

விடியற்காலை நான்கு மணிக்கு எழுந்து கோயிலுக்குப் போன மோகனசுந்தரம் இன்னமும் வீடு வந்து சேரவில்லை. மணி ஒன்பதரையாகப் போகிறது. அவன் எங்கு சென்றிருப்பான்? ஏன் இன்னும் அவன் வரவில்லை?

அபரஞ்சியம்மாளின் மனம் ஒரேயடியாகக் குழம்பிக் கலங்கியது. கோமதியைப் பார்ப்பதற்காக ஜமதக்கினியின் வீட்டுக்குப் போயிருப்பானோ என்று எண்ணியே அப்படிக் கலக்கமுற்றது அந்தத் தாயுள்ளம். அதைத் தொடர்ந்து வேறு பல பயங்கரக் கற்பனைகள். தன் மைந்தனை மீண்டும் ராமநாதனின் மருத்துவ விடுதியில் சேர்க்க அழைத்துப் போவது போலவும், அங்கே சேர்த்துப் பயனில்லை என்று டாக்டர் கை விரிப்பது போலவும், சர்க்கார் ஆஸ்பத்திரிக்குக் கடிதம் எழுதிக் கொடுப்பது போலவுமான கசப்பான கற்பனைகள். 'என் வயிற்றில் இந்தமாதிரிப் பிள்ளை ஏன் வந்து பிறக்க வேண்டும்?' என்று சலித்துக் கொண்ட அவள் அடுத்த கணமே, 'என்ன சொன்னேன்? இந்தப் பிள்ளையைப் பெற்றதற்கு நான் ஏழேழு ஜன்மங்கள் தவமல்லவா செய்திருக்க வேண்டும்!' என்று பெருமையுடன் வாய்விட்டுச் சொல்லிக் கொண்டாள். அவளுடைய ஒடுங்கிய கண்கள் பனித்தன.

'கோமதியின் வீட்டு விலாசம் தெரிந்தாலாவது அவளிடம் போய் விசாரிக்கலாம். ஆனால் அவள் எங்கே குடியிருக்கிறாள் என்றே தெரியவில்லையே! திடீரென்று அவளுக்கு என்ன வந்ததோ, இந்தப் பக்கமே தலை காட்டுவதில்லை. அன்றொருநாள் தெருவோடு பார்த்துப் பேசி விட்டுப் போனவள்தான், பிறகு வரவே யில்லை. இப்போது என்ன செய்வது? ஜமதக்கினியின் வீட்டுக்குப் போய்ப் பார்க்கலாமா? வேண்டாம்; அந்தக் கோயிலுக்கே போய்ப் பார்த்து விட்டு வருவோம். காலத்துக்கும் நேரத்துக்கும் கட்டுப்பட்ட பிள்ளையா அது? குழல் வாசிப்பில் உலகத்தையே மறந்து உட்கார்ந்து கொண்டிருப்பான்!...... எல்லாம் என் தலைவிதி!'

கையைப் பிசைந்துகொண்டு வாசலில் நின்ற அபரஞ்சியம்மாள் அவசரமாக உள்ளே சென்றாள்.

"அம்மா! அம்மா! உனக்கு விஷயம் தெரியுமா? நான் கோமதியைப் பார்த்தேனே! நிஜமாகத்தான் சொல்கிறேன், அம்மா! அவளைத்தான் பார்த்தேன்!" என்று ஒருவிதப் படபடப்புடன் சொல்லிக் கொண்டேவீட்டினுள் சின்னக் குழந்தையைப் போல வேகமாக நுழைந்தான் மோகனசுந்தரம்.

'அம்மா' என்ற குரல் கேட்டதுமே, ஏதோ புதையல் கண்ட மாதிரி அகமும் முகமும் மலர ஆவலுடன் ஓடி வந்தாள் அபரஞ்சியம்மாள்.

"என்னடா மகனே, ஏன் இவ்வளவு நேரம்? வெளியே போனால் சீக்கிரம் வீடு திரும்புவதில்லையா?"...குரல் கம்மக் கேட்டாள் தாயார். அவளுக்கு ஏற்பட்ட



சந்தோஷத்தில், அவன் என்ன சொன்னான் என்பது கூடக் காதில் விழவில்லை.

மோகனசுந்தரம் தன் தாயைக் கோபமாகப் பார்த்தபடி நாற்காலியில் தொப்பென்று உட்கார்ந்தான். அவன் முகத்தில் ஒருவிதக் கலவரம் குடி கொண்டிருப்பதைக் கண்ட அபரஞ்சியம்மாள் துணுக்குற்றாள். ஆனால் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் மெல்லச் சிரித்து, "ஓ.......நம்ம கோமதியைப் பார்த்தாயா? எங்கே பார்த்தாய் அவளை?" என்று சாதாரணமாகக் கேட்டாள்.

இடக் கையைக் கன்னத்தில் ஊன்றி ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் லயித்திருப்பவன்போல் உட்கார்ந்திருந்த மோகனசுந்தரம் சட்டென்று நிமிர்ந்து. "அம்மா, இந்தப் பெண்களையே நம்பக் கூடாது! அவர்கள் மிகவும் பொல்லாதவர்கள்!" என்று சற்றே ஆத்திரக் குரலில் சொல்லி முகத்தை வெடுக்கென்று வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

அபரஞ்சியம்மாள் இதைக் கேட்டு உள்ளூறத் திகிலடைந்தாள். ஏதோ விஷயம் நடந்திருக்கிறதென்று அவளுடைய உள் மனம் சொல்லிற்று. "உண்மைதான், மகனே! ஆனால், இதை உன் அப்பா இருந்து அவரிடம் சொல்லியிருந்தால் மிகவும் ரசித்திருப்பார்! என்னிடம் சொல்லி என்னபிரயோசனம்? நான் கட்டிக் கொண்டிருப்பது புடவையல்லவா?" என்றாள் குறும்புச் சிரிப்புடன். மீண்டும் அவள் தொடர்ந்து, "அது போகட்டும். கோமதியை எங்கே பார்த்தாய்?" என்று வினவினாள்.

மோகனசுந்தரம் முகத்தைச் சுளித்துக் கொண்டு, "கோயில் குளத்தங்கரையில் நான் குழல் வாசித்துக் கொண்டிருந்தேன். எதிர்பாராதவிதமாக அவள் அங்கு வந்தாள்" என்றான்.

"ஓ! அவ்வளவு தூரம் உன்னைத் தேடிக் கொண்டு வந்துவிட்டாளா? அப்படியானால் நீ சொல்வது போல் அவள் 'பொல்லாத' பெண்தான்!" என்று கூறிச் சிரித்தாள் அபரஞ்சியம்மாள். "அது சரி; இப்போது அவள் எங்கே குடியிருக்கிறாளாம். தெரியுமா?" என்று கேட்டாள்.

கண்களை அகல விரித்து வியப்புக்குறிகள் முகத்தில் தெரிய "அம்மா! அவள் இப்போது பெரிய பங்களாவில் குடியிருக்கிறாளாம்! அரண்மனை போல் அவ்வளவு பெரிய வீடாம்! அவள்தான் சொன்னாள்!" என்றான்.

அபரஞ்சியம்மாள் ஒரு வறண்ட சிரிப்புச் சிரித்தாள். வயது இருபத்தெட்டு ஆகியும் தன் மகனுக்கு இன்னும் உலகம் இன்னதென்று புரியவில்லையே என்று மிகவும் வருந்தினாள்.

"என்னம்மா, சிரிக்கிறாய்? நான் சொல்வதை நீ நம்பவில்லையா?"

"நம்பாமல் என்ன? அவள் கெட்டிக்காரப் பெண்!" என்று தன்னை மீறிய சலிப்புடன் சொன்ன அபரஞ்சியம்மாள், "அது சரி; அவள் வீட்டு விலாசத்தைக் கேட்டாயா?" என்றாள்.

"கேட்டேனே! ஆனால் அவள் சொல்லவில்லை" என்றான் மோகன்.

"இங்கு வந்து நம் இருவரையுமே அழைத்துக் கொண்டு போவாளாக்கும். அப்படித்தானே?"



"அவள் ஏன் இனிமேல் இங்கு வரப் போகிறாள்?"

திடுக்கிட்ட அபரஞ்சி தன்னைச் சமாளித்துக் கொண்டு, "அப்படியானால் வெள்ளிக்கிழமை தோறும் அந்தக் கோயில் குளத்தண்டையே உன்னை வந்து சந்திப்பதாகச் சொல்லி விட்டாளோ?" என்று கேட்டாள் கேலிக் குரலில்.

"அங்கேயும் அவள் இனிமேல் வரமாட்டாளாம்!"

"இன்று மட்டும் ஏன் வந்தாளாம்?"

"'என்னை இன்றோடு மறந்துவிடுங்கள்' என்று என்னிடம் சொல்லி விட்டுப் போவதற்காக வந்தாளாம்!"

தலையில் ஏதோ ஒரு கருங்கல் விழுந்த மாதிரி அதிர்ச்சியடைந்தாள் அபரஞ்சியம்மாள். சற்று நேரம் வரையில் அவளால் ஒன்றுமே பேச முடியவில்லை. மோகனசுந்தரத்தின் முகத்தைப் பார்க்கவே ரொம்பவும் பரிதாபமாக இருந்தது. அவனுடைய கண்கள் பளபளவென்று மின்னின.

"அவளா இப்படிச் சொன்னாள்? என்னால் இதை நம்ப முடியவில்லையே!" என்று தணிந்த குரலில் இழுத்தாள் அபரஞ்சியம்மாள்.

மோகனசுந்தரம் திடீரென்று சிரித்தான். மோகனசுந்தரம் சிரித்துக் கொண்டே, "நானும்தான் நம்பவில்லை! யார்தாம் அதை நம்புவார்கள்?" என்று நாற்காலிக் கைப்பிடிச் சட்டத்தில் ஒரு குத்துக் குத்தினான். சட்டெனத் தன் தாயின் கரங்களைப் பற்றி, "அம்மா! நீயே சொல். வெறும் விளையாட்டுக்குத் தானே கோமதி அப்படிச் சொல்லி விருப்பாள்? அதை எப்படி உண்மை என்று நம்புவது? சொல்லம்மா! நீ அதைப் பற்றி என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டான் படபடப்புடன்.

அபரஞ்சியம்மாள் பதில் ஒன்றும் சொல்லாமல் உள்ளே சென்று, காலைச் சிற்றுண்டியும் காப்பியும் கொண்டு வந்தாள். 'அதையெல்லாம் பிறகு பேசிக் கொள்வோம். மணி பத்தாகிறது. இதைச் சாப்பிடு."

மோகனசுந்தரம் சிறு பிள்ளைபோல் தன் தலையைப் பலமாக அசைத்தான். "ஊஹூம்! எனக்கு ஒன்றும் வேண்டாம், அம்மா!"

"ஏன் வேண்டாம் என்கிறாய்?"

"பசித்தால்தானே சாப்பிட முடியும்?"

அபரஞ்சியம்மாளின் கண்கள் கலங்கின. "ஏண்டா, தம்பி! என்னை ஒரு நிமிஷம்கூட நிம்மதியாய் இருக்கவிட மாட்டாயா?" என்றாள் துக்கம் தொண்டையை அடைக்க.

மோகனுக்குச் சரேலெனக் கோபம் வந்துவிட்டது. "என்னால் தானே உனக்கு நிம்மதி இல்லை? சரி! நான் எங்காவது போய்த் தொலைகிறேன்! நிம்மதியாய் இரு!" என்றவாறு வேகமாக எழுந்தான்.

அபரஞ்சியம்மாளுக்குச் சிரிப்பு வந்து விட்டது. "நன்றாயிருக்கிறதடா உன்பேச்சு! யார் மேலிருக்கிறகோபத்தையெல்லாமோ கொண்டு வந்து என்மீது கொட்டுகிறாயே! சரி, சரி; இதைச் சாப்பிட்டு விட்டுப் போ!" என்று மகனின் கையைப் பிடித்து உட்கார வைத்தாள் அபரஞ்சியம்மாள்.

"அதெல்லாம் முடியாது. நான் சாப்பிடமாட்டேன்."

"சாப்பிடாமல் நீ என்ன செய்யப் போகிறாயாம்?"

"பட்டினி கிடக்கப் போகிறேன்."

"எத்தனை நாளைக்கு?"

"கோமதி அப்படிச் சொன்னது உண்மையா, பொய்யா என்பதைத் தெரிந்து கொள்ளும் வரையில்...!"

பிள்ளையின் பிடிவாத குணத்தை நன்கு அறிந்திருந்த அபரஞ்சியம்மாள், அதற்கு மேல் அவனை வற்புறுத்திப் பயனில்லை என்று மௌனமானாள். சிறிது நேரம் ஏதோ யோசனையிலிருந்த அவள், "சரிடா தம்பி! நான் அந்தப் பெண்ணிடம் போய் விஷயம் என்னவென்று கேட்டுக்கொண்டு வருகிறேன்!" என்றாள்.

சந்தேகத்துடன் அவளை ஏறிட்டுப் பார்த்த மோகன், "அவள் வீட்டு விலாசம் தெரியுமா, அம்மா?" என்று புருவங்களை நெரித்துக் கொண்டு கேட்டான்.

"அந்தக் கவலை உனக்கு ஏன்? நான் எங்கேயாவது தேடியலைந்து தெரிந்து கொள்கிறேன்!" என்று வெறுப்புடன் சொல்லிக் கொண்டே அங்கிருந்து 'விர்' ரென வெளியேறினாள் அபரஞ்சியம்மாள்.

அவள் போன சற்று நேரங் கழித்துத் தபால்காரன் வந்து மோகனிடம் ஒரு ரிஜிஸ்தர் கடிதத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றான். நவயுக வாலிபர் சங்கத்தின் சார்பில் விவேகானந்தன் அனுப்பிய வக்கீல் நோட்டீஸ் அது!

ஆனால், போகசுந்தரம் அந்தப் பதிவுத் தபாலைப் பிரித்துப் பார்க்காமலே அலட்சியமாக மேஜைமீது எறிந்துவிட்டு, புல்லாங்குழலை எடுத்து வாசிக்கத் தொடங்கினான். சிந்து பைரவி இராகத்தில் ஏதோ ஒரு 'பஜன்' கீதம் வெகு நளினமாக உயிர்த்து, அவனுடைய நெஞ்சின் சோகப் பிரதிபலிப்பாக ரீங்காரமிடலாயிற்று!

இதை எப்படி நம்புவது? சின்னஞ்சிறு புல்லாங்குழலின் மென்னோசை இரண்டு மைல் தூரத்துக்கும் அப்பால் சென்று ஒலிக்குமா?

இதோ கேட்கிறது, அந்தக் குழல் கானம்! ஆனால், அந்தச் சிந்து பைரவியின் சோக அலை ஓட்டமாக இங்கே அது ஒலிக்கவில்லையே? மனத்தின் மகிழ்ச்சியனைத்தையும் குத்திக் கிளறி இன்பப் படமிடுவதுபோல் அல்லவா ஒலிக்கிறது!

ஆமாம்; தேவகியின் வீட்டு ரேடியோ-கிராமிலிருந்து எழும் இனிய குழல் நாதம் இது!

'மூண்டெரியும் தீயதுவே உந்தன் தோற்றம்!...'

செவ்வல்லியின் இரு இதழ்களால் ஏந்தப் பெற்ற செந்தாமரை மலர்போல் தன் உள்ளங்கைகளால் முகத்தை ஏந்திக் கொண்டு ரேடியோ-கிராம் பெட்டியின்மீது ஒருக்களித்துச் சாய்ந்து, இசைத் தட்டிலிருந்து எழும் அந்த இனிய வேணு கானத்தை உணர்ச்சிப் பெருக்குடன் உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தாள் தேவகி. இன்று மட்டும்தான் இப்படிக் கேட்டுக் கொண்டிருக்கிறாளா? இல்லை; கடந்த சில தினங்களாகவே அவளுடைய பெரும் பொழுது இப்படித்தான் கழிந்து கொண்டிருக்கிறது! உணவதும் கனிவதுமாக இருக்கும் கும்மட்டியடுப்பிலிட்ட தங்கத்தகடு உருகுவதும் இறுகுவதுமாக இருப்பதுபோல் அவள் அந்த இசைத் தட்டின் இனிய கானத்தைத் திரும்பத் திரும்ப இசைக்கச் செய்து கேட்டுத் தன் உள்ளத்து உணர்ச்சிகளை மேலும் கீழுமாக அசைபோட்டுக் கொண்டிருந்தாள். இந்த உணர்ச்சியலைப் புரட்டலிலிருந்து தெறித்து விழும் முத்துக்களைப் போல, அவள் அருகிலிருக்கும் நீலநிறக் காகிதக் கற்றையில் அவ்வப்போது கவிதை மணம் கமழும் சொற்கள் உயிர்த் துடிப்புடன் கோவையாகிக் கொண்டேயிருந்தன!...

இசைத்தட்டின் குழலோசை ஓய்ந்தது.

சட்டென்று நிமிர்ந்த தேவகி அந்தக் காகிதக் கற்றையை எடுத்து அதிலே தனது கரிய பெரிய விழிகளை விரித்து ஓடவிட்டாள். அவளது அழகிய முகத்தில் செவ்வரி படர்ந்தது. உணர்ச்சிப் பெருக்கால் சரமாகித் தளதளத்த தன் உதடுகளை நெளித்துப் பிரித்து, மிக மெல்லிய மதுரக் குரலில், சந்தத்தோடு இயைந்த சொற்களை அசை போட்டாள்:

" அலை பிறக்கு முன்னே—வான்
சிலை பிறக்கு முன்னே
மலை பிறக்கு முன்னே—தேன்
கலை பிறக்கு முன்னே;
" ஒளி பிறக்கு முன்னே—சிறு
வளி பிறக்கு முன்னே
ஒலி பிறக்கு முன்னே—தமிழ்
மொழி பிறக்கு முன்னே;
" விழி திறக்கு முன்னே—நல்ல
விதி திறக்கு முன்னே
கதி சிறக்கு முன்னே—முன்
கடை விரித்த தென்னை?......"

யாரோ உள்ளே வரும் ஒலி கேட்டுப் பாடுவதைச் சட்டென்று நிறுத்திப் பின்னால் திரும்பிப் பார்த்தாள் தேவகி. மறுகணம், அவள் கையிலிருந்த காகிதங்கள் தானாகவே நழுவிப் பறந்து அறையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக விழுந்தன.

"அருமையான சமயத்தில் வந்திருக்கிறேன். நான் அதிர்ஷ்டசாலி" என்று அழகிய புன்முறுவலுடன் கூறிக் கொண்டே உள்ளே வந்த விவேகானந்தன், நிதானமாகக் குனிந்து கீழே இறைந்து கிடந்த காகிதங்களை ஒவ்



சோப் உபயோகிப்பதால்
கூந்தல் சோபையை
இழக்கிறது
'ஹேலோ'
கூந்தலைப் பளபளப்பா
கச்செய்கிறது!
HALO
SHAMPOO
அமெரிக்காவில்,
ஏராளமாக
விற்பனை
யாகும்
ஷாம்பு
மறைந்துகிடக்கும் உங்கள் கூந்தலின் அழகை ஹேலோ பிரகாசிக்கச் செய்கிறது.



அதுவும் நமது பண்ணையிலிருந்தே!

தென்னிந்தியாவிலுள்ள சொந்த லாரிகள், வாடகை லாரிகள் ஆகியவற்றின் எண்ணிக்கை இருபதாயிரத்துக்கு மேல். அவை தினந்தோறும் ஏற்றிச்செல்லும் சாமான்களின் எடை எழுபதாயிரத்து ஐநூறு டன். தொலைதூரத்திலுள்ள பண்ணைகளிலிருந்து அரிசி மூட்டைகளை மட்டுமல்லாமல் விதவிதமான சாமான்களை—துணி பேல்கள், காய்கறி, மேஜை முதலியன, செய்தித் தாள்கள், மோட்டார்கள் போன்றவற்றை ஏற்றிச் செல்கின்றன.

முப்பது ஆண்டுகளுக்கு முன், டிவிஎஸ் சதர்ன் ரோட்வேஸ் சர்வீஸ் ஆரம்பித்த பொழுதே, தென்னிந்தியாவின் வியாபாரம் வளர்ச்சிபெறுகிறது என்றும் அதன் பூரண வளர்ச்சிக்கு விரிவான சாலைப் போக்குவரத்து ஸ்தாபனங்கள் இன்றியமையாதவை என்றும் உணர்ந்தது. அத்தகைய ஸ்தாபனங்களுக்கு வழிகாட்டி, உறுதுணையாக நின்று உதவி செய்ய டிவிஎஸ் முன்வந்தது.

பணவுதவி முதல் 'சேஸிஸ்' சப்ளை செய்து 'பாடி' கட்டி, தேய்ந்துபோன உருப்புக்களைப் புதுப்பிப்பது வரை டிவிஎஸ் ஸ்தாபனங்கள் தென்னிந்தியாவில் வளர்ந்தோங்கும் மோட்டார்த் தொழிலின் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றன.

டி. வி. எஸ். ஸ்தாபனங்கள்:

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ்
பிரைவேட் லிமிடெட்
மதுரை, திருச்சி, திருநெல்வேலி, புதுக்கோட்டை, சேலம், கோயமுத்தூர்
மோட்டார் வண்டி விற்பனையாளர்கள், ஆட்டோமொபைல் என்ஜினியர்கள்

சதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட், மதுரை
பிரயாணிகள், பார்சல் போக்குவரத்து

மதராஸ் ஆட்டோ சர்வீஸ்
பிரைவேட் லிமிடெட்
மதராஸ்-பெங்களூர்
மோட்டார் சாமான்கள் விநியோகிப்பவர்கள்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ்
பிரைவேட் லிமிடெட்
புதுக்கோட்டை, மதராஸ்
கோயமுத்தூர்
டயர் ரீட்ரெட் செய்பவர்கள்

மதராஸ் மோட்டார் அண்ட் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட், மதராஸ்

சுந்தரம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ்

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் அண்ட் அக்ஸஸரீஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ்
G. M. சாமான்களை இந்தியா முழுவதற்கும் விநியோகம் செய்பவர்கள்

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட், மதராஸ் - பெங்களூர் - செகந்திராபாத்
டாட்ஜ், பிளைமவுத், பார்கோ, வேலியண்ட், பெர்குஸன் டிராக்டர்கள் விற்பவர்கள்

TVS

டி. வி. சுந்தரம் அய்யங்கார் அண்ட் ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை

வொன்றாகப் பொறுக்கி அடுக்கியவாறு ஓர் இருக்கையில் போய் அமர்ந்தான்.

தன்னை மீறிய பரபரப்புடன் பின்னால் நகர்ந்த தேவகி, "வாருங்கள்! வீட்டில் எல்லாரும் சௌக்கியம்தானே?" என்று வெட்கம் செறிந்த குரலில் கேட்டுக் கொண்டே வானொலிப் பெட்டியருகில் சென்று நின்றாள்.

"என்னையும் சேர்த்து எல்லோரும் நலம்!" என்று மெல்லச் சிரித்துச் சொன்ன விவேகானந்தன் கையிலிருந்த காகிதங்களைப் பக்க எண்படி சரிசெய்து கொண்டே "உங்கள் தந்தையார் மாடியில் இருக்கிறாரா?" என வினவினான்.

"இல்லையே! அவர் கம்பெனிக்குப் போயிருக்கிறார். ஏன்? அவசரமாகப் பார்க்க வேண்டுமோ?" என்று பக்கத்திலிருந்த போனை எடுத்தாள் தேவகி.

"அதெல்லாம் இல்லை" என்று சட்டென்று சொன்ன விவேகானந்தன், "உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்" என்றான் தயக்கத்துடன்.

தேவகியின் கண்ணிமைகள் படபடத்தன. "என்னைப் பார்க்கவா வந்தீர்கள்?" என்று புன்முறுவலுடன் கேட்டாள்.

"ஆமாம்; அன்று எங்கள் சங்கத்தின் ஆண்டுவிழாக் கலை நிகழ்ச்சியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்டுவிட்ட கலவரங்கள் பற்றி நீங்கள் ஏதாவது நினைத்துக் கொண்டிருப்பீர்கள், இல்லையா? அது எங்கள் சங்கத்தாரால் நேர்ந்த தவறல்ல; ஆனாலும் அந்த மரியாதைக் குறைவான நிகழ்ச்சிக்காக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்!"

தேவகி கலீரென்று சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறீர்கள்? இத்தனை நாட்களுக்குப் பின் மன்னிப்புக் கோர வந்திருக்கிறேனே என்று சிரிக்கிறீர்களா? உடனே வந்தால் மன்னிப்புக் கிடைக்காது என்று எண்ணிக் கொண்டு, உங்கள் கோபத்தைக் கொஞ்சம் ஆறப்போட்டு வந்தேன்!" என்றான் விவேகானந்தன்.

தேவகி கலகலவென்று சிரித்தாள்.

"என்ன செய்வது? அந்தப் பித்துக்குளிப் பயல் அப்படி நடந்துகொள்வான் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அன்றாடக் கைச்செலவுக்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு கலைஞனுக்கு உதவி செய்யலாமே என்று எண்ணித்தான் எங்கள் சங்கத்தின் கலைவிழாவில் அவனுடைய புல்லாங்குழல் கச்சேரியை ஏற்பாடு செய்தேன். ஆனால், எங்கள் சங்கத்தின் மதிப்பையும், அதன் ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்க வந்திருப்பவரின் பெருமையையும் உணராமல் அந்தத் தற்குறி வாலிபன்



"பக்தா! உன் பக்திக்கு மெச்சினேன்! யாது வரம் வேண்டும்?"
"எனக்கு வரம் வேண்டாம் ஸ்வாமி! என்னுடைய ஒன்பது பெண்களுக்கும் வரன் வேண்டும்!"

தறிதலைத்தனமாக நடந்து கொண்டு விட்டான். பரவாயில்லை. இனிமேல் அவன் அவ்வாறு நடந்துகொள்ள மாட்டான். அதற்கான காரியங்களைச் செய்து விட்டுத் தான் இப்போது இங்கு வந்தேன். ஆனாலும் உங்களுக்கு நான் மிகவும் சிரமம் கொடுத்து விட்டேன். பொறுத்துக் கொள்ளுங்கள்."

தேவகியின் முகம் வெளுத்துச் சிறுத்தது. மோகனசுந்தரத்தைப் பற்றி அவன் அவ்வளவு இழிவாகப் பேசியதை அவள் கொஞ்சங்கூட விரும்பவில்லை என்பதை அவளுடைய முக பாவம் நன்கு எடுத்துக் காட்டியது. "அந்தத் துரதிர்ஷ்ட சம்பவம் பற்றி உண்மையில் நான் மிகவும் வருந்தினேன். ஆனால், உங்கள் சங்கத்தின்மீதோ அந்தக் கலைஞரின்மீதோ எனக்குக் கடுகளவு வருத்தமுமில்லை. நான் கோபப்பட்டுக் கொண்டதெல்லாம், கச்சேரி கேட்க வந்த ஜனங்கள் பேரில்தான்!" என்றாள் உள்ளடங்கிய வெறுப்புக் குரலில்.

"இது உங்கள் பெருந்தன்மையைக் காட்டுகிறது. ஆனால், இன்னமும் என் மனம் அமைதி யடையவில்லை" என்று கூறி அவள் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான் விவேகானந்தன். அவனுடைய கை அந்த நீல நிறக் காகிதங்களை அடுக்குவதும், தன் சட்டை ஜேபியைத் தொட்டுப் பார்த்துக் கொள்வதுமாக இருந்தது.

இதைக் கவனித்த தேவகி ஓரடி முன்னால் வந்து, "தயவுசெய்து அந்தக் கவிதைப் பிரதியைத் தருகிறீர்களா?" என்று கேட்டாள்.

"கொடுத்து விடுகிறேன். ஆனால், உங்களின் இந்தப் புதுக் கவிதை போட்ட புதிரை இன்னும் நான் தெரிந்து கொள்ள வில்லையே! அதைத் தெரிந்து கொள்ளலாமா?" என்று புன்சிரிப்புடன் கேட்டுக் கொண்டே கம்பீரமான குரலில் இனிய ஓசை நயத்துடன் கவிதையைப் படித்தான் :

"அலை பிறக்கு முன்னே வான்
சிலை பிறக்கு முன்னே
மலை பிறக்கு முன்னே—தேன்
கலை பிறக்கு முன்னே;
ஒளி பிறக்கு முன்னே—சித
வளி பிறக்கு முன்னே
ஒலி பிறக்கு முன்னே—தமிழ்
மொழி பிறக்கு முன்னே;
விழி திறக்கு முன்னே—நலை
விதி இறக்கு முன்னே
கதி சிறக்கு முன்னே—முன்
கடை விரித்த தென்னே?
காதல் காதல் காதல்—அதன்
மறுபெயர் ஒரு பெயர்
கடவுள் கடவுள் கடவுள்!"

தேவகி உணர்ச்சி வயப்பட்டுக் கிறு கிறுத்தாள். நாணத்தால் அவள் உடல் சில்லிட்டுக் குளிர்ந்தது. செம்மை படர்ந்த தன் முகாரவிந்தத்தை நிலம் நோக்கித் தாழ்த்திக் கொண்டாள்.

"அற்புதமான கவிதை! ஆனால்..." என்று இழுத்தவாறு மெள்ள எழுந்து நின்றான் விவேகானந்தான்.

தேவகி சட்டென்று நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"ஆமாம்; தங்கள் கவிதை எழுப்பிய புதிருக்குக் காதல் என்பது சரியான விடை! ஆனால் அந்த விடையோடு அதை நிறுத்திக் கொண்டிருக்கலாம்; அதற்கு மறுபெயர் ஒன்றைத் தேடியிருக்க வேண்டியதில்லை!"

அவன் அவளை மிகுந்த வியப்புடன் நோக்கினான்.

"எதற்குச் சொல்கிறேன் என்றால், யதார்த்த வாதத்தை வலியுறுத்தும் கவிதைகளே இக்காலத்துக்குத் தேவை. அதீத கற்பனைகளால் விளைவை எதிர் பார்க்க முடியாது. காதலுக்குக் கூட கடவுள் என்ற கற்பனை வர்ணத்தைப் பூசிப் பார்க்கக் கவிஞர்கள் விரும்புகிறார்கள். அதிலும் நீங்கள் அவ்விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்துகிறீர்கள். கூடுமானவரையில் அதைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளலாம்!"

படபடவெனக் கைதட்டிக் கலகல வெனச் சிரித்தாள் தேவகி. "ஓ! நீங்கள் ஒரு பகுத்தறிவுவாதியல்லவா? நான் அதை மறந்தே போனேன்!" என்று கூறி மீண்டும் சிரித்தாள் அவள். அப்பப்பா! அந்தச் சிரிப்பிலும் பேச்சிலும் தான் என்ன ஆணவம். என்ன அலட்சியம். என்ன கிண்டல்.

விவேகானந்தனின் முகத்தில் அசடு வழிந்தது. "என்னுடைய கருத்தைச் சொன்னேன். அவ்வளவுதான்" என்றான் கரகரத்த குரலில்.

"இன்னும் சற்று ஆழ்ந்து சிந்தித்துச் சொல்லியிருக்கலாம்!" என்று அதே கேலிச் சிரிப்புடன் சொன்னாள் தேவகி.

"இன்னொரு முறை இது பற்றி உங்களிடம் ஒரு நீண்ட விவாதமே நடத்தப் போகிறேன்" என்று விவேகானந்தனும் குறும்பாகச் சொல்லி நகைத்தான்.

"என்னுடைய கவிதையும் அதன் கருத்தும் விவாதத்துக்கு அப்பாற்பட்டவை!" என்று சொல்லிக்கொண்டே போய் அவன் கையிலிருந்த பிரதியைப் பெற்றுக் கொண்டாள்.

அவற்றை அவளிடம் கொடுத்த விவேகானந்தனின் கை ஏனோ இலேசாக நடுக்கமுற்றது. அவன் முகத்தில் கூட ஒரு விசித்திர மாறுதல் ஏற்பட்டது. "சரி; நான் விடைபெற்றுக் கொள்ளலாமா?" என்று அவசரமாகக் கேட்டான்.

"காப்பி சாப்பிடாமல் புறப்படுகிறீர்களே!" என்றாள் தேவகி.

"பரவாயில்லை. இன்னொருநாள் உரிமையுடன் வந்து சாப்பிட்டுக் கொள்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே விரைந்து சென்று வெளியேறினான் விவேகானந்தன்.

இவ்வளவு நேரம் சாவதானமாக உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த அவன் திடீரென்று ஏன் இப்படி அவசரப்பட்டுக் கொண்டு ஓடுகிறான் என்று எண்ணிய தேவகி வியப்படைந்தாள்.

'ஒருகால் அவருடைய கருத்தை ஏற்றுக்கொள்ளாமல் எதிர்த்து விட்டதால் அவர் அப்படி உடனே விடைபெற்றுச் சென்று விட்டாரோ?' என்று நினைத்த போது அவளுக்குச் சிரிப்புத்தான்வந்தது.

ஓர் இருக்கையில் போய் அமர்ந்து, தன் கையிலிருந்த கவிதைப் பிரதியின் முதல் பக்கத்திலுள்ள சில வரிகளை மட்டும் திருப்பித் திருப்பிப் படித்துக் கொண்டிருந்த அவள் மனத்தில் சட்டென்று மோகனசுந்தரத்தின் நினைவு எழுந்தது. அவனுடைய இனிய குழல் கானத்தைக் கேட்டு அவளது உணர்ச்சிகள் பின்னி முடித்த கவிதை அல்லவா இது! இந்தக் கவிதையை அவ

னிடம் கொண்டு போய்ப் படித்துக் காட்டினால் எவ்வளவு மகிழ்ச்சியடை வான்! விவேகானந்தனைப் போல அவன் யதார்த்த வாதம் பேச மாட்டான்! உணர்ச்சி பூர்வமாக அநுபவித்து உடனே அதற்கு இசை வடிவம் கொடுக்க முயல்வான்!...

ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவளாய்ச் சட்டென்று எழுந்தாள் தேவகி. தன் கையிலிருந்த கவிதைப் பிரதிகளை நான்காக மடித்தாள். அப்படி மடிக்கும் போது அந்த நீல நிறக் காகிதங்களுக் கிடையே ஒரு வெள்ளைக் காகிதமும் இணைந்திருப்பது நன்றாகத் தெரிந்தது! அந்த வெள்ளைக் காகிதம், நீலக் காகிதங்களுடன் எப்படி வந்து சேர்ந்தது? அதிலே, வேறுபட்ட கையெழுத்தில் ஏதோ எழுதியிருப்பதும் தெரிகிறதே! ஆனால், தேவகி அதை யெல்லாம் கவனிக்கவில்லை!

குதூகலத்துடன் தனது அறைக்கு ஓடி, அழகாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டு மோகனசுந்தரத்தின் வீட்டை நோக்கிப் புறப்பட்டாள்.

அத்தியாயம் நான்கு

சிரத்தையுடன் தன்னைச் சிங்காரித்துக் கொள்வதில் முழுக் கவனத்தையும் செலுத்தியிருந்த கோமதி, கதவு திறக்கப்படும் ஒலி கேட்டு, சாரங்கன்தான் வருகிறானோ என்று எண்ணியவளாய் எழுந்து ஓடியவள் திடுக்கிட்டு நின்றாள்.

''என்னை அடையாளம் தெரிகிறதா, கோமதி? நான்தான் அபரஞ்சியம்மாள்!'' என்று வறண்ட சிரிப்புடன் சொல்லிக் கொண்டே உள்ளே வந்தாள் அபரஞ்சியம்மாள்.

வியர்வை வழிந்த முகத்துடன் மிகவும் சோர்ந்து களைத்துக் காணப்பட்ட அவளைப் பார்த்து வியப்புடன் நின்ற கோமதி சட்டென்று தன்னைச் சமாளித்துக்கொண்டு, ''என்ன மாமி! இப்படிச் சொல்கிறீர்கள்? வாருங்கள்!'' என்று அன்புடன் கரங்களைப் பற்றினாள்.

''என்னை உனக்கு அடையாளம் தெரிகிறதோ இல்லையோ என்றுதான் அப்படிச் சொன்னேன். அது தவறில்லையே?'' என்று மெல்லச் சிரித்த அபரஞ்சியம்மாள் விரித்திருந்த பாயில் அமர்ந்தாள்.

கோமதி உடனே விஷயத்தைப் புரிந்து கொண்டாள். அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் ''நல்ல வேடிக்கைதான் போங்கள்!'' என்று சிரித்தவாறு ஜன்னல் கட்டைச் சுவரண்டை போய்ச் சாய்ந்து நின்று கொண்டாள்.

அந்தச் சிறிய அறையைச் சுற்றி வளைத்துப் பார்த்த அபரஞ்சியம்மாள், 'சிவகாமி எங்கே?'' என்று கேட்டாள்.

''கடைத் தெரு வரையில் போயிருக்கிறாள். இப்போது வந்துவிடுவாள்'' என்றாள் கோமதி. மீண்டும் அவள் தொடர்ந்து, ''நீங்கள் இந்த வீட்டை எப்படிக் கண்டு பிடித்தீர்கள் மாமி?'' என்று வியப்புடன் வினவினாள்.

''நவயுக வாலிபர் சங்கத்துக்குப் போய்ச் சாரங்கன் என்ற பிள்ளையாண்டானிடம் கேட்டேன். அவர் உடனே இந்த வீட்டு விலாசத்தைக் கொடுத்து அனுப்பினார்'' என்றாள் அபரஞ்சி.

'சரிதான்' என்று தலையசைத்துக் கொண்டாள் கோமதி.

''ஏன் கோமதி? நான் உன் வீடு தேடி வந்ததை நீ விரும்பவில்லையா?'' என்று கேட்டாள் அபரஞ்சியம்மாள் குறும்புச் சிரிப்புடன்.

கோமதி அவளை உற்றுப் பார்த்தாள். பிறகு முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டு, ''உங்கள் வீட்டுக்கு நான் வரவில்லை என்றுதானே இப்படிக் குத்தலாகப் பேசுகிறீர்கள்?'' என்று கேட்டாள் கரகரத்த குரலில்.

''உனக்கு வரப் பிரியமில்லை; நான் வற்புறுத்த முடியுமா? வருந்துவதுதான் நியாயமாகுமா?''

கோமதி மௌனம் சாதித்தாள்.

''ஆனால் இப்போது உன் மனம் இப்படி மாறினதற்குத்தான் காரணம் தெரியவில்லை!''

கோமதி இதற்கும் எந்த விதமான பதிலும் சொல்லவில்லை.

''என் மகன் சொன்னான், நீ பெரிய மாளிகையில் குடி இருப்பதாக. அதனால் தான் ஏழைகளான எங்களை வந்து காண உனக்கு நேரமில்லையோ என்று நினைத்தேன்...!''

''இப்போது நான் இருக்கும் மாளிகை எதுவென்று தெரிந்து கொண்டீர்கள் அல்லவா?'' என்று கேட்டு விட்டு நகைத்தாள் கோமதி.

''நான் தெரிந்துகொண்டேன். ஆனால் மோகனிடம் சொன்னால் நம்பவே மாட்டான்!'' என்றாள் அபரஞ்சியம்மாள் சிரித்துக் கொண்டே.

''உங்கள் பிள்ளையை அப்படி வளர்த்திருக்கிறீர்கள். பரிதாபப்பட வேண்டிய மனிதர்!'' என்று அலட்சியமாகச் சொன்னாள் கோமதி.

அபரஞ்சியம்மாளின் முகம் சட்டென்று கருங்கிக் கறுத்தது. அவள் கோமதியைப் பரிதாபமாக ஏறிட்டுப் பார்த்தாள். பிறகு, ''கோமதி! நீ ஏன்

இப்போது இப்படியெல்லாம் பேசு கிறாய்?''-கம்மிய குரலில் கேட்டாள்.

''நான் சொல்வதில் என்ன தவறு? நீங்கள்தான் சொல்லுங்களேன், மாமி!''

'ஆமாம்' என்று தலையசைத்துக் கொண்ட அபரஞ்சியம்மாள் சில விநாடி மௌனத்துக்குப் பின், ''அது சரி; இன்று காலை மோகனைப் பார்த்து, நீ என்னமோ சொன்னாயாமே?'' என்று தயங்கியபடி கேட்டாள்.

''ஆமாம், மாமி! அவர் என்னைப் பார்ப்பதற்காக ஏன் அத்தனை அநாவசிய ஆவல் காட்ட வேண்டும் என்று சொன்னேன்.''

''இன்னும்கூட ஏதேதோ அவனிடம் சொன்னாயாமே?''

''அவருடைய நன்மைக்காக இன்னும் சிலதும் சொன்னேன்!''

''அதையெல்லாம் கேட்டு அந்த அசட்டுப் பிள்ளை என்ன செய்கிறான், தெரியுமா? சாப்பிடமாட்டேன் என்று அடம் பிடித்துக் கொண்டிருக்கிறான்!''

''அவ்வளவுதானே? நீங்கள் அவரைத் தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு அம்புலியைக் காட்டிச் சோறு ஊட்டுவதுதானே?'' என்று கேட்டுக் கோமதி கலீரென்று சிரித்தாள்.

அபரஞ்சியம்மாளின் முகம் கருமையடைந்தது. ''அவனுடைய நல்வாழ்வுக்காகப் பலவகையாலும் உதவி செய்த நீயே இப்படிப் பேசலாமா கோமதி?'' என்று அழமாட்டாக் குறையாகக் கேட்டாள் அவள்.

''என்னை நீங்கள் தவறாகப் புரிந்து கொண்டிருந்தால் அதற்கு நான் என்ன செய்ய முடியும்?'' என்று இரக்கமற்ற குரலில் சொன்னாள் கோமதி.

''அப்படியெல்லாம் பேசாதே, கோமதி! என் பிள்ளையின் வாழ்வு உன் கையில் தான் இருக்கிறது!'' என்று விம்மினாள் அபரஞ்சியம்மாள்.

கோமதி சிரித்தாள். பிறகு உறுதி தெறிக்கும் குரலில் சொன்னாள்: ''மாமி! நான் இதுவரை உங்கள் மகனைப் போலத் தான் இருந்து வந்தேன். ஆனால் என்னை உங்களின் மருமகள் ஸ்தானத்தில் வைத்துப் பார்க்க நீங்களும் உங்கள் பிள்ளையும் விரும்புகிறீர்கள் என்பது நன்றாகத் தெரிந்துவிட்டது. எனக்கு இந்த விஷயம் இன்றுதான் திடீரென்று தெரிந்ததாக நான் பொய் சொல்லத் தயாரில்லை. நமக்குள் பழக்கமேற்பட்ட ஆரம்ப நாள் முதலே எனக்கு இது தெரியும். தெரிந்துதான் உறவாடினேன். காரணம் அந்த விஷயத்தை என் நெஞ்சுக்குள்ளாகவே போட்டு இந்நாள்வரை ஆராய்ந்து கொண்டிருந்தேன். இப்போது அதற்கு ஒரு தெளிவான முடிவு தெரிந்து விட்டது!...மாமி! நான் கஷ்டங்களை அளவுக்கு மீறி அனுபவித்தவள். வறுமையின் கொடிய துன்பங்களை அணு அணுவாகக் கண்டறிந்தவள். ஆனாலும் வாழ வேண்டுமென்ற துடிப்புள்ளவள். வாழ்வேன் என்ற நம்பிக்கையும் கொண்டவள். கலை கலை என்று சொல்லிக் கொண்டு வயிற்றைக் காயப் போட்டுக் கொண்டிருக்க என்னால் முடியாது. இதுவரை அப்படிக் காயப்போட்டது தான் ஈரேழு ஜன்மங்களுக்கும் போதும். எனக்கு இந்த உலகமே ஒரு பிடி சோற்றுக்குள்தான் அடக்கம். காதல் கீதல் என்று சொல்லிக்கொண்டு காலை நீட்டிட படுத்துக் கற்பனை லோகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருக்க என்னால் முடியாது. உங்கள் மகன் ஒரு மாபெரும் கலைஞர்; அதில் எள்ளளவும் சந்தேகமில்லை. ஆனால், அவர் வாழத் தெரிந்துகொள்ளவில்லை. அதுதான் குறை. அந்தக் குறையை அவர் நிவர்த்தி செய்துகொள்வார் என்றும் எனக்குத் தோன்றவில்லை. நானும் இல்லாதவள், அவரும் வெறும் கையை முழம் போடுகிறவர். இருவரும் கல்யாணம் செய்து கொண்டால் வாழ்க்கை எப்படியிருக்கும்? நீங்களே யோசித்துப் பாருங்கள்: காதலும் அன்பும் கஞ்சி வார்த்துவிடுமா? காலமெல்லாம் கஷ்ட ஜீவனமே நடத்திக் கொண்டிருக்க வேண்டுமென்பது என் தலையெழுத்தாய் இருக்க முடியாது. அப்படியிருந்தாலும் அதை மாற்றவே முயல்வேன். ஒரு பெரிய புல்லாங்குழல் வித்வானின் மனைவி என்ற வெறும் புகழுக்கு ஆசைப்பட்டு என் வாழ்க்கையைப் பலியிட்டுக் கொள்ள முன்வர மாட்டேன். அவ்வளவு பெரிய தியாகம் செய்ய, நான் காவியக்கதாநாயகி அல்ல! தயவுசெய்து என்னை வாழ விடுங்கள்! உங்கள் அருமைப் பிள்ளையின் நல்வாழ்வுக்காகவே என்னை மறந்து விடுங்கள்! இதையெல்லாம் உங்கள் பிள்ளையிடம் சொல்ல உங்களால் முடியாது என்றால், நானே நேரில் வந்து அவர் புரிந்துகொள்ளும்படி சொல்கிறேன். சரி, மாமி! நான் ஒருவரை அவசரமாகக் காண வேண்டிப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன்; விடை கொடுங்கள்!''

தலை கவிழ்ந்து கொண்டிருந்த அபரஞ்சியம்மாள் விம்மி விம்மி அழுதாள். அதைக் கொஞ்சங்கூடப் பொருட்படுத்தாதவள் போல் அங்கிருந்து ஒயிலாக நடந்துபோய் மாடிப்படிகளில் இறங்கினாள் கோமதி. (தொடரும்)

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

